# ஈமானிய மலர்

## ERUVADI MUSLIM ASSOCIATION (EMAN)

## ஏர்வாடி முஸ்லிம் அறக்கட்டளை (ஈமான்)




## 40 ஆவது ஆண்டு மலர்

## (1978 - 2018)

(நபியே!) ஓர் ஊராரை, அவ்வூரார் சீர்திருந்திக் கொண்டிருக்கும் நிலையில்,
அநியாயமாக உம் இறைவன் அழிக்கமாட்டான். (அல் குர்ஆன்: 11:117)

# NELLAI ERUVADI MODEL SCHOOL

*Lessons For Life & Beyond*

**Madina Nagar, Eruvadi-Tirunelveli Dist**



NEMS Starters Play School is located in Madina Nagar, sixth street,Eruvadi. It was inaugurated by Mrs. Ummu Salmal DEO (retd) on 17th June 2018.

Our Play school actively promotes the welfare of all students and equips them with the right Knowledge by providing quality formal education along with Islamic values in a holistic environment and understanding to live positive, safe and healthy life, here and hereafter.

We have chosen the Chrysalis "Thinkroom" curriculum for our Starters Play School; It is an education system which brings out the extraordinary human potential in every child.

Integrated Learning Model ( ILM ) our methodology addresses the nature of child in which the rational knowledge is integrated with revelation to bring out the best in your child.

We provide education for boys and girls, from KG to 12 and offer separate classes for boys and girls from Grade six.



NEMS Starters Play School



Main Campus

04637 240740

94420 34040

info@nemschools.com

www.nemschools.com

Run by **NELLAI ERUVADI EDUCATIONAL CHARITABLE TRUST**



# SAFETY PLUS SERVICES




**We provide all type of building services which you need every day.**

- Electrical Services
- Plumbing Services
- HVAC Services
- Fire safety & security services
- Annual Maintenance package for above

**24/7 SERVICE**

## SafetyPlus

WhatsApp +974 5044 5899, +974 6692 3311

www.safetyplus.qa

Safety Plus W.L.L

Salwa Road, Al Aziziya, Doha, Qatar, P.Box-30844

# جامعة احسان العميان

# ஜாமியா இஹ்ஸானுல் உம்யான்

## (பார்வையற்றோர் மதரஸா)

# JAMIA EHSAANUL UMYAN

Reg. No. 131 / 2017

بسم الله الرحمن الرحيم

**அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)**

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள், யார் ஒருவர் பார்வையற்றவருக்காக 40 அடிவரை வழிகாட்டுவாரோ அவருக்கு சுவர்க்கம் வாஜிபாகிவிடும் மற்றொரு ரிவாயத்தில் அவர் முன் செய்த பாவங்கள் மன்னிக்கப்படுகிறது.

**அறிவிப்பாளர்: இப்னு உமர் (ரலி) நூல்: தப்ரானி பாகம் 3, பக்கம்: 138**

---

*கண்ணியத்திற்குரியவர்களே!*

*தமிழகம் முழுவதும் பார்வையற்ற முஸ்லலீம்களுக்காக கல்வி நிறுவனங்களோ, ஆதரவு இல்லங்களோ, நமது சமுகத்தில் இல்லை. இதன் காரணமாக பார்வையற்ற முஸ்லீம்கள் பிற மதத்தினர் நடத்தும் கல்வி நிறுவனங்களிலும், ஆதரவு இல்லங்களிலும் தங்கி கல்வி பயிலும் காலங்களில் அவர்கள் மூலமாக பெற்ற உதவிகளினால் ஈர்க்கப்பட்டு இஸ்லாத்தை விட்டும் வெளியேறிக் கொண்டிருகின்றனர். (இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்) பார்வையற்ற முஸ்லீம்களின் இந்தக் கவலையான நிலை மாறவும், அவர்களின் இம்மை, மறுமை வாழ்க்கை வெற்றிக்காகவும் அல்லாஹ்வின் உதவியால் தமிழ்நாட்டில் பார்வையில்லாத முஸ்லிம் மாற்றுத் திறனாளிக்காக என தனி மதரஸா 2009ம் ஆண்டு மதுரையில் துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. (அல்ஹம்துலில்லாஹ்)*

*இந்த மதரஸாவில் குர்ஆன் மனனம் செய்தல், மார்க்க சட்ட திட்டங்கள் மற்றும் சுன்னத்தான வழிமுறைகள் கற்றுத் தரப்படுகின்றது. மேலும் பார்வை யற்றோருக்கான புள்ளி எழுத்துகள் மூலம் (பிரைலியின் மூலம்) தமிழ், ஆங்கிலம், அரபி மொழிகள் கற்றுத் தரப்படுகின்றது மற்றும் TNPSC மற்றும் அரசாங்கத்தின் இதர பணிகளுக்கான பயிற்சியும் அளிக்கப்படுகிறது. மேலும் அரசின் சலுகைகள் மற்றும் சுயதொழில் சம்பந்தமாக ஆலோசனைகள் வழங்ககூடிய ஆலோசனை மையமும் இயங்கி வருகிறது. சிறந்த ஆசிரியர்களை கொண்டு பயிற்சியளிக்கப்படுகிறது.*

*இங்கு பார்வையற்ற மாணவர்களுக்கு உணவு, தங்குமிடம் இலவசமாக வழங்கப்படுகிறது. இந்த மதரஸாவிற்கென்று நிரந்தர வருமானமோ சொந்த இடமோ கிடையாது. இத்தகவலை காணும் நல் உள்ளங்கள் அல்லாஹ்வின் திருப்தியை நாடி தங்களால் இயன்ற உதவிகளை வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம் பார்வையற்ற மாணவர்களின் ஈருலக வெற்றிக்கான ஒளி காட்டும் விழியாக தங்களது உதவிகள் அமையும் .*

*உதவி செய்யும் நல்லுள்ளங்களுக்காக பார்வையற்ற மாணவர்கள் அனுதினமும் துஆச் செய்கிறார்கள்.*

**குறிப்பு : தங்கள் பகுதியில் முஸ்லிம் கண் தெரியாதவர்கள் வசித்தால் அத்தகவலை தெரிவிக்கவும். மேலும் உங்கள் தொடர்புகளிலுள்ள முஸ்லிம் அனைவருக்கும் இத்தகவலை பகிரவும்.**


**ஜாமியா இஹ்ஸானுல் உம்யான் பார்வையற்றோர் மதரஸா**

**64/28, கண்ணதாசன் மெயின் தெரு, SSகாலனி,மதுரை- 10**

**செல்: +91 89738 54134, +91 99421 13079**

Website Address: http://www.nellaiEruvadi.com/jeu/

بسم الله الرحمن الرحيم

# ஈமானிய மலர்

40 Years

## Eruvadi Muslim Association (EMAN)

## ஏர்வாடி முஸ்லிம் அறக்கட்டளை (ஈமான்)

## 40 வது ஆண்டு மலர்

1978 -2018

தனிச்சுற்றுக்கு மட்டும்

----- வெளியீடு -----

ஏர்வாடி முஸ்லிம் அறக்கட்டளை (ஈமான்)

மீரான் பில்டிங், மெயின்ரோடு, ஏர்வாடி - 627 103 ,

திருநெல்வேலி மாவட்டம்

தொடர்புக்கு : 9566773469 / 7538800121

Email : emancharitabletrust@gmail.com

# وَمَا كَانَ رَبُّكَ لِيُهْلِكَ الْقُرٰى بِظُلْمٍ وَّاَهْلُهَا مُصْلِحُوْنَ

(நபியே!) ஓர் ஊராரை, அவ்வூரார் சீர்திருந்திக் கொண்டிருக்கும் நிலையில் - அநியாயமாக உம் இறைவன் அழிக்கமாட்டான்.

(குர்ஆன்: 11:117)

بسم الله الرحمن الرحيم

# மலர் விரியும் முன் உங்கள் மனதோடு ..

அன்பிற்கினிய சகோதர, சகோதரிகளே ! ஈமானிய சொந்தங்களே !!

அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)

பூரண சுகத்தோடும் சீரிய ஈமானுடனும் இம்மலர் உங்களை சந்திக்கட்டுமாக!

அல்லாஹ்வுடைய கிருபையால் மேற்குறிப்பிட்ட இறைவசனங்கள் மற்றும் இறுதிநபியின் வழிகாட்டுதல்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு **E**ruvadi **M**uslim **A**ssociatio**N** எனப்படும் நமது ஈமான் அறக்கட்டளை, கடந்த 40 வருடங்களாக, நமதூர் ஏர்வாடி மக்களின் கல்வி, பொருளாதார, சமூக மேம்பாட்டுக்காக பல்வேறு தளங்களில் பொருளாதார உதவிகளையும் அறப்பணிகளையும் சிறப்பாக செய்து வருகிறது. 1978 ஆம் ஆண்டு தங்கள் வளம் தேடி, கடல் தாண்டி சென்ற சகோதரர்கள், ஊர் நலன் நாடி ஒன்று கூடி உருவாக்கப்பட்டது தான் இந்த ஈமான் அறக்கட்டளை.

பிரிவுகள் அன்பை அதிகரிக்கும் என்பது குடும்ப உறவுகளுக்கு மட்டுமல்ல, ஊர் / சமூக உறவுகளுக்கும் தான் என்பதை உணர்த்தும் விதமாக, வெளிநாட்டில் இருப்பவர்களுக்கு ஊர்ப் பாசமும், ஊர் மக்கள் மீதுள்ள அக்கறையும் சற்று அதிகமாக இருப்பது உண்மை தான். இந்த அக்கறை தான், தாங்கள் சிரமப்பட்டு சேர்க்கும் பணத்தையும், நேரத்தையும் ஊரில் தன்னை விட சிரமத்தில் இருப்பவர்களுக்கு உதவிட வேண்டுமே என அல்லாஹ்வின் திருப்தியை நோக்கமாகக் கொண்டு கொடுக்க வைக்கிறது. இந்த இஃக்லாஸான எண்ணங்களும் சகோதரத்துவமும் தான் ஈமான் ஆரம்பிப்பதற்கும் நாற்பது ஆண்டுகள் கடந்து இன்று வரை செயல்படுவதற்கும் அடித்தளமாக இருக்கிறது. அல்ஹம்துலில்லாஹ்.

அமீரகத்தில் ஆரம்பித்த ஈமான் தற்போது சவுதி அரேபியா, கத்தார், ஓமான், குவைத் என அங்கு சென்றுள்ள சகோதரர்களின் முயற்சியினால் ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. அல்ஹம்துலில்லாஹ்! ஏர்வாடியில் அரசு பதிவு பெற்ற அறக்கட்டளையாக, முஹல்லா வாரியான பிரதிநிதிகளின் ஒத்துழைப்புகளுடன் ஊரிலுள்ள அனைத்து ஜமாஅத் மற்றும் சமூக அமைப்புகளுடன் சுமூகமான நல்லுறவுகளுடன் சிறப்பாக களப் பணிகள்

செய்து வருகிறது. அனைத்து ஈமான் அமைப்புகளும் அல்லாஹ்வின் திருப்தியை மட்டும் நோக்கமாகக் கொண்டு தொடர்ந்து பணியாற்றிட பிரார்த்தனை செய்யும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

*''வேரை இழந்த மரமும் வரலாற்றை மறந்த இனமும் வளர்ச்சி அடைவதில்லை''.* என்ற பொன்மொழியின் அடிப்படையில், ஈமான் அமைப்பின் 40 ஆண்டுகால வரலாற்றுப் பயணத்தை ஆவணப்படுத்த வேண்டும்; அதன் மூலம் அடுத்து வரும் தலைமுறைகளும் சமுகப் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள இது ஒரு உந்துதலாக அமைய வேண்டும் என்ற உயரிய நோக்கத்தின் வெளிப்பாடு தான் உங்கள் கைகளில் தவழ்ந்து கொண்டிருக்கும் இந்த ஈமானிய மலர்.

பூந்தோட்டத்தைக் காணும் எவரும் மலர்களின் அழகில் மனதைப் பறிகொடுத்து, அதற்கு அடித்தளமாக விளங்கும் வேர்களையோ, தண்ணீரையோ, தண்டுகளையோ கவனிக்கத் தவறுவது இயல்பு. அது போலன்றி, இந்த ஈமானிய பூந்தோட்டத்தில் வேர்களாக, விழுதுகளாக தங்களை அர்ப்பணித்த சகோதரர்களையும், பணிகளையும் இந்த மலரின் மூலம் வெளிக் கொணரும் முயற்சி தான் இந்த ஈமானிய மலர். இந்த மலரில் ஈமானிய வேர்கள், ஈமானிய பயணம், ஈமானிய கிளைகள், ஈமானிய அமர்வுகள், ஈமானிய மொட்டுக்கள், ஈமானிய கதம்பம், ஈமானிய இலக்குகள் என்ற தலைப்புகளின் கீழ் பல்சுவை அம்சங்கள் இடம்பெற்றுள்ளன. படித்து தங்களது கருத்தினை பகிருங்கள்.

இந்த மலர் உருவாக ஒத்துழைத்த ஈமானிய வேர்களான நிறுவனர்கள் மற்றும் ஆரம்ப கால உறுப்பினர்களுக்கும், அனைத்து ஈமான் கிளை நிர்வாகிகளுக்கும் முன்னாள் நிர்வாகிகளுக்கும், ஆலோசனைக் குழு உறுப்பினர்களுக்கும், ஈமான் ஒருங்கிணைப்பாளர் மற்றும் பிரதிநிதிகளுக்கும், அச்சுக் கோர்வை சரிபார்த்து உதவிய சகோதரர்களுக்கும், தங்களது கட்டுரை மற்றும் ஆக்கங்களை வழங்கிய சகோதரர்களுக்கும், விளம்பரங்கள் தந்து உதவிய நிறுவனத்தார்களுக்கும், அச்சிட்ட பதிப்பகத்தார்களுக்கும், QR Code, வலைதள இணைப்புகளை தந்த nellaieruvadi.com நிர்வாகிகளுக்கும் மற்றும் இந்த மலர் வெளிவர அனைத்து வழிகளிலும் உறுதுணையாக இருந்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் ஈமானிய மலர்க்குழு சார்பாக எங்களின் நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

சிறியதாக இருந்தாலும் தொடராக செய்யும் செயல்தான் அல்லாஹ்விற்கு மிகவும் விருப்பமானது என்று சொன்ன நமது உயிரினும் மேலான நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வாக்குக்கேற்ப பணிகள் சிறியதாக இருந்தாலும் அல்லாஹ்வின் பேரருளால், ஈமான் கடந்து வந்த 40 ஆண்டுகளில் ஏர்வாடி ஊர் மற்றும் ஏர்வாடி மக்களின் நலனுக்காக தனது பங்களிப்பினை தொடராக வழங்கி வருகிறது. இதே இறைப்பாதையில் உங்கள் அனைவரின் ஒத்துழைப்புடன் ஈமான், என்றும் ஈமானிய உணர்வுடன் தனது பயணத்தினை தொடரவும், நமது ஈமானிய இலக்கான ''மீண்டும் ஒரு மதினா''வை நம் மண்ணில் ஏற்படுத்தவும் வல்லோன் அல்லாஹ்விடம் மனமார பிரார்த்திக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

அன்புடன்,

01-ஆகஸ்டு-2018

**ஈமானிய மலர்க் குழு**

# மலரின் உள்ளே ...

**1. ஈமானிய வேர்கள்**........................................ **7**

- ஈமானிய துவக்கம்- அந்த நாள் ஞாபகம்.................... 8
- ஈமானிய வேர்கள் 1981 சந்திப்பு.................... 11
- 'உதவி' சிறுகதை.................... 13
- ஈமான் நிர்வாகிகள் (1978-2018).................... 19
- ஈமான் சந்திப்புகள் அன்றும் இன்றும்.................... 27
- ஜமால் சார் - ஒரு ஈமானிய ஆளுமை.................... 28
- ஈமானிய நினைவுகள் - பேட்டிகள்.................... 29
- ஈமானிய நினைவுகள்.................... 35
- நம்பியாறு நினைவலைகள்- 1.................... 38
- Old is Gold – EMAN Memories in Pictures.................... 39
- திருக்குர்ஆன் பிணைத்த ஈமானிய உறவு.................... 43

**2. ஈமானிய பயணம்**........................................ **47**

- ஈமான் பணிகள் & உதவிகள்.................... 48
- ஈமான் ஜகாத் குழு.................... 50
- ஈமான் மக்தப் குழு.................... 51
- ஈமான் நீர் மேலாண்மை குழு.................... 55
- இதர அறப்பணிகள்.................... 58
- ஈமானும் நானும்.................... 60
- உங்களுக்குத் தெரியுமா?.................... 62
- 'அய்...' சிறுகதை.................... 64

**3. ஈமானிய கிளைகள்**........................................ **67**

- ஈமான் ஜித்தா.................... 68
- ஈமான் ரியாத்.................... 70
- ஈமான் தமாம்.................... 72
- ஈமான் ஓமான்.................... 74
- ஈமான் கத்தார்.................... 76
- ஈமான் குவைத்.................... 78
- பாதுகாக்கப்பட வேண்டிய அமானிதம் உயிர்.................... 81
- ஏடுகளை சுமக்கும் கழுதைகள்.................... 84

**4. ஈமானிய அமர்வுகள்** ........ **87**

- ஈமான் பெருநாள் சந்திப்புகள் இப்தார் சந்திப்புகள், பாரம்பரிய கலாச்சார சங்கமம், போட்டிகள் மற்றும் இதர சிறப்பு நிகழ்ச்சிகள் ........ *88 to 109*
- திருக்குர்ஆன் ஓர் வாழும் அற்புதம் ........ 111
- நம்பியாறு நினைவலைகள்- 2 ........ 113

**5. ஈமானிய மொட்டுக்கள்** ........ **115**

- ஈமானிய மொட்டுக்கள் 2013-17 ........ 116
- போட்டிகள் வகைப்பாடு ........ 124
- மாற்றத்தை நோக்கி ........ 125
- மக்தப் முயற்சிகளின் தாக்கம் ........ 127
- ஈமான் விருதுகள் ........ 128
- அல்குர்ஆனும் அறிவியலும் கண்காட்சி ........ 132
- Raise and Reach ........ 133
- நம்பியாறு நினைவலைகள்- 3 ........ 136

**6. ஈமானிய கதம்பம்** ........ **137**

- கட்டுரை, கதை, கவிதை பரிசு பெற்றவர்கள் ........ 138
- மீண்டும் ஓர் மதீனாவை நோக்கி ........ 139
- உறவுகள் மேம்பட, சமூகம் சீர்பெற ........ 144
- நீரின்றி அமையாது நிறைவான ஏர்வாடி ........ 150
- இளைஞர்கள் முன்னேற்றத்திற்கான திட்டம் 1 ........ 156
- இளைஞர்கள் முன்னேற்றத்திற்கான திட்டம் 2 ........ 160

**7. ஈமானிய இலக்குகள்** ........ **165**

- துறை ரீதியான இலக்குகள் ........ 166
- சமூகத்தின் உயிர்நாடி ........ 169
- ஈமான் 40 - மீண்டும் ஒரு மதினா ........ 177
- Important Contact Numbers ........ 181


ஈமானிய வேர்கள்

# ஈமானிய துவக்கம் - அந்த நாள் ஞாபகம்

– முஹம்மது ஷாஃபி –

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்..

ஸலவாத்தும் ஸலாமும் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும் அவர்களைப் பின்பற்றி வாழ்ந்த அனைவரின் மீதும் உண்டாகட்டுமாக..

நமது ஈமான் அறக்கட்டளை நாற்பது வருடங்களைக் கடந்துவிட்டது என நினைக்கும்போது மிகவும் மகிழ்ச்சியாகவும் ஆச்சரியமாகவும் இருக்கின்றது. ஆண்டுகள் உருண்டோடிவிட்டன, இருப்பினும் ஈமான் ஆரம்பிக்கப்பட்ட அந்த ஆரம்ப நாட்கள் இன்றும் பசுமரத்தாணி போல என்னுடைய உள்ளத்தில் பசுமையாக இருந்து கொண்டிருக்கிறது. ஈமானுடைய நிறுவனர்களில் ஒருவன் என்ற முறையில் ஈமானுடைய ஆரம்ப கால நிகழ்வுகளை இந்த நல்ல சந்தர்ப்பத்தில் இங்கு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

இறைவனுடைய கிருபையால் 1978 ஆம் ஆண்டு, இந்த ஈமான் அறக்கட்டளை நமதூரை சேர்ந்த சகோதரர்களாலும் எங்களோடு நண்பர்களாக இருந்த வெளியூர் சகோதரர்களாலும் இணைந்து நமதூர் மக்களுக்கு உதவி செய்வதற்காக வேண்டி முதலில் துபாயில் ஆரம்பிக்கப்பட்டது.

அன்றைக்கு எழுபதுகளில், மிக சொற்பமான பேர்தான் ஏர்வாடியில் இருந்து துபாய் போன்ற வளைகுடா பகுதிகளுக்கு சென்றிருந்தார்கள். 1975ல் நான் துபாய் வந்தபோது, அமீரகத்தில் நமதூர் ஏர்வாடி மக்கள் எங்கிருக்கிறார்கள் என்பதை அறிந்து உடனடியாக தொடர்பு கொள்ள தொலைதொடர்பு சாதனங்களோ, நவீன, போக்குவரத்து வசதிகளோ இல்லாத ஒரு கால கட்டம். அன்றைய நாட்களில் நான் துபாயில் எனது அருகிலிருந்த மற்ற ஊரைச் சேர்ந்த நண்பர்களுடன் சமூக விசயங்கள் குறித்து கலந்துரையாடுவது வழக்கம்.

அப்படி இருக்கும் பொழுது ஊரிலிருந்து ஒரு குமருடைய உதவிக்காக வேண்டி என்னுடைய தந்தையார் ஒரு கடிதம் அனுப்பி, இந்த குடும்பம் மிகவும் கஷ்டப்படும் ஏழைக் குடும்பம் அவர்களுக்கு ஏதேனும் செய்ய வேண்டும், நீ உனக்கு தெரிந்தவர்களிடம் எடுத்துக்கூறி அவர்களிடம் வசூலித்து இக்குமருக்கு உதவி செய்யும்படி கேட்டிருந்தார்கள். அன்றைக்கு என்னுடன் இருந்த வெளியூர் சகோதரர்கள், குறிப்பாக சொல்ல வேண்டும் என்றால் அருப்புக்கோட்டையை சேர்ந்த சாஹுல் ஹமீது காக்கா, அவர்களுடைய தம்பி யூசுப் காக்கா, கடையநல்லூரை சார்ந்த அபூ சாலிஹ் காக்கா, உடன்குடியைச் சேர்ந்த மர்ஹூம் அனஸ் காக்கா மற்றும் என்னுடைய நண்பர் மௌலவி இக்பால் மதனி அவர்கள் போன்றவர்களுடன் இந்த விஷயத்தை பகிர்ந்து கொண்ட பொழுது, அவர்கள் தங்களால் இயன்ற உதவிகளை கொடுத்தார்கள். அந்த பணத்தை வசூலித்து அந்த குமர்

வகைக்கு அனுப்பி வைத்தோம். இந்த பணத்தைக் கொண்டு அந்த பெண்ணின் திருமணம் நல்ல படியாக நிறைவேறியதை அறிந்து அனைவரும் மிகவும் மகிழ்ச்சியுற்றோம்.

அதனைத் தொடர்ந்து அன்றைக்கு ஏர்வாடியில் நடைபெற்று வந்த இஸ்லாமிய இளைஞர் முன்னேற்ற மன்றத்தின் சார்பாக தொடங்கப்பட்ட ஹிஸ்னுல் உலூம் அரபிக் கல்லூரியின் பிரதிநிதியாக இருந்த ஜனாப் SOS பீர் முஹம்மத் அவர்கள் மூலமும் ஒரு சில கடிதங்கள் தனிப்பட்ட முறையில் குமர்களுக்கு உதவி வேண்டி வர ஆரம்பித்தது. இதனை அறிந்த எனது நண்பர்கள், ஒரு யோசனை சொன்னார்கள். அதாவது நீங்கள் இதனை தனிப்பட்ட முறையில் வசூலித்து செய்வதற்குப் பதிலாக இதையே ஏன் ஓர் அமைப்பு ரீதியாக, ஓர் ஜமாத்தாக கூட்டாக சேர்ந்து செய்யக்கூடாது என்ற ஓர் ஆலோசனையை வழங்கினார்கள். அப்படியென்றால் நமதூர் ஏர்வாடிகாரர்கள் யாரெல்லாம் அமீரகத்தில் இருக்கிறார்கள் என்பதை முதலில் கண்டறிந்து அவர்களுடன் இணைந்து ஒரு கூட்டாக செய்யலாம் என்ற எண்ணத்தின் அடிப்படையில் நமதூர் காரர்களை தேடி கண்டுபிடிப்பதற்காக வேண்டி முயற்சி எடுத்தோம்.

அதில் முதலாவதாக நமதூரைச் சேர்ந்த சகோதரர் அபூபக்கர் ஜின்னா அவர்கள் ஷார்ஜாவில் பணி புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிந்து அவர்களை கண்டு சந்தித்து இந்த விஷயத்தை பற்றி கலந்தாலோசித்தோம். அவர்களைத் தொடர்ந்து ஜமால் சார் அவர்களையும் சந்தித்தோம். நாங்கள் மூன்று பேரும் எங்களுடன் இருந்த மற்ற வெளியூர் நண்பர்களும் இணைந்து, நம் ஏர்வாடி ஊரிலுள்ள நலிவுற்ற ஏழை எளிய மக்களுக்கு குறிப்பாக பெண் குமர்களுக்கு உதவ வேண்டும் என்றும் இதனை நாம் ஒரு அமைப்பாக ஒரு ஜமாத்தாக செயல்படுத்துவோம் என்றும் முடிவெடுத்தோம். அதற்காக வேண்டி இன்னும் யார் யாரெல்லம் ஏர்வாடி சகோதரர்கள் அமீரகத்தில் (துபாயில்) இருக்கிறார்கள் என கண்டறிந்து, எல்லோரையும் இணைத்து இந்த புதிய முயற்சியை துவங்குவோம் என்று தீர்மானித்தோம்.

அதனடிப்படையில் தொடர்பில் கிட்டிய சில ஏர்வாடி சகோதரர்களையும் மற்றுமுள்ள எங்களது வெளியூர் நண்பர்கள் என அனைவரையும் ஒன்றிணைத்து , துபாய் ''ஹோர் அல் அன்ஸ்'' என்ற பகுதியில் உள்ள ஒரு ரூமில் வைத்து (சகோதரர் அபூ சாலிஹ் அவர்களின் ரூம் என்று நினைக்கிறேன்) ஏர்வாடி முஸ்லிம் அசோசியேசன் - ஈமான் சங்கம் என்ற இந்த அமைப்பு அல்லாஹ்வுடைய கிருபையால் 1978 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அச்சமயம் எங்களோடு இருந்த எனது நெருங்கிய நண்பர் மவ்லவி இக்பால் மதனி அவர்களுடைய துஆவுடன் இந்த அமைப்பு இனிதே ஆரம்பம் ஆகியது. இதை இன்றைக்கு நினைத்தாலும் மனதிற்கு மிகவும் சந்தோசமாக இருக்கிறது. அன்றைக்கு ஈமான் சங்கத்தில் உறுப்பினர்களாக இருந்த சகோதரர்கள் தரும் சந்தாக்களைக் கொண்டு, ஊரிலிருந்து வரக்கூடிய கடிதங்களை பரிசீலித்து விசாரித்து அவர்களுக்கு இயன்ற உதவிகளை நாம் செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் ஈமானின் இந்த சமூகப்பணி தொடங்கியது. அல்ஹம்துலில்லாஹ் அன்று ஆரம்பிக்கப்பட்ட இந்த அமைப்பு இன்று வரை சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அல்ஹம்துலில்லாஹ்...

ஈமானுடைய ஆரம்ப காலங்களில், ஊரிலிருந்து புதிதாக யாரும் துபாய்க்கு வந்திருக்கிறார்கள் என அறிந்தால், அவர்களை சந்தித்து ஈமானில் இணைப்பதற்காக அவர்களை நேரில் சந்திக்க செல்வதே ஒரு சவாலான விஷயமாகும். இன்றைக்கு உள்ளது போல் தகவல் தொழில்நுட்ப சாதனங்களோ,போக்குவரத்து வசதிகளோ ஏன் அன்றைய துபாய் நகரத்திலும் ஷார்ஜா நகரத்திலும் முகவரி, கதவு எண் கூட கிடையாது. இப்படிப்பட்ட நேரத்தில் ஒரு நபரை சந்திக்க வேண்டும் என்று சொன்னால் அவருடைய போன் நம்பர் அதுவும் குறிப்பாக அலுவலகத்தின் நம்பர் கண்டுபிடித்து அழைத்து

அவரிடம் முதலிலேயே இந்த நாள், இந்த கிழமை, இந்த இடத்தில் நான் இந்த கலர் சட்டை போட்டுக் காத்திருப்பேன் என்று சொல்லி செல்ல வேண்டும். இந்த முறையில் தான் பல்வேறு சிரமங்களுக்கு இடையிலும் ஈமானிய பணிக்காக அன்றைக்கு இருந்த சகோதரர்கள் அர்ப்பணிப்புடன் செயலாற்றினார்கள். ஒரு சில கட்டங்களில் சில குமர்களின் உதவிக்காக, கிடைத்த சந்தாத் தொகை பற்றாத சமயத்தில், தேரா, ஹோர் அல் அன்ஸ் பகுதிகளில் உள்ள பள்ளிவாசல்களில் துண்டு விரித்து வசூல் செய்த நிகழ்வுகளும் உண்டு.

மேலும், ஊரில் இருந்து விண்ணப்பங்கள் வருவதாக இருந்தால் கிட்டதட்ட 15 முதல் 20 நாட்கள் வரை ஆகும். அந்த 20 நாட்கள் கழித்து வந்த பிறகு துபாயில் மாதாந்திர ஈமான் மீட்டிங் நடக்கும். இந்த ஈமான் மீட்டிங் என்பது தான் நமதூர் சகோதரர்களுக்கும் சரி மற்ற நண்பர்களுக்கும் சரி ஒரு மிகப்பெரிய திருவிழாவாக ஒரு பெருநாள் போல இருக்கும். அனைவரும் சிறப்பாக வந்து கூடி விருந்து சாப்பிட்டு, தங்களுடைய சுக துக்கங்களை பகிர்ந்து கொண்டு, பின்பு கலைந்து செல்வது ஓர் வழக்கமாக இருந்தது. அது உண்மையில் சகோதரத்துவத்தையும், பாசத்தையும் மக்களுக்கு மத்தியில் ஏற்படுத்தியது என்றால் அது மிகையல்ல. அதைப்போன்றே எங்களது நண்பர்களான மற்ற ஊர் சகோதரர்களும் (பிற மத சகோதரர்கள் உட்பட), இந்த ஈமானுடைய பணிக்காக வேண்டி தங்கள் பொருளாதாரத்தையும் நேரத்தையும் செலவிட்டது உண்மையில் நெகிழ்ச்சிக்குறிய விஷயம். அதாவது உதவிகள் போய் சேரக்கூடியது என்னவோ, ஏர்வாடிக்குத்தான் போய் சேரப்போகிறது. இருந்தாலும் அதற்கு பங்களிப்பு செய்தார்கள். இறைவனுக்காக வேண்டி அவர்கள் செய்த இந்த பணியை அல்லாஹ் பொருந்திக்கொள்வானாக! என்று இந்த நல்ல நேரத்தில் இறைவனிடத்தில் நாம் அவர்களுக்காக பிரார்த்திப்போமாக.

திருமண உதவிகளைத் தொடர்ந்து ஊரில் உள்ள சமூக நல விஷயங்களான - ஊரில் பெண்கள் உயர்நிலை பள்ளியில் கழிவறை வசதி தேவைப்படும்போது அவர்களுக்கு கழிவறை வசதி ஏற்படுத்திக்கொடுத்தல் மற்றும் பேச்சுப் போட்டிகள், கட்டுரை போட்டிகள் நடத்தி ஊரில் உள்ள மாணவ மாணவிகளை கல்வி விஷயத்தில் ஊக்குவிப்பது, பள்ளி பொதுத் தேர்வில் முதலிடம் வந்த மாணவ மாணவியருக்கு பரிசளிப்பது போன்ற இன்னும் பலவிதமான உதவிகளையும் நாம் செய்ய ஆரம்பித்தோம். அல்ஹம்துலில்லாஹ்! இன்று அதை விட அதிகமாக அதிக அளவில் மிகப்பெரும் சமூகப்பணிகளையும், உதவிப்பணிகளையும் ஈமான் செய்து வருகிறது.

அல்லாஹுவுடைய கிருபையால் இந்த ஈமான் 40 அகவைகளைத் தாண்டி வளர்ந்து நிற்பதை பார்க்கும் போது, ஒரு சிறிய விதையை ஒன்றாக சேர்ந்து நட்டி விட்டுப் போன சகோதரர்கள், பின்பு வந்து அது ஒரு பெரிய ஆலமரமாகி, உறுதியான விழுதுகளுடன், நிழலும் பழங்களும் தரும் மரமாக அதனை பார்க்கும் போது; அதில் இளைப்பாறும் நேரத்தில் எப்படி ஒரு சந்தோஷம் ஏற்படுமோ அந்த ஒரு சந்தோஷம் தான் எங்களைப் போன்றவர்களுக்கு இன்றைய ஈமானைப் பார்க்கும் போது அது ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது என்றால் அது மிகையல்ல. இது மட்டுமின்றி இதனால் கிடைக்கக் கூடிய பலன்கள் வருங்கால தலைமுறைக்கும் செல்ல வேண்டும். தொடர்ந்து இந்த ஈமானிய பயணம் சிறப்பாக நடைபெற வேண்டும். ஊரில் உள்ள அனைத்து மக்களுக்கும் மிகவும் பயனுள்ள பலன்களைத் தரக்கூடிய பணிகளை ஈமான் முன்னெடுக்க வேண்டும் என்பதை வேண்டி விரும்பி கேட்டுக் கொண்டவனாக பிரார்த்திக்கின்றேன். அல்லாஹ் நம் அனைவருக்கும் அருள் புரிவானாக! நம்முடைய நல்லறங்களை பொருந்திக் கொள்வானாக! ஆமீன்!

# ஈமானிய வேர்கள்

## 1981ஆம் ஆண்டு நடைபெற்ற ஈமான் பெருநாள் சந்திப்பு

**இடம்: ஜனாப். சாகுல் ஹமீது அவர்களின் இல்லம், தேரா, துபாய்.**



**மேலிருந்து - இடமிருந்து வலம் :**

**வரிசை 1:** செய்யது அலி(கட்டளைத் தெரு), ஷேக் அப்துல் காதர் (புதுக்குடி), புஹாரி (காயல்பட்டினம்), யூசுஃப் (அருப்புக்கோட்டை), அபூபக்கர் ஜின்னா (முகைதீன்புரம்), முஹம்மது ஷா (6வது தெரு), சஹாபுதீன் (அருப்புக்கோட்டை), அஜீஸ் (முகைதீன்புரம்), ஆர்ட்டிஸ்ட் ஹமீத் (6 வது தெரு), சேனாப்பா (6 வது தெரு), கமால் (லெப்பை வளவு)

**வரிசை 2:** திட்டுவிளை சகோதரர், முஹம்மது ஷாஃபி(6 வது தெரு), லிங்கண்ணன் (அன்றைய ஏர் இந்தியா மேலாளர்), ஷாஹுல் ஹமீத் (அருப்புக்கோட்டை), கிருஷ்ணமூர்த்தி பாவா (மதுரை), ஜமால் சார் (புதுக்குடி), தாவூத் (காயல்பட்டினம்)

**வரிசை 3:** கருப்பையா (மதுரை), ஹனீஃபா (பணகுடி), ஹாஜா (6 வது தெரு), அபூபக்கர் (5 வது தெரு), மக்தூம் (கட்டளைத் தெரு), அலாவுத்தீன் (8வது தெரு)


CITIZEN TM
TRADING CENTRE
FASHION JEWELLERY
TAHIR BHAI & SONS
With more than 40 years in the business
CITIZEN TRADING CENTRE
has the roots and experience to
insure the Quality and Service.
MANUFACTURER & WHOLESALER OF ALL TYPES OF IMITATION JEWELLERY
CITIZEN TRADING CENTRE
MUMBAI
SHOP NO. 70, NEW KAZI STREET,
OFF BANIAN ROAD,
MUMBAI - 400 003.
TEL. : 2347 1969 / 6639 4622
www.citizenbangles.com
Email : sales@citizenbangles.com
CITIZEN TM
TRADING CENTRE

ஈமான் அறக்கட்டளை 2015ம் ஆண்டு நடத்திய சிறுகதைப்போட்டியில்
முதல் பரிசு பெற்ற சிறுகதை

# உதவி

-திருமதி யாஸ்மின் ஸலாஹுத்தீன்

அம்மா, நான் வெளியே போய்விட்டு வருகிறேன் என்று ஆணியில் மாட்டியிருந்த பைக் சாவியை எடுத்துக்கொண்டு வெளியில் செல்லும் சுலைமானுக்கு வயது 26, துபாயில் இருந்து லீவுக்கு ஊருக்கு வந்துள்ளான்.

சுலைகா, மன்சூர் தம்பதியின் ஒரே மகன். நல்ல இஸ்லாமிய, சமூக சிந்தனையுள்ள பட்டதாரி இளைஞன். நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்தவர்கள். சுலைமானுக்கு பெண் கொடுக்க சில வசதி வாய்ந்த குடும்பத்தினருக்கு ஆசை இருந்தது. மன்சூர், சுலைகா தம்பதியருக்கும் அந்த ஆசைகள் நிறையவே உண்டு, இருந்தாலும் மகனுடைய விருப்பம் முக்கியமல்லவா - அதனால் மகனிடம் கேட்டு முடிக்க பெற்றோர் காத்திருந்தனர்.

சமையல் வேலைகளை முடித்துவிட்டு சுலைகா கைகளை துடைத்தபடியே ஹாலில் வந்து உட்கார்ந்தார்கள். அதே நேரம் பள்ளி வேலையாக வெளியே சென்றிருந்த மன்சூர் உள்ளே நுழைந்தார்.

அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்). என்ன சுலைகா வேலையெல்லாம் முடிந்ததா? சுலைமான் எங்கே? எனக் கேட்டார்.

வஅலைக்கும் வஸ்ஸலாம். வேலை முடிந்தது. சுலைமான் நண்பர்களை பார்க்க போயிருப்பான், அவனும் வரும் நேரம்தான். உங்களுக்கு சாப்பாடு வைக்கட்டுமா? என சுலைகா கேட்டாள்.

இல்லை, சுலைமான் வரட்டும் நாம் சேர்ந்தே சாப்பிடலாம் என்று கூறும்போதே சுலைமான் உள்ளே நுழைந்தான்.

இருவரும் சாப்பிட வாருங்கள் சாப்பாடு எடுத்து வைக்கிறேன் என்று சுலைகா எழுந்து உள்ளே போனதும், அவனைத் தொடர்ந்து மன்சூரும், சுலைமானும் உள்ளே சென்றனர்.

சாப்பிடும்போது மன்சூர் மெதுவாக பேச்சை ஆரம்பித்தார்.

சுலைமான், ''இன்று மாலை நீ எங்கும் வெளியில் போக வேண்டாம். வீட்டிலேயே இருப்பா'' என்றார்.

ஏன் வாப்பா?

பெண் வீட்டார் உன்னை பார்க்கனும் என்று ஆசைப்படுகிறார்கள் எனக் கூறியதும்,

வாப்பா, எனக்கு பெண் பார்த்து முடித்து விட்டீர்களா? எனக் கேட்டான்

இல்லப்பா, அவர்கள் பேசி வருகிறார்கள். நீ வந்திருக்கிறாய் எனக் கேள்விப்பட்டு உன்னை பார்க்க ஆசைப்படுகிறார்கள் என்றார்.

சுலைமான் சில நேரம் மௌனமாக இருந்துவிட்டு வாப்பா, ''நான் ஆரம்பத்திலேயே சொன்னதுதான். நம் தெருவில் வசிக்கும் சுமையாவை தான் திருமணம் செய்ய விரும்புகிறேன். இதை எப்போதோ உங்களிடம் சொல்லிவிட்டேன். இருந்தாலும் ஏன் பெண் பார்க்கிறீர்கள் என்றுதான் புரியவில்லை'' என சிறு எரிச்சலுடன் கூறினான்.

அதற்கு அவர் கோபத்தோடு, எத்தனையோ வசதிவாய்ந்த இடத்திலிருந்து பெண் வருகிறது. ஆனால் நீ என்னடாவென்றால் அடுத்த வேளை சோத்துக்கே வழியில்லாத குடும்பத்தில் பெண் எடுக்கணும் என்கிறாய். உனக்கென்ன பைத்தியமா? என்றார்.

வாப்பா வசதியான குடும்பத்தில் பெண் எடுக்க ஆயிரம் பேர் இருப்பாங்க ஆனால் ஏழை குடும்பத்தில் பெண் எடுக்க யாருமே இல்லை என்றான்.

''உலகம் புரியாம பேசுறியேப்பா, நாலுபேர் நம்மளைப்பத்தி என்ன நினைப்பாங்க. ஒரு நல்ல சம்மந்தம் அமைய வேண்டாமா'' என்று தன் பங்குக்கு சுலைகா முணுமுணுத்தாள்.

நான் என்ன தப்பான விஷயமா செய்றேன். நாலுபேரை பார்த்து பயப்பட, அல்லாஹ்வும், தூதரும் நேசிக்கும் காரியத்தைதான் செய்யப் போறேன். இன்ஷா அல்லாஹ் உறுதியாக சொல்ல

டேய், இதெல்லாம் பேச நல்லாத்தான் இருக்கும் வாழ்க்கைக்கு சரிபட்டு வராது என்று கோபத்துடன் எழுந்து சென்றார்.

அத்துடன் அன்றைய பேச்சு முடிவுற்றது.

சுலைமான் கிளம்புவதற்கு இன்னும் ஒரு வாரமே இருந்த நிலையில் அவன் போவதற்குள் திருமண விஷயமாக பேசி முடிவெடுக்க வேண்டும் என்றும், கொஞ்சம் பொறுமையாகவே பேசணும் என்று முடிவெடுத்து சுலைமானுடன் பேச உட்கார்ந்தார்.

சுலைமான் என்னப்பா முடிவெடுத்து இருக்கிறாய் என பேச்சை ஆரம்பித்தார்.

வாப்பா என் முடிவுல எந்த மாற்றமும் இல்லை. ஆனால் எல்லாம் புரிஞ்சும் நீங்களும், அம்மாவும் புரியாத மாதிரி பேசுறதுதான் ரொம்ப சங்கடமாக இருக்கு. வாப்பா, சுமையா குடும்பம் பாவம்பா. நோயாளியான தகப்பன், பீடி சுற்றும் தாய், எந்த

வழியும் இல்லாமல் சுமையாவை எப்படி கரையேற்றுவார்கள். அவரின் மருத்துவச் செலவுக்கு வட்டிக்கு கடன் வாங்கி, அந்த வட்டியைக் கூட அடைக்க முடியாத நிலை. இந்த நிலையில் அவர்களுக்கு உதவுறது தவறா வாப்பா? சொல்லுங்க.

சுலைமான், உதவுவதற்கு ஆயிரம் வழிகள் இருக்கப்பா. நாம பண உதவி செய்யலாமே. நோன்பில் கூட எவ்வளவோ செய்கிறோம் என்றார்.

எதுப்பா உதவி? நோன்பில் வாசலில் வரும் மிஸ்கீன்களுக்கு 1ரூபாய் கொடுப்பதும், கொஞ்சம் தெரிந்த முகம் என்றால் 10 ரூபாய் கொடுப்பதும், அதைவிட கூடுதல் தரத்தில் இருந்தால் 100, 200ம் கொடுப்பதும்மா ஜகாத் என்று சுலைமான் கேட்க

வேறு என்னப்பா செய்யனும் என மன்சூர் கேட்க, வாப்பா! நம் தூதர் (ஸல்) அவர்கள் இப்படி ஜகாத், ஸதகா செய்ய சொல்லி நமக்கு காட்டித் தரவே இல்லை வாப்பா ''தேவையுடையவர்களுக்கு எது தேவையோ அதை கொடுப்பதுதான் உண்மையான ஜகாத்''. அல்லாஹ் தன் திருமறையில் ''உங்களுக்கு நன்மையானவற்றில் இருந்து தர்மம் செய்யுங்கள்'' என்று கூறுகிறான். அப்படி இருக்க 10ம் 100ம் எப்படி தர்மமாகும்.

சுலைமான், இதைவிட எப்படிதான் கொடுக்கணும் நமக்கும் வாழ்க்கை இருக்கிறது. நாமும் சேமிக்க வேண்டாமா? எல்லாவற்றையும் கொடுத்து விட்டால் நாம் என்ன செய்வது என மன்சூர் கேட்டார்.

வாப்பா, நான் எல்லாவற்றையும் கொடுக்கச் சொல்லவில்லை. நம்முடைய ஜகாத் முறையாக போய் சேருவதில்லை என்று தான் கூறுகிறேன். நீங்களும்தான் பள்ளியில் ஒரு பொறுப்பில் இருக்கிறீர்கள். என்றாவது நம் பள்ளியில் ஒரு பைத்துல்மால் தொடங்கணும் என்ற சிந்தனை இருந்திருக்கா? ஒரு ஊரில் எத்தனையோ பள்ளிகள் இருக்கலாம் ஆனால் ஒரு பள்ளியில் கூட பைத்துல்மால் கிடையாது. அப்படி இருக்க தேவையுடையவர்களுக்கு எப்படி ஜகாத் போய் சேரும். சில பேர் வெட்கத்தை விட்டு படியேறி வந்து கேட்கிறார்கள். ஆனால் மானத்துக்கு அஞ்சி எத்தனையோ குடும்பங்கள் பட்டினியால் வாடுகிறது. கரையேத்த வழியில்லாமல் குமர்களின் நிலை பரிதாபத்தில் இருக்கிறது. இப்படிப்பட்டவர்களின் நிலை அறிந்து, நாம் தர்மம் செய்வதில்லை. அவர்களுக்கு முறையாக ஜகாத் போய் சேர்வதில்லை என ஆதங்கத்துடன் சுலைமான் சொல்ல

மன்சூரும், சுலைகாவும் பதில் சொல்ல தெரியாமல் மௌனம் காத்தனர்.

நபி (ஸல்) அவர்கள் மஸ்ஜிதுன் நபவியில் எதையெல்லாம் நிகழ்த்தினார்கள். தாவா செய்யும் இடம், வழக்குகளை விசாரித்து நீதி வழங்கும் இடம், தர்மப் பொருள் பங்கீடும் இடம் இப்படி எல்லா நன்மையான செயலும் பள்ளியில் நடந்தது. ஆனால் இன்று தொழுகைக்காக மட்டும் பள்ளிகள் திறக்கப்படுகின்றன. நம்முடைய ஒவ்வொரு பள்ளிகளிலும் பைத்துல்மால் இருந்தால் நம் தேவைக்காக வட்டிக்கு கடன் வாங்கும் நிலை

ஏற்படாது. நம்முடைய இந்த ஜகாத், ஸதகாவால் யாசகம் கேட்பது பெருகிவிட்டது. ஆனால் நபி (ஸல்)அவர்கள் யாசகம் கேட்பதை தடுத்துள்ளார்கள். ஆனால் பைத்துல் மால் மூலம் எத்தனையோ குடும்பங்களுக்கு நிதியுதவி செய்துள்ளார்கள் என்பதை வரலாறு சொல்கிறதே வாப்பா இது தெரியாதா?

இதெல்லாம் சரிதான் சுலைமான். அதற்கு நாம் என்ன செய்ய முடியும். எல்லோரும் ஒத்துழைக்கணும் அல்லவா என்று மன்சூர் கேட்டார்.

பிறரை சொல்லிச் சொல்லி நாம் செய்வதில் கோட்டை விடுகிறோம். முதலில் எதையும் நாம் செய்யனும், பிறகுதான் மத்தவங்களுக்கு எத்தி வைக்கணும். பிறரிடம் பொறுப்பு சாட்டியே நம் சமுதாயம் பின்தங்கி நிற்கிறது.

வாப்பா, நாம எல்லோரும் ஐந்து கடமைகளை இஸ்லாமிய கடமையாக எண்ணுகிறோம். ஆனால் அதையும் தாண்டி நபி (ஸல்) அவர்கள் வாழ்ந்து காட்டிய விஷயங்கள் ஏராளம். ஆனால் அதில் நமக்கு சாதகமானதை மட்டும் எடுத்துக் கொள்வோம். மற்றவைகளை நாம் நினைத்து பார்ப்பதே இல்லை. நம்முடைய நபி அழகை பார்த்தோ, பணத்தைப் பார்த்தோ திருமணம் செய்ய சொல்லாமல் மாறாக மார்க்க பற்றுள்ள பெண்ணை திருமணம் செய்ய சொல்லியிருக்காங்க. அந்த வகையில் சுமையா மார்க்கத்தில் அதிக ஈடுபாடு மிக்கவள். இஸ்லாமியக் கல்வியை குழந்தைகளுக்கு கற்றுக் கொடுக்கிறாள். ஆனால் ஏழை என்ற காரணத்தினால் யாரும் அவளை மணக்க முன்வரவில்லை. ஏன்? நீ அவளுக்கு வாழ்க்கை கொடுத்தால் என்ன? என்று பிறரை கேட்டு, நான் ஒதுங்க எனக்கு விருப்பமில்லை. அந்த ஏழைக்கு வாழ்க்கை கொடுத்து, அந்த குடும்பத்தை கடனில் இருந்து மீட்க நீங்களும் உதவுங்கள். தயவு செய்து என்னை புரிந்து கொள்ளுங்கள் என்று சுலைமான் நம்பிக்கையுடனும், உறுதியுடனும் பெற்றோரைப் பார்த்தான்.

அவன் கண்களில் உறுதியைக் கண்டு பெற்றோருக்கு தன் மகனா இப்படி பேசுகிறான் என ஆச்சரியமாகவும், அதே சமயம் பூரிப்புடனும் மகனைப் பார்த்தார்கள்.

சுலைமான், உன் பேச்சைக் கேட்டு என்னை நினைத்து வெட்கப்படுகிறேன். எவ்வளவு சுயநலமாக இருக்கிறோம் என்று. இன்ஷா அல்லாஹ் உன் விருப்பப்படியே சுமையாவையே பேசி முடித்து விடுகிறேன்.

வாப்பா, இன்னொரு கோரிக்கை முதலில் நாம் கொஞ்சம் பணம் போட்டு ஒரு பைத்துல்மால் தொடங்குவோம். அதன் மூலமாக ஏழைகளுக்கு கடனுதவி செய்வோம். நாம் அழகிய முறையில் தர்மம் செய்வோம். நாம் அழகிய முறையில் தர்மம் செய்தால் அல்லாஹ் இரட்டிப்பாக்கி தருவான் இன்ஷா அல்லாஹ். பாருங்கள் நாம் ஆரம்பித்த பிறகு இதில் நிறைய பேர் இணைவார்கள் என்று நம்பிக்கையுடன் சுலைமான் சொல்ல...

கண்டிப்பாக சுலைமான் இதற்கு எல்லா ஒத்துழைப்பும் நான் தருகிறேன். உன்னைப்

போல் எத்தனையோ இளைஞர்கள் இதை செயல்படுத்த நினைப்பார்கள். ஆனால் சூழ்நிலையால் விலகி நிற்பார்கள். இதற்கு நாம் முன்னோடியாக இருந்து இஸ்லாமிய குடும்பங்களை வட்டியில் இருந்து காப்பாற்றுவோம். உன்னை ஒரு ஸாலிஹான பிள்ளையாக தந்த இறைவனுக்கு நன்றி செலுத்துகிறேன் என்று கூறி பெற்றோர் எழுந்து சென்றனர்.

--------------------------------

துபாய் - இரவு 9 மணி

நண்பர்கள் மூவருடன் சுலைமான் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தான். என்ன சுலைமான், ஊரில் ஏதும் விஷேசம் உண்டா என ஆதில் கேட்டான்.

சுலைமான், தன்னுடைய பைத்துல்மால் திட்டத்தைக் கூறினான். இதைக் கேட்ட பஷீர் ஆச்சரியமும், ஆனந்தமும் அடைந்தான்.

சுலைமான், எனக்கும் நம் ஊரில் பைத்துல்மால் ஏற்படுத்தணும் என்ற ஆசை நிறைய உண்டு. ஆனால் அதை எப்படி செயல்படுத்தணும் என்பது தெரியாமல் தடுமாறிக் கொண்டிருந்தேன். இன்ஷா அல்லாஹ் உன்னுடைய திட்டத்தில் என்னையும் சேர்த்துக்கொள் என பஷீர் கூறினான்.

இதைக் கேட்டு ஆதில், அஷ்பாக் இருவரும் எங்களையும் இந்த நன்மையான காரியத்தில் சேர்த்துக்கொள் என்றார்கள்.

இதைக்கேட்டு சுலைமான் மகிழ்ச்சியில் அல்ஹம்துலில்லாஹ் என கூறினான்.

சுலைமான் பெண் பேசியிருப்பதாக கூறினாயே பெண்ணுடன் பேசினாயா என ஆதில் கேட்டான். இல்லை ஆதில்

ஏன் பேச வேண்டியதுதானே. இப்பதான் எல்லோரும் போனில் பேசிக் கொள்கிறார்களே என பஷீர் கூறினான்.

இது தவறில்லையா என சுலைமான் கேட்டான்.

இதில் என்னப்பா தவறு. சாதாரணமாக நம் விருப்பு, வெறுப்புகளை பரிமாறி கொள்வதில் சந்தோஷம்தானே என சாதாரணமாக ஆதில் கூறினான்.

நண்பர்களின் உரையாடல் சுலைமான் மனதில் தடுமாற்றத்தை உண்டாக்கியது. முதலில் தயக்கம் வந்தது. பின்பு அது மறைந்தது. ஊருக்கு போகும் நண்பன் மூலம் போன் வாங்கி, பெற்றோர் மூலம் சுமையாவிடம் கொடுக்கச் சொன்னான். பெற்றோர்களுக்கும் இது தவறாக தெரியவில்லை. போனை சுமையாவிடம் கொடுத்தார்கள்.

--------------------------------

ஒரு நாள் சுலைமான், சுமையாவுக்கு போன் செய்தான்.

ஹலோ! சுமையா அஸ்ஸலாமு அலைக்கும் நான் சுலைமான் பேசுகிறேன், சுகமாக இருக்கிறாயா?

வஅலைக்கும் வஸ்ஸலாம். நான் நலமாக இருக்கிறேன். நான் எந்த அந்நிய ஆணுடனும் இதுவரை பேசியதில்லையே!

நான் என்ன அந்நியனா! உனக்காக நிச்சயம் செய்திருக்கும் மாப்பிள்ளைதானே. இங்கு அப்படிதான் நண்பர்கள் பெண்ணுடன் பேசுகிறார்கள்.

நான் உங்ககிட்ட நிறைய பேசக் கூடாதுதான் இருந்தாலும் உங்களுக்கு சில விஷயங்களை தெளிவுபடுத்துகிறேன். நம்ம மார்க்கப்படி திருமணம் முடியும் வரை ஆணும் பெண்ணும் அந்நியங்கதான். நிக்காஹ்வுக்கு முன்பே போன் பேசுவது, SMS அனுப்புவது, நேரில் சந்திப்பது எல்லாமே ஹராம்தான். என்ன செய்ய நல்ல குடும்பத்திலும் இந்த தீய பழக்கம் இருக்கத்தான் செய்கிறது. நீங்க நல்ல சிந்தனையுள்ளவர். இது உங்களுக்கு தெரியாதா?

புரிகிறது சுமையா நீ சொல்வது உண்மைதான். நண்பர்கள் சொன்னதும் தடுமாறி விட்டேன். உடனே ஷைத்தான் புகுந்து விட்டான் என்று சுலைமான் வருத்தத்துடன் கூற,

மார்க்கத்தை தெரிந்த நாமே, பிறருக்கு எடுத்து சொல்வதை விட்டுவிட்டு அந்த தவறை நாம் செய்யலாமா? இதில் நன்மை இல்லை. தீமைதான் அதிகம் இருக்கிறது. இதை நாமதான் கொஞ்சம் கொஞ்சமாக அகற்ற வேண்டும்.

புரிகிறது சுமையா, இன்ஷா அல்லாஹ் இனி போன் பண்ண மாட்டேன். நம்மால் முடிந்தவரை இந்த தீமையை பிறருக்கு எடுத்துச் சொல்லி தடுப்போம். வைக்கிறேன் அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)!

அல்ஹம்துலில்லாஹ் என்று கூறி போனை வைத்தாள் சுமையா. இது தவறு என தெரிந்தும், தவறு என தெரியாமலும் இந்த தீமையை நிறைய பேர் செய்யும்போது, அல்லாஹ் இதிலிருந்து நம்மை காப்பாற்றி விட்டானே என இறைவனுக்கு நன்றி கூறி உறங்க சென்றாள் சுமையா.

குறிப்பு: ஒவ்வொரு முஹல்லாவிலும் பைத்துல்மால் அவசியம் என்பதை உணர்த்தவும், அந்நிய ஆணும், அந்நிய பெண்ணும் தனித்திருப்பது தவறு என்பதும் டெலிபோன் உரையாடல் ஆனாலும் சரியே அதன்படி நிச்சயிக்கப்பட்ட ஆணும் பெண்ணும் போனில் பேசுவது தவறு என்பதை உணர்த்தவுமே இந்தக் கதை.

❋❋❋

# ஈமானிய தூண்கள்

## ஈமான் நிர்வாகிகள் 1978 முதல் 2018 வரை

### ஈமான் நிறுவன நிர்வாகிகள் ( 1978 — 1987 )



நிறுவன தலைவர்

ஜனாப். முஹம்மது ஷாஃபி

6 வது தெரு



நிறுவன செயலாளர்

ஜனாப். அபூபக்கர் ஜின்னா

முகைதீன் புரம்



நிறுவன பொருளாளர்

மர்ஹூம். ஜமால் முகைதீன்

புதுக்குடி தெரு



நிறுவன துணை செயலாளர்

ஜனாப். பீர் முஹம்மது

5 வது தெரு



நிறுவன பிரதிநிதி

ஜனாப். S.O.S.பீர் முஹம்மது

6 வது தெரு

# ஈமானிய தூண்கள்

## ஈமான் நிர்வாகிகள் 1978 முதல் 2018 வரை

**ஈமானிய வேர்களாக 1978 ல் இருந்து ஈமான் வளர்ச்சிக்கு பங்காற்றிய வெளியூர் சகோதரர்கள்**



**மர்ஹூம் ஷேக் இக்பால் மதனி**
மணப்பாறை
(முன்னாள் இமாம், மார்க்க அறிஞர்)
ஈமான் நிறுவன
கவுரவத் தலைவர், ஆலோசகர்



**ஜனாப். சாகுல் ஹமீது**
அருப்புக்கோட்டை
Former General Manager,
Abu Dhabi Airport



**ஜனாப். முஹம்மது யூசுஃப்**
அருப்புக்கோட்டை
Correspondent,
Iqra Matric School, Aruppukottai



**ஜனாப். அபூ ஸாலிஹ்**
கடையநல்லூர்



**ஜனாப். தாவூத்**
காயல்பட்டிணம்

# ஈமானிய தூண்கள்

## ஈமான் நிர்வாகிகள் 1978 முதல் 2018 வரை



தலைவர்

**மர்ஹூம். ஜமால் முகைதீன்**

புதுக்குடி தெரு



செயலாளர்

**ஜனாப். முஹம்மது இப்ராஹிம் கனி**

5 வது தெரு



பொருளாளர்

**ஜனாப். ஷேக் அப்துல் காதர்**

புதுக்குடி தெரு

**1987 to 1990**

# ஈமானிய தூண்கள்

## ஈமான் நிர்வாகிகள் 1978 முதல் இன்று (2018) வரை..

**1990 to 1997**



தலைவர்

**ஜனாப். முஹம்மது மீராசாகிப்**

8 வது தெரு



துணைத் தலைவர்

**ஜனாப். ஷம்சுதீன் ஷாஃபி**

7 வது தெரு



செயலாளர்

**ஜனாப். முஹம்மது இப்ராஹிம் கனி**

5 வது தெரு



பொருளாளர்

**ஜனாப். முஹம்மது அலி**

8 வது தெரு

# ஈமானிய தூண்கள்

## ஈமான் நிர்வாகிகள் 1978 முதல் 2018 வரை



தலைவர்
ஜனாப். ஷம்சுதீன் ஷாஃபி
7 வது தெரு



செயலாளர்
ஜனாப். முஹம்மது இப்ராஹிம் கனி
5 வது தெரு



துணைச் செயலாளர்
ஜனாப். முஹம்மது ஹஸன்
முகைதீன் புரம்

**1997 to 2009**



பொருளாளர் (1997 - 1998)
ஜனாப். முஹம்மது அலி
8 வது தெரு



பொருளாளர் (1998 - 2004)
ஜனாப். முஹம்மது உவைஸ்
4 வது தெரு



பொருளாளர் (2004 - 2006)
ஜனாப். சர்ஃப்ராஸ் அலி
முகைதீன் பள்ளித் தெரு



பொருளாளர் (2006 - 2009)
ஜனாப். B.K. முகைதீன்
4 வது தெரு

# ஈமானிய தூண்கள்

## ஈமான் நிர்வாகிகள் 1978 முதல் 2018 வரை



தலைவர்
ஜனாப். முஹம்மது உவைஸ்
4 வது தெரு



துணைத் தலைவர்
ஜனாப். பீர் முஹம்மது
புதுக்குடித் தெரு

**2009 to 2018**



செயலாளர்
ஜனாப். முஹம்மது இப்ராஹிம் கனி
5 வது தெரு



பொருளாளர் (2009 - 2013)
ஜனாப். B.K. முகைதீன்
4 வது தெரு



பொருளாளர் (2013 - 2018)
ஜனாப். சர்ஃப்ராஸ் அலி
முகைதீன் பள்ளித் தெரு

# ஈமானிய தூண்கள்
## ஈமான் ஏர்வாடி பிரதிநிதிகள்



**1984 - 1994**
மர்ஹூம். பீர் முஹம்மது
(பர்மா ஸ்டோர்ஸ்)
5 வது தெரு



**1994 - 1997**
ஜனாப். M.A.ஆஸாத்
5 வது தெரு



**1997 - 2011**
ஜனாப். முஹம்மது மீராசாகிப்
6 வது தெரு

### முஹல்லா வாரி பிரதிநிதிகள் (2011 - 2018)



ஜனாப். அஹமது பீர் முகைதீன்
லெப்பை வளவு
ஈமான் ஒருங்கிணைப்பாளர்



ஜனாப். அஹமது முஸ்தஃபா
6 வது தெரு
நடு முஹல்லா



ஜனாப். செய்யது
3 வது தெரு
மேலமுஹல்லா



ஜனாப். முத்துவாப்பா
7 வது தெரு
கீழ முஹல்லா



ஜனாப். Dr, ஜமீல் அஹமது
மெயின் ரோடு
பைத்துஸ்ஸலாம்



ஜனாப். முகைதீன்
முகைதீன்பள்ளித் தெரு
முகைதீன்பள்ளி முஹல்லா



ஜனாப். க.மு. அப்துல் காதர்
லெப்பை வளவு
லெப்பை வளவு முஹல்லா




Air Condition
Electrical
Plumbing
Carpantery

## WE 4 MAINTANANCE TECHNICAL SERVICES L.L.C

## OUR SERVICES

- Air conditioning installation & Maintenance works
- Electrical works
- Carpentry works
- Pumbing & Sanitary works
- Partitions & False ceiling works
- Floor & Walltiling works
- Painting & Wall paper works
- CCTV and Security system installation & Maintenance
- Automatic Gate-barrier and Door Access control system instalation & Maintanance

+971 55 788 3435, +971 52 726 6534, +971 50 539 2897 Dubai, U.A.E

: +971 4 394 7644

www.we4m.net

@: info@we4m.net

# ஈமான் சந்திப்புகள் - அன்றும் இன்றும் - மலரும் நினைவுகள்!

- மாத்தளை பீர் முஹம்மது -

*மாஷா அல்லாஹ்!* துபாயில் ஏர்வாடி முஸ்லிம் அசோசியேசன் EMAN ஆரம்பம் செய்தது இன்றுபோல் மனதில் இருக்கும் இனிமையான பசுமையான நினைவு. துபையில் EMAN ஆரம்பம் செய்தது 1978 ல் . நம்ம ஏர்வாடி காரங்க ஆக கூடியது 10 ,12 பேர்கள்தான் அந்த நேரத்தில் துபையில் உண்டு

துவக்க நிகழ்ச்சிக்கு அன்று துபையில் உள்ள ''சவுதி சென்டரில்'' பணியாற்றிய இக்பால் மதனி அவர்கள் தலைமை தாங்க, நிகழ்வுக்கு அழைக்கப்பட்டவர்களில் வந்திருந்த 7, 8 ஏர்வாடி சகோதரர்களும் மற்றும் நமதூர் நண்பர்களுக்கு நெருங்கிய நண்பர்களாகிய சாகுல் ஹமீத் காக்கா, ஹனஸ் காக்கா, மற்றும் வேலூரை சேர்ந்த நண்பர் அலி, கடையநல்லூர் அபுஸாலிஹ் காக்கா இவர்களையெல்லாம் அன்போடு வரவேற்று சகோதரர் முகம்மது ஷாபி அவர்கள் உரையாற்றி, EMAN எதிர்கால திட்டங்கள் பற்றி விளக்கினார். நிகழ்வின் இறுதியில் EMAN னின்

தலைவராக : சகோதரர் முகம்மது ஷாபி அவர்களும்,

செயலாளராக : சகோதரர் அபூபக்கர் ஜின்னா அவர்களும்

இணை செயலாளராக : பீர் முகம்மதாகிய நானும்

பொருளாளராக : ஜமால் சார் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டோம்.

அன்று நமதூர் சகோதரர்களை விட நிறைய வெளியூர் நண்பர்களும் சந்தா தருவார்கள் அதில் நான் பணியாற்றிய அல் குரைர் நிறுவனத்தில் என்னுடன் பணியாற்றிய எனது மேலதிகாரி பி. ராஜா கோபால் அவர்களும் மாதா மாதம் ஈமானுக்கு சந்தா தருவார். இவர் தஞ்சாவூரை சேர்ந்த ஆச்சாரமான ஐயர் என்பது குறிப்பிடத்தக்கது .

இவைகள் எல்லாம் இன்னும் எனது மனதில் பசுமையாய், மலரும் நினைவுகளாய்.

இன்று துபாய் EMAN மிக பெரிய அளவில் மிக அதிகமான உறுப்பினர்களை கொண்டதாய் பூமியின் அடி நுனிவரை வேர் விட்டு விளைந்த பெருமரமாய், செழித்து வளர்ந்து பூத்து காய்த்து கனி தந்து கொண்டிருப்பது பார்க்க படிக்க கேட்க மனசுக்கு இதமாய் மகிழ்ச்சியாய் இருக்கின்றது .

இதற்கெல்லாம் காரணம் அன்று1978இல் ஊன்றிய வீரியமான வித்துதான் என்று சொன்னால் மிகையாகாது அல்ஹம்துலில்லாஹ். எல்லாப் புகழும் இறைவனுக்கே. அன்று ஊன்றிய வித்தை இன்றுவரை பழுதாகாமல் பாதுகாத்து வரும் இன்றைய EMAN சங்க நிர்வாகிகளையும் , உறுப்பினர்களையும் பாராட்டி மகிழ்கின்றேன் இவ்வருடத்தின் (2018) ஈமான் இஃப்தார் சந்திப்பு நிகழ்ச்சியின் புகைப்படங்கள் பார்த்தேன் . அதில்

தம்பி முஹம்மத் அலி, தம்பி சம்சுதீன் ஷாபி, தம்பி இப்ராஹிம் கனி உள்ளிட்ட சில சகோதரர்களை தான் தெரிகின்றதேயொழிய மற்ற சகோதரர்களை தெரியவில்லை. எல்லோரும் எனக்கு புது முகங்கள்.

EMAN னின் சிறப்பான செயல்பாடுகளும் அதன் உறுப்பினர்களும் நிறையவே மாறிதான் இருக்கு மகிழ்ச்சி.. மாறி இருப்பது EMAN னின் நல்ல செயல்பாடு மட்டுமல்ல., ''துபாயும் தான்''

வாழ்த்துக்கள் சகோதரர்களே...

# ஜமால் சார் - ஒரு ஈமானிய ஆளுமை

-அப்துல்லாஹ் இப்னு ஷாஃபி

கடந்த 2017 ம் ஆண்டு நம்மை விட்டு மறைந்த ஜமால் சார் அவர்கள் நமது ஈமான் சங்கத்தின் நிறுவனர்களில் ஒருவர் என்பதும் அதன் முதல் பொருளாளர் என்பதும் நினைவுகூரத்தக்கது.

ஈமான் சங்கம் மூலமாகவும் முஹல்லா மற்றும் தனிப்பட்ட முறையிலும் பல்வேறு சமூக நலப்பணிகளில் தன்னலம் பாராமல் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர்கள். பொதுப் பணிகளில் உள்ளவர்களுக்கு அவசியம் இருக்க வேண்டிய சகிப்புத் தன்மையும் நிதானமும் மார்க்கப் பற்றும் அவர்களிடமிருந்து நாம் பெற வேண்டிய படிப்பினைகள்.

ஈமானுடைய தற்போதைய பணிகளிலும் வயது வித்தியாசம் பாராமல் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர்கள். கடந்த வருடம் முதல் ராணி மெட்ரிக் பள்ளியில் ஈமான் சார்பாக நடத்தப்படும் தீனியாத் வகுப்புகள் ஆரம்பிப்பதற்கு ஜமால் சார் அவர்கள் தான் அஸ்திவாரமாக இருந்தார்கள் என்பது மறக்கமுடியாது..

ஈமானின் வேர்களில் ஒருவரான அவர்கள் ஈமானிய மொட்டுக்களுக்காகவும் உழைத்துள்ளார்கள். ஒவ்வொரு வருட நிகழ்ச்சிக்கும் காவல்துறை அனுமதி மற்றும் முஹல்லா நிர்வாகிகளை அழைப்பது போன்ற பணிகளில் மனமுவந்து தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்கள்.

இந்த வருடத்தில் (2018) , 40 ஆண்டை பூர்த்தி செய்யும் இந்த மகத்தான ஈமான் அமைப்பின் மூலமாக இன்ஷா அல்லாஹ் இறுதி நாள் வரை செய்யப்படும் அனைத்து நற்காரியங்களின் நன்மைகளிலும் ஈமானிய விதைகளை விதைத்தவர்களில் ஒருவர் என்ற முறையில் அன்னாருக்கும் அதன் நன்மைகள் தொடர்ந்து கிடைத்துக் கொண்டே இருக்கும் இன்ஷா அல்லாஹ். அல்லாஹ் கபூல் செய்வானாக.

ஜமால் சார் அவர்களின் மறைவு ஒரு ஆரவாரமில்லாத ஆளுமையின் இழப்பு என்றால் மிகையல்ல. அவர்களுக்கு அல்லாஹ் உயர்ந்த சுவனத்தையும் அவர்களின் குடும்பத்தாருக்கும் சிறந்த பொறுமையையும் வழங்குவானாக.

அவர்கள் விதைத்து விருட்சமாய் வளர்ந்திருக்கும் இந்த ஈமானிய மரம் சோலையாகி கனிகள் தருவதற்காக நாம் ஒவ்வொருவரும் அதில் பங்கெடுப்பதும் அவர்கள் முன்னெடுத்து சென்ற பணியைத் தொடர்வதன் மூலம் மீண்டும் ஒரு மதீனாவிற்கான முயற்சிகளில் நம்மை முழுமையாக இணைத்து கொள்வதுமே நாம் அவர்களுக்கு செய்யும் சிறந்த நினைவேந்தலாக இருக்கும் என எண்ணுகிறேன்.

மண்ணறை மணம் வீச .. மனமார்ந்த பிரார்த்தனைகளுடன்...

அப்துல்லாஹ் இப்னு ஷாபி

# ஈமானிய நினைவுகள்

## - காணொளித் தொகுப்பு



### ஜனாப். முஹம்மது ஷாஃபி

ஈமானின் முதல் தலைவர்

- ஈமான் ஆரம்பித்த சூழல். நவீன தொலை தொடர்பு வசதிகள் இல்லாத காலத்தில் ஊர்க்காரர்கள் ஒவ்வொருவரையும் தேடி போய் சந்திப்போம்.
- தற்போதைய சூழலில், நலிவடைந்த சிறுதொழில் செய்வோருக்கு முதலீடு செய்ய ஈமான் உதவ வேண்டும்.

### ஜனாப். அபூபக்கர் ஜின்னா

ஈமானின் முதல் செயலாளர்



- மணப்பாறை மவ்லவி இக்பால் மதனி அவர்கள் கௌரவத் தலைவராக இருந்து ஈமான் பணிகளில் மிகுந்த ஒத்துழைப்பு தந்தார்கள்.
- ஆரம்ப காலத்தில், ஈமான் சார்பாக, ஏர்வாடி சகோதரர்களுக்கு ஊர் செல்வதற்காக கடன் உதவி வழங்கப்பட்டது.



### ஜனாப். மாத்தளை பீர் முகம்மது

ஈமானின் முதல் துணைச் செயலாளர்

- பிறமத சகோதரரர்களும் ஆரம்ப காலத்தில் தானாக முன்வந்து ஈமானுக்கு சந்தா செலுத்தினார்கள்.
- ஈமானின் தற்போதைய வளர்ச்சியும் செயல்பாடுகளும் மகிழ்ச்சியாக உள்ளது.



**ஜனாப். அஜீஸ்**

ஈமானின் ஆரம்பகால உறுப்பினர்

● ஏழைகளின் திருமணம், பள்ளிக்கூடம் போன்றவைகளுக்கு ஈமான் உதவி செய்திருக்கிறது. மென்மேலும் சிறப்பாக வளர வேண்டும்.

**ஜனாப். முகம்மது மீராசாகிப்**

ஈமானின் முன்னாள் தலைவர்



● ஈமான் திருமணம், மருத்துவம், கல்வி என அத்தியாவசிய தேவைகளுக்கு உதவி செய்து வருகிறது.



**ஜனாப். S.O.S. பீர்முகம்மது**

ஈமானின் முதல் பிரதிநிதி.

● ஈமானுக்கு ஆரம்ப காலத்தில் ஊரிலிருந்து விண்ணப்பங்களை அனுப்பிவைக்கும் பிரதிநிதியாக செயல்பட்டுக் கொண்டிருந்தேன்.

● தற்போதைய சூழலில், ஈமானில் இருந்து ஏழை பெண்கள், மற்றும் விதவைப் பெண்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தர வேண்டும்.

**ஜனாப். ஷேக் அப்துல் காதர்**

ஈமான் ஆரம்ப கால உறுப்பினர்,

முன்னாள் பொருளாளர்



● ஈமான் பெருநாள் சந்திப்புகள் நெகிழ்வான தருணங்கள்.

● இன்றைய சூழலில், கல்வி உதவியை விரிவாக்க வேண்டும்.



### ஜனாப். கமால்

ஈமான் உறுப்பினர்

- பெருநாள் சந்திப்பு மகிழ்வாக இருக்கும்.
- ஈமானின் பணிகள், உதவியை விரிவாக்க வேண்டும்.

### ஜனாப். ஹாஜா

ஆரம்ப கால ஈமான் உறுப்பினர்



- ஏழைக் குமர்களுக்கு கல்யாணத்தின் போது அவர்களுக்கு பண உதவி செய்வது போன்ற நல்ல காரியங்களை செய்து கொண்டிருக்கின்றார்கள்.



### ஜனாப். முஹம்மத் ஹபீபுல்லாஹ்

ஈமான் ரியாத் - முன்னாள் தலைவர்

- துபையில் ஏர்வாடி மக்களால் ஈமான் என்ற அமைப்பு இயங்கிக்கொண்டிருந்தது. நலிவடைந்த ஏர்வாடி மக்களுக்கான திருமண உதவி, கல்வி உதவி என செய்துகொண்டிருந்தார்கள். அதை பார்த்த பின்பு சவூதி- ரியாதில் உள்ள ஏர்வாடி மக்களும் இதைப்போன்ற அமைப்பை ஆரம்பித்து நம்மால் முடிந்த உதவியை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் ஈமான்- ரியாத் என்று ஆரம்பித்தார்கள். துபை ஈமானோடு ஒருங்கிணைந்தே செயல்பட்டது ரியாத் - ஈமான்.



## ஜனாப். சம்சுதீன் ஷாஃபி

ஈமான் ஆரம்ப கால உறுப்பினர்

• ஈமானில் நானும் ஒரு உறுப்பினராக இருந்தேன் என்பதற்காகவே அல்லாஹ்வுடைய கிருபையால் ரொம்ப பெருமை அடைகிறேன். அது செய்த பணிகள் மகத்தானது.

• 1990ல் ஏர்வாடி முழுவதும் ஈமான் சார்பாக என்னையும் மர்ஹூம் முகைதீன் காக்காவையும் சர்வே எடுக்க சொல்லியிருந்தார்கள். ஊர் முழுதும் சர்வே எடுத்து ரமலான் 27ல் 9வது தெரு முஸ்தபா ஆஸ்பத்திரிக்கு எதிரில் வைத்து முதன் முதலில் பித்ரா கொடுக்க ஆரம்பித்தார்கள். இந்த பணியை சமுதாயத்தில் எல்லா அமைப்பும், எல்லா ஜமாத்தும் செய்வதற்கு முன்னோடி ஈமான் தான்.

## ஜனாப். ஆசாத்

ஈமான் முன்னாள் பிரதிநிதி,
ஏர்வாடி பேரூராட்சி மன்ற முன்னாள் தலைவர்.



• மக்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் யாரிடமும் இல்லாத காலகட்டத்தில் தான் ஈமான் ஆரம்பிக்கப்பட்டது.

• ஏர்வாடியை மையமாகக் கொண்டு எத்தனையோ அமைப்புகள் துவங்கப்பட்டாலும் உயிரோட்டமாக இன்று வரை செயல்பட்டுக்கொண்டிருப்பது ஈமான் தான்.

• திருமண வயதை எட்டிய பின்னும் வறுமையின் காரணமாக கரையேறாத குமர்களுக்கு உதவி செய்தது ஈமான் தான்.



## ஜனாப்.இப்ராஹீம் கனி

செயலாளர், ஈமான்

• ஈமான் மீட்டிங் இரண்டாவது வெள்ளிக்கிழமை எப்ப வராதுனு எல்லாரும் காத்துட்டு இருப்போம், அப்போது தான் அனைவரையும் சந்திக்கலாம் என்ற சந்தோசமான நிகழ்வு நடந்துகொண்டிருந்தது.

• ஈமானோடு இருக்கும் போது அல்லாஹ்வின் சிந்தனை மட்டுமே இருக்கும்.



## ஜனாப் ரஃபீக்

ஈமான் உறுப்பினர்

- வணக்க வழிபாடுகள் என்பது வெறும் தொழுகை, நோன்பு மட்டுமில்லை. மக்கள் பணி செய்வதும் வணக்க வழிபாடுகள் தான்
- மக்களின் கஷ்டங்களில் பங்கெடுக்க வேண்டும் என்று ஆரம்பிக்கப்பட்டது தான் ஈமான்.

## ஜனாப். முஹம்மது அலி

முன்னாள் பொருளாளர், ஈமான்



- ஒரு குழந்தை பிறந்து கூடவே வளர்ந்து அதனை பார்க்கும் போது எப்படி இருக்குமோ அதைப்போன்ற ஒரு பெருமிதமாக இருக்கிறது.
- முன்பை விட இப்போது ஈமானின் இலக்கு விரிவடைந்துவிட்டது. இப்போது ஈமான் முன்பை விட நன்கு பக்குவமடைந்துவிட்டது



## ஜனாப்.சம்சுதீன் ஷாபி

ஈமான் முன்னாள் தலைவர்

- ஈமான் என்றாலே என் மனதில் ஒரு இனம் புரியாத பூரிப்பு ஏற்படும்.
- நான்காவது தலைமுறையைத் தாண்டி இன்று ஈமான் பயணித்துக்கொண்டிருக்கிறது. இது மென்மேலும் விருட்சமாக வளர வேண்டும்.

## ஜனாப். சாகுல் ஹமீத்

ஆரம்ப கால ஈமான் ஆலோசகர்
முன்னாள் பொது மேலாளர்-
அபுதாபி விமான நிலையம்



- ஆரம்ப காலத்தில் ஈத் மிலன் நிகழ்ச்சியில் தான் ஈமான் மீட்டிங் சென்றோம்.
- ஒருவரை ஒருவர் சொந்தம் கொண்டாடி பழகுவதில் ஏர்வாடிகாரர்களுக்கு நிகரில்லை.



## ஜனாப். முஹம்மது இப்ராஹீம்

நிறுவனர், NAF, Trainer Understand Quran

- எனக்கும் ஈமானுக்குமான தொடர்பு என்பது குர்ஆன் மூலமாகவும், அல்லாஹ்வின் மூலமாகவும் தொடர்புடையது.

மீண்டும் ஒரு மதினா என்ற இலக்கில் ஈமான் செயல்படுத்திக்கொண்டிருப்பது. நாமும் நமது ஊரை அப்படி மாற்ற வேண்டும் என்ற உந்துதலை தருகிறது.

## ஜனாப். செய்யது மக்தூம்

ஆரம்ப கால ஈமான் உறுப்பினர்




- என்னைப்பொறுத்தவரை மறக்க முடியாத நிகழ்வு என்றால் பெருநாள் அன்று ஈமான் உறுப்பினர்கள் அனைவரும் சந்தித்து பேசி சந்தோசமாக இருப்போம். அதன் பின் நடக்கும் மீட்டிங்கில் ஏர்வாடிக்கு என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து பேசுவார்கள்.
- ஏழைக் குமர்களுக்கு உதவ ஆரம்பித்த அமைப்பு இன்று அதன் செயல்பாடு எங்கோ சென்றுவிட்டது.

**ஈமானிய நினைவுகள் - காணொளித் தொகுப்பைக் காண கீழுள்ள QR கோடை ஸ்கேன் செய்யவும்**

# ஈமானிய நினைவுகள்

**- இப்ராஹிம் கனி**

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்

ஏர்வாடி முஸ்லிம் அசோசியேஷன் - (EMAN) *1978* ஆம்ஆண்டு நமதூர் சகோதரர்களால் ஆரம்பிக்கப்பட்டது. நான் 1982ல் ஏப்ரல் 24ந் தேதி அபுதாபிக்கு வந்தேன். வந்த மறுவாரம் முதன்முதலாக சந்தித்தது அஜீஸ் காக்கா அவர்கள். அந்த வெள்ளிக்கிழமை முஸஃபா கேம்ப்பில் போய் 5வது தெரு சேமது மாமா (மர்ஹூம்), பணகுடி ஹனிபா ஆகியோர்களை சந்தித்ததின் மூலம் ஈமான் என்ற அமைப்பு நமதூர் சகோதரர்களால் செயல்படுத்தப்பட்டு வருவதை அறிந்தேன்.

வேலை மாற்றலாகி, அதே வருடம் துபாய் வந்ததும், மாதத்தின் இரண்டாவது வெள்ளிக்கிழமை ஜின்னா காக்காவை தொடர்பு கொண்டேன். என்னை வந்து அழைத்து சென்றார்கள். அன்று அருப்புக்கோட்டை யூசுப் காக்கா இல்லத்தில் (கிஸைஸ்) வைத்து ஈமான் கூட்டம் நடைபெற்றது. அதில் நான் முதன்முதலாக கலந்து கொண்டேன். ரொம்பவும் சந்தோஷமாக இருந்தது. மீட்டிங்கில் கலந்து கொண்டவர்கள் 1. ஜின்னா காக்கா 2. மர்ஹூம் ஜமால் சார் 3. ஷாபி காக்கா 4. மர்ஹூம் பக்கீர் முகைதீன் காக்கா 5. அபூபக்கர் அலிமாலிக் - புதுமனை 6. சேனாப்பா மாமா 7. யூசுப் காக்கா, ஷாஹூல் ஹமீது காக்கா - அருப்புக்கோட்டை 8. தாவூத் காக்கா - காயல்பட்டினம் 9. மர்ஹூம். அஜிஸ் காக்கா லெப்பைவளவு தெரு 10. மர்ஹூம் பக்கீர் காக்கா 9 வது தெரு 11. அபூபக்கர் காக்கா 12. நூர் காக்கா - (தற்போது சென்னையில்) 13. காஜா காக்கா 6வது தெரு

ஈமான் அமைப்பில் அல்லாஹ்வின் கிருபையால் என்னையும் 1982 முதல் இணைத்து எனது ஈமானிய பயணம் ஆரம்பமானது - அல்ஹம்துலில்லாஹ். அன்றைய ஈமானின் மாதச்சந்தா 20திர்ஹமாக இருந்தது. குறிப்பாக ஏழை குமர் வகைக்காக ஒரு குமருக்கு ரூ.1500 வீதம் கொடுத்து வந்தார்கள். ஊரில் மதரஸா ஹிஸ்னுல் உலூம் அரபி பாடசாலை பிரதிநிதி S.O.S. பீர் மாமா அவர்கள் மூலம் ஊரில் பணம் கொடுக்கப்பட்டு வந்தது.

அந்த நாட்களில் மாதாந்திர கூட்டம் மற்றும் சகோதரர்கள் சந்திப்பு எல்லாம் ஜின்னா காக்கா வீட்டில் அதிகமாக நடைபெறும். ஜின்னா காக்காவுடன் Khaleej Times ல் வேலை செய்து வந்த வேலூரைச் சேர்ந்த சகோதரர் அலி அவர்களும் ஈமானுடன் இணைந்து செயல்பட்டு வந்தார்கள்.

சந்தா வாங்குவதற்காக வேண்டி ஜின்னா காக்கா, ஷாபி காக்கா, ஜமால் சாருடன் நானும் இணைந்து மாதம் ஒரு முறையாவது போய் வருவோம். யாராவது புதிதாக அமீரகம் வந்ததை அறிந்தால் நேரடியாக போய் பார்த்து அவர்களையும் ஈமானுடன் இணைத்துக் கொள்வோம்.

ஈமானின் செயல்பாட்டிற்கு ஈமான் ஆலோசகராக இருந்த இக்பால் மதனி ஹஸரத் (மர்ஹூம்) அவர்கள் பெரிதும் உதவியாக இருந்தார்கள். முதன்முதலில் ஃபித்ரா வசூல் தேராவிலுள்ள பாத்திமா பள்ளியில் நடைபெற்றது. நமதூர் மற்றும் வெளியூர் சகோதரர்களிடம் பெற்று அதை ஊருக்கு அனுப்பி வைத்தோம். அன்று ஃபித்ரா அமீரக தொகை திர்ஹம் 15- ஆக இருந்தது. இக்பால் ஹஸரத் மைத்துனர் பஷீர் ஹஸ்ரத்தும் ஈமானுடன் இணைந்து செயல்பட்டதோடு பல ஆலோசனைகளையும் ஊக்கத்தையும் தருவார்கள்.

மாதந்தோறும் நடைபெறும் கூட்டத்தில் நமதூர் சகோதரர்கள் வந்து கலந்து கொள்வார்கள். ஆரம்ப காலங்களில் ஈமான் சந்திப்புகள் நடைபெற்ற இடங்கள் 1.ஜின்னா காக்கா இல்லம் 2.ஷாபி காக்கா இல்லம் 3. அருப்புக்கோட்டை யூசுப் காக்கா இல்லம் 4.சேனாப்பா மாமா, ஜமால் சார் இல்லம் 5.ஷம்சுதீன் ஷாபி இல்லம் 6.அலியப்பா ENOC இல்லம்.

அன்றைக்கு நான் சந்தித்த, என் நினைவிலுள்ள குறிப்பிட்டு சொல்லும் படியான சில சகோதரர்களை இங்கு நினைவு கூற ஆசைப்படுகிறேன். முதலாவதாக லெப்பை வளவு சலாகுதீன் காக்கா (மர்ஹூம்), இவர்கள் பழகுவதற்கு இனிமையானவர்கள். இவர்கள் எல்லா நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்வார்கள். குடும்பத்துடன் சத்வாவில் தங்கி இருந்தார்கள். இவர்கள் துபாய் வருமுன், டெல்லியில் ஜவஹர்லால் நேருவின் சகோதரி விஜயலட்சுமி பண்டிட் அவர்களின் ஓட்டுநராக வேலை செய்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்க விஷயம். இவர்களை குறித்து குமுதம் இதழில் ஒரு கட்டுரை வெளிவந்திருந்தது. ''ஏர்வாடி முதல் டெல்லி வரை'' (தலைப்பு சரியாக ஞாபகம் இல்லை). நீண்ட நாட்களாக துபாயில் இருந்தவர்கள், தங்கள் இறுதி மூச்சையும் இறைவன் நாட்டப்படி அங்கேயே முடித்து விட்டார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்

மேலும் மாத்தளை பீர் காக்கா, நூ வீட்டு மர்ஹூம் பீர் காக்கா, மக்தூம் காக்கா, அபூபக்கர் காக்கா (தக்கலை), நஸீர் காக்கா (தக்கலை), அபுசாலிஹ் காக்கா, மற்றும் ஷார்ஜாவில் இருந்து TipTop கம்பெனியில் வேலை செய்துவரும் 4 சகோதரர்கள் ஆகியோரும் மாதந்தோறும் தவறாமல் கலந்து கொள்வார்கள்.

ஈமானுடன், அதிலுள்ள சகோதரர்களுடன் தொடர்பு ஏற்பட்ட பின்புதான் அல்லாஹ்வின் பொருத்தத்தை நாடக்கூடிய செயலில் நானும் முழுமையாக என்னை ஈடுபடுத்திக் கொண்டேன் என்றால் அது மிகையல்ல. அனைத்து உறுப்பினர்களுக்கும் ஃபித்ரா வேண்டி தபால் மூலம் தொடர்பு கொள்வோம். குறிப்பாக அபுதாபி, அல்அய்ன் போன்ற இடங்களுக்கும், மீட்டிங்கிற்கு வர இயலாதவர்களுக்கும் அனுப்புவோம். இந்த நேரத்தில் ஜமால் சார் துபாய் வேலையை முடித்துவிட்டு ஊர் சென்றார்கள். அச்சமயம் அவர்கள்தான், இப்ராகிம் தான் இனி ஈமானின் செயலாளர் என்று சொல்லி கூட்டத்தில் சொன்னார்கள். அவர்களின் அந்த அவாவும் துஆவும் தான் கடந்த 31 வருடங்களாக என்னை இந்த ஈமானிய பணியில் செயலாளராக செயல்பட வைத்துக் கொண்டிருக்கிறது. அல்ஹம்துலில்லாஹ்.

குமர் வகைக்கு கொடுத்துக் கொண்டிருக்கும் காலத்தில் கத்னா வகைக்கும் உதவி கேட்டு விண்ணப்பம் வந்தது. அதையும் கொடுக்க ஆரம்பித்தார்கள். அதன்பின் ஸ்கூலுக்கு கழிவறை, டெஸ்க், பெஞ்ச், பிள்ளைகளுக்கு பாட புத்தகங்கள் என்று ஈமானின் சேவைகள் சிறிது சிறிதாக வளரத் தொடங்கி இன்று அல்லாஹ்வுடைய கிருபையால் அளப்பெரும் பணிகளை செய்து கொண்டிருக்கிறது. 40 வருடங்களைக் கடந்து இன்றும் 2 வது வெள்ளிக்கிழமை ஈமான் சந்திப்புகள் தொடர்ந்து நடைபெற்று வருவது அல்லாஹ்வின் அருளாகவே பார்க்கிறேன்.

ஈமானுடைய இன்றைய வளர்ச்சிக்கும் அதன் தொடர்ச்சிக்கும், ஆரம்ப காலத்தில் அதற்காக உழைத்த சகோதரர்களின் தன்னலம் பாரா மனப்பான்மையும் ஒரு முக்கிய காரணமாகும். அவ்விதம் ஈமானுக்காக எப்போதும் ஒத்துழைப்பு தந்த, ஈமானிய சந்திப்புகளில் பங்கெடுத்து பணியாற்றிய சில சகோதரர்கள் இன்று நம்முடன் இல்லை. இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன். ஈமான் 40 அகவையைத் தாண்டும் இந்த நல்ல சந்தர்ப்பத்தில் அவர்களை நம் துஆக்களில் நினைவுகூர கடமைப்பட்டுள்ளோம். அவர்களில் எனக்கு நினைவில் வந்தவர்களின் பெயரை கீழே பட்டியலிட்டுள்ளேன். (பெயர்கள் விடுபட்டிருந்தால் மன்னிக்கவும் )

1. சலாகுதீன் காக்கா லெப்பைவளவு தெரு - துபாய்
2. அஜிஸ் காக்கா லெப்பைவளவு தெரு - அல்அய்ன்
3. பக்கீர் முகைதீன் காக்கா 5வது தெரு - துபாய்
4. முகைதீன் காக்கா (Khaleej Times) 7வது தெரு - துபாய்
5. அப்துல் காதர் - 8வது தெரு (அலாவுதீன் காக்கா மகன்)
6. முகம்மது ஹஸன் - முகைதீன் புரம்
7. ஹனீபா காக்கா - 9வது தெரு ( டிப்டாப்)
8. பக்கீர் காக்கா - 9வது தெரு
9. மாமுட்டி அலி காக்கா- (7வது தெரு)
10. ஜலால் - 8வது தெரு - (அலாவுதீன் காக்கா மகன்)
11. பீர் முகைதீன் - 5வது தெரு (ETA)
12. பீர் காக்கா -7வது தெரு (நூ வீடு)
13 ஜமால் சார் - புதுக்குடி - ஈமான் நிறுவனர்களில் ஒருவர்

இவர்கள் அனைவருக்கும் (பெயர் விடுபட்டவர்களுக்கும்) வல்ல இறைவன், அவர்களுடைய பாவங்களை மன்னித்து, ஈமான் செய்து வரும் அறப்பணிகளின் நன்மைகள் அவர்களுக்கு தொடர்ந்து கிடைக்கச் செய்து, அவர்களின் மண்ணறையை விசாலமாக்கி, மறுமையில் ஜன்னத்துல் ஃபிர்தவ்ஸை கொடுப்பானாக... ஆமீன்.

2017 ஆம் ஆண்டு ஈமான் நடத்திய

# "நம்பியாறு நினைவலைகள்"

கவிதைப் போட்டியில் **முதல் பரிசு** பெற்ற கவிதை

**-அப்துல் ரசாக் -**

தென்பொதிகை தொடர் மீது
தேன் பொழியும் நம்பிமலை
நம்பி மலை சிற்றூரு
நனிசிறக்கும் தேன்போல
வானரங்கள் கனிகொள்ளும்
வண்டினமும் பண்பாடும்
புள்ளினங்கள் விளையாடும்
புகலிடமாம் நம்பியாறு.

எட்டுதிசைபுகழ் மணக்கும்
எங்களூர் ஏர்வாடி
மட்டிலா மாந்தர்களும்
மருவிவாழும் ஏர்வாடி
புகழ் மணக்கும் நல்லறிஞர்
போற்றிநிற்கும் ஏர்வாடி
சாதிமதபேதமின்றி
சமத்துவமாய் இருக்கும் ஊர்.

எங்களூர் நடுவினிலே
இதயம் போல் ஓடிவரும்
நம்பியாற்றின் ஓசையிலே
நாங்களெல்லாம் மெய்மறந்தோம்
ஓங்கிநிற்கும் தெங்குகளும்
ஒலியெழுப்பும் பறவைகளும்
பாங்குடனே காட்சிதரும்
பாசமிகு எங்களூர்.

நம்பியாற்றின் சிறப்பாலே
நனிசிறந்த தெங்களூர்
வெற்றிலைக் கொடிகளும்
வேரகத்தி கீரைகளும்
நஞ்சை நற்பயிர்களும்
பஞ்சு பருத்திகளும்
பரந்த விவசாயமும்
பரவிவந்த எங்களூர்.

எத்திசை நோக்கினும்
இதயத்தை ஈர்க்கின்ற
கண்கொள்ளா காட்சிகளும்
காணகிடைக்கும் அற்புதமாய்
சலசலத்து ஓடிவரும்
சண்டமாருதம் தான் தவழும்
நம்பியாற்றின் குளிர் நீரில்
நங்கைகளும் நீராட.

பாங்கொலி கேட்கும் முன்
''பக்கட்டை'' (வாளி) சுமந்துகொண்டு
தோழிகள் புடை சூழ
தோதாக நீராடி
வாழ்ந்துவந்த எங்களூர்
வரண்டுபோன நம்பியாறு
பொலிவிழந்து காணும்போது
புகலிடந் தான் வேறுண்டோ.

இந்தநிலை ஏன் என்று
இதயத்தில் கேள்வியுண்டு
வளம் கொழித்த நிலைமாறி
வான் மழைதான் பொய்த்ததன்றோ
நீரின்றி தவித்ததற்கும்
நிலைமாறி போனதற்கும்
இறைமறையின் போதனையை
இதயத்தில் ஏற்றநிலை?

அரைகுறையாய் அமல் செய்து
அலட்சியமாய் நடந்துவந்தால்
இறையோனின் கோபத்தால்
ஏற்பட்ட வறட்சி தான்
ஆனாலும் தவ்பாவை
அனுதினமும் கேட்டு வந்தால்
பெருக்கெடுத்து ஓடிவரும்
பெருவெள்ளம் நம்பியாற்றில்.

# Old is Gold - EMAN Memories in Pictures


















EMAN - UAE




Khaleej













ஈமானிய குடும்பத்தின் பொற்(ஆரம்ப)கால நினைவுகளாய் நிற்கும் நிழற் படங்களை காண இந்த QR கோடை ஸ்கேன் செய்யவும்:

# ஈமான் கூட்டமைப்பின் 40-ஆம் ஆண்டு விழாவிற்கு இனிய நல்வாழ்த்துக்கள்

## சென்னை பார்க் உணவகம்

**CHENNAI PARK**
VEG & NON VEG
RESTAURANT
Al Hudaiba, Al Karama, Dubai, U.A.E

INDIAN | CHINESE | TANDOOR
LUNCH & DINNER

H-1 Block, Shop No. 9, Wasl Building
Behind Ramada Jumeirah Hotel, Al Hubaiba, Dubai
Tel: 04 3273773 / 3862970

Bldg. 2, Wasl Hub, Shop No. 18,
Near Dr. Ismail Day Care Clinic, Al Karama, Dubai
Tel: 04 3966401/408



# திருக்குர்ஆன் பிணைத்த ஈமானிய உறவு

பொறியாளர்: ஃபெரோஸ்கான், நெல்லிக்குப்பம்

மனைவி, மக்கள், பெற்றோர், சகோதரர் என சொந்தங்களை இழந்து அவர்களின் நல்வாழ்வுக்காக மெழுகுவர்த்திகளாக, சுமைதாங்கிகளாக வளைகுடாக்களில் நம்மவர்கள் வாழ்ந்தாலும் அவர்களின் மூலம் நம் தாயகம் நிறைய பலன்களை பெற்றுள்ளதை யாரும் மறுக்க இயலாது. சொந்த ஊரில் கூட உறவுகளோடு கூடி வாழாத எத்தனையோ நபர்கள் அயல்நாடுகளில் குடும்பங்கள் இல்லா வெறுமையை போக்க உறவுகளோடு பேசவும் ஊர்மக்களோடு அளவளாவவும் ஆரம்பித்து பின் தாம் பிறந்த மண்ணுக்கு நம்மால் முடிந்ததை செய்வோம் எனும் இலக்கோடு ஊருக்கான அமைப்புகள் ஆரம்பிக்கப்படுவது வளைகுடாவுக்கு புதிதல்ல. அவ்வகையில் சமூக முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு 40 ஆண்டுகளாக நீர்த்துப் போகாமல் மீண்டும் ஒரு மதீனாவாக மிளிர வேண்டும் என்ற இலட்சிய உணர்வோடு பயணிப்பது சமூக முன்னேற்றம் குறித்து சிந்திப்போர் மகிழ்ச்சி அளிக்ககூடிய ஒன்று என்றாலும் முஹல்லா ஜமாத் புணரமைப்பை இலக்காகக் கொண்டு செயல்படும் ஏர்வாடியின் முதல் NRE ஆகிய எனக்கு அது இன்னும் இரட்டிப்பான மகிழ்ச்சியை தரும் என்பது யதார்த்தமே.

40 வது ஆண்டு விழாவை நிறைவு செய்துள்ள ஈமானை முதற்கண் பாராட்டும் அதே வேளையில் 20 வருடங்கள் பின்னோக்கி பார்க்கிறேன். தேரா துபையில் சில சகோதரர்களின் வீட்டு மொட்டைமாடியில் இப்தார் விருந்து வைக்கும் எளிமையான அமைப்பாக ஈமான் இருந்த தொடக்ககாலகட்டத்தில் அதன் கூட்டங்களில் பங்கேற்ற என்னை தற்போது மிகப் பிரம்மாண்டமாய் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு சவால்விடும் நேர்த்தியோடும் தாயகத்திலிருந்தும், அயலகத்திலிருந்தும் சொற்பொழிவாற்றுவதற்காக பேச்சாளர்களாக புதிய என்.ஆர்.ஈக்கள் தருவிக்கப்படும் இத்தருணத்திலும் இந்த எளியவனை நினைவில் வைத்ததற்காக இதயத்தின் அடியாழத்திலிருந்து நன்றியை உரித்தாக்குகின்றேன்.

ஈமானுடனான உறவு உண்மையில் ஈமானோடுதான் தொடங்கியது. ஆம். உண்மையை தான் சொல்கிறேன். நமது ஈமானுக்கு அடிநாதமாக விளங்கக் கூடிய குர்ஆனின் மூலம்தான் ஈமானுடனான என் உறவு தொடங்கியது. 1998ல் அமீரகத்தில் தமிழர்களின் வேடந்தாங்கலாக இருந்த ஈ.டி.ஏ. நிறுவனத்தில் பணிக்காக வந்தபோது அமீரகத்தில் மார்க்க சொற்பொழிவுகள் மாத்திரம் வாராந்திரம் பெரும்பாலும் வெள்ளிக்கிழமைகளில் நடைபெறும். இந்த உம்மத் உலகளவில் சந்திக்கும் பிரச்னைகளுக்கு அடிப்படை காரணம் வஹியின் வார்ப்பில் வளர்ந்த சமூகம் வஹியை மறந்து வஹ்னில் உழலும் சமூகமாக மாறியதே என்பதால் அதை நிவர்த்தி செய்யும் வகையில் திருக்குர்ஆன் கூட்டாய்வு வகுப்புகளை துபையில் நடந்தி வந்தோம். அச்சமயம் தமிழகத்தில் வெளிவந்த பெரும்பான்மையான இஸ்லாமிய இதழ்களில் நான் கட்டுரைகள், விமர்சனங்கள் புனைப்பெயர்களில் எழுதுவதுண்டு. எழுந்தோம், வேலைக்கு சென்றோம், பொருள்

ஈட்டினோம் என்று வாழ்க்கையை முடக்காமல் அலுவலகத்திற்கு செல்லும் போது பேருந்தில் புத்தகம் வாசிக்க கூடிய பழக்கம் உள்ளதால் புத்தகம் எடுத்துச் செல்வதை வாடிக்கையாக வைத்திருந்தேன். அப்படி ஒருநாள் என்னிடமிருந்த ஒரு புத்தகத்தை என்னுடன் பணிபுரிந்த ராஜகிரி சகோதரர் படிப்பதற்காக எடுத்துச் சென்றார். அந்தப் புத்தகத்தில் எழுதப்பட்டிருந்த என் பெயரைப் பார்த்த அவரின் அறை நண்பர் நமது நெல்லை ஏர்வாடியைச் சார்ந்தவர். அவர் என்னைத் தொடர்பு கொண்டு பழகுவதற்கு அழைக்க நானோ அவரை திருக்குர்ஆன் வகுப்புகளின்பால் அழைத்தேன். இப்படியாக ஈமானின் வாசல்கள் இந்த எளியவனுக்கு திறக்கப்பட்டன.

1980 களில் முஹல்லாவின் பிரச்சனைகள் குறிப்பாக சிவில் பிரச்சனைகள், அதிகார மையங்களுக்குச் செல்லாமல் முஹல்லாவிற்குள்ளேயே முடிக்கப்பட்டன. நாளடைவில் நம்மிடையே ஏற்பட்ட அதீத விழிப்புணர்ச்சியே முஹல்லா ஜமாத்தை பலவீனப்படுத்திவிட்டன என்று சொல்வது மிகையான ஒன்றல்ல. முஹல்லா ஜமாத்துகளை புணர்நிர்மாணப்படுத்துவதே அந்த ஊரின் பிரச்சினைகளுக்குத் தீர்வாக இருக்க இயலும் என்று என்னைப் போன்றோர் இன்று எழுதுவதற்கும், அப்படி ஒரு கட்டமைப்பை உருவாக்க பாடுபடுவதற்கும் எங்களை உற்சாகப்படுத்திய வெகு சில ஊர்களில் நமது ஏர்வாடியின் ஈமானின் செயல்பாடுகளுக்கு முக்கிய இடமுண்டு.

1999ஆம் ஆண்டில் ஜின்னா காக்கா மற்றும் அபுபக்கர் காக்கா தங்கியிருந்த தேரா தமிழ் பஜார் அறை மாடியில் இப்தார் நிகழ்வு நடைபெற்றது. விருந்துக்காகச் சென்ற என்னை திடீரென்று நோன்பு குறித்து உரை நிகழ்த்தச் சொன்னார்கள். அன்றிலிருந்து ஈமானின் ஆஸ்தான வித்வானாக முதல் என்.ஆர்.ஈ.யாக கிட்டத்தட்ட 2006 வரை ஈமானின் பெரும்பான்மையான நோன்பு, ஹஜ்ஜு பெருநாட்களில் கலந்து கொண்டதோடு மட்டுப்படுத்திக்கொள்ளாமல் கிட்டத்தட்ட ஏர்வாடியில் வசிக்காத ஏர்வாடியனாகவே உணரும் அளவு பாசத்தை ஈமான் சகோதரர்கள் பொழிந்தார்கள். ஏர்வாடியின் மூத்த தலைமுறையினரும், அடுத்த தலைமுறையினரும் நெருங்கிப் பழகியதோடு குர்ஆன் விளக்கவுரை கூட்டாய்வு வகுப்புகளை ஏர்வாடி மக்களுக்குக் கொண்டு செல்லவும் உதவி செய்தனர்.

2006 இறுதியில் ஊருக்குச் சென்றேன். என்னைவிட என் தேவையை உணர்ந்த இறைவனின் நாட்டத்தால் மீண்டும் 2008 இறுதியில் இரண்டு ஆண்டுகள் கழித்து துபாய் வந்தபோது மெட்ரோ இரயில், புதிய ஷாப்பிங்மால்கள், அபுதாபி ஷேக் ஜாயீத் க்ராண்ட் மசூதி என அமீரகத்தின் முகம் மட்டுமல்ல, ஈமானும் பிரம்மாண்டமாய் மாறியிருந்தது கண்டு உவகை அடைந்தேன். ஆனால் துபாயிலிருந்து 450 கி.மீ. தூரமுள்ள லிவா அருகே உள்ள பாலைவனப் பகுதியில் வேலை என்பதால் ஈமானுக்கும் எனக்கும் இடையேயான உறவில் பௌதீக ரீதியாக தொய்வு ஏற்பட்டாலும் உறவு ஆழமாகவே இருந்தது. அதன் நீட்சியாக ஏர்வாடியில் ‘உணர்வாய் உன்னை’ எனும் சுயமுன்னேற்றவகுப்பை 2008ல் வெற்றிகரமாக நடத்தினேன். அதுமாத்திரமின்றி திருக்குர்ஆன் வகுப்புகள் மூலம் ஈமானின் புதிய என்.ஆர்.ஈக்களாக சகோதரர்கள் காயல்பட்டணம் ஜக்கரியா மற்றும் பொதக்குடி ஜலால் போன்றோர் ஈமானுக்கு சிறப்பான சேவை புரிந்தனர். மேலும் 2010ல் குவைத்துக்கும் சென்றுவிட்டு இறைவனின் நாட்டத்தால் 2012 ரமலானில் அபுதாபி திரும்ப வந்த பிறகு மீண்டும் ஈமானுடனான உறவு மீண்டும் மலரத் தொடங்கியது.

அல்ஹம்துலில்லாஹ்! இந்த இடைப்பட்ட காலங்களில் ஈமான் என்ற இந்த அமைப்பு நெல்லை ஏர்வாடிக்கு செயற்கரிய பல்வேறு சாதனைகளை செய்திருந்தது. ஆரம்ப தலைமுறையில் பலர் ஏர்வாடியில் செட்டிலாகி இருக்க, அடுத்து வந்த சூடேற்றப்பட்ட புதிய தலைமுறை பல்வேறு சாதனைகளை இன்னும் அழகாகச் செய்து கொண்டுள்ளனர். முந்தைய சகோதரர்களோடு இணைந்து புதிய சகோதரர்கள் பல்வேறு ஆக்கப்பூர்வமான செயல்களை செய்து கொண்டுள்ளனர்.

ரமலானில் ஜகாத் விநியோகம், பித்ரா விநியோகம் போன்ற பணிகளை அனைத்து தரப்பு மக்களையும் அரவணைத்து திறம்பட வருடந்தோறும் விநியோகிப்பதோடு ஏர்வாடியின் மிக முக்கியமான தண்ணீர் பிரச்சினைக்கு ஓர் அரசு செய்ய வேண்டிய வேலையை ஈமான் செய்தது. ஆம். ஒருகாலத்தில் 30,40 அடி ஆழத்தில் போர் போட்டால் நீர் கிடைத்த காலம் மாறி நூற்றுக்கணக்கான மீட்டர் ஆழத்திலும் நீர் கிடைக்காமல் அவதிப்படுகின்றனர். இப்பிரச்சினை தமிழகம் முழுமைக்கான பிரச்னை என்றாலும் ஈமான் ஆதங்கப்படுவதோடு நிறுத்திக் கொள்ளாமல் நிலவியல் வல்லுநர்களை பணிக்கு அமர்த்தி சர்வே எடுத்தனர். அவர்களின் ஆலோசனை அடிப்படையில் பூமிக்கு அடியில் உள்ள நீரோட்டத்தைக் கண்டுபிடித்து மேம்படுத்தும் வழியை ஈமான் செய்து வருவது ஈமானின் தொலைநோக்கிற்கு தெளிவான சான்றாகும்.

பொதுவாக ஊர் கூட்டங்களில் வெகு சொற்பமானவர்களே கலந்துகொள்ளும் இக்காலச் சூழலில் அமீரகத்தில் ஏர்வாடியின் மாதாந்திரக் கூட்டங்களிலும் பெருநாள்கூட்டங்களிலும் சகோதரர்கள் கலந்துகொள்வதில் காட்டும் அக்கறை அலாதியானது. அதுபோல் ஈமானிய மொட்டுக்கள் எனும் தலைப்பில் ஹஜ்ஜுப் பெருநாளை ஒட்டி ஏர்வாடியில் ஈமான் நடத்தும் நிகழ்வுகள் எதிர்கால தலைமுறையை செதுக்கும் தொலைநோக்கு நடவடிக்கை என்றால் மிகையாகாது. ஏர்வாடியில் உள்ளவர்களின் எழுத்தாற்றலை ஊக்குவிக்கும் பொருட்டு வருடந்தோறும் கட்டுரை போட்டி நடத்துவது உண்மையிலே நல்லவிடயம். ஏனெனில் கட்டுரை தலைப்புகளில் கூட ஏர்வாடியின் முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டும் ஏர்வாடியின் வளர்ச்சிக்கு செய்ய வேண்டிய தொலைநோக்கு திட்டங்கள் என ஒவ்வொரு நொடிப்பொழுதும் ஊரின் வளர்ச்சிக்காக பாடுபடுகிறது ஈமான். வருடந்தோறும் பாரம்பரிய மருத்துவம், பாரம்பரிய உணவு போட்டிகள் என எத்துனை வழிகளில் முயலுமோ அத்துனை வழிகளிலும் ஏர்வாடியின் முன்னேற்றத்துக்காகப் பாடுபடுகிறது ஈமான் என்றால் யாரும் மறுக்கமாட்டோம். ஈமானின் செயல்பாடுகளினால் உந்தப்பட்ட அச்சகோதரர்களில் சிலர் இஸ்மா எனும் அமைப்பை நிறுவி மருத்துவ உதவிகளை தேவையுடையோருக்கு செய்து வருகின்றனர். மேலும் எல்லோருக்கும் தரமான மருத்துவம் எனும் அடிப்படையில் இலாபநோக்கு இல்லாமல் மருத்துவமனை கட்டும் திட்டத்தில் இறங்கியுள்ளது பாராட்டப்பட வேண்டிய விடயம்.

மார்க்க கல்வி, உலகக்கல்வி என கல்வியை கூறு போடாமல் வஹியின் அடிப்படையில் ஒருங்கிணைந்த கல்வியின் அடிப்படையில் முஸ்லிம்கள் பயின்றபோது ஒட்டுமொத்த உலகும் பயன்பெற்றது. வஹியின் அடிப்படையில் கல்வி கற்ற முஸ்லிம்கள் கல்வியை ஒரு வணக்கமாக கருதிய முஸ்லிம்கள் தாங்கள் கற்ற அறிவியல், புவியியல், கணித அறிவைக் கொண்டு ஒட்டுமொத்த உலகும் பயன்பெறும்

கண்டுபிடிப்புகளைக் கொடுத்து உலகை வசந்தமாக்கினார்கள். மேற்குலகம் கல்வியை இரு கூறாக்கியது முஸ்லிம் உம்மத்தின் வீழ்ச்சிக்கு வழிவகுத்ததோடு இவ்வுலகம் அழிவு பாதையை நோக்கி செல்ல காரணமாகியது. எனவே மீண்டும் அடுத்த தலைமுறையை படித்த தலைமுறையாக, அதிலும் குறிப்பாக வஹ்ன் பிடித்த சமூகமாய் உருவானதற்கு காரணமான சடவாத கல்வி முறைக்குப் பதிலாக வஹியின் நிழலில் வாழும் சமூகத்தை உருவாக்கும் முயற்சியில் ஈமான் செயல்பட்டு வருகிறது. அல்ஹம்துலில்லாஹ்!

துபாயில் ஆரம்பித்த ஈமான் தற்பொழுது கத்தார், சவூதி என பல்வேறு பகுதி களுக்கும் பரவி உலகெங்கும் உள்ள ஏர்வாடியர்களை ஒருங்கிணைத்து திறம்பட பல்வேறு காரியங்களை செய்து வருகிறது. இத்தருணத்தில் ஈமானிடம் வேண்டுவது என்னவெனில் ஏர்வாடியோடு தங்கள் பணிகளை நிறுத்திக் கொள்ளாமல் குறைந்தபட்சம் தங்களின் நண்பர்களின் ஊர்களில் ஈமானைப் போன்று முழுமையாய் சேவையில் ஈடுபடும் அமைப்பை உருவாக்க முயற்சிக்கலாம் அல்லது செயல்படும் அமைப்புகளுடன் சேர்ந்து இன்னும் அவர்களின் செயல்பாட்டை மேம்படுத்தலாம். அதுபோல் ஏர்வாடியில் செய்து வரும் சமூக பணிகளோடு ஈமான் தன் உறுப்பினர்களை குர்ஆனோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர்களாக மாற்றும் வகையில் தஜ்கியா நிகழ்வுகளை நடத்தலாம். தற்போதுள்ள வளைகுடா சூழலில் வேலையிழந்து ஊருக்கு செல்பவர்களுக்கு வழிகாட்டும் முகமாக ஆலோசனைகள் வழங்கலாம். இது போன்ற விடயங்களில் எந்தளவுக்கு சாத்தியமோ அந்தளவிற்கு, பிற ஊர் அமைப்புகளுடன் சேர்ந்து பணி செய்வது ஈமானை இன்னும் விரிவாக்கும் என்று கூறியவனாக ஈமான் இன்னும் ஆலமரமாய் வளர்ந்து தன் விழுதுகளை மென்மேலும் பரப்பி இந்த உம்மத்துக்கு பயனளிக்கட்டும் என்று வல்லோனை பிரார்த்திக்கின்றேன். ❋❋❋




# ஈமானிய பயணம் - பணிகள்



# ஈமானிய பயணம்

அளவற்ற அருளாளன் நிகரற்ற அன்பாளன் அல்லாஹ்வின் திருப்பெயரால்...

هَلْ جَزَآءُ الْإِحْسَانِ إِلَّا الْإِحْسَانُ

**நன்மைக்கு நன்மையைத் தவிர (வேறு) கூலி உண்டா?** *(55:60)*

அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன்.

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் நல்லருளால் ஏர்வாடி மக்களின் நலனிற்காக 1978ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஐக்கிய அரபு அமீரகத்தில் துபை நகரத்தில் ஏர்வாடி முஸ்லிம் அறக்கட்டளை (Eruvadi Muslim AssociatioN & EMAN) ஏர்வாடி சகோதரர்களால் தொடங்கப்பட்டு இன்றைய நாள் வரை அல்லாஹ்வின் திருப்தியை நோக்கமாக கொண்டு செயல்பட வைத்திருக்கும் வல்ல ரஹ்மானுக்கே புகழ் அனைத்தும்.

**நோக்கம்:**

பொருளாதாரத்தில் பின்தங்கிய பெண்களின் திருமண வாழ்க்கைக்காக உதவி செய்திட வேண்டும் என்ற நோக்கத்துடன் நல்லுள்ளம் படைத்த நமதூர் சகோதரர்கள் மற்றும் அவர்களுடைய நண்பர்களால் ஆரம்பிக்கப்பட்ட ஈமான், பின்னர் இறையருளால் தனது பணியினை விரிவுபடுத்தியது.

1. பள்ளிக்கூடங்களுக்கு மேசை நாற்காலிகள் வாங்கிக்கொடுப்பது.
2. ஏழைக் குழந்தைகளுக்காக கத்னா செய்ய உதவுவது.
3. பள்ளி கல்விக்காக உதவிடுவது, கல்லூரி படிப்புக்காக கடன் உதவிசெய்வது
4. சிறுதொழில்தொடங்கஉதவுவது
5. முதல்மதிப் பெண்கள் பெற்ற மாணவ மாணவிகளுக்கு ஊக்கப்பரிசு வழங்குவது
6. வறியவர்களுக்கு மருத்துவ உதவி வழங்குவது

என பல அறப் பணிகளில் ஈமான் தன்னை ஈடுபடுத்திக்கொள்கிறது. இத்தோடல்லாமல், திருக்குறுங்குடி பள்ளிவாசல் கட்டிட பணிக்கும், பள்ளிவாசல் ஆரம்பித்த காலங்களில் நோன்புக் கஞ்சிக்கும் ஈமான் ஏற்பாடு செய்தது. மீனாட்சிபுரத்தில் கட்டப்பட்ட முதல் பள்ளிவாசலுக்கு ஈமான் கட்டிடநிதி வழங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு முதன் முதலாக கழிவறை கட்டிக்கொடுத்தது ஈமான் என்பது பலரும் அறியாத தகவல். மேல முஹல்லா பள்ளிவாசலுக்கு புதிய கழிவறைகளை கட்டிட நிதி உதவி வழங்கியது.

From,

The Headmaster,
Govt(B).Hr.Sec.School,
Eruvadi – 627 103.
Tirunelveli District.

To,

Janab.B.Mohamed Uvais,
Secretary,
EMAN Charitable Trust,
Dubai.

Sir,

We have received with thanks the Printer donated by your Esteemed Trust to our School. We are very grateful to you and EMAN Charitable Trust for considering our request and donating the Printer which is very useful to our organization.

Place : Eruvadi
Date : 13.01.2017

with regards,

13.01.2017
Headmaster
HEAD MASTER
Govt. Hr. Sec. School.

**ஏர்வாடி ஆண்கள் பள்ளி தலைமை ஆசிரியரின் நன்றிக் கடிதம்**

இஸ்லாமிய மார்க்கப்பிரச்சாரத்திற்கு உபகரணங்கள் வழங்கியும், ஏர்வாடியில் அவசர ஊர்திக்கு உறுப்பினர்களிடம் நிதி திரட்டியும் கொடுத்துள்ளது. ஆண்கள் பள்ளியில் சி சி டி வி பொருத்த வேண்டும் என்ற தலைமை ஆசிரியரின் கோரிக்கையை ஏற்று அங்கு ஈமான் சார்பாக கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டது.

அரசு மருத்துவமனைக்கு வரும் மக்கள் உட்காருவதற்காக ஈமான் நாற்காலிகள் வழங்கியுள்ளது. பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் புதிய கழிப்பிடங்கள் கட்டிக் கொடுக்க ஈமான் நிதி வழங்கியது. நிக்காஹ் ஏர்வாடி குழு சார்பாக நடைபெற்ற திருமணத்திற்கும் ஈமான் உதவி அளித்துள்ளது. 1990 களில் ஒரு திருமணத்திற்கான முழு செலவுகளையும் ஏற்று நடத்தப்பட்டது. பிற ஊர்களுக்கு படிக்க செல்லும் பெண்களின் நலனிற்காக அவர்களுக்கென தனி பேருந்து வசதியினை ஏற்படுத்திட ஈமான் எடுத்த முயற்சி பலன் தந்துள்ளது.

அல்லாஹ்வின் அருளால் இந்த உதவிகளின் பின்புலத்தில் இருப்பது நமதூர் சகோதரர்கள் மாதந்தோறும் வழங்கிடும் சந்தா. பொருள் தேடி கடல் கடந்து வந்து கடின உழைப்பினை கொடுக்கும் நமது சகோதரர்கள் அருள்தேடி அளித்திடும் சந்தாக்கள் பரக்கத் நிறைந்தவை என்பதற்கு இந்த உதவிகள் ஒரு சான்று.

உதவிகளை அளித்திடும் சகோதர சகோதரிகளுக்கு இறைவன் ஈருலகிலும் மகத்தான வெற்றியை அளித்திட வேண்டும்.

பித்ரா தொகையை கூட்டாக பெற்று, அதனை மொத்தமாக ஏர்வாடிக்கு அனுப்பி பெருநாள் தினத்தில் அனைவரும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என உயரிய நோக்கத்துடன் கூட்டு பித்ராவை அமீரகத்தில் ஆரம்பித்து வைத்தது ஈமான்தான். ஈமானை பின்பற்றித்தான் நாங்கள் பித்ரா வசூல் செய்து ஊருக்கு அனுப்புகிறோம் என பிற மாவட்ட மக்கள் குறிப்பிடுவது ஒரு இனிமையான தகவல். நன்மையை பார்த்து யார் பின்பற்றுகிறார்களோ அதற்குரிய கூலியும் அந்த நன்மையை ஆரம்பித்தவர்களுக்கு உண்டு என்ற அடிப்படையில் ஈமானில் இந்த நன்மையை ஆரம்பித்த அந்த நல்லவர்கள் நன்மையை தொடர்ந்து இறையருளால் பெற்று வருவார்கள்.

எவ்வித பாகுபாடின்றி அனைத்து சமுதாய மக்களுக்கும் ஈமான் தனது உதவிகளை செய்து வருகிறது. இவ்வாறாக பொருளாதார ரீதியாக உதவிகள் செய்துக் கொண்டிருந்த ஈமான், ஏர்வாடியின் பிற நலத்திட்டங்களிலும் தனது பங்களிப்பினை தற்போது செய்துவருகிறது. இந்தப்பணிகளை விரைவாகவும் வீரியமாகவும் செயல்படுத்திட வேண்டும் என்பதற்காக தனித்தனியாக கீழ்கண்ட குழுக்கள் அமைத்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## ஈமான் ஜகாத் குழு (2011)

தனிப்பட்ட நபர்களுக்கு உதவி செய்வதை விரிவுபடுத்தும் விதமாக இஸ்லாத்தின் கடமைகளின் ஒன்றான ஜகாத்தை, இறைத்தூதர் நாயகம் (ஸல்) அவர்களின் வழி முறையில் நமதூரிலும் கூட்டாக சேர்ந்து செயல்படுத்தி பலகுடும்பத்தினருக்கு உதவிட வேண்டும் என மாதாந்திர கூட்டத்தில் வந்த கருத்து ஈமான் ஜகாத் குழுவாக நவம்பர் 2011 அன்று உருப்பெற்றது.

அதற்கான களப்பணிகள் செய்யப்பட்டு 2012ஆம் ஆண்டு ரமழானில் நம் சகோதரர்களிடையே ஜகாத் வசூலிக்கப்பட்டு, அதே வருடம் டிசம்பர் மாதத்திலிருந்து நமதூருக்கு முறையாக திறமை வாய்ந்த பிரதிநிதிகள் மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்சமயம் நாம் ஜகாத் உதவித் தொகையை அனுமதியளிக்கப்பட்ட கீழ்கண்டவர்களுக்கு மாதாமாதம் வழங்கி வருகிறோம் :

1. கணவனை இழந்து, தன் பிள்ளைகளுடன் வருமானம் போதியளவு இல்லாமல் வாடுபவர்கள்.

2. ஆதரவற்று பிறரின் உதவியை மட்டும் நாடி நிற்கும் வயதான தாய்மார்கள்.

3. கஷ்டப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கும் மாற்றுத்திறனாளிகள்.

4. மாத வருமானத்தால் தனது குடும்பத் தேவைகளை பூர்த்தி செய்ய இயலாமல் கஷ்டப்படுபவர்கள்.

இது மட்டுமல்லாமல் ஏழைகளை கடனிலிருந்து மீட்டெடுப்பது, ஜகாத் பெறும் குடும்பங்களில் சுய தொழில் செய்ய ஆர்வம் உள்ளவர்களுக்கு அதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுப்பது போன்ற பணிகளையும் ஈமான் ஜகாத் குழு செவ்வனே செய்து வருவது எமதிறைவனின் அருள்.

**செயல்முறை:**

முதலில் ஊர் பிரதிநிதிகள் மூலம் ஜகாத் பெறும் தகுதியில் உள்ள விண்ணப்பதாரர்களைக் கண்டறிந்து, அவர்கள் திருகுர்ஆன் கூறும் எட்டு பிரிவினரில் உள்ளவர்தானா என்பதை ஆராய்ந்த பின்னர் விண்ணப்பம் பூர்த்திசெய்யப்பட்டு, ஈமான் ஜகாத் பிரிவிற்கு அனுப்பி வைக்கப்படுகிறது. அந்த விண்ணப்பங்கள் ஆலோசனைக் குழுமூலம் பரிசீலிக்கப்பட்டு, விண்ணப்பதாரரின் தேவைக்கேற்ப மாதாமாதமோ அல்லது மொத்தமாகவோ ஜகாத் உதவி நிர்ணயிக்கப்பட்டு, வழங்கப்படுகிறது.

ஜகாத் ஆலோசனைக் குழுவிலிருக்கும் சகோதரர்கள் ஊர் செல்லும்பொழுது, நேரடியாக ஜகாத் பெறுபவர்களை சந்தித்து, அவர்களிடம் பணம் கிடைப்பது உறுதி செய்யப்படுகிறது. மேலும் அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தில் மாற்றம் ஏதும் இருந்தால் அவர்களின் விண்ணப்பம் மீள்பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு முடிவுகள் எடுக்கப்படுகின்றன. இவ்வாறு நன்கு ஆராய்ந்து அதைப் பெறதகுதி உடையவர்களுக்கு மட்டுமே ஜகாத் வழங்கப்பட வேண்டும் என்பதில் ஜகாத் குழு தங்களால் இயன்ற முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

**தற்போது ஏறத்தாழ 80 குடும்பங்களுக்கு மாதந்தோறும் உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. அல்ஹம்துலில்லாஹ்.**

விண்ணப்பங்கள் மேலும் வந்தாலும் வழங்கிட தேவையான பொருளாதாரம் இல்லாத காரணத்தினால், ஜகாத் பெறத்தகுதியுள்ள அனைவருக்கும் உதவிகள் வழங்கிட இயலாத நிலை. ஆகவே நாம் அனைவரும் இதில் பங்கெடுத்து, இன்னும் சிறப்பாக செயல்பட அல்லாஹ்விடம் துஆச் செய்யுமாறும், அன்புடனும் ஆர்வமுடனும் கேட்டுக் கொள்கிறோம் .

## ஈமான் மக்தப் குழு (2013)

ஈமான் சார்பாக நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் பங்கேற்ற பல சகோதர சகோதரிகள் ஒரு கருத்தினை மையமாக வைத்திருந்தனர். வளரும் குழந்தைகள் கலாச்சார சீரழிவுகளில் சிக்கிடாமல் இருக்க இஸ்லாமிய நெறிப்படி தங்கள் வாழ்வை அமைத்துக் கொள்ள வழி நடத்தப்பட வேண்டும் என்பது தான்.

இந்ததூய எண்ணத்தினை செயல்படுத்துவது சம்பந்தமாக சிந்திக்கையில் வெள்ளிடைமலையாக தெரிந்த ஒன்று - குர்ஆனை கற்பிக்கும் மதரஸாக்கள் குறைந்து வந்துக் கொண்டிருந்தது. இதற்காக ஈமான் சார்பாக கடந்த 2013ம் ஆண்டு மக்தப் குழு உருவாக்கப்பட்டது. ஈமானுடைய இலக்காக ''மீண்டும் ஒரு மதினா'' என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

எனவே இதனை அடிப்படையாகக் கொண்டு, நமதூரை ஒரு முன்மாதிரி முஸ்லிம் ஊராக்க முயற்சிக்கும் ஈமானிய சிந்தனையின் அடிப்படையில், நம் வளரும் தலைமுறையை வார்த்தெடுக்கவும், ஒழுக்க சீர்கேடுகளிலிருந்து பாதுகாக்கவும், நமது குழந்தைகள் மார்க்க அறிவுடன் தனித்தன்மையுடன் சிறந்துவிளங்கவும், இம்மை மறுமை ஈருலக வெற்றியை அடிப்படையாகக் கொண்ட, முறையான பாடத்திட்டத்துடன் கூடிய முன்மாதிரி மக்தப் மதரஸாக்களை நமதூரில் தொடங்க ஈமான் அறக்கட்டளை முடிவு செய்தது. இதனடிப்படையில் மக்தப் இல்லாத மஹல்லாக்களில் ஜமாத்துடன் இணைந்து

முறைப்படுத்தப் பட்ட பாடத்திட்டத்துடன் கூடிய மக்தப் மதரஸாக்கள் ஆரம்பிப்பது என்றும், ஏற்கனவே செயல்பட்டு கொண்டிருக்கும் மக்தப் மதரஸா ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாக புதிய கருத்தோட்டங்களுடன் கூடிய மார்க்கத் திறன் போட்டிகள் நடத்தி சிறப்பான பரிசுகள் வழங்குவது என்றும் முடிவெடுக்கப்பட்டது.

அன்வோ (United Welfare Organisation) சார்பாக பல நாடுகளில் சொல்லிக் கொடுக்கப்பட்டு வரும் அன்வாருஸ் ஸுஃப்பாவின் தீனியாத் பாடத் திட்டத்தின் அடிப்படையில் ஏர்வாடியில் முன்மாதிரி மக்தப் ஒன்றினை ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் 2013 டிசம்பரில் அனைத்து முஹல்லா ஜமாத் நிர்வாகிகளுடன் ஈமான் மற்றும் அன்வோ பிரதிநிதிகளின் சந்திப்பு நடைபெற்றது.

இதன் தொடர்ச்சியாக ஏர்வாடியில் முதல் தீனியாத் மக்தப் மதரஸா, ஈமான் சார்பாக, பள்ளி நிர்வாகத்துடன் இணைந்து, பைத்துஸ்ஸலாம் பள்ளிவாசலில் 2014 ஆம் ஆண்டு டிசம்பரில் ஆரம்பம் செய்யப்பட்டது. முதலில் 80 மாணவ மாணவியரைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த மக்தபில் அடுத்தடுத்த ஆண்டுகளில் 140க்கும் அதிகமான குழந்தைகள் சேர்ந்து பலன் பெற்றனர். அல்ஹம்துலில்லாஹ். இதனைத் தொடர்ந்து மேலும் சில மக்தப்களை மற்ற ஜமாஅத்தார்களும் ஆரம்பித்துள்ளனர். 2017 முதல் பைத்துஸ் ஸலாம் மக்தப் மதரஸா, பள்ளி நிர்வாகத்தின் முழுப் பொறுப்பில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டுவருகிறது.

இதனைத் தொடர்ந்து மேல முஹல்லாவில் நவம்பர் 2014 ஆம் ஆண்டு மற்றொரு மக்தப் மதரஸா ஈமான் மூலம் ஆரம்பிக்கப்பட்டது..

சகோதரிகளுக்காக, ஈமானிய மலர்கள் மகளிர் மக்தப் ஆகஸ்ட் 2015 தொடங்கப்பட்டது தற்போது இந்த மக்தபில் 39 மாணவிகள் படித்துவருகின்றனர். குடும்பத் தலைவிகளுக்கு பிரத்யேக வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது. இங்கு பயிலும் 6 மாணவிகள், 3 ஜுஸ்வுகளை மனனம் செய்துள்ளனர். மாஷா அல்லாஹ்.

பள்ளிக் கல்வி காரணமாக மக்தப் வரமுடியாத சூழலில் குழந்தைகளும் இருந்தனர். அவர்களுக்கும் மார்க்கம் கற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் ராணி மெட்ரிக் பள்ளியில் தீனியாத் வகுப்புகளுக்கென தனிவகுப்புகள் ஏற்பாடு செய்யமுடியுமா என ராணி மெட்ரிக் பள்ளி தாளாளரிடம் ஒப்புதல் கேட்க, மிக்க மகிழ்ச்சியுடன் ஒப்புதல் அளித்தார்கள். அவர்களுக்கு எங்களின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். 2016ஆம் ஆண்டு ஜுலை முதல் ராணி மெட்ரிக் பள்ளியில் தீனியாத் வகுப்புகள் நடைபெற்று வருகிறது. 180 மாணவ மாணவிகள் இந்த வகுப்புகளில் கலந்துக் கொள்கின்றனர். வாரந்தோறும் 3 வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது. பள்ளி வளாகத்தில் லுஹர் தொழுகவும் பள்ளிக்கூட நிர்வாகம் ஏற்பாடு செய்துள்ளது என்பதை நன்றியுடன் நினைவுகூரகடமைப்பட்டுள்ளோம்.

அல்லாஹ்வின் மாபெரும் அருளினால் ஈமான் எடுத்த முயற்சிகளின் காரணமாக, 2013 ஆம்ஆண்டு 680 ஆக இருந்த மொத்த ஏர்வாடியின் மக்தப் மதரஸா மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை, 2017ஆம் ஆண்டு 1102 ஆக அதிகரித்துள்ளது. அல்ஹம்துலில்லாஹ்.

குழந்தைகளின் மார்க்கப் பற்றினை அதிகரிக்கும் விதமாக இன்னொரு அங்கமாக, ஏற்கனவே செயல்பட்டுக் கொண்டிருக்கும் மக்தப் மதரஸாக்களை ஊக்குவிப்பதற்காக, 'ஈமானிய மொட்டுக்கள்' நிகழ்ச்சியினை கடந்த 2013ஆம் ஆண்டு முதல் நடத்தி வருகிறோம். இதில் பல்வேறு விதமான போட்டிகள் வைத்து சிறப்பான பரிசுகள் வழங்கப்படுகின்றது.



பைத்துஸ்ஸலாம் மக்தப் - முதல் நாள் நிகழ்ச்சி



மக்தப் - தொழுகை பயிற்சி




ஈமானிய மொட்டுக்கள் 2017

# YUSUFF HAJ

**Contact:**
**099403 48485**
**094886 46313**

## TRAVELS

Approved By: Govt. Of India & Saudi Goverment



**HAJ**
**UMRAH**

**E.mail :**
**yusuffhaj@gmail.com**






Office :
Mambra's Shop No.345 & 346,
M.L.A. Road Kodunthirapully
Palakkad - 678 004
Kerala, India.

34/139, 5th Street,
Eruvadi, Tirunelveli Dist.
Tamilnadu

இந்நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக ஊருக்கும் சமூகத்துக்கும் சிறப்பாக சேவை செய்துவரும் பெருமக்களை தேர்ந்தெடுத்து அவர்களின் பணிகளைப் பாராட்டி நன்றி தெரிவிக்கும் வகையில் 'ஈமான் விருதுகள்' வழங்கி கவுரவிக்கப்படுகிறார்கள். மெர்ஸி மருத்துவமனை மருத்துவர் ஜெயச்சந்திரன் மற்றும் ஆசிரியர் தங்கவேலு ஆகியோர் கடந்த வருடங்களில் ஈமான் விருது பெற்றவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

## நீர் மேலாண்மைக் குழு (2017)

நமதூர் ஏர்வாடியில் அல்லாஹ் அருளியிருந்த நம்பி ஆற்றில் நீர் ஓடிக்கொண்டிருந்த காலமெல்லாம் நாம் குறைவில்லாமல் அதன் நீர் வளத்தை அனுபவித்து வந்தோம். ஆனால் கொடுமுடியாறு நீர் தேக்கம் உருவாக்கப்பட்டு, ஆற்றில் நீர் வரத்து முற்றிலுமாக தடைபட்டதாலும், மழை இல்லாத காரணத்தினாலும் நீருக்கு மக்கள் சிரமத்திற் குள்ளாகும் நிலை சில வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்டது. நிலத்தடி நீரும் வெகுவாக குறைந்து வந்தது. கடந்த 12 ஆண்டுகளில் நமதூரின் நிலத்தடி நீர் மட்டம் 35 அடியில் இருந்து 200 அடிக்கும் மேலாக குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. நீர் ஆதாரங்களை பாதுகாக்க வேண்டும், நம்பியாற்றில் தண்ணீர் தொடர்ந்து ஓடிட வேண்டும், நிலத்தடி நீரை பெருக்க வழிவகை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் ஏர்வாடியில் உள்ள சகோதரர்களை ஒன்றிணைத்து நீர் மேலாண்மைக் குழுவை ஈமான் ஏற்படுத்திக் கொடுத்தது. ஏப்ரல் 2017 ஆம் ஆண்டு ஊரில் நீர் மேலாண்மை குறித்த கருத்தரங்கம் நடத்தப்பட்டது.

முதற்கட்டமாக நீர் மேலாண்மைக் குழுசார்பாக, நில அமைப்பியல் வல்லுனர் - ஹைட்ரோ புவியியலாளர் திரு. சசிக்குமார் மூலமாக ஏர்வாடி முழுவதும் ஆராய்ச்சி செய்யப்பட்டு நிலத்தடி நீர் பற்றிய முழுமையான தகவல்கள் ஏர்வாடியின் ஈமான் ஆலோசனைக் குழு உறுப்பினர்களின் உதவியுடன் சேகரிக்கப்பட்டது.







**நீர் வள ஆராய்ச்சியின் முடிவுகளின் தொகுப்பு புத்தகம்**

அல்லாஹ்வின் மகத்தான கருணையினால், இந்த தகவல்களை அடிப்படையாக வைத்து ஏர்வாடியின் நீர் வளத்தை பாதுகாக்க கீழ்கண்ட திட்டங்களை செயல்படுத்த திட்டமிட்டுள்ளோம்.

1. தெருக்களில் மழை நீர் சேகரிப்பு தளங்கள் அமைப்பது.
2. ஆற்றில் கலக்கும் கழிவு நீரை தடுப்பது மற்றும் சுத்திகரிப்பது.
3. ஆற்றில் தடுப்பணைகள் அமைத்து நிலத்தடி நீரை அதிகரிப்பது,
4. வீடுகளில் மழை நீர் சேகரிப்பு தொட்டிகள் அமைப்பது.
5. வீடுகளில் கழிவு நீரை உறிஞ்சும் தொட்டிகளை அமைப்பது.

இதன் ஆரம்பமாக தற்பொழுது, மூன்று இடங்களில் நீர் சேகரிப்பு தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளது. அல்ஹம்துலில்லாஹ். இந்த முறை வெற்றி பெற்றால் அடுத்தடுத்த தெருக்களிலும் இதே முறையில் அமைக்கப்படும் இன்ஷா அல்லாஹ்.

அடுத்த கட்டமாக இரண்டாவது தெரு மற்றும் மதினா நகரில் ஆற்றில் கலக்கும் சாக்கடைகளை தடுத்து சோக் பிட் முறையில் தூய்மைப் படுத்தப்படும்.

நமது வீடுகளில் கழிவு நீர் சுத்திகரிப்பு மற்றும் மழை நீர் சேகரிப்பு தொட்டிகள் அமைக்க வேண்டும். இதனை உடனடியாக நாம் எல்லோரும் செய்வதற்கு முன்வர வேண்டும்.



இந்தக் குழுவின் சார்பாக பீர்க்குளம் தூர் வாரப்பட்டுள்ளது.

மேலும் கழிவு நீரை சுத்திகரித்து ஆற்றில் விடுதல், ஆற்றில் தடுப்பணைகள் அமைத்தல் போன்ற விடயங்களுக்காக மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுக்கப் பட்டுள்ளது. பிற குளங்களை விரைவில் தூர் வாருவதற்கான பணிகளையும் செய்ய வேண்டும்.

இந்த பணிக்காக வளைகுடா நாடுகளில் உள்ள ஈமான் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் உதவி செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் பெருந்தெரு வாழ் மக்கள் உபயோகிப்பதற்காக ''போர்'' போட்டுக் கொடுக்கப்பட்டது.

மூன்றாம் உலகப் போர் ஏற்படுவதாக இருந்தால் அது நீரின் காரணமாகத்தான் இருக்கும் என்ற அளவிற்கு நீரின் அத்தியாவசியம் உலகம் முழுவதும் உணரப்பட்டுள்ளது. நமது பொறுப்பான செயல்பாடுகள் நீர் வளத்தினை பாதுகாக்க உதவிடும். எந்த சூழலிலும் அதிகமாக நீரை செலவு செய்யாமல் நாமும் இருப்பதோடு நமது குழந்தைகளுக்கும் கற்றுக் கொடுக்க வேண்டும்.

ஜும்ஆ மேடைகளில் சுற்றுப்புற சூழல் பாதுகாப்பு, நீர் மேலாண்மை போன்ற விசயங்கள் மக்களுக்கு எடுத்து சொல்லப் பட வேண்டும். இதற்கான முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன.




நீர் மேலாண்மை குறித்த கருத்தரங்கம்



மழைநீர் சேமிப்பு தொட்டிகள்

**இதர அறப்பணிகள் :**

பெண்களின் சுயவேலைவாய்ப்புக்காக தையல் பயிற்சி நிலையம் ஒன்றினை சகோதரி ஒருவரின் உதவியோடு ஈமான் நடத்தி வருகிறது. ஏர்வாடி மக்களின் நலனிற்காக அறிஞர்களை வரவழைத்து அறிவுப்பூர்வமான சொற்பொழிவுகளை ஈமான் ஏற்பாடு செய்துள்ளது. மர்ஹூம் டாக்டர். அப்துல்லாஹ், மௌலவி கான் பாகவி, மௌலவி முபாரக் மதனி, மௌலவி இஸ்மாயில் ஹஸனி, மௌலவி மன்சூர் காஷிபி, மௌலவி முஜிபுர் ரஹ்மான் உமரி, சகோதரர் ஜலாலுதீன், சகோதரர் பெரோஸ்கான் ஆகியோர் ஏர்வாடியில் ஈமான் நடத்திய நிகழ்ச்சிகளில் கலந்துக்கொண்டு சிறப்புரை ஆற்றியுள்ளனர்.

2011 ஆம் ஆண்டு முதல் ஈமான், அரசில் பதிவு செய்யப்பட்ட அறக்கட்டளையாக செயல்பட்டுவருகிறது.

ஏர்வாடி சகோதரர்களுக்காக அமீரகத்திலும் பல்வேறு நிகழ்ச்சிகளை ஈமான் நடத்தி வருகிறது.

1. எளிதாக திருக்குர்ஆனை புரிந்து கொள்ளல்
2. உணர்வாய் உன்னை
3. அல்ஹம்துலில்லாஹ்
4. பாதுகாப்பு, நேரமேலாண்மை, கல்விவிழிப்புணர்வு,
5. பொருளாதார மேலாண்மை மற்றும் திட்டமிடுதல்
6. உறவுகளை மேம்படுத்தல்
7. பாரம்பரிய விளையாட்டு நிகழ்வு
8. கிரிக்கெட் போட்டிகள்
9. பெருநாள் சந்திப்புகள்
10. இஃப்தார் நிகழ்ச்சிகள்
11. குழந்தைகளுக்கான பாலைவன ரோஜாக்கள்

என பல்வேறு தளங்களில் நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது.

நன்மையான காரியங்களில் அனைவருடனும் இணைந்து செயல்படுவதை தன் தலையாய கடமையாக கொண்டுள்ளது ஈமான். 2015 ஆம் ஆண்டு சென்னையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின் போது நமதூரை சார்ந்த அல்நுஸ்ரத் டிரஸ்ட் நிவாரண உதவிகளை வழங்கியபோது, பல்வேறு தரப்பட்ட மக்களிடம் நன்கொடைகளை பெற்று ரொக்கம், மீன் பிடி வலைகள் என வழங்கியது ஈமான். உதவிகள் வழங்க வேண்டும் அதுவும் முறையாக வழங்கப்பட வேண்டும் என்பதற்கேற்ப, வரும் விண்ணப்பங்களை நமது ஊரினை சார்ந்த பிற தொண்டு அமைப்புகளான இப்னு ஸீனா மருத்துவ அறக்கட்டளை, நுஸ்ரத் கல்வி, மருத்துவ அறக்கட்டளை ஆகியோருடன் பகிர்ந்து தேவைப்படும் உதவிகள் சரியாக கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிற ஊரைச் சார்ந்த சகோதர சகோதரிகளின் உயிர்காக்கும் சிகிச்சைக்காக அனைத்து மக்களிடமும் நன்கொடைகள் பெற்று உதவிகள் வழங்கி வருகிறது ஈமான். இணைந்து செயல்படுவதன் மூலம் அல்லாஹ்வின் கருணையினால் உயிர்களைகாக்க பல லட்ச

ரூபாய்களை திரட்ட முடிகிறது. நமதூரைச் சார்ந்த ஒரு குழந்தையின் சிகிச்சைக்காக ஏறத்தாழ 10 லட்சம் ரூபாய் நன்கொடையாக பெற்றதையும், வி.கே.புரத்தினை சார்ந்த சிறுவனின் உயிர் காத்திட உதவி செய்ததும் குறிப்பிடத்தக்கது. மேலும் மயிலாடுதுறையைச் சார்ந்த சிறுவன், மும்பையை சார்ந்த சகோதரி, கேரளாவை சார்ந்த குழந்தை என ஈமான் மாவட்ட மாநில எல்லைகளை கடந்தும் உதவிகள் செய்துள்ளது. அல்ஹம்துலில்லாஹ்.

தற்போதைய சூழலில் மருத்துவ செலவு மிகவும் அதிகமாகி வருகின்றது. அல்லாஹ் நோயற்ற வாழ்வினை நமக்கு வழங்கிடுவானாக. மருத்துவத்திற்காக அரசு அளிக்கும் உதவிகளை பெற்று தேவையுள்ளவர்களுக்கு வழங்கிட வேண்டும். இதற்கான முயற்சி களையும் ஈமான் எடுத்து வருகின்றது.

பூக்களால் புளகாங்கிதம் அடையாமலும் கற்களால் காயப்படாமலும் ஈமான் தொடர்ந்து செயல்பட வல்ல ரஹ்மான் அருள்புரிவானாக. அல்லாஹ்வின் அருளால் ஈமானியப் பணிகள் தொடர்ந்து நடைபெற்றிடவும், நமது இலக்கான மீண்டும் ஓர் மதினாவை அடைந்திடவும் அனைத்து சகோதர சகோதரிகளும் பிரார்த்திப்பதோடு, ஈமான் பணிகளில் தங்களையும் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

وَمَا كَانَ رَبُّكَ لِيُهْلِكَ الْقُرٰى بِظُلْمٍ وَّاَهْلُهَا مُصْلِحُوْنَ

*11:117.* (நபியே!) ஓர் ஊராரை, அவ்வூரார் சீர்திருந்திக் கொண்டிருக்கும் நிலையில் - அநியாயமாக உம் இறைவன் அழிக்கமாட்டான்.

இறுதி நாள் வரை ஈமானிய உறுதியுடன் ஈமான் தொடர்ந்து சிறப்பாக செயல்பட்டுஅனைத்து மக்களுக்கும் பயனுள்ளதாக இருக்க அல்லாஹ்விடமே மன்றாடுகிறோம். ❖❖❖



# ஈமானும் நானும்...

- தஞ்சை ஜலாலுதீன்

அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன். அஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா ரஸூலிஹில் கரீம்.

ஏர்வாடி முஸ்லிம் அஸோசியேஷன் (ஈமான்). ஈமான் - பெயர் எவ்வளவு பொருத்தமாக அமைந்திருக்கிறது. அல்ஹம்துலில்லாஹ்! பெயருக்கேற்றார் போலவே ஈமானுடைய செயல்பாடுகளும் அமைந்திருப்பது அல்லாஹ்வின் மிகப்பெரும் அருட்கொடை.

அல்லாஹ்வுடைய மாபெரும் கிருபையால் கடல் கடந்து வந்தாலும் தடம்புரண்டு போகாத வண்ணம் இறையச்சத்தையும் ஈமானிய பலத்தையும் அதற்கான சூழலையும் ஏற்படுத்திக் கொடுத்த எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கே எல்லாப்புகழும்!

அபுதாபியிலிருந்து துபாய் மாற்றலாகி வருவதற்கு முன்பே ஏர்வாடி சகோதரர்களின் நட்பு கிடைத்ததுவும் இறைவனின் பேரருளே. 2002ல் துபாய் மாற்றலாகி வந்தபிறகு திருக்குர்ஆனுடனான தொடர்பை வலுப்படுத்திக் கொள்ள மிகவும் உறுதுணையாய் அமைந்தது ஏர்வாடியைச் சேர்ந்த சகோதரர்களின் நட்பு.

சிறுசிறு செயல்பாடுகளில் அவர்களுடன் ஈடுபடும்போது அந்த ஒட்டு மொத்த சகோதரர்களின் ஈமானிய உணர்வும், செயல் நுணுக்கமும் என்னை வெகுவாக ஈர்த்தது. ஒவ்வொருவராக பழகப்பழக அந்த ஊரின் மீதே ஒரு வித ஈர்ப்பு வர ஆரம்பித்தது. ஆளுக்கொரு பகுதியில் இருந்தாலும் அனைவரின் ஒருமித்த ஆர்வமும் நோக்கமும் திருக்குர்ஆனோடு தன்னை இணைத்துக் கொள்ளும் இலக்கோடு செயலாற்றியது, அதுவும் அந்த இளம் வயதில் தஞ்சை மாவட்டத்துக்காரனான எனக்கு ஆச்சரியத்தையும் பொறாமையையும் ஏற்படுத்தியதை மறுக்க இயலாது.

2006ல் 'உணர்வாய் உன்னை' நிகழ்ச்சி நடத்த ஆரம்பித்ததும் எனக்கும் ஈமானின் சகோதரர்களுக்கும் நெருக்கம் வசமாகவும் பசையாகவும் ஒட்டிக் கொண்டது. மஸ்கட்டில் 'உணர்வாய் உன்னை' நிகழ்ச்சி நடத்துகையில் 70 வயதைத் தொட்டிருந்த ஒரு இளைஞர் அவர் காட்டிய ஆர்வம் மூலம் என் இதயத்தைத் தொட்டார். அவரும் ஏர்வாடிக்காரர்.

அஜ்மானில் நடந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, அவர் தொழில் சார்ந்த துறையின் அனுபவத்தை ஒப்பிட்டு, எனக்கும் திறமையுண்டு என தன் விமரிசனக் கடிதத்தால் என்னையே உணரவைத்தவரும் ஒரு ஏர்வாடிக்காரர் தான்.

'அல்ஹம்துலில்லாஹ்' என்ற நிகழ்ச்சி நடத்தும் எண்ணமும் ஆர்வமும் இருந்தாலும் அதனை வடிவமாக்க பெரிதும் துணைநின்று இரவின் வெகுநேரத்தை எனக்காக அர்ப்பணித்தவரும் ஒரு ஏர்வாடிக்காரர்தான்.

இப்படியாக என்னை நானே புடம்போட்டுக்கொள்ள எனக்கு அல்லாஹ்அருளிய மிகப்பெரும் வரம் ஏர்வாடிக்காரர்களின் தோழமை என்பதில் எள்ளின் நுணியளவும் ஐயமில்லை.

*2010 ல் "Understand Quran" நிகழ்ச்சி*

ஒரு முழு நாள் நிகழ்ச்சிக்கு ஊரே கூடி வந்து ஏற்பாடு செய்து ஒத்துழைப்பு தந்தது ஏர்வாடியின் மீதிருந்த மதிப்பையும் அதேசமயம் பொறாமையையும் அதிகப்படுத்தியது உண்மையே. இந்த ஊரில் பிறக்கும் பாக்கியம் எனக்கு இல்லாமல் போனதே என்ற ஆதங்கமும் மனதில் தொற்றி கொள்ளத்தான் செய்தது.

2011 ஓர் ஈத் நிகழ்ச்சி ஏற்பாடு செய்திருந்தார்கள், நிகழ்ச்சிக்கு என்னையும் அழைத்திருந்தார்கள். அதில் எனக்கு, நான் எதிர்பார்த்து ஏங்கித் தவித்த பசிக்கு

விருந்திடப்பட்டது. அதுதான் NRE (Non Resident Eruvadian) என்ற பட்டம். மாஷாஅல்லாஹ்! எனக்கு முனைவர் பட்டம் கிட்டிய மகிழ்ச்சி. இன்று வரை நான் கலந்து கொள்ளும் ஏர்வாடி நிகழ்ச்சிகளிலெல்லாம் இதனைச் சுட்டிக்காட்டத் தவறுவதில்லை. அவ்வளவு மகிழ்ச்சி. இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு ஈமான் ஏற்பாடு செய்த அனைத்து நிகழ்ச்சிகளிலும் என்னை அழைத்தார்கள். நானும் அலுவல்களையும் ஒதுக்கி வைத்துவிட்டு மனமகிழ்வுடன் கலந்துகொள்வேன்.

மகளின் மகப்பேறுக்காக இந்தியா சென்றிருந்த சமயம், ஈமானின் கட்டளை ஏர்வாடியில் 'அல்ஹம்துலில்லாஹ்' நிகழ்ச்சி நடத்த வேண்டுமென்று. அப்போது பெங்களூரில் இருந்த நான் மூச்சுப்பிடிப்புக்கு வள்ளியூரில் ஊசி போட்டுக் கொண்டு ஏர்வாடி சகோதரர்களின் அன்பு மழை மற்றும் தோட்டத்து போர் நீரில் நனைந்தேன்.

அன்று மாலை அல்ஹம்துலில்லாஹ் நிகழ்ச்சியில் ஆண்களும் பெண்களும் (வயதானப் பெண்மணிகளும்) இடவசதி பற்றாக்குறையாக இருந்தும், இருந்து அவர்கள் ஆர்ப்பரித்த விதம் என்னை உலுக்கித்தான் போட்டது. இவர்களுக்கு சொல்லிக் கொடுக்குமளவு எனக்கு இறையுணர்வு இருக்கிறதா என்று உரசிப்பார்க்கவும், ஈமானிய பலத்தை அதிகப்படுத்திக் கொள்ளவும் அந்த நிகழ்ச்சி எனக்கு பாடமாக அமைந்தது.

அவர்களின் மசூராக்களில் நேர்த்தி இருக்கும்; நோக்கத்தில் தெளிவு இருக்கும்; அனைவருக்கும் ஒருமித்த கண்ணோட்டம் இருக்கும்; இது எனக்கு புதுமையான விசயம்; அதனை நான் சௌதி வந்த பிறகும் ஏர்வாடி சகோதரர்களிடம் காணமுடிந்தது. ஜுபைலில் ஒரு கட்டுரைப் போட்டி வைத்திருந்தார்கள். 10 அல்லது 12 கட்டுரைகள், சுப்ஹானல்லாஹ்! அனைத்துக் கட்டுரைகளின் மையநோக்கமும் கோர்த்து வைத்ததைப் போல் ஒரே கோணத்தில் இருந்தது. அப்போது புரிந்து கொண்டேன், இது இந்த ஊரின் மகிமை, மகத்துவம் என்று. அல்ஹம்துலில்லாஹ்!

அந்தக் கட்டுரைகளில் ஒன்று, 25 வருடங்கள் கழித்து உள்ள தேதியுடன் இருந்தது. இந்த சிற்றறிவுக்கு அப்போது ஏன் என்று எட்டவில்லை. ஒரு மாணவனோ மாணவியோ இப்போது தொடங்கியுள்ள மக்தப் மதரஸாவில் படித்ததால், ஊர் ஏற்படுத்திக் கொடுத்த மாற்றத்தால் தான் அடைந்த பலனாக 25 வருடம் கழித்து எழுதியதைப் போல் ஆக்கப்பட்டிருந்த அந்தக்கட்டுரையைப் பார்த்து ஆடிப்போய்விட்டேன். என்னே தெளிவு! என்னே தீர்க்கம்! எழுதியவரிடமும் ஏற்பாட்டாளர்களிடமும் உத்தரவு வாங்கி எனக்குத் தெரிந்த அத்தனை குரூப்பிலும் பதிவிட்டேன்.

இப்படியாக என்னில் ஏற்படுத்திய தாக்கத்தையும் மாற்றத்தையும் பட்டியலிட பக்கம் போதாது. ஈமானின் உறவுகளில் ஒவ்வொருவரும் எனக்கு ஒவ்வொரு வகையில் ஈமானிய பலத்தை பரிசோதிக்கவும் புதுப்பித்துக் கொள்ளவும் உதவிக்கொண்டே இருக்கிறார்கள் என்பதைச் சொல்வதில் பெருமையடைகிறேன். அல்ஹம்துலில்லாஹ்!

எல்லாம் வல்ல அல்லாஹ் உங்கள் அனைவரையும் ஒற்றுமையைப் பற்றிப் பிடித்தவர்களாய், ஈருலக வெற்றியாளர்களாய் ஆக்கியருள்வானாக! NRE ஆகிய என்னையும் உங்கள் கைகோர்த்து சுவனம் நுழைய அருள்பாலிப்பானாக! உங்கள் தொண்டுகள் அரும்பணிகள் உலகுக்கு முன்மாதிரியாக விளங்கி உலக மக்கள் சுபிட்சம்பெற அல்லாஹ் அருள்புரிவானாக! ஆமீன்! ஆமீன்! யாரப்பல் ஆலமீன்!

என்னையும் இந்த மலரில் இடம்பெறவைத்த வல்ல அல்லாஹ்வுக்கே எல்லாப்புகழும்..

வஸ்ஸலாம்..

தஞ்சை ஜலாலுதீன்
அல்-கோபர், சவுதிஅரேபியா.

# உங்களுக்குத் தெரியுமா ?!!

### அமீரகத்தில் கால் பதித்த முதல் ஏர்வாடி சகோதரர்

தற்போது பொருளாதாரத்தில் முன்னேறியுள்ள அமீரகத்தில் நூற்றுக்கணக்கான ஏர்வாடி சகோதரர்கள் வசித்து வருகின்றனர். ஆனால் அமீரகம் என்ற ஒரு நாடு உருவாக்கப்படும் முன்பு *1968* ஆம் ஆண்டே நமதூர் சகோதரர் இங்கு துபாயில் கால் பதித்து முன்னோடியாக திகழ்ந்துள்ளார். அவர் புதுக்குடி தெருவை சார்ந்த சகோதரர் மர்ஹூம் கஸ்ஸாலி அவர்கள்.






### முதல் இந்திய பிரதமரின் தங்கையின் கார் ஓட்டுனர்



இந்தியாவின் முதல் பிரதமராக இருந்தவர் ஜவஹர்லால் நேரு. அவரின் தங்கை விஜயலட்சுமி பண்டிட். ஐக்கிய நாடுகள் அவையின் முதல் பெண் தலைவர், மஹாராஷ்டிராவின் ஆளுநர், மக்களவை உறுப்பினர் உள்ளிட்ட பதவிகளை வகித்த இவரிடம் ஓட்டுனராக பணி புரிந்தவர் லெப்பை வளவை சேர்ந்த சகோதரர் மர்ஹூம் ஸலாஹுதீன் அவர்கள்.

அதன் பின்பு அங்கிருந்து துபாய் வந்து பணி புரிந்தார்கள். சகோதரர் மர்ஹூம் கஸ்ஸாலிக்கு பின்பு ஏர்வாடியில் இருந்து துபை வந்தவர் சகோதரர் மர்ஹூம் ஸலாஹுதீன் அவர்கள் தான் என்பது குறிப்பிடத்தக்கது

## ஐக்கிய நாட்டு சபை மாநாட்டில் உரையாற்றிய நமதூர் சகோதரர்



ஏர்வாடி 8 வது தெருவைச் சேர்ந்த சகோதரர் ஜமால் அவர்கள், ஆப்பிரிக்க கண்டங்களில் உள்ள LLDC's (Landlocked Developing Countries) எனப்படும் பொருளாதாரத்தில் பின் தங்கிய ஆப்பிரிக்க நாடுகளை பற்றிய ஒரு ஆய்வு கட்டுரையை தயார் செய்து African Union (Organ of United Nations ) எனப்படும் அமைப்பிடம் கொடுத்தார்.

அக்கட்டுரையில் குறிப்பிட்டிருந்த சில திட்டங்களுக்காக ஐ.நா. சபையின் உலக வர்த்தக மாநாட்டு அமைப்பிடம் (UN&CTAD) இருந்து அவருக்கு அழைப்பு வந்தது. 2014 ஆம் ஆண்டு ஜுலை ஒன்று முதல் மூன்று வரை ஜெனிவாவில் நடைபெற்ற சிறப்பு கூட்டத்தில் கலந்து Brighten Africa என்ற தலைப்பில் உரை நிகழ்த்தி ஐ.நா, மாநாட்டில் கலந்து கொண்ட மிக அரிதான இந்திய முஸ்லிம்களுள் ஒருவர் என்ற பெருமையை பெற்றார்

## துபாய் இளவரசரிடம் விருது பெற்ற ஏர்வாடிஆசிரியர்




ஏர்வாடி 4வது தெருவைச் சேர்ந்த சகோதரர் சித்தீக் அவர்கள், அல்-அய்ன் மாநகரத்தில் இருக்கும் GLOBAL ENGLISH SCHOOLல் இயற்பியல் ஆசிரியராக பணியாற்றுகிறார். இவர் தனது மாணவர்களை வைத்து நான்கு சக்கர வாகனத்திற்கான கருப்பு பெட்டி (விபத்துகளை தடுக்கும் கருவி) ஒன்றை கண்டுபிடித்தார்.

கடந்த 2017ம் ஆண்டு துபாயில் நடைபெற்ற THINK SCIENCE CONFERENCE என்ற அறிவியல் மாநாட்டில், இந்த முயற்சியை பாராட்டும் விதமாக அவரது குழுவிற்கு, துபாய் இளவரசர் ஷேக் ஹம்தான் பின் முகம்மது பின் ராஷித் அல் மக்தூம் விருது வழங்கி கௌரவித்தார்.

அமீரகத்தில் ஏற்படும் சாலை விபத்துக்களை குறைப்பதற்காக இந்த கண்டுபிடிப்பு பயன்படும் என இதனை பாராட்டி துபை அரசாங்கம் இவருக்கு விருது வழங்கியது.

ஈமான் அறக்கட்டளை 2015ம் ஆண்டு நடத்திய சிறுகதைப் போட்டியில்
இரண்டாம் பரிசு பெற்ற சிறுகதை

# அய்...

சகோதரர் : தவ்பீக்

ஊருக்கு நடுவே அழகான முடி திருத்தும் நிலையம் வைத்திருப்பவர் அப்துல்லாஹ். இரண்டு ஆண் பிள்ளைகள், அழகான மனைவி, சிறந்த வருமானம் என்று தினமும் இரவு வீட்டுக்கு செல்லும் போதெல்லாம் குழந்தைகளுக்கு பண்டங்களும் வாங்கிக் கொண்டு செல்வது வழக்கம்.

இஷா தொழுகை முடிந்தபின் இரு சகோதரர்களின் கண்களும் தந்தையின் வருகைக்காக வீட்டு வாசலையே நோக்கி இருக்கும்.

தந்தையை கண்டவுடன் ''அஸ்ஸலாமு அலைக்கும்'' வாப்பா, உம்மா சேட்டை பண்ணிட்டேன்னு அடிச்சிட்டாங்க வாப்பா, என்றான் இளைய மகன் அய். அப்படியா தங்கம் அழாத வாப்பா உனக்கு மிட்டாய் வாங்கி வந்துள்ளேன் இனிமேல் நீ சேட்டை பண்ணக் கூடாது என்றார் தந்தை அப்துல்லாஹ்.

அப்படியா சரி வாப்பா இனிமேல் நான் சேட்டை செய்யமாட்டேன் என்றான் குழந்தைத்தனத்துடன். ''எனக்கு மிட்டாய்'' என்றான் மூத்த மகன் ஹாலிப். உனக்கும் தான்பா வாங்கி வந்துள்ளேன்.

இப்படியாக தினமும் அப்துல்லாஹ் வாழ்க்கை சந்தோஷமாக சென்று கொண்டிருந்தது.

ஒரு நாள் அந்த ஊரில் இரு பிரிவினர்களுக்கிடையே ஏதோ மோதல் ஏற்பட்டு அது நாளுக்கு நாள் தீவிரம் அடைந்துகொண்டே சென்றது.

ஊரில் உள்ளவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக ஊரை காலி செய்து வெளியே செல்ல தொடங்கினர். அப்துல்லாஹ்வின் வருமானம் நாளுக்கு நாள் குறைய தொடங்கியது. மேலும் வறுமை அவர் வீட்டின் வாசலை வந்து தட்டியது.

உம்மா? வாப்பா ஏன் இப்போதெல்லாம் மிட்டாய் வாங்கி வருவதில்லை? என்றான் இளைய மகன் அய்...

உம்மா என் கூட விளையாடிய அஹமதை துணியில் சுத்தி எங்கம்மா கொண்டு போனாங்க? ஏம்மா இப்ப யாரும் விளையாட வருவதில்லை? என்று தன் பங்குக்கு கேட்டான் மூத்த மகன் ஹாலிப். எப்படி பதில் சொல்வது, எப்படி சொன்னால் இவர்களுக்கு புரியும், சொன்னாலும் அச்சப்படுவார்களே என்று எண்ணி அமைதியாக இருந்துவிட்டார் தாய் ரெய்ஹான்.

அப்துல்லாஹ்வும், ரெய்ஹானும் தினமும் ஒரு வேளை அல்லது இரு வேளை சாப்பிட்டு குழந்தைகளை பட்டினியின்றி காப்பாற்றினர்.

கலவரம் தீவிரமடைந்தது! இப்போதெல்லாம் இரவில் பேரடி சப்தம் பயத்தில் விழித்து உறங்காமல் அழுதான் இளைய மகன் அய்...

மறுநாள் காலையில்... ஏங்க! அய்க்கு காய்ச்சல் அடிக்குது என்றாள் மனைவி. மருத்துவமனைக்கு செல்லும் வழியெல்லாம் இடிபாடுகளும், அழுகுரல்களும், சிதைந்த வீடுகளும், இறந்தவர்களையும் பார்த்து வியந்தான் ஹாலிப். மருத்துவமனையில் மேலும் பரிதாபத்திற்குரிய காட்சி காத்திருந்தது.

தன்னுடன் பள்ளியில் படித்த நண்பர்கள் எல்லாம் பேச்சு மூச்சின்றி கிடக்க, அவர்கள் பெற்றோர்கள் அந்த குழந்தைகளை ஆரத் தழுவி அழுது கொண்டிருக்கும் காட்சி கண்டு தன்னையும் அறியாமல் ஹாலிபின் கண்கள் கலங்கியது.

அய்யை மருத்துவர் பரிசோதித்து ஊசி போட்டார், ம்மா வலிக்குதும்மா என்று கத்தினான் அய்...

இனிமேலும் தாமதிக்கக்கூடாது இங்கே இருந்தால் இதே நிலைமை நமக்கும் ஏற்படும் என்ற அச்சத்துடன் ஊரை விட்டு கிளம்ப வேண்டும் என்று மனதுக்குள் எண்ணிக்கொண்டார் அப்துல்லாஹ்.

வீட்டிற்கு சென்றதும், ரெய்ஹான் நம்ம ஊரின் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. அதனால் நாம நாளைக்கே ஊரைவிட்டு காலி செய்ய வேண்டும். எவையெல்லாம் அவசியமான பொருள்களோ அவை மட்டும் தயார் செய்து வைத்துக் கொள் என்றார் அப்துல்லாஹ்.

அப்துல்லாஹ் தன் சொந்த ஊரைவிட்டு போகும் முன் இந்த உலகை விட்டு சென்ற தன் நண்பர்களின் மண்ணறை நோக்கி சென்றார். செல்லும் வழியில் நண்பர் சாலிஹின் குரல் ''அப்துல்லாஹ் அப்துல்லாஹ்'' உனக்கு விஷயம் தெரியுமா நமக்கு உதவி செய்ய வேண்டிய நல்ல வசதிவாய்ந்த சொந்தங்கள் அனைவரும் நம்மை மறந்து ஆனந்தமாய் உள்ளனர். அவர்களிடமிருந்து உதவி வரும் என்று எண்ணினோம் ஆனால் இப்படி ஆயிற்றே என்று புலம்பினான். இதை கேட்டதும் அப்துல்லாஹ்வின் கண்கள் கலங்கின. தங்கள் கஷ்டம் நீங்க இறைவனை பிரார்த்தித்தார் அப்துல்லாஹ்.

மறுநாள் காலை ஃபஜ்ர் தொழுகையை முடித்துவிட்டு தான் கஷ்டப்பட்டு சம்பாதித்த வீடு, தான் வாழ்ந்த ஊர் என அனைத்தையும் விட்டுவிட்டு கனத்த இதயத்துடன் கண்ணீருடன் அந்த குடும்பமே பக்கத்து ஊருக்கு புலம்பெயர தொடங் கியது. பக்கத்து ஊருக்கு வந்தவுடன் ஒரு மிகச்சிறிய வீடு ஒன்றில் தங்கினர்.

பக்கத்து ஊரில் தனக்கு ஏற்ற வருமானம் கிடைக்காததால் வாழ்க்கையை நடத்த மிகவும் சிரமப்பட்டார் அப்துல்லாஹ். குழந்தைகள் இருவரும் பசியால் வாடினர். ''உம்மா பசிக்குதும்மா'' என்று அழுவது வழக்கமாயிற்று.

அப்போதுதான் அப்துல்லாஹ்விற்கு தனது சகோதரி பீமாவின் ஞாபகம் வந்தது. உடனே பீமாவை தொடர்பு கொண்டு ஹலோ பீமா, அஸ்ஸலாமு அலைக்கும் நான் அப்துல்லாஹ் என்று ஆரம்பித்து நடந்த அனைத்தையும் கூறினார். நாங்க உங்க ஊருக்கு

வரலாமா? என்று வினவினார். அதற்கு சகோதரி தங்கள் ஊர்க்காரர்களிடம் கேட்டுவிட்டு சொல்வதாக கூறினார்.

ஒரு வாரம் சென்றது. மீண்டும் பீமாவை தொடர்புகொண்டு பேசினார். ஆனால் சகோதரி தன் ஊர்க்காரர்கள் அனுமதியளிக்க மறுத்துவிட்டனர் என்று கூறிவிட்டார். இதனால் மிகவும் ஏமாற்றமடைந்தார்.

நாட்கள் நகர்ந்தன! ஒரு நாள் அவர் கண்ட காட்சி அவரை கண்கலங்க வைத்தது.

தன் பிள்ளைகள் உணவிற்காக குப்பைத் தொட்டியில் தேடியதுதான் அந்தக் காட்சி...

எப்படியாவது நல்ல வேலை தா என் ரப்பே! என்று கண்கலங்கி பிரார்த்தனை செய்தார். இப்படியாக அவர் காதுக்கு அந்த செய்தி எட்டியது.

பக்கத்து தீவில் வேலையிருப்பதாகவும் ஆனால் அங்கே கள்ளத்தோனி மூலமாக தான் போக முடியும் மேலும் அதற்கு மூன்று இலட்சம் வரை செலவாகும் என்பதுதான் அந்த செய்தி.

எப்படியோ அலைந்து திரிந்து தன் நண்பர்களிடமும் சகோதரியிடமும் அந்த காசை திரட்டி தன் குடும்பத்துடன் பயணத்தை தொடங்கினார். அந்த படகில் பயணிகள் அதிகமாக இருந்தனர். படகு நன்றாக சென்று கொண்டிருந்தது. அப்போதுதான் அந்த துயரச் சம்பவம் நிகழ்ந்தது. கண் இமைக்கும் பொழுதில் பெரிய அலை ஒன்று படகை கவிழ்த்தது. உம்மா என்ற குரலுடன் குழந்தைகளும், இறைவா என்ற குரலுடன் பெரியவர்களும் சப்தமிட்டார்கள். இவ்வாறாக சப்தங்கள் குறைந்துகொண்டே சென்றது. எப்படியோ அப்துல்லாஹ்வையும் மற்றவர்களையும் கரை ஒதுக்கியது. மயக்கம் தெளிந்து விழித்தவுடன் தன் பிள்ளைகளையும் மனைவியையும் தேடி அலைந்தார். அப்போது அவர் கண்ட அந்த காட்சி அவரை உறையச் செய்தது. நெஞ்சில் பதற்றத்துடனும் கண்கள் முழுதும் கண்ணீருடனும் அவர் அந்த காட்சியை கண்டு நிலைகுலைந்த வண்ணம் அருகில் சென்றார்.

அங்கு அவர் கண்ட காட்சி ''சிவப்பு நிற சட்டையில் செங்குருதி உறைந்த நிலையில்'', கடற்கரையில் முகம் பதிந்து கிடக்கும் அய்யும், தெருவில் விளையாட வேண்டிய வயதில் கடல் சீற்றத்தின் விளையாட்டால் தன் இன்னுயிரை ஈர்த்த ஹாலிப்பையும், இரு பிள்ளைகளின் தாயாய், தன் இன்பத்திலும் துன்பத்திலும் தன்னுடன் பயணித்த மனைவியையும் இறைவனடி சேர்ந்ததை அவரால் ஜீரணிக்க முடியவில்லை. அய்யை அரவணைத்து கடல் அலைகளுக்கு எதிரே ஆழி பேரலையாய் அழுதார் அப்துல்லாஹ்...

அவசர ஊர்தி வந்தது அனைவரையும் ஏற்றிய பின் அப்துல்லாஹ்விடம் இறந்தவர்களின் பெயர் கேட்டார் அதிகாரி. மனைவி மற்றும் மூத்த மகன் இருவர்களின் பெயரை சொல்லிவிட்டு கனத்த இதயத்துடன் அழுகுரலுடன் தன் இரண்டாவது மகன் பெயரையும்

''அய்லான் அல்குர்தி'' என்றார்.

# ஈமானிய கிளைகள்



# ஏர்வாடி முஸ்லிம் கூட்டமைப்பு
# ஜித்தா, சவுதி அரேபியா
# (EMAN, Jeddah, KSA)

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்,

அல்லாஹ்வின் அருளால் 2000 ஆம் ஆண்டு, ஜித்தா ஈமான் ஆரம்பிக்கப்பட்டது. இதில் இரண்டாவது தெருவை சேர்ந்த ஜனாப் இக்ரம் அவர்கள் தலைவராக தேர்வு செய்யப்பட்டு ஜனாப் ஜவஹர் (புதுமனை) அவர்கள் அமைப்பின் பொருளாளராகவும், புதுமனையை சேர்ந்த சகோதரர் ஹமீது அலி செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஆரம்பத்தில் ஈமான், ஜித்தாவில் வாழும் ஏர்வாடி சகோதரர்களுக்காக மட்டும் சில உதவிகளை செய்து வந்தது. ஜித்தா ஈமான் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில், ஏர்வாடி சகோதரர்கள் அதிகமாக இல்லாத காரணத்தினாலும், தேர்ந்து எடுக்கப்பட்ட சில நிர்வாகிகள் தங்களது சொந்த வேலை காரணமாக பல்வேறு இடங்களில் மாற்றப்பட்டதாலும், ஈமான் செயல்பாடு அதிகமாக இல்லாத நிலையில் இருந்தது.

அதன் பின்னர் வந்த ஆண்டுகளில் நமது இளைய தலைமுறைகளின் முயற்சியின் மூலம் 2012 - ம் ஆண்டு மீண்டும் புதுப்பிக்கபட்டு ஜனாப் அஜீஸ் (புதுமனை) தலைவராகவும், ஜனாப் மீராஸாஹிப் (மீயன்னா 7-வது தெரு) செயலாளராகவும், ஜனாப் இப்ராஹிம் (7-வது தெரு) பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அல்ஹம்துல்லில்லாஹ் நமது ஈமான் உறுப்பினர்களின் பங்களிப்பு கொண்டு மருத்துவம், கல்வி, மற்றும் ஜித்தாவில் வாழும் ஏர்வாடி சகோதரர்களுக்காக பல்வேறு உதவிகளை செய்து வருகின்றது.

**அதில் சில உங்களது பார்வைக்காக...**

- 2012ல், நமது ஊரைச் சேர்ந்த இரண்டு மாணவர்களுக்காக ITI மற்றும் என்ஜினீயர் படிப்பதற்காக அவர்களது இரண்டு வருட கல்வி தொகை வழங்கியது.
- 2013-14ல், நமது ஊரைச் சேர்ந்த இரண்டு குழந்தைகளின் மருத்துவ செலவுக்காக உதவி வழங்கப்பட்டது.
- 2018ல், நமது ஊரைச் சேர்ந்த மாணவன் மேற்படிப்புக்காக உதவி வழங்கப்பட்டது.

இன்னும் மற்ற வளைகுடாவில் செயலாற்றிவரும் ஈமான் சங்கத்தின் மூலமாக வரக்கூடிய விண்ணப்பங்களையும் பரிசீலித்து உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் அதிகம் உறுப்பினர்களையும் சேர்த்து ஜித்தா ஈமான் வலுப்பெற முயற்சிகள் செய்து கொண்டு இருக்கிறோம். தாங்களும் இதற்காக பிரார்த்தனை செய்யும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

# ஈமான் நிர்வாகிகள்

## ஜெத்தா - சவுதி அரேபியா



தலைவர்
**ஜனாப். அப்துல் அஜீஸ்**
முகைதீன் புரம்



பொருளாளர்
**ஜனாப். ஷமீர் மொஹிதீன்**
முகைதீன் புரம்



செயலாளர்
**ஜனாப். சாமு ஸஹாபுதீன்**
லெப்பை வளவு

## ஈமான் ஜித்தா உறுப்பினர்கள் சந்திப்பு நிகழ்ச்சி



# ஏர்வாடி முஸ்லிம் கூட்டமைப்பு
# ரியாத், சவுதிஅரேபியா

அல்லாஹ்வின் திருப்பெயரால்..

துபையில் ஈமான் நலிந்த மக்களுக்கு உதவி செய்வதை கேள்விப்பட்டு அவ்வாறு ஏர்வாடி மக்களுக்காக உதவிகள் செய்ய வேண்டும் என ஏக இறைவனின் கிருபையினால் ஈமான், ரியாத் 1987 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. சகோதரர்கள் பொறியாளர் அபுபக்கர், மூஸி மீராஸாஹிப், ஹபீபுல்லாஹ் உள்ளிட்ட சகோதரர்களால் ஈமான் ரியாத் தொடங்கப்பட்டது.

ஆரம்பத்தில் ஈமான், அமீரகத்துக்கு வரும் விண்ணப்பங்களுக்கு இணைந்து உதவிகள் வழங்கியது ஈமான், ரியாத். பின்னர் ரியாதில் நமது ஊர் சகோதரர்களின் எண்ணிக்கை அதிகரித்ததையடுத்து ஈமான், ரியாதும் விண்ணப்பங்களை தனியாக பெற்று உதவிகளை அதிகப்படுத்தியது.

ஆரம்பத்தில் திருமணத்திற்காக உதவி செய்யப்பட்டு வந்தது. பின் அவை நிறுத்தப்பட்டு, மருத்துவ, கல்வி உதவிக்காக தங்களது பங்களிப்பினை ஈமான் வழங்கி வருகிறது

ஊரில் இருக்கும் சில பொருளாதாரத்தில் பின் தங்கிய குடும்பத்தினருக்கு மாதாந்திர உதவிகளும் வழங்கப்பட்டு வருகிறது. பெருநாள் தினங்களில் ரியாத் சகோதரர்களின் சிறப்பு ஒன்று கூடலுக்கும் ஏற்பாடு செய்யபட்டு வருகிறது.



ஈமான் ரியாத் நிறுவனர்கள் கவுரவிப்பு

# ரியாத் - ஈமான் நிர்வாகிகள்



ஜனாப். முஹம்மத்ஷா ஆதம்
தலைவர்



ஜனாப். ஃபயாஸ்
பொருளாளர்



ஜனாப். முஹைதீன்
செயலாளர்



ஜனாப். முஸம்மில்
துணைச் செயலாளர்






# ஈமான் நிர்வாகிகள்

## கிழக்கு மாகாணம் - சவுதி அரேபியா



ஜனாப். சித்திக்
தலைவர்



ஜனாப். சதக்கத்துல்லாஹ்
துணைத் தலைவர்



ஜனாப். உமர் ஃபாரூக்
செயளாளர்



ஜனாப். ரியாஸ்
துணைச் செயளாளர்



ஜனாப். சபீக் அஹமது
பொருளாளர்

## இஃப்தார் நிகழ்ச்சி - தமாம்



# ஏர்வாடி முஸ்லிம் கூட்டமைப்பு - கிழக்குமாகாணம், சவுதிஅரேபியா (EMAN, Eastern Province, KSA)

அல்லாஹ்வின் திருப்பெயரால்...

அல்லாஹ்வின் கிருபையால் 1978 ஆம் ஆண்டு நமது ஊர் ஏர்வாடியின் முன்னேற்றத்திற்காகவும், வளர்ச்சிக்காகவும் மற்றும் கஷ்டப்படும் மக்களின் தேவைகளுக்காகவும் அமீரகத்தில் விதைக்கப்பட்ட ஈமான் என்னும் அமைப்பு தற்போது பல கிளைகளாக இந்த வளைகுடா நாடுகளில் தன்னுடைய சேவை பணியை சீரிய சிந்தனையுடனும், தொலைநோக்கு பார்வையுடனும் பல திட்டங்களை வகுத்து ஏழை மக்களின் நிலைமையினை அறிந்து அவர்களுக்கு உதவிகளும் செய்து வருகிறது அல்ஹம்துலில்லாஹ். அல்லாஹ் நாம் செய்கின்ற அனைத்து நற்காரியங்களையும் பொருந்திக் கொள்வானாக.ஆமீன்.

● ஈமான் அமைப்பின் ஒரு பகுதியாக சவுதி அரேபியா கிழக்கு மாகணத்தில் 1993 ஆம் ஆண்டு மர்ஹூம். ஹமீது உஸ்மான் (கம்பவுண்டர் உஸ்மான்) அவர்களின் தலைமையில் நமது ஈமான் அமைப்பு அப்துல் ரவூப் (8வது தெரு), பாளையங்கோட்டையில் வசித்துவரும் நமது ஊர் 4வது தெருவை சார்ந்த ஜின்னா, அஸன்மீரான்சாகிப் (கோசினி), பதுருதீன் (ஜவகர்ஸ்டுடியோ), பீர் முஹம்மது (9வது தெரு), மர்ஹூம் கம்மடி மீராசாஹிப் (5வது தெரு), சதக்கதுல்லாஹ் (1 வது தெரு), சேக் உதுமான் (4 வது தெரு), மர்ஹூம். மதார்சாகிப் (5வது தெரு) மற்றும் சில உறுப்பினர்களின் உதவியுடன் துவங்கப்பட்டது. ஆரம்பித்த காலம் முதல் நமது ஊர் மக்களுக்காக பல உதவிகள் செய்து வந்தார்கள் அல்ஹம்துலில்லாஹ்.

● கடந்த 2013 ஆம் ஆண்டு அல்ஜுபைல் மாநகரத்தில் நடந்த ஈமான் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். 2வது தெருவை சார்ந்த சகோ. சித்திக் முஹம்மது அவர்கள் தலைமையில், மர்ஹூம் கம்மடி.மீரா ஸாகிப் (5வது தெரு), சகோ.சித்திக் (புதுக்குடி)ஆகியோர் நிர்வாகிகளாக தேர்வு செய்யப்பட்டனர்.

● இதுவரை மருத்துவம், கல்வி, முதியோர்களுக்கான உதவிகள், வழங்கப் பட்டுள்ளது. அல்லாஹ் நமது பணிகளை அங்கீகரிப்பானாக. இந்த உதவிகளை நல் உள்ளம் கொண்ட சவுதியில் வாழும் நமது சகோதரர்களிடம் பெறப்பட்ட நிதியின் மூலமாக அல்லாஹ்வின் மாபெரும் கிருபையை கொண்டு செய்து கொண்டிருக்கிறோம். உதவிகள் செய்த அனைத்து சகோதரர்களுக்கும் ஈருலக வெற்றிக்காக அல்லாஹ்விடம் துஆ செய்கிறோம். நீங்களும் எங்களுக்காகவும் எங்கள் குடும்பத்திற்காகவும் துஆ செய்ய அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

# ஏர்வாடி முஸ்லிம் கூட்டமைப்பு - ஓமான்
# (Eruvadi Muslim Association - Oman)

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரக்காத்துஹு........

அல்ஹம்துலில்லாஹ் அல்லாஹ்வின் கிருபையால் ஈமான் ஓமான் 2011 டிசம்பர் மாதம் ஏர்வாடியின் முன்னால் ஐக்கிய ஜமாஅத் தலைவர் ஜனாப். அப்துல் அஜீஸ் அவர்கள் தலைமையில்,

தலைவராக ஜனாப். அஷ்ரஃப் அலி அக்பர், செயலாளராக ஜனாப் முஹம்மது இப்ராஹிம், பொருளாளராக ஜனாப் அன்ஸாரி ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டு இனிதே துவங்கப்பட்டது...

- பரந்து பட்ட இடங்களில் வேலை செய்யும் ஓமான் வாழ் ஏர்வாடி சகோதரர்கள் ஏறத்தாழ சுமார் 50 நபர்களை தொடர்பு கொண்டு ஒன்றிணைத்தோம்.
- ஓமானில் வாழும் வேலையை இழந்து தவிக்கும் நமதூர் சகோதரர்களுக்கு வேலை வாய்ப்புகளை அமைத்துக் கொடுத்தல்.
- ஏர்வாடியில் நலிவுற்ற மக்களுக்கு கல்வி மற்றும் மருத்துவம் சார்ந்த உதவிகள் போன்றவைகள் செய்வதாக முடிவு எடுக்கப்பட்டது.
- மேலும் வசதிகள் குறைந்த சிறிய பள்ளிவாசல்களுக்கு ஜுஃம்ஆ மற்றும் மாதாந்திர செலவுகளுக்கும் உதவி செய்வதாக முடிவு செய்யப்பட்டது.
- 2011-2016 வரை நாங்குநேரி பள்ளிவாசலுக்கு தேவையான நிதி உதவி வழங்கப்பட்டது.
- ஏர்வாடியில் தேவையுடைய மக்களுக்கு மருத்துவ உதவிகளும் மற்றும் கல்வி சார்ந்த உதவிகளும் வழங்கப்பட்டு வருகிறது.

இன்னும் நன்மையிலும்; பயபக்தியிலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளுங்கள்; பாவத்திலும், பகைமையிலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ள வேண்டாம்; (திருக்குர்ஆன் 5:2)

# ஒமான் - ஈமான் நிர்வாகிகள்



ஜனாப். ஜாஹிர்
தலைவர்



ஜனாப். ஷாபி
துணைத் தலைவர்



ஜனாப். குத்தூஸ்
செயளாளர்



ஜனாப். அன்ஸாரி
துணைச் செயளாளர்



## 7ஆம் ஆண்டு சந்திப்பு நிகழ்ச்சி



# ஏர்வாடி முஸ்லிம் கூட்டமைப்பு

## (Eruvadi Muslim AssociatioN, Qatar)

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் நல்லருளால் ஏர்வாடி மக்களின் நலனிற்காக ஏர்வாடி சகோதரர்களால் 2012 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் கத்தார் நாட்டின் தோஹா நகரத்தில் ஏர்வாடி முஸ்லிம் கூட்டமைப்பு (Eruvadi Muslim AssociatioN) தொடங்கப்பட்டது.

- நமது ஈமான் உறுப்பினர்களின் பங்களிப்பு கொண்டு ஏர்வாடியில் இருக்கும் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களின் திருமணம், மருத்துவம் மற்றும் கல்விக்கான உதவிகளை செய்து வருகின்றது.

- அவசர மருத்துவ நிதி திரட்டுதலுக்கும், நம் ஊர் பள்ளிவாயில்களுக்கு மாத வருமானத்தை அதிகப்படுத்தும் சமூகக்கூடங்கள் அமைக்கவும் பங்களித்துள்ளது.

- ஏர்வாடியில் நடத்தும் ஈமானிய மொட்டுக்கள் நிகழ்ச்சிக்கு தொடராக பங்களித்து வருகிறது.

- நிக்காஹ் ஏர்வாடி நடத்திய திருமணத்திற்கு உதவி அளித்துள்ளது.

- உறுப்பினர்களுக்காக கிரிக்கெட் போட்டிகள், மருத்துவ நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்துள்ளது.

- 2013 ஆம் ஆண்டு முதல் நமது ஈமான் உறுப்பினர்களின் ஜகாத் தொகையை வசூலித்து அதை முறையாக தகுதியுடையோருக்கு விநியோகித்து வருகிறது.

- இன்னும் மற்ற வளைகுடாவின் ஈமான் கிளைகள் மூலமாக வரக்கூடிய அனைத்து விண்ணப்பங்களையும் பரிசீலித்து உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

- நமது ஊரைச் சேர்ந்த மாணவனின் டிப்ளமோ பொறியியல் படிப்பிற்காக 3 வருடத்திற்கான கல்வி தொகை வழங்கியது.

- கத்தார் ஈமான் சார்பாக மாதந்தோறும் சந்தாக்கள் வசூலிக்கப்பட்டு நலப்பணிகளுக்கு பயன்படுத்தப்படுகிறது. மேலும் பெருநாள் மற்றும் விடுமுறை தினங்களில் விசேஷ சந்திப்பு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.

- மேலும் சுகவீனம் அல்லது விபத்தில் பாதிப்படைந்த நமது ஊர் சகோதரர்களை மருத்துவமனை சென்று சந்திப்பது, சிறைப்பட்ட சகோதரர்களை கண்டு அவர்களுக்கு தேவையான பொருளாதார மற்றும் ஆலோசனைகள் போன்ற உதவிகள் செய்துள்ளது.

# கத்தார் - ஈமான் நிர்வாகிகள்



ஜனாப். ஹசன் அப்துல் காதர்
தலைவர்



ஜனாப். ஸுல்ஃபிகார்
துணைத் தலைவர்



ஜனாப். முஹம்மத் முஹைதீன்
செயளாளர்



ஜனாப். ஹசன் பீர்
பொருளாளர்

## கத்தார் - ஈமான் சந்திப்பு நிகழ்ச்சி



# நெல்லை ஏர்வாடி முஸ்லிம் கூட்டமைப்பு குவைத்

அல்லாஹ்வின் உதவியால் ஜனவரி 1, 2016 ஆம் ஆண்டு குவைத்தில் வாழும் ஏர்வாடி சகோதரர்களால் நெல்லை ஏர்வாடி முஸ்லிம் கூட்டமைப்பு தொடங்கப்பட்டது.

ஏறத்தாழ 50 சகோதரர்கள் நமது அமைப்பில் தற்போது உறுப்பினராக உள்ளனர். சகோதரர்களிடமிருந்து பெறப்படும் சந்தாக்கள் மூலமாக ஏர்வாடியில் தேவையுடைய மக்களுக்கு,

- கல்வி
- மருத்துவம்
- மாதாந்திர உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றது.

அல்லாஹ்விற்கே அனைத்துப் புகழும்

நமது ஊர் சார்ந்த அனைத்து காரியங்களிலும் எமது பங்களிப்பு இன்ஷா அல்லாஹ் தொடர்ந்து இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.




# குவைத் - ஈமான் நிர்வாகிகள்

**ஜனாப். ஹாஜா முகைதீன்**
தலைவர்

**ஜனாப். முஹம்மத் ஸலாஹுதீன்**
துணைத் தலைவர்

**ஜனாப். மீரான்**
செயலாளர்

**ஜனாப். மீராஸாஹிப்**
துணைச் செயலாளர்

**ஜனாப். ஜாஹிர் ஹுசைன்**
பொருளாளர்

**ஜனாப். ஷேக் முஹைதீன்**
துணைப் பொருளாளர்



"ஒருவர் ஒரு கிணற்றை தோண்டுகிறார். அதிலிருந்து ஜின் இனம், மனித இனம், பறவை இனம் போன்ற உயிரினம் நீர் அருந்துவதால் அவருக்கு மறுமை நாளில் இறைவன் கூலி கொடுக்காமல் இருப்பதில்லை" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பாளர்: ஜாபிர் பின் அப்துல்லாஹ். நூல்: இப்னு குஸைமா)



ஈமான் - நீர் மேலாண்மைக் குழுவினால் தூர் வாரப்பட்ட பீலிக் குளம்

ஈமான் அமைப்பினர் 1987 ஆம் ஆண்டு தங்களது முதல் பொது நிகழ்ச்சியை ஏர்வாடியில் நிகழ்த்தினார்கள். இந்த நிகழ்ச்சியில் கடையநல்லூர் மௌலானா V.U.A. யுசூப் அன்ஸாரி ஹஸரத் அவர்கள் சுமார் ஒன்றரை மணி நேரம் சிறப்புரையாற்றினார்கள்.

"அவன்தான் இரு கடல்களையும் ஒன்று சேர்த்தான் ஒன்று, மிக்க இனிமையும் சுவையுமுள்ளது மற்றொன்று உப்பும் கசப்புமானது - இவ்விரண்டிற்குமிடையே வரம்பையும், மீற முடியாத ஒரு தடையையும் ஏற்படுத்தியிருக்கிறான்." (குர்ஆன் 25:53)



என்ற வசனத்தின் விரிவுரையாக மிக அற்புதமாக உரையாற்றினார்கள். எனக்கு குர்ஆனைப் பற்றி அறிந்துக் கொள்ள அந்த உரை மிகவும் உதவியது. அந்த உரையை கேட்ட பின்னர் தான் நான் குர்ஆனையே ஓத ஆரம்பித்தேன்.

- அனஸ் பாய், ஏர்வாடி

ஈமான் ஆரம்ப காலங்களில் ஊரில் நடத்திய நிகழ்ச்சிகளும் எல்லா தரப்பினரையும் கவரும் வகையில் அமைந்திருந்தது. இதன் ஒரு நிகழ்ச்சியின் மேடையில் குர்ஆனை ஓதி எனது மகள் பரிசு பெற்றிருக்கின்றாள்.



- ஏர்வாடியில் கல்வியில் சேவை செய்து வரும் பிற மதச் சகோதரி.

# பாதுகாக்கப்பட வேண்டிய அமானிதம் - உயிர்...

**M.I. ஷேக் பீர் முஹம்மது** (ஈமான், ஜகாத் குழு ஆலோசனை உறுப்பினர், 7வது தெரு)

மரணம் என்பது நிச்சயிக்கப்பட்ட ஒன்று என்ற நம்பிக்கை உள்ளவர்கள் நாம். அதே வேளை ஒவ்வொருவரும் தத்தம் உயிரை பாதுகாப்பதை கடமை என மார்க்கம் வலியுறுத்தியுள்ளதையும் நாம் கருத்தில் கொள்ளவேண்டும். ஆம் உயிர் என்பது அல்லாஹ் நமக்கு தந்த அமானிதம். சமீப காலங்களில் பரவலாக நடைபெறும் சாலை / பைக் விபத்துகளும் அதனால் ஏற்படும் இழப்புகளும் நம்மில் ஏற்படுத்தும் பாதிப்புகள் சொல்லி மாளாது. இதைக் கருத்தில் கொண்டு நம்மை பாதுகாத்துக் கொள்வதற்கான சிறிய விழிப்புணர்வு முயற்சியே இந்தக் கட்டுரை.

**சாலை விபத்து:**

பெரும்பாலான சாலை விபத்துகளில், உயிரிழப்புகளுக்கு ஓட்டுநர்களின் கவனக் குறைவே காரணம் என புள்ளி விவரங்களின் மூலம் தெரியவந்துள்ளது. ஓட்டுநர்களின் கவனக்குறைவு, வாகனங்களின் வேகம் அதிகரிப்பு, பாதசாரிகளின் கவனக்குறைவு, மோசமான சாலைகள், வாகனங்கள் அதிகரிப்பு, போக்குவரத்து விதிகளை மீறி வாகனங்களை இயக்குதல் உள்ளிட்டவையே விபத்துகளுக்கு காரணங்களாக இருக்கின்றன.

**என்னகாரணம்?**

1. முறையான பயிற்சி பெறாத, ஓட்டுநர் உரிமம் இல்லாதவர்கள் வாகனத்தை இயக்குவது
2. வாகனங்களை உரிய பராமரிப்பில்லாமல் பயன்படுத்துவது
3. சாலை விதிகளைக் கடைப்பிடிப்பதில் அலட்சிய போக்குடன் வாகனத்தை இயக்குவது
4. அதிக வேகம்
5. அனுமதிக்கப்பட்ட அளவை விட அதிகமான நபர்களை வாகனத்தில் ஏற்றுதல்
6. ஓட்டுனர்கள் ஓய்வு இன்றி / ஓய்வு கொடுக்காமல் தொடர்ந்து வாகனம் ஓட்டுவது
7. செல்போனில் பேசிக் கொண்டே இயக்குவது
8. ஹெட்செட் அல்லது புளூடூத் அணிந்து வாகனங்களை ஓட்டுவது
9. டயர்களை முறையாக மாற்றாமல் தேய்மானங்களுடன் இயக்குவது
10. மது போதையில் இயக்குவது

**விபத்தை தவிர்ப்பது எப்படி?**

ஓட்டுநர்கள் மட்டும் இல்லாமல், சாலையைப் பயன்படுத்தும் ஒவ்வொரு வரும் சாலை விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

### நைட்ரஜன் காற்று

கோடை காலங்களில் டயர்களில் நைட்ரஜன் காற்றை நிரப்ப வேண்டும். இந்த காற்று எளிதில் சூடாகி ஆவியாகாது. இதனால் டயர் வெடிப்பது, காற்று குறைவது போன்றவை சாதாரணமாக நிகழாது. டியூப் இல்லாத டயர் பொருத்த வேண்டும். ஏனென்றால் இந்த வகை டயர்கள் எளிதில் பஞ்சர் ஆவதில்லை. பஞ்சர் ஆனாலும் எளிதில் காற்று இறங்குவதில்லை. இதனால் விபத்தைத் தவிர்க்கலாம். ரேடியேட்டரில் தண்ணீருக்குப் பதிலாக கூலண்ட் ஆயில் ஊற்றினால் எஞ்சின் எளிதில் சூடாகாமல் வாகனத்தில் தேய்மானங்களுடன், சேதாரம் ஏற்படுவது தவிர்க்கப்படும்.

### இரு சக்கர வாகனம்

இரு சக்கர வாகனங்களில் முழு கொள்ளளவுக்கு பெட்ரோல் நிரப்பக் கூடாது. பெட்ரோல் அதிகமாக இருந்தால் வெப்பத்தால் டேங்க் சூடாகி வெடித்து தீ விபத்து ஏற்பட அதிக வாய்ப்புள்ளது. இதனால் வெயில் காலத்தில் கொள்ளளவில் 4-ல் 3 பங்குக்கு பெட்ரோல் நிரப்பினால் போதுமானது. மேலும் பெட்ரோல் டேங்க் கவரில் செல்போனை வைக்கக்கூடாது.

### ஒரு கையால் ஓட்டக் கூடாது

வாகனத்தின் ஸ்டியரிங் வீலை முறைப்படி பயன்படுத்த வேண்டும். ஆனால், பல ஓட்டுநர்கள் ஸ்டியரிங்கை ஒரு கையால், ஒருவிரலால், சிலர் அதன் மேல் படுத்துக் கொண்டும் ஓட்டுகின்றனர். இவ்வாறு செய்யும் போது நொடிப் பொழுதில் வாகனம் கட்டுப் பாட்டை இழந்து விபத்தில் சிக்க நேரிடுகிறது.

### குழந்தைகளை பாதுகாக்க...

2008 முதல் சாலை விபத்துகளில் இந்தியாவில் 55,000-க்கும் மேற்பட்ட குழந்தைகள் உயிரிழந்துள்ளனர். 2016-ல் மட்டும் சாலை விபத்துகளில் இறந்தவர்களில் 7% பேர் 18 வயதுக்கும் குறைவான குழந்தைகளே. பெரிய நகரங்களில் இது நடந்தது என எடுத்துக் கொள்ள வேண்டாம், அட நம்ம ஊர்ல இது போல விபத்துகள் மூலமாக எத்தனை குழந்தைகள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதை நாம் சிந்திக்க கடமைபட்டுள்ளோம். ஸ்கூட்டர், பைக் போன்ற வாகனங்களில் செல்லும் நான்கு வயதுக்கு மேற்பட்ட அனைவரும் கட்டாயமாக ''ஹெல்மெட்'' போடவேண்டும். கார்களில் அழைத்துச் செல்லப்படும் குழந்தைகளை அதற்கென்றே வடிவமைக்கப்பட்ட இருக்கையில் தான் உட்கார வைக்கவேண்டும், அவர்களுக்கு சீட்பெல்ட் கட்டாயம் அணிவிக்கப்பட வேண்டும் என்கிறது போக்குவரத்து விதி.

### தலைக்கவசம்:

''தலைக்கவசம் - உயிர்க்கவசம்''

''தலைக் கவசம் தலைக்கு மட்டுமே பெட்ரோல் டாங்குக்கு அல்ல! ''

போலீஸார் எந்தெந்த இடத்தில் இருப்பார்கள் என்பதை அறிந்து அதற்கு சிறிது தூரம் முன்பாக பைக்கை நிறுத்தி தலைக் கவசம் அணிந்து, அந்த இடத்தைக் கடந்ததும் வழக்கம் போல ஹெல்மெட்டை கண்ணாடியில் மாட்டி விட்டு காற்றில் பறப்போரே அதிகம்.

**அறியாமையா, சிக்கனமா?**

ஹெல்மெட் கட்டாயம் என அறிவித்த பிறகு தரமான ஹெல்மெட்டை வாங்கி அணிந்து செல்வோர் எண்ணிக்கை மிக மிகக் குறைவு. சாலையோரங்களில் குறைந்த விலைக்கு விற்கப்படும் ஹெல்மெட்டை வாங்கிச் செல்வோரே அதிகம்.

ஒரு லட்சம் ரூபாய்க்கு பைக் வாங்குகிற நமக்கு தரமாக ஹெல்மெட்டை வாங்க வேண்டும் என்ற சிந்தனை இல்லாமலிருப்பது எந்த வகையில் சரியாக இருக்கும்? குறைந்த விலையில் போலியான, தரம் குறைந்த ஹெல்மெட்டை வாங்குவதும், ஹெல்மெட் அணியாமல் விபத்தை சந்திப்பதும் ஒன்றுதான். தரமில்லாத போலியான பொருட்களால் பயனில்லை.

பொதுவாக ஹெல்மெட் அணியாமல் இருப்பதைக் காட்டிலும் ஏதேனும் ஒரு ஹெல்மெட்டை அணிவது பாதுகாப்பானது என்ற கருத்து நிலவுகிறது. ஆனால் உண்மையில் தரமற்ற ஹெல்மெட் அணிவதால், வழக்கமாக எதிர்கொள்ளும் காயங்களை காட்டிலும் அதிக அளவுக்கு பாதிப்பு ஏற்படுகிறது என்பதை உணர நம் மனம் மறுக்கிறது.

போலி மருந்துகள் எந்த அளவுக்கு அபாயகரமானவையோ அதே போலத் தான் தரம் குறைந்த போலி ஹெல்மெட்டும். இரண்டுமே உயிரைக் குடித்துவிடும்.

**தெரிந்துக் கொள்க:**

2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்துக்குப் பிறகு தயாரான அனைத்து இரு சக்கர வாகனங்களிலும் இம்முறை கட்டாயமாக பின்பற்றப்படுகிறது. AHO (All time Headlight On / Automatic Headlight On) எனப்படும் தானியங்கி முகப்பு விளக்கு ஒளிரும் நுட்பம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதனால் வாகனத்தை ஸ்டார்ட் செய்தவுடன் முகப்பு விளக்கு ஒளி உமிழும். இதை அமர்த்த வாகன ஓட்டி நினைத்தாலும் முடியாது. இரவு நேரங்களில் முகப்பு விளக்கு வெளிச்சத்தை அதிகரிக்கவோ அல்லது குறைக்கவோ மட்டும் தான் முடியும். அதற்கான ஸ்விட்ச் மட்டுமே இருக்கும்.

சாலை பாதுகாப்பு தொடர்பாக உச்சநீதிமன்றம் நியமித்த குழு அளித்த பரிந்துரையின் படி தான் இந்த தொழில் நுட்பத்தை கட்டாயம் செயல்படுத்த வேண்டும் என்ற உத்தரவை அரசு பிறப்பித்துள்ளது. மேற்கத்திய மற்றும் ஐரோப்பிய நாடுகளில் 2003-ம் ஆண்டிலிருந்தே இது நடைமுறையில் உள்ளது குறிப்பிடத்தக்கது. அதிகாலை மற்றும் மாலை நேரங்களில் முகப்புவிளக்கு ஒளிர்வதால் சாலை விபத்துகள் குறையும். இதன் அடிப்படையில் AHO தொழில்நுட்பம் பின்பற்றப்படுகிறது.

**மாற்றம் நம்மில் இருந்து:**

பாதுகாப்பு விதிமுறைகளை கடைபிடிக்கத் தனியாக நேரம் ஒதுக்க தேவை இல்லை. நமது அலட்சியத்தால் நமக்கு கிடைக்கும் பரிசு விலைமதிப்பில்லாத மனித உயிர் இழப்பும் மற்றும் பொருளாதார இழப்பும் தான். நாம் மாறாத வரை நம் குடும்பமும் நம் சமுதாயமும் மாறாது. வேறு யாரையும் கொண்டு உங்கள் இடத்தை உங்கள் குடும்பத்தில் நிரப்ப முடியாது என்று நினைவில் கொள்ளுங்கள். நம் அனைவருக்கும் தேவை விழிப்புணர்வு. அல்லாஹ் நமக்கு அமானிதமாக அளித்த உயிரையும் ஆரோக்கியத்தையும் முறையாக பேணி, நம் குடும்பத்துக்கும் சமுகத்துக்கும் பலனளிக்கக் கூடியவர்களாக வாழக்கூடிய பாக்கியத்தை அல்லாஹ் நமக்கு அருள்வானாக. ஆமீன். ❖❖❖

ஈமான் அறக்கட்டளை 2015ம் ஆண்டு நடத்திய சிறுகதைப் போட்டியில்
மூன்றாம் பரிசு பெற்ற சிறுகதை

# ஏடுகளை சுமக்கும் கழுதைகள்...

சகோதரி நஸீரா முஹைதீன், 4வது தெரு

மகனை ''தர தர'' என இழுத்து வந்தான் பஷீர். வீட்டிற்குள் நுழைந்ததும் அந்த பிஞ்சு முதுகில் இரண்டு அடியும் விழுந்தது. எதற்கு வாப்பா அடிக்கிறாங்க? என்ற காரணம் புரியாமல் அழுதான் பத்து வயது சிறுவன் முஹ்ஸின்.

என்ன நடந்திருக்கும் என்று ஊகிக்க முடியாமல் வந்த ஜமீலா ''என்னங்க ஆச்சு'' என்றாள்.

''உன் பிள்ளைக்கு விளையாட வேறு இடமே கிடைக்கலியா? அந்த வேண்டாதவன் வீட்ல போய் விளையாடிக்கிட்டிருக்கான். ''

நடந்ததை ஓரளவு புரிந்து கொண்ட ஜமீலா ஒன்றும் பேசாமல் மகனை உள்ளே அழைத்து சென்று சமாதானப்படுத்தினாள். அழுகை நின்றதும் ''ஏம்ப்பா முஹ்ஸின், பெரியாப்பா வீட்டுக்கு போனியா?'' - என்றாள்.

''ஆமாம்மா. ஸ்கூல்ல இருந்து வரும் போதே ஸமீர் காக்காவும் ஹஸீனாவும் விளையாடவான்னு கூப்பிட்டாங்க. வீட்டுக்கு போய் யூனிஃபார்ம் மாத்திட்டு வரேன்னு சொன்னேன்மா. அதான் போனேன். விளையாடிட்டு வெளியே வரும் போது வாப்பாவை பார்த்தேன். என்னை பார்த்ததும் கோவத்தோட கையபிடிச்சு இழுத்துட்டு வந்துட்டாங்க. ஏம்மா? - என்றான் முஹ்ஸின்.

ஜமீலாவுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. பஷீர் வேண்டாதவன் என்று சொன்னது வேறு யாரையும் அல்ல. அவன் உடன் பிறந்த அண்ணன் நஸீரை தான்.

ஒரு நான்கைந்து நாள் முன்பு வரை இருவரும் ஒற்றுமையாக தான் இருந்தார்கள். மாமாவும் மாமியும் மூத்த மகனுடன் இருந்தாலும் இவர்கள் வீட்டுக்கும் வந்து போய் இருந்தார்கள். தாய் தந்தைக்கு ஒரு குறையும் இல்லாமல் பார்த்து கொண்டார்கள் இரு மகன்களும். இருவரின் மனைவியரும் உடன் பிறந்த சகோதரிகளை போல நெருக்கமாக இருந்தார்கள். எல்லாம் நன்றாகத் தான் போய் கொண்டிருந்தது.

பஷீரின் தந்தை இரண்டு மகனையும் அழைத்து ''எனக்கும் வயசாகுதுப்பா. அதனால நான் இருக்கும் போதே சொத்துக்களை உங்க ரெண்டு பேருக்கும் பிரிச்சு கொடுத்திடலாம்னு நினைக்கிறேன்'' என்று சொன்ன போது ஆரம்பித்தது பிரச்னை.

அண்ணன் தம்பி இருவருக்கும் பண விஷயத்தில் அல்லாஹ் ஒரு குறைவும் வைக்கவில்லை. ஆனாலும் சொத்து பிரிவினை என்று வரும்போது உறவிலும் பிரிவினை வந்துவிடுகிறது. இருவரும் விட்டு கொடுக்க தயாராக இல்லை. இனி நீ அண்ணனும் இல்லை. நான் தம்பியும் இல்லை என்று கூறிவிட்டு வந்த பஷீர் ஐந்து நாட்களாக பெற்றவர்களையும் போய் எட்டி பார்க்கவில்லை.

இந்த விபரம் ஏதும் அறியாத முஹ்ஸின் வழக்கம் போல் வெள்ளிக்கிழமை ஸ்கூல் முடித்து வந்ததும் பெரியப்பா வீட்டுக்கு அண்ணனோடும் தங்கையோடும் விளையாட

போயிருக்கிறான். இதுவே பஷீரின் கோபத்துக்கு காரணம். ஜமீலா எவ்வளவோ எடுத்து சொன்னாலும் கோபம் கண்ணை மறைத்த காரணத்தால் எதுவும் அவன் காதுகளில் ஏறவில்லை.

கையாலாகாத நிலையில் அல்லாஹ்விடம் ஒற்றுமைக்காக துஆ கேட்க மட்டுமே ஜமீலாவுக்கு முடிந்தது. தொலைபேசி மணி ஒலிக்க போய் எடுத்தாள். மறுமுனையில் பஷீரின் தாயார். ''அஸ்ஸலாமு அலைக்கும் மாமி. எப்படி இருக்கிறீங்க?'' - ஜமீலா.

''வ அலைக்குமுஸ்ஸலாம். நல்லா இருக்கிறேன்மா. நீங்க எல்லோரும் நல்லா இருக்கிறீங்களா? பஷீர் எப்படி இருக்கிறான்?'' - கேட்கும்போதே பெற்றவளின் குரல் தழுதழுத்தது.

நல்லா இருக்காங்க. இதோ அவங்க கிட்ட ஃபோனை கொடுக்கிறேன்'' - என்றவள் ரிசீவரை மேஜையில் வைத்து விட்டு கணவனிடம் போய் ''என்னங்க, மாமி லைன்ல இருக்காங்க'' - என்றாள்.

முதலில் எழுந்தவன் பின்னர் ஏதோ நினைத்தவனாக ''அந்த வீட்டில் இருக்கும் யாரோடும் இனி இந்த வீட்டுக்கு ஒட்டோ உறவோ கிடையாது. யாரோடும் பேச முடியாது'' - என்று கத்தினான்.

வாயடைத்து போன ஜமீலா மாமியிடம் என்ன சொல்வது என்று யோசித்து கொண்டே ரிசீவரை எடுத்து, மாமி ...-என்று தொடங்கும் போதே ''அவன் சொன்னது எனக்கும் கேட்டதும்மா'' - என்று அழுது கொண்டே கூறியவாறு ஃபோனை வைத்துவிட்டாள்.

ஞாயிற்று கிழமை, மகனை மதரசாவுக்கு அனுப்பி விட்டு குர் ஆனை எடுத்து ஓத ஆரம்பித்தாள் ஜமீலா. பஷீர் சஹீஹுல் புஹாரி வாசித்து கொண்டிருந்தான். ஊரில் நடக்கும் எந்த பயானையும் தவற விடமாட்டான். நிறைய ஹதீஸ்களும் விளக்கங்களும் அழகாக தெளிவாக சொல்வான். குர் ஆனுக்கும் தெளிவாக விளக்கம் சொல்வான்.

مَثَلُ الَّذِيْنَ حُمِّلُوا التَّوْرٰىةَ ثُمَّ لَمْ يَحْمِلُوْهَا كَمَثَلِ الْحِمَارِ يَحْمِلُ اَسْفَارًا بِئْسَ مَثَلُ الْقَوْمِ الَّذِيْنَ
كَذَّبُوْا بِاٰيٰتِ اللّٰهِ وَاللّٰهُ لَا يَهْدِى الْقَوْمَ الظّٰلِمِيْنَ

எவர்கள் தவ்ராத் (வேதம்) சுமத்தப்பெற்று பின்னர் அதன்படி நடக்கவில்லையோ, அவர்களுக்கு உதாரணமாவது: ஏடுகளைச் சுமக்கும் கழுதையின் உதாரணத்திற்கு ஒப்பாகும்; எச்சமூகத்தார் அல்லாஹ்வின் வசனங்களைப் பொய்ப்பிக்கிறார்களோ அவர்களின் உதாரணம் மிகக் கெட்டதாகும் - அல்லாஹ் அநியாயக்கார சமூகத்தாரை நேர்வழியில் செலுத்தமாட்டான். (62:5)

என்ற ஆயத்தை ஜமீலா ஓதி கொண்டிருக்கும் போது ''மதரஸாவில் இருந்து வந்த முஹ்ஸினின் முகம் சரியாக இல்லை. ''வாப்பா, நான் இனிமே மதரஸாவுக்கு போக மாட்டேன்''- என்றான். ''ஏன்ப்பா?'' என்று மகனை அணைத்தவாறே கேட்டான் பஷீர்.

''வாப்பா, நேத்து உஸ்தாத் ஹதீஸ்பாடம் நடத்தும் போது, வாப்பா நம்ம மேல கோவப்படுற மாதிரி நாம நடந்தால் அல்லாஹ்வும் நம்ம மேல கோவப்படுவான்னு சொல்லி தந்தாங்க'' - என்று கூறி நிறுத்தினான்.

''அவங்க சொன்னது சரிதானே!''-பஷீர்.

''ஆனால் இன்னைக்கு சொல்றாங்க, சொந்தங்களோடு சண்டை போடக்கூடாது. உறவுகளை சேர்த்து வாழணும்னு சொல்றாங்க''

''அது எப்படி வாப்பா முடியும்? ஒண்ணு பெரியப்பா வீட்டுக்கு போக கூடாது. அல்லது உங்களை கோபப்படுத்தனும்.. ஏதாவது ஒண்ணு தானே செய்ய முடியும். அதனால இதெல்லாம் வேண்டாம். நான் ஸ்கூலுக்கு மட்டும் போறேன், மதரஸா வேண்டாம்'' என்றான் முஹ்ஸின்.

''நீங்க தானே வாப்பா சொன்னீங்க, படிக்கிறது மார்க் வாங்க மட்டும் இல்ல, படிச்ச மாதிரி நடக்கனும். படிச்ச மாதிரி நடக்க முடியலன்னா படிக்கிறதுல எந்த யூஸும் இல்லன்னு''

மகனின் வார்த்தைகள் பஷீரின் தலையில் ஓங்கி சம்மட்டியால் அடித்தது போல இருந்தது. உறவுகளை பேணுவது, பெற்றோரை மதிப்பது குறித்த அல்லாஹ்வின் வசனங்களும், அண்ணல் நபிகள் நாயகத்தின் வார்த்தைகளும் எனக்கு தெரியாதவை அல்லவே! எல்லாம் தெரிந்தும் பாவம் செய்ய துணிந்து விட்டது எப்படி? கோபப்பட்டு ஷைத்தானுக்கு இடம் கொடுத்து விட்டேனே! அறிந்து கொண்டே என் பெற்றோரை வேதனைப் படுத்தி என் சகோதரனை பகைத்து கொண்டு இருக்கிறேனே, குர் ஆனையும் ஹதீஸையும் நடைமுறைப்படுத்தாமல் வெறுமனே படித்து வைப்பதால் என்ன பயன்? அல்லாஹ் கூறியது போல் புத்தகம் சுமக்கும் கழுதைக்கும் எனக்கும் என்ன வித்தியாசம்?

''பத்து வயது சிறுவனுக்கு உள்ள சிந்திக்கும் திறன் தனக்கு இல்லையே!'' - என்று தன்னையே நொந்து கொண்ட பஷீர், ''முஹ்ஸின், தவறான விஷயங்களை செய்ய சொல்லி பெற்றோர்களே கூறினாலும் அதை செய்ய கூடாதுப்பா'' என்று மகனின் சஞ்சலத்துக்கு முடிவு கட்டினான். ''ஆனால் அப்படிப்பட்ட மோசமான வாப்பாவாக நான் இருக்க மாட்டேன்'' என்று மகனை அணைத்து கொண்டான்.

''ஜமீலா! எனக்கு இவ்வுலக சொத்தையும் கவுரவத்தையும் விட மறுமை வெற்றியும் சொர்க்கமுமே முக்கியம். நான் காக்கா வீட்டுக்கு போய் காக்கா, உம்மா, வாப்பா எல்லார் கிட்டயும் மன்னிப்பு கேட்டுட்டு வர்றேன்'' - தெளிந்த மனதோடும் சிரித்த முகத்தோடும் கிளம்பினான் பஷீர்.

''நாங்களும் வர்றோம். அவங்க எல்லாரையும் பார்த்து ரொம்ப நாள் ஆன மாதிரி இருக்கு'' என்று கூறிக்கொண்டே சந்தோஷத்தோடு கிளம்பினார்கள் ஜமீலாவும் முஹ்ஸினும்.

அல்லாஹ் தான் நாடியோரை நேர்வழியில் செலுத்துகின்றான்.

மகனின் வார்த்தைகளின் மூலமாக அல்லாஹ் பஷீருக்கும் நேர்வழி காட்டி விட்டான்.

✲✲✲

# ஈமானிய அமர்வுகள்

# ஈமானிய அமர்வுகள்

ஈமான் அறக்கட்டளை கடந்த 40 வருடங்களாக ஆற்றி வரும் மக்கள் பணிகளின் ஒரு பகுதியாக, மக்களை ஒருங்கிணைக்கும் சந்திப்புகள், சிந்தைக்கு விருந்தாகும் மார்க்க நிகழ்ச்சிகள், ஆளுமைத் திறன் மற்றும் உளவியல் வகுப்புகள், பாரம்பரியத்தை பறைசாற்றும் நிகழ்ச்சிகள், உடலுக்கும் உள்ளத்திற்கும் உற்சாகம் தரும் விளையாட்டுப் போட்டிகள், மேலும் பெருநாள் சந்திப்புகள் மற்றும் இஃப்தார் விருந்து உபசரிப்பு களையும் தொடர்ந்து நடத்தி வருகிறது. இதுவரை நடந்த பல்வேறு நிகழ்வுகளின் சில தொகுப்புகள் உங்கள் பார்வைக்காக...

## உணர்வாய் உன்னை

***நாள்: பிப்ரவரி 09, 2007 / வழங்கியவர் : சகோதரர் தஞ்சை ஜலாலுதீன்***

இந்த நிகழ்ச்சி Islamic Voice என்ற ஆங்கில பத்திரிக்கையின் ஆசிரியர் ஜனாப். ஷாதத்துல்லாஹ் கான் அவர்கள் Discover Yourself என்ற பெயரில் பல நாடுகளில் வெற்றிகரமாக நடத்திக்கொண்டு இருக்கும் ஆங்கில நிகழ்ச்சியை நம் தாய் மொழியாம் தமிழில் அதன் வீரியம் சிறிதும் குறையாது நமதூர் மக்களுக்காக வழங்கி சிறப்பித்தார்கள் சகோதரர் ஜலாலுதீன் அவர்கள்.

## அல்ஹம்துலில்லாஹ்

***நாள்: ஆகஸ்ட் 24, 2007 / வழங்கியவர் : சகோதரர் தஞ்சை ஜலாலுதீன்***

அழகிய படைப்பாளன் அல்லாஹ் தனது படைப்பாற்றலை பல இடங்களில் சாட்சியாக்கி இருப்பினும் நமது உடல் எனும் மாபெரும் அதிசயமும் அதன் செயல்பாடுகளும் உடலுறுப்புகளின் முக்கியத்துவங்களை நிரூபணமான அறிவியல் ஆராய்ச்சிகள் மூலமாக விளக்கி, ஓர் அடியான் இந்த அருட்கொடைகளுக்கு எந்த அளவிற்கு நன்றியுள்ளவனாக இருக்க வேண்டும் என்று மிக எளிய முறையில் எடுத்துக்கூறிய சிறப்பான நிகழ்வாக இது இருந்தது.

## சிறப்பு பொதுக்குழு

***நாள்: மார்ச் 06, 2009***

ஈமான் தனது செயல்பாடுகளை இன்னும் வீரியப்படுத்த இந்த பொதுக்குழுவை கூட்டி, ஷூரா அமைப்பிலான செயற்குழுவை நிறுவியது. இதன் மூலமாக ஷூரா குழு உறுப்பினர்களை தேர்ந்தெடுத்து ஒவ்வொரு ஷூரா உறுப்பினருக்கும் 15-20 பொது உறுப்பினர்களை பகிர்ந்தளித்து மாதாந்திர சந்தா வசூல், ஈமானிய நிகழ்வுகளுக்கான அழைப்பிதல், செயல்பாடுகள், மற்றும் அறிவிப்புகளை எத்தி வைப்பது போன்ற பொறுப்புகள் கொடுக்கப்பட்டு, அதற்கேற்ப பைலாக்களில் தேவையான மாற்றங்கள் செய்தது. அல்ஹம்துலில்லாஹ்! இன்றுவரை இந்த முறையிலேயே சிறப்பாக தனது பங்களிப்பை செய்து வருகிறது ஈமானின் ஷூரா குழு.

## குழந்தைகள் உளவியல்

**நாள்: மே 15, 2009 / வழங்கியவர்: சகோதரர் முகைதீன் பாட்சா, சென்னை**

குழந்தை வளர்ப்பு என்ற கலையை குழந்தைகளின் மனநிலைக்கு ஏற்ப பெற்றோர்கள் எவ்வாறு கையாள்வது என்ற ரீதியில் உலக நாடுகளின் பல்வேறு பட்ட ஆராய்ச்சிகளின் ஆக்கபூர்வ முடிவுகளை மையப்படுத்தி, நமது இஸ்லாமிய பாரம்பரியங்களுக்கு உட்பட்டு பெற்றோர்கள் எவ்வாறு அணுகவேண்டும் என்று மிக சிறப்பாக கலந்துரையாடி தெளிவுபடுத்தினார் உளவியலாளர் முகைதீன் பாட்சா அவர்கள்.

## நேர மேலாண்மை

**நாள்: மார்ச் 12, 2010 / வழங்கியவர்: முனைவர். ஹுசைன் பாஷா, கள்ளக்குறிச்சி**

நேரத்தின் முக்கியத்துவம் குறித்து நமது மார்க்கம் வலியுறுத்தியிருந்தும் இஸ்லாமியர்கள் பெரும்பாலும் இதில் பொடுபோக்காகவே இருக்கிறார்கள் என்பதையும், இதை மேலை நாடுகளில் சரியாக பின்பற்றுவதால் அவர்களின் மாற்றங்களையும் எடுத்துக் கூறி இதை நாமும் பின்பற்ற என்னென்ன வகைகளில் முயலலாம் என்ற ரீதியில் சுலபமாக பின்பற்றக் கூடிய பல நுணுக்கங்களை அழகாக எடுத்துரைத்தார் நிகழ்ச்சி நெறியாளர் முனைவர் ஹுசைன் பாஷா அவர்கள். இந்த நிகழ்ச்சி அபுதாபி வாழ் ஈமான் சகோதரர்களும் அதிகம் கலந்து கொள்ள ஏதுவாக அபுதாபியில் சிறப்பாக நடைபெற்றது.

## கல்வி விழிப்புணர்வு

**நாள்: டிசம்பர் 10, 2010 / வழங்கியவர் : சகோதரர். CMN சலீம்**

நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் காலம் முதல் கல்வித் துறையில் பெரும் சாதனைகள் புரிந்து அதன் மூலம் மனித சமூக உயர்வுக்கு வித்திட்டவர்கள் முஸ்லிம்கள். இடைப்பட்ட காலத்தில் முஸ்லிம்கள் தங்களது அலட்சியத்தால் உலகில் அனைத்து மட்டத்திலும் பின் தங்கிப் போனார்கள். மீண்டும் முஸ்லிம்கள் முதன்மைச் சமூகமாக, முன்னோடி சமூகமாக மாறுவதற்கு கல்வித் துறையில் கால் வைத்து பெரும் சமூக மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற செய்தியை மக்களிடத்தில் CMN சலீம் அவர்கள் தெளிவாக உணர்த்தி, இதற்கான மாற்று வழிகள் உடனடியாக மேற்கொள்ளப் படவேண்டும் என்பதையும் வலியுறுத்தினார்கள்.

## தகவல் தொழில் நுட்பமும், தக்வாவும்

**நாள்: மார்ச் 09, 2012 / வழங்கியவர் : சகோதரர். செய்யது அலி, திருவிதாங்கோடு**

தற்கால சூழலில் வாழ்வின் இன்றியமையாத தேவையாகிவிட்ட தகவல் தொழில்நுட்பம் மூலமாக ஏற்படும் சமூக சீர்கேடுகளையும், இது இளைய சமூகத்தாரை எவ்வாறெல்லாம் மார்க்கத்தை விட்டு தூரமாக்கி சீரழிக்கிறது என்பதையும், இதனை சரியாக கையாளும் முறையையும் இஸ்லாமியப் பார்வையில் தெளிவாக எடுத்துரைத்தார் சகோதரர் செய்யது அலி அவர்கள்.

## வளைகுடாவில் மக்கள் சந்திக்கும் உளவியல் பிரச்சினைகள்

**நாள்: நவம்பர் 06, 2011 / வழங்கியவர் : சகோதரர். முகைதீன் பாட்சா, சென்னை**

வெளிநாடுகளில் பணியாளர்களாக இருப்பவர்கள் சந்திக்கும் உளவியல் ரீதியான பிரச்சினைகளையும் அதற்கான மாற்று ஏற்பாடுகளையும் தனது அனுபவங்களின் மூலமாக பகிர்ந்துகொண்டதோடு, விளையாட்டு போட்டிகள், நகைச்சுவை நிகழ்ச்சிள்,

பொது சந்திப்புகள் அடிக்கடி நடத்துவதன் மூலமாக மன அழுத்தம் வெகுவாக குறைய வாய்ப்புள்ளது என ஈமானுக்கு தனது கோரிக்கையாக வைத்தார் . அதனை ஏற்று வருடா வருடம் ஈமான் விளையாட்டு போட்டிகளுடன் கூடிய பொது சந்திப்புகளை இன்றுவரை நடைமுறைப்படுத்தி கொண்டிருப்பதும் இதனால் நமதூர் மக்கள் பெரும் பலன் அடைகிறார்கள் என்பதும் கூடுதல் தகவல்.



Moufidha






Answering a quiz question.



Kids posing for the photo.

**இந்த நிகழ்ச்சியின் புகைப்படங்களை காண கீழுள்ள QR கோடை ஸ்கேன் செய்யவும்**

Photos Part 1

Photos Part 2

## விளையாட்டு சந்திப்பு, அல் நஹ்தா

***நாள்: மார்ச் 16, 2012***

இளைஞர்களும் பங்குபெறும் வண்ணம், ஈமான் ஸ்போர்ட்ஸ் என்ற பெயரில் தனது முதலாவது கிரிக்கெட் போட்டியை ஈமான் நடத்தியது. இதில் பெரும்பான்மையான ஏர்வாடி இளைஞர்களும், சிறுவர்களும் ஆர்வத்துடன் கலந்து கொண்டார்கள்.













**இந்த நிகழ்ச்சியின் புகைப்படங்களை காண கீழுள்ள QR கோடை ஸ்கேன் செய்யவும்**

Photos Part 1

Photos Part 2

## திறக்கப்படாத பொக்கிஷம்

***நாள் : ஏப்ரல் 06, 2012 / வழங்கியவர் : சகோதரர். தஞ்சை ஜலாலுதீன்***

அல் குர்ஆன் எனும் பொக்கிஷம் இந்த உலகில் இறக்கபட்ட காலம் முதலே காட்டுமிராண்டிகள் என்று உலகமே ஒதுக்கி வைத்திருந்த அரபி குலத்தவர்களை புனிதர்களாக்கி உலகையே ஆட்சி செய்யும் அளவிற்கு கண்ணியம் பொருந்தியவர்களாக மாற்றியமைத்த அந்த பொக்கிஷம் இன்றுவரை ஏற்படுத்திக் கொண்டிருக்கிற மாற்றங்களை எடுத்துக் கூறி, அதற்கு சொந்தக்காரர்கள் என்று மார்தட்டி கொண்டிருக்கும் நம்மில் அது ஏற்படுத்திய தாக்கம்தான் என்ன? என்று சிந்தனையை தட்டி எழுப்பி, அல் குர்ஆன் சிறப்பியல்புகளை தற்கால முக்கிய நிகழ்வுகளோடு அருமையாக எடுத்துக்கூறினார் சகோதரர் ஜலாலுதீன் அவர்கள்.




## இஃப்தார் சந்திப்பு நிகழ்ச்சி

***நாள்: ஆகஸ்ட் 03, 2012***

*2012*ஆம் வருடத்து ரமலான் மாதத்தின் இஃப்தார் நிகழ்ச்சி, கராமா பகுதியில் உள்ள கராச்சி தர்பார் உணவகத்தில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக சகோதரர் தஞ்சை ஜலாலுதீன், சகோதரர் நெல்லிக்குப்பம் பெரோஸ்கான் மற்றும் சகோதரர் காயல் ஜக்கரியா ஆகிய மூவரும் கலந்து சிறப்புரை நிகழ்த்தியது முத்தாய்ப்பாக இருந்தது. இதில் ஏர்வாடி சகோதரர்கள் திரளாக கலந்து பயனடைந்தனர்.













**இந்த நிகழ்ச்சியின் புகைப்படங்களை காண கீழுள்ள QR கோடை ஸ்கேன் செய்யவும்**

## பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சி

**நாள்: அக்டோபர் 26, 2012**

2012ம் வருடத்தின் பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சி, ஹஜ் பெருநாள் தினத்தன்று ஊத் மேத்தா பகுதியில் உள்ள கல்வி நிறுவன அரங்கத்தில் நடைபெற்றது. மதிய விருந்துடன், செவிக்கு உணவாக இறை நினைவூட்டும் இனிய உரையை, சகோதரர் தஞ்சை ஜலாலுதீன் அவர்கள் மக்களுக்கு அளித்தார்கள். குடும்பத்துடன் நடைபெற்ற இந்நிகழ்வில் குழந்தைகளுக்கு தனியாக போட்டிகள் வைக்கப்பட்டு, பரிசுகள் வழங்கப்பட்டன.













**இந்த நிகழ்ச்சியின் புகைப்படங்களை காண கீழுள்ள QR கோடை ஸ்கேன் செய்யவும்**

## அக்டோபர் 15, 2013 / பெருநாள் நிகழ்ச்சி

2013 வது வருடத்தின் பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சி , ஹஜ் பெருநாள் தினத்தன்று ஊத் மேத்தா பகுதியில் உள்ள கஉஅ கல்வி நிறுவன அரங்கத்தில் நடைபெற்றது. முயன்றால் முடியும் என்ற தன்னம்பிக்கை தலைப்பில் நமது சாதனையாளர்களின் அனுபவப் பகிர்வுடன் இனிதே நடந்தேறியது.

## முயன்றால் முடியும்

தனது விடா முயற்சிகளைக் கொண்டு வாழ்வில் பல முன்னேற்ற படிகளை கடந்த அமீரக வாழ் நமதூர் சாதனையாளர்கள், இந்த நிகழ்ச்சியில் தனது அனுபவங்களை பகிர்ந்து கொண்டவிதம் மற்ற சகோதரர்களையும் ஆர்வமூட்டியதாய் அமைந்தது. அல்ஹம்துலில்லாஹ்




**சகோதரர். ஜமால் (மேட்ரிக்ஸ்), 8 வது தெரு**

பி.காம் படடதாரியான சகோதரர். ஜமால் விஸிட் விசா வில் வேலை தேடி வந்து ஒரு ஏற்றுமதி / இறக்குமதி நிறுவனத்தில் கடைநிலை ஊழியராக தனது வேலையை ஆரம்பித்து, தனது வேலைப்பளுவிற்கு நடுவே, தனது மேற்படிப்பு தேர்வை லண்டனில் எழுதி தேர்வானார். ஆப்பிரிக்க நாடுகளை பொருளாதார ரீதியில் மேம்படுத்த கப்பல் போக்குவரத்து மற்றும் துறைமுக மேம்பாடு என்ற அவரது ஆராய்ச்சிக் கட்டுரை ஐக்கிய நாடுகள் சபையால் அங்கீகரிக்கப்பட்டு, 20 நிமிடம் உரையாற்ற ஜெனிவாவிற்கு அவரை அழைத்திருந்தது. அந்த அனுபவங்களை ஈமான் சகோதரர்களுடன் பகிர்ந்து மற்ற சகோதரர்களையும் ஆர்வமூட்டினார்.




**சகோதரர் ஹுசைன் (சின்னாப்பா), லெப்பை வளவு**

மிக சொற்ப ஊதியத்தில் சாதாரண வேலை ஆளாக (General Helper) தனது வேலையை ஆரம்பித்து டிரைவிங் லைசன்ஸ் எடுத்து வேறு நிறுவனத்துக்கு வேலை மாற்றலாகி பின்பு கனரக / சிறப்பு ரக வாகனங்களுக்கான உரிமம் பெற்று இன்று ஒரு பெரிய நிறுவனத்தில் நல்ல ஊதியத்தில் இருப்பதையும் அதற்கு தான் செய்த முயற்சிகளையும் வழிமுறைகளையும் நமது சகோதரர்களோடு பகிர்ந்துகொண்டது, பிற சகோதரர்களுக்கு ஆர்வமூட்டி அதை நோக்கி பயணிக்க ஒரு உந்துதலை தந்தது. அல்ஹம்துலில்லாஹ்!

அமீரகத்தில் நீண்ட நாட்களாக இருந்து வரும் ஈமானின் மூத்த சகோதரர்களைக் கொண்டு புதிதாக அமீரகம் வந்திருக்கும் சகோதரர்களுக்கு பயனளிக்கும் வகையில் வாழ்வு சிறக்க என்ற தலைப்பில் ஜனாப் ஷம்சுத்தீன் ஷாஃபி அவர்களும், பிரகாசமான எதிர்காலம் என்ற தலைப்பில் ஜனாப் பீர் முஹம்மது அவர்களும், சிகரம் தொடுவோம் என்ற தலைப்பில் ஜனாப். முஹம்மது அலி அவர்களும், இறையச்சத்தை வளர்க்க எளிய வழிகள் என்ற தலைப்பில் ஜனாப். ஜலாலுதீன் அவர்களும் சிறப்பாக உரையாற்றி இறுதியாக ''அமீரக வாழ்க்கை ஆனந்தமா? ஆதங்கமா?'' என்ற தலைப்பில் ஒரு நகைச்சுவை கலந்துரையாடல் நிகழ்ச்சியுடன் சந்தோஷமான பெருநாள் கலகலப்புடன் இனிதே நிறைவடைந்தது.













**இந்த நிகழ்ச்சியின் புகைப்படங்களை காண கீழுள்ள QR கோடை ஸ்கேன் செய்யவும்**

Photos Part 1

Photos Part 2

## கிரிக்கெட் போட்டி - ஜபீல் பார்க்

***நாள்: ஜனவரி 01, 2013***

ஈமான் ஸ்போர்ட்ஸ் பொறுப்புதாரிகள் தங்களது வருடாந்திர கிரிக்கெட் போட்டியை, ஜபீல் பூங்காவில் வெகு சிறப்பாக நடத்தினார்கள். இதில் பெரும்பான்மை யான ஏர்வாடி இளைஞர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டார்கள்.











**இந்த நிகழ்ச்சியின் புகைப்படங்களை காண கீழுள்ள QR கோடை ஸ்கேன் செய்யவும்**

Photos Part 1

Photos Part 2

## பேருந்து நிலையத்திற்கு இடமளித்த சகோதரர். முஹம்மது அலி அவர்களுக்கு பாராட்டு

**நாள் : பிப்ரவரி 14, 2014**

நமதூருக்கான மேம்படுத்தப்பட்ட பெரிய பேருந்து நிலையம் ஒன்றை நிறுவ பல ஆண்டுகாலமாக தேவையான பல்வேறு முயற்சிகளில் இடத்திற்கான தேர்வும் பெரும் சவாலாக இருந்தது. இந்நிலையில் ஊரின் மையப்பகுதியில் பாலம் அருகில் கோடி ரூபாய் மதிப்புடைய தனக்கு சொந்தமான இடத்தை ஊர் மக்களின் பொதுநலன் கருதி தானமாக வழங்கிய சகோதரர் முஹம்மது அலி அவர்களுக்கான பாராட்டு நிகழ்ச்சியை ஈமான் ஏற்பாடு செய்து அன்னாரை கவுரவித்தது.

## பொருளாதார மேலாண்மை மற்றும் திட்டமிடுதல் விழிப்புணர்வு நிகழ்ச்சி

**நாள்: ஜூன் 06, 2014 / வழங்கியவர்: சகோதரர். கே.வி. ஷம்சுத்தீன், கேரளா**

நாம் கடினமாக உழைத்து பெறக்கூடிய ஊதியத்தை சரியான முறையில் எவ்வாறு சிறப்பாககையாளவேண்டும், இல்லத்தரசிகளுக்கானவரவு / செலவுதிட்டமிடல், மற்றும் வளைகுடா நாடுகளில் பெரும் சிரமத்துடன் ஈட்டும் பொருளாதாரத்தைக் கொண்டு ஓய்வு காலத்தில் பலனளிக்க தேவையான முதலீடுகள் பற்றித் தெளிவாக எடுத்துரைத்தார் சகோதரர் கே.வி.ஷம்சுத்தீன் அவர்கள். இவர் அமீரக FM ரேடியோக்களில் பொருளாதார சிறப்பு நிகழ்ச்சிகளை தொடர்ந்து நடத்தி வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது.



## பெருநாள் நிகழ்ச்சி

**நாள்: அக்டோபர் 04, 2014**

2014ம் வருடத்தின் பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சி, ஹஜ் பெருநாள் தினத்தன்று ஊத் மேத்தா பகுதியில் உள்ள கல்வி நிறுவன அரங்கத்தில் நடைபெற்றது. மதிய விருந்துடன், குடும்பத்துடன் நடைபெற்ற இந்நிகழ்வில் பார்வையாளர்களுக்கு வினாடி வினா அறிவுத்திறன் போட்டி வைக்கப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டது. குழந்தைகளுக்கான பிரத்தியேக நிகழ்ச்சியாக ‘‘பாலைவன ரோஜாக்கள்’’ என்ற தலைப்பில் குழந்தைகளுக்கிடையேயான போட்டிகள் வைக்கப்பட்டு, பரிசுகள் வழங்கப்பட்டன. இதில் கிராஅத், வினாடி வினா, நாடகங்கள் மற்றும் பல்சுவை நிகழ்ச்சி களை குழந்தைகளே செய்திருந்தது சிறப்பாக இருந்தது.









இந்த நிகழ்ச்சியின் புகைப்படங்களை காண கீழுள்ள QR கோடை ஸ்கேன் செய்யவும்

## சுற்றுலாவுடனான விளையாட்டு போட்டிகள்

***நாள்: ஜனவரி 01, 2015***

2015 ஆம் வருடத்திற்கான கிரிக்கெட் போட்டி சுற்றுலாத் தலமான அல்-அய்ன், யுனிவர்சிட்டி மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. துபாயிலிருந்து ஒரு பேருந்து மூலம் அனைவரும் அல்-அய்ன் க்கு அழைத்துச் செல்லப்பட்டு, சுற்றுலாவுடன் கிரிக்கெட் போட்டியும் இனிதே நடந்தது. அமீரகத்தின் பிற பகுதிகளில் இருந்தும் அனைத்து சகோதரர்களும் ஆர்வமுடன் கலந்து கொண்டனர்.

## அகமும், புறமும்

***நாள்: செப்டம்பர் 24, 2015 / வழங்கியவர்: சகோதரர் முனைவர் ஹுசைன் பாஷா***

தற்காலங்களில் குடும்ப உறவுகளுக்கு நடுவே இருக்கும் மனஸ்தாபங்கள், உறவு முறிவுகளுக்கான காரணங்கள், குறிப்பாக திருமண உறவுகளில் ஏற்படும் மணமுறிவு போன்ற சிக்கல்களுக்கான காரணங்களும் அதை கையாளும் முறைகளையும், மார்க்க மற்றும் விஞ்ஞான அடிப்படையில் ஒரு சிறந்த கலந்துரையாடல் நிகழ்ச்சியாக முனைவர் ஹுசைன் பாஷா மிகச் சிறப்பாக வழங்கினார்.

---

**ஈமான் - மக்தப் கமிட்டி**

**2013 முதல் இறைப் பணியில்**

- மதரஸா இல்லாத முஹல்லாக்களில் மதரஸாக்கள் ஏற்படுத்துதல்.
- வளரும் தலைமுறைக்கு மார்க்கத்தை முறையாக கற்றுக் கொடுத்தல்.
- ஹிஃப்ஸ் மதரஸாக்கள் ஏற்படுத்துதல்.
- ஈமானிய மொட்டுக்கள் நிகழ்ச்சிகள்.



இறைவனின் அருளாலும், ஈமான் மக்தப் கமிட்டியின் முயற்ச்சியினாலும் ஏர்வாடியில் மதரஸா செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை இருமடங்காக அதிகரித்திருக்கின்றது.

தஜ்வீத் விழிப்புணர்வு மக்களிடையே ஏற்பட்டிருக்கின்றது.

தொடர்புக்கு: Emancharitabletrust@gmail.com

## இஃப்தார் சந்திப்பு நிகழ்ச்சி

**நாள்: ஜுன் 26, 2015 / வழங்கியவர்: சகோதரர் காயல் ஜக்கரிய்யா**

2015 ஆம் வருடத்து ரமளான் மாதத்தின் இஃப்தார் நிகழ்ச்சி, கராமா பகுதியில் உள்ள கராச்சி தர்பார் உணவகத்தில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக காயல்பட்டிணம் தஃவா சென்டரைச் சேர்ந்த, சகோதரர் ஜக்கரியா அவர்கள் கலந்து கொண்டு, ''குற்றவாளிக் கூண்டில் முஸ்லிம்'' என்ற தலைப்பில் இஸ்லாமியர்களாகிய நமக்கான கடமை என்ன? அதை நிறைவேற்றும் விசயத்தில் நமது நிலை என்ன? என்ற ரீதியில் சிந்தனையைத் தூண்டும் சிறப்பான உரையாற்றினார்.













**இந்த நிகழ்ச்சியின் புகைப்படங்களை காண கீழுள்ள QR கோடை ஸ்கேன் செய்யவும்**

Photos Part 1

Photos Part 2

## சிறப்பு பொதுக்குழு - பொருளாதார விழிப்புணர்வு சம்பந்தமான கலந்துரையாடல்

**நாள்: நவம்பர் 13, 2015**

குறைந்த மாத ஊதிய வருமானத்தில் இருப்பவர்கள் தங்களை பொருளாதார ரீதியாக மேம்படுத்த தேவையான ஆலோசனைகளையும், முதலீடு / சேமிப்பு திட்டங்களையும் அமீரகத்தில் தொழில் செய்ய கூடிய தொழில் அதிபர்கள் பகிர்ந்து கொண்டது மிக பயனுள்ளதாக இருந்தது.

## நேற்றும், இன்றும், நாளையும் நமதே

**நாள்: மே 20, 2016 / வழங்கியவர்: சகோதரர். அப்துல்லாஹ் இப்னு ஷாஃபி**

உலகையே ஆண்ட இஸ்லாமிய பாரம்பரியமும், அதன் வழித்தோன்றல்களான அச்சமூகத்தின் நமது இன்றைய நிலையையும் வரலாற்று ஆய்வுகளுடன் எடுத்து கூறிய அருமையான நிகழ்ச்சி. ஆதாரப்பூர்வமான வரலாற்று மேற்கோள்களுடன் இழந்து விட்ட ஆளுமைகளை மீளாய்வு செய்து, மீட்டெடுக்கும் வழிகளையும் அழகாக எடுத்துரைத்தார் தொகுப்பாளர் சகோதரர் அப்துல்லாஹ் (6ஆவது தெரு) அவர்கள்.

இதன் தொடர்ச்சியாய் ஈமான் ஜகாத் கமிட்டியின் கட்டமைப்பையும், செயல்பாடுகளையும் சகோதரர். ஹனீஃப் (கட்டளைத் தெரு) விளக்கியதோடு, ஜகாத் வழங்கல் முறைப்படுத்தப் படுமாயின் கிடைக்கப்பெறும் பலன்களையும் வெகுவாக எடுத்துரைத்தார். அதனைத் தொடர்ந்து NAF அறக்கட்டளையின் நிறுவனர் ஜனாப். முஹம்மது இப்ராஹிம் அவர்கள் ஜகாத் பற்றிய தெளிவான விளக்கங்களை மக்களுக்கு எடுத்துரைத்தார்.










## 2017 கிரிக்கெட் போட்டி

2017ம் ஆண்டுக்கான கிரிக்கெட் போட்டியை நஹ்தாவில் ஈமான் நடத்தியது. இதில் பெரும்பான்மையான ஏர்வாடி இளைஞர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டார்கள். நான்கு குழுக்களாக போட்டிகள் நடைபெற்று, வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.













**இந்த நிகழ்ச்சியின் புகைப்படங்களை காண**
**கீழுள்ள QR கோடை ஸ்கேன் செய்யவும்**

Photos Part 1

Photos Part 2

## ஈமான் பாரம்பரிய விளையாட்டு போட்டி

***நாள்: மார்ச் 17, 2017***

அல்லாஹ்வுடைய மாபெரும் கிருபையால், நமது அமீரக ஈமான் சார்பாக, நமதூர் பாரம்பரியத்தை நினைவூட்டும் வகையில், ஈமானிய கலாச்சார சங்கமம் - பாரம்பரிய விளையாட்டுகள் நிகழ்ச்சி, துபாய் ஜபீல் பூங்காவில் இனிதே நடைபெற்றது.

ஆரம்பமாக நமதூர் மண்வாசனையுடன் கூடிய மண் விளையாட்டுக்களான பம்பரம், பொவளை (கோலிக்காய்) மற்றும் குச்சிக்கம்பு போன்ற விளையாட்டுக்களை வந்திருந்த சகோதரர்கள் விளையாடி மகிழ்ந்தனர். குழுப் போட்டிகளில் முதலாவதாக, ஏழு கல் விளையாட்டு மிக சுவாரஸ்யமாக நடைபெற்றது. வயது வித்தியாசம் பாராது, அனைவரும் பந்தை மாற்றுவதும், கல்லை அடுக்குவதுமாக குழு உணர்வோடு கனகச்சி தமாக நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து வயது வாரியாக (40 வயதுக்கு மேல், 30 to 40 மற்றும் 30க்கு கீழ்) ஓட்டப்பந்தயம் நடைபெற்றது. வயதானவர்கள் கூட தன்னை மறந்து துடிப்புடன் ஓடியது சுகமான சுவாரஸ்யம்.

பந்தியிலும் பாரம்பரியத்தை பறை சாற்றும் விதமாக தலை வாழை இலையில் நமதூர் நெய்ச்சோறு, கறியுடன் கத்தரிக்காய் பருப்பும் பறிமாறப்பட்டது. பலபேருக்கு அது கல்யாணப் பந்தியை நினைவூட்டியது.

இதனிடையே பாரம்பரியத்தை பறை சாற்றுவதில் நாங்களும் சளைத்தவர்கள் அல்ல எனக் கூறும் விதமாக, பெண்களும் தங்கள் பங்குக்கு பல்லாங்குழி, பாண்டி, கோகோ என பலவிதமான பெண்களுக்கே உரித்தான புராதன விளையாட்டுக்களை களித்து மகிழ்ந்தனர். நமதூரின் பேச்சு வழக்கில் இருந்த புராதன சொற்களை எழுதிக் கொடுக்கும் போட்டியில் அனைவரும் ஆர்வமுடன் கலந்து, ''நாராங்கி'', ''லாந்தர்'' தொடங்கி ''வெள்ளக்கோழி'', ''பொல்லாமுருவம்'' வரை நம் மண்ணுக்கே உரித்தான வழக்கு சொற்களை வாரிக் கொட்டிவிட்டனர். மேலும் இளம் சிறுவர் சிறுமியருக்கான சிறப்பு போட்டிகளாக ஓட்டப் பந்தயம், மியுசிக்கல் பால் மற்றும் பலூன் உடைத்தல் போட்டிகள் குட்டீஸ்களின் வழக்கமான ஆரவாரத்துடன் நடைபெற்றது. அல்ஹம்துலில்லாஹ்!

சங்கமத்தின் இறுதி அமர்வாக, சிந்தைக்கு விருந்தளிக்கும் விதமாக, நமதூரின் கலாச்சாரம், பண்பாடுகளின் வரலாற்று சுவடுகளிலிருந்து, வினாடி வினா கேட்கப்பட்டு, சரியான பதில் சொன்னவர்களுக்கு ''யர்பாத்'' ஆவணப்பட USB பரிசாக வழங்கப்பட்டது.

மேலும் சிறுவர் சிறுமியரின் கலாச்சார உடைக் காட்சி நடைபெற்றது. அதில் சிறுவர்கள் நமதூர் பாரம்பரிய சாரம், வேட்டி, தொப்பியுடனும், சிறுமிகள் பவாடை, சட்டை, தாவணி மற்றும் பட்டு சேலையுடனும் வந்தது - நம்ம ஊர் கண்மா பாஷையில் சொல்வதானால் ''ஒரு மாரி லட்சணமா இருந்துச்சு''.

பாரம்பரியம் - வெறும் விளையாட்டிலும் உடையிலும் நின்றால் போதுமா? அதனை அடுத்த தலைமுறைக்கும் எடுத்துச் செல்லும் விதமாக, ''வேர்களைத் தேடும் விழுதுகள்'' என்ற தலைப்பில் குழந்தைகள் தங்களின் குடும்ப வம்சா வழியை சொல்லும் போட்டி நடைபெற்றது. சில குழந்தைகள் 4 மற்றும் 5 தலைமுறைகளை சொல்லி அனைவரையும் அசத்தியது. அல்ஹம்துலில்லாஹ்! அதனைத் தொடர்ந்து பரிசளிப்புகளுடன் நிகழ்ச்சி இனிதே நிறைவு பெற்றது.








இந்த நிகழ்ச்சியின் புகைப்படங்களை காண கீழுள்ள QR கோடை ஸ்கேன் செய்யவும்

Photos Part 1 | Photos Part 2 | Photos Part 3

## ஈமான் பாரம்பரிய விளையாட்டு போட்டி

**நாள்: டிசம்பர் 29, 2017**

நமதூர் பாரம்பரியத்தை நினைவூட்டும் வகையில், ஈமானிய கலாச்சார சங்கமம் - பாரம்பரிய விளையாட்டுகள் நிகழ்ச்சி, துபாய் ஜபீல் பூங்காவில் சிறப்பாக நடைபெற்றது. ஷபீல் பூங்கா அன்று சிறிது நேரம் குட்டி ஏர்வாடியாக மாறியது என்றால் மிகையல்ல.

பாரம்பரிய விளையாட்டுக்களுடன் ஏர்வை சொந்தங்களை சந்திக்க வேண்டும் என்ற ஆவத்துடன் ஏறத்தாழ 250 சகோதர, சகோதரிகளுடன் குழந்தைகளும் குதூகலத்துடன் அங்கு குழுமினர். ருவைஸ் போன்ற தூரமான இடங்களிலிருந்தும் சகோதரர்கள் கலந்துக் கொண்டது சிறப்பு.

காலையில் பம்பரம், குச்சிக் கம்பு, ஆபியம் மணியாபியம் என பம்பரமாக சுழன்று விளையாட ஆரம்பித்தனர். விளையாடும்போது அங்கு வந்த வெளிநாட்டினர் விளையாட்டினை ரசித்து புகைப்படம் எடுத்தனர். அநேகமாக நமது ஊர் விளையாட்டுக்கள் இந்நேரம் அமெரிக்காவிலோ, ஆஸ்திரேலியாவிலோ பிரபலம் ஆகி இருக்கும்.

ஜுமுஆ தொழுகைக்கு பின்னர் சுவையான நெய் சோறு, சிக்கன், கறிக்குழம்பு, இனிப்புடன் மதிய உணவு தலைவாழை இலையில் பரிமாறப்பட்டது. சகோதரர்கள் அனைவரும் ஒன்றாக அமர்ந்து உணவருந்தி மகிழ்ந்தனர். கல்யாண வீட்டு சாப்பாடு போல் இருந்ததாக இதனை ஒரு சகோதரர் குறிப்பிட்டார்.

பின்னர் வந்திருந்தவர்கள் நான்கு அணிகளாக பிரிக்கப்பட்டு கயிறு இழுக்கும் போட்டி, ஏழு கல், உறியடி. கபடி என பால்ய காலத்திற்கே இழுத்து செல்லும் விளையாட்டுக்கள் நடத்தப்பட்டது. 40 வயதிற்கு கீழ் மற்றும் 40 வயதிற்கு மேல் என ஓட்டப் பந்தயமும் நடத்தப்பட்டது.

இது ஒரு புறம் நடக்க, சகோதரிகள் சிட்டிக்கல், பல்லாங்குழி, டாக்ஸி டாக்ஸி, மூலை போன்ற பாரம்பரிய விளையாட்டுக்களில் மூழ்கினர். மொழி இன்றி சொல் என பழமொழியை சைகையுடன் சொல்லும் போட்டியும் பெண்களுக்கு நடைபெற்றது.

குழந்தைகளுக்காக லெமன் ஸ்பூன், சாக்கு ஓட்டம், தமிழில் ஆங்கில வார்த்தைகளை சொல்லும் போட்டி, ஓட்டப் பந்தயம் போன்றவை நடத்தப்பட்டது.

இதற்காக முயற்சி எடுத்து உழைத்த சகோதரர்கள் அனைவருக்கும் குறிப்பாக சகோதரர்கள் அல்தாஃப், தவ்ஃபீக், அமீர் புஹாரி , முஹைதீன் ஆகியோருக்கும் அல்லாஹ் ஈருலகிலும் அனைத்து நலன்களையும் அருள்வானாக.

ஊரிலிருந்து ஈமான் நிகழ்ச்சிக்காகவே வந்து கலந்துகொண்டு சிறப்பித்ததுபோல் அமையப்பெற்றது ஈமான் நிறுவனர்களில் ஒருவரான ஷாபி காக்கா, லெப்பை வளவு முத்தவல்லி பாரூக் காக்கா, புதுக்குடி ஸேக் காக்கா, அவுலியா சார் ஆகியோரின் வருகை. இது தவிர பொதக்குடி ஜலால் காக்கா, டாக்டர் ஸாஹுல் ஹமீத் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக கலந்துக்கொண்டது சிறப்பாக இருந்தது.

காலை, மாலை மண்டை வெல்லத்தில் தயாரிக்கப்பட்ட தேனீர் வழங்கியது cherry in the cake ஆக அமைந்தது. VAT, வேலை போன்ற டென்சனிலிருந்து விடுபட்டு புத்துணர்வு பெற்ற ஒரு நாளாக இந்த நாள் அல்லாஹ்வின் அருளால் அமைந்தது என்றால் மிகையல்ல.








இந்த நிகழ்ச்சியின் புகைப்படங்களை காண கீழுள்ள QR கோடை ஸ்கேன் செய்யவும்

Photos Part 1

Photos Part 2

Photos Part 3

## இனிய இஸ்லாமிய குடும்பம் / வளரும் தலைமுறையை வார்த்தெடுக்கும் வழிமுறைகள்

***வழங்கியவர்: டாக்டர். அப்துல்லாஹ் பெரியார்தாசன், ஏர்வாடி***

***நாள் : மே 23, 2011***

2011 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் தேதி ஏர்வாடி க்கு ஈமான் அறக்கட்டளையின் அழைப்பை ஏற்று டாக்டர். அப்துல்லாஹ் பெரியார்தாசன் அவர்கள் வருகை புரிந்திருந்தார்கள். அன்று காலை பைத்துஸ்ஸலாம் மஸ்ஜித் மாடியில் ''இனிய இஸ்லாமிய குடும்பம்'' என்ற தலைப்பில் பெண்களுக்கான ஒரு சிறப்பு அமர்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பெண்கள் எதிர்கொள்ளும் அனைத்து விதமான உளவியல் பிரச்சனைகளை மிக எளிமையான முறையில் தனது சிற்றுரையில் எடுத்துரைத்தார். கேள்வி பதில் நிகழ்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்த இந்த காலை அமர்வில் பெண்கள் பெரிதும் பயன் பெற்றனர்.

அதே நாள் மாலை 5 மணி முதல் மீலாது மைதானத்தில் ஏற்பாடு செய்திருந்த பொதுக்கூட்டத்தில் டாக்டர். அப்துல்லாஹ் (பெரியார்தாசன்) அவர்கள் ''வளரும் தலைமுறையை வார்த்தெடுக்கும் வழிமுறைகள்'' என்ற தலைப்பில் சிறப்புரை யாற்றினார்கள். ஏர்வாடி மட்டுமல்லாது சுற்று வட்டாரப் பகுதிகளான காயல்பட்டிணம், திருநெல்வேலி மற்றும் நாகர்கோவிலில் இருந்தும் கூட ஏராளமான மக்கள் கலந்து கொண்டு பயனடைந்தார்கள்.

குழந்தைகளின் உளவியல் முதல், இளைஞர் பருவ கோளாறுகள், தம்பதிகளுக்கான அறிவுரைகள், வயதான பெற்றோர்கள் எதிர்பார்க்கும் உறவுகளும், அனுசரனையும் என வாழ்வின் அனைத்து பகுதிகளையும் தனது நீண்ட உரையில் விளக்கமாக எடுத்துரைத்து பார்வையாளர்கள் அனைவரையும் தனது நகைச்சுவை கலந்த பேச்சாற்றலால் கவர்ந்திழுத்தார் என்றால் மிகையாகாது.

மறுநாள் மே மாதம் 24 ஆம் தேதி காலை கட்டளைத் தெருவில் வைத்து பிரத்தியேகமாக ஜமாஅத் / இயக்க பொறுப்புதாரிகளுக்காக ஏற்பாடு செய்திருந்த சிறப்பு அமர்வில் இஸ்லாமிய சமூகம் எதிர்கொண்டிருக்கும் சவால்களும் அதற்கான தலைமைத்துவ ஏற்பாடுகளும் என்ற தலைப்பில் ஒரு கலந்துரையாடல் அமர்வும் நடைபெற்றது.

மனச்சிதைவு பாதிப்புள்ளவர்களுக்கான தனிப்பட்ட கவுன்சிலிங்கும் ஏற்பாடு செய்யப்பட்டதில் சுற்று வட்டார மக்கள் உட்பட ஏராளமோனோர் Dr. அப்துல்லாஹ் அவர்களிடம் ஆலோசனை பெற்று பயனடைந்தனர்.







இந்த நிகழ்ச்சியின் புகைப்படங்கள் மற்றும் டாக்டர் அப்துல்லாஹ்வின் உரையினை கேட்க கீழ்காணும் QR ஸ்கேன் செய்யவும்

## ஈமான் - ஸ்போர்ட்ஸ் கமிட்டி

ஆரோக்கியமான இளைஞர்கள்... ஆரோக்கியமான சமுதாயம்.

- உடலுக்கும் உள்ளத்திற்கும் ஆரோக்கியமான விளையாட்டுகளை ஊக்குவிப்பது.
- மாநில மாவட்ட அளவிலான வீரர்களை உருவாக்குவது
- இளைஞர்களிடையே ஆரோக்கிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது.
- அரசு சார்ந்த வேலைவாய்ப்புகளை பெற வழிவகுப்பது.
- அரசு சார்ந்த கல்லூரிகளில் மேற்படிப்பிற்காக வழிவகுப்பது.

தொடர்புக்கு: Emancharitabletrust@gmail.com



ஏக இறைவனின் திருப்பெயரால்...

# SELECT BHARATGAS AGENCY

எங்களிடம் வீட்டு உபயோகத்திற்கு தேவையான (Domestic) சிலிண்டர், 5கிலோ எடையுள்ள சிலிண்டர் மற்றும் வர்த்தக நிறுவனத்திற்கு தேவையான (Commercial) சிலிண்டர் பாரத் பெட்ரோலியம் நிர்ணயிக்கப்பட்ட தொகைக்கே பெற்றுக் கொள்ளலாம்.

புதிய இணைப்பிற்கு தேவையான ஆவணங்கள்

**புகைப்படம் 4 ஆதார் அட்டை நகல் வங்கி கணக்குபுத்தக நகல் முகவரி சான்று நகல்**






5 kg 14.2 kg 19 kg

- உடனடி இணைப்பு
- துரித சேவை
- உடனடி டெலிவரி
- சரியான எடை



எங்களிடம்:

- ISI முத்திரையுடன் கூடிய கேஸ் ஸ்டவ்
- ISI முத்திரையுடன் கூடிய சுரக்ஷா டியூப்
- சிலிண்டர் டிராலி, லைட்டர் கிடைக்கும்

# செலக்ட் பாரத்கேஸ் ஏஜென்ஸி

6/137, வடக்கு மெயின் ரோடு, ஏர்வாடி - 627 103
திருநெல்வேலி மாவட்டம்.
தொடர்புக்கு : 04637 - 240228
89033 48641
89033 48642
Email : selectbharatgas@gmail.com

Bharatgas
Bharat Petroleum
COOK FOOD. SERVE LOVE.

# திருக்குர்ஆன் ஒரு வாழும் அற்புதம்

**- தஞ்சை ஜலாலுதீன்** (அல்கோபர் - சவுதிஅரேபியா)

அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன் அஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா ரஸூலிஹில் கரீம்..

உலகில் உள்ள அனைத்தும் அகிலம் தொடங்கி அகிலத்தின் அத்தனையும், சுவனம், நரகம், ஆதம் தொடங்கி அனைத்து மனித இனங்கள் என அனைத்துமே எல்லாம் வல்ல அல்லாஹ்வால் படைக்கப்பட்டது. ஒன்றே ஒன்றைத் தவிர, அதுதான் திருக்குர்ஆன். அது படைக்கப்படவில்லை.. மாறாக ஏக இறைவனால் பேசப்பட்ட அருளப்பட்ட அற்புதம்.

يَا أَيُّهَا النَّاسُ قَدْ جَاءَكُمْ بُرْهَانٌ مِّنْ رَّبِّكُمْ وَأَنْزَلْنَا إِلَيْكُمْ نُورًا مُّبِينًا

*(4:174)* மனிதர்களே! உங்கள் இறைவனிடமிருந்து உங்களுக்கு (உறுதியான) அத்தாட்சி வந்து விட்டது. தெளிவான பேரொளியையும் உங்களிடம் இறக்கி வைத்துள்ளோம்.

அத்தாட்சி என்கிறான் அல்லாஹ். நபிமார்கள் அனைவருக்கும் அத்தாட்சி களை அற்புதங்களை அல்லாஹ் அருளினான். மூஸா நபிக்கு கைத்தடி கிடைத்தது போல், ஈஸா நபிக்கு கையே அத்தாட்சியாய் அமைந்தது போல், சுலைமான் நபிக்கு பறவைகள் கட்டுப்பட்டது, போல் யூசுப் நபிக்கு கனவு வயப்பட்டது போல், அனைத்து நபிமார்களுக்கும் அத்தாட்சிகளை அற்புதங்களை அருளிய அல்லாஹ் அவனது ஹபீப் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருளிய அத்தாட்சி தான் திருக்குர்ஆன்.

இந்த இறைவேதம் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இறுதித்தூதரே என்பதற்கான சான்றாகவும் அத்தாட்சியாகவும் கூட அருளியிருப்பதும் ஓர் அற்புதமே! எப்படி? மூஸாவின் (அலை) கைத்தடி மூஸா நபிக்குமட்டுமே. ஈஸாவின் (அலை) கையோ ஈஸா நபியிடம் மட்டுமே.ஆனால் ரஸூலுல்லாஹ்வுக்கு (ஸல்) கிடைத்த அத்தாட்சியோ அவர்களுக்குப் பிறகும் நம் எல்லோரிடத்திலும் தொடர்ந்து கியாமத் நாள் வரைக்கும் அற்புதமாய், அத்தாட்சியாய்.

திருக்குர்ஆன் மானுடத்தைப் புரட்டிப் போட்ட மாற்றங்கள் மற்றொரு ஆச்சரியம். அரபுலகம் அறிவுச் செருக்கில் ஆணவத்தில் ஆட்டம் போட்ட காலத்தில் ஒரு உம்மி நபியைக் கொண்டு தன் வசனங்களைப் பரவச் செய்தானே வல்ல அல்லாஹ்.

தறிகெட்டுத் திரிந்த அரபியர்களை புடம் போட்ட சஹாபாக்களாக மாற்றியது இந்தக் குர்ஆன் தானே. குலச் செறுக்கில் கோலோச்சிய மனிதர்களை குணக்குன்றுகளாய் மாற்றியது இந்தக் குர்ஆன் தானே.

உடைமை முதல் உயிர் வரை அனைத்தையும் இஸ்லாத்திற்கு முன் துச்சமென செயல் படவைத்தது இந்தக் குர்ஆன் தானே.

உரம் கொண்ட உமர் ரலி அவர்களை உருக வைத்த வார்த்தைகளும் இந்தக் குர்ஆனில் தானே.

ஏன் இறுமாப்புக் கொண்டிருந்த மக்கத்துக் காஃபிர்களையும் மறைந்திருந்து கேட்டு கிறங்கவைத்ததும் இந்தக் குர்ஆன் தானே.

ஆயினும்.. ஆயினும்.. ஆயினும்.. மாற்றத்தின் மூலதனமான இந்தக் குர்ஆன் இப்போது நம்மிடம்.. நாமோ..

பரக்கத்துக்காய் போர்த்தி வைத்து பாத்திஹா ஓதுவதற்கு மட்டும் பயன்படுத்துகிறோம்.

ஓதுகிறோம் .. ஒன்றும் விளங்காதவர்களாய்..

கேட்கிறோம்.. எந்தச் சலனமும் ஏற்படாதவர்களாய்..

இதயத்திற்கான அருமருந்து என அல்லாஹ் கூறுவதை உணராமல் எங்கெங்கோ நிவாரணம் தேடுகிறோம்.

சொல்வதும் புரிவதில்லை. சொல்லிக் கொடுக்கவும் தெரிவதில்லை.

ஆயிரக் கணக்கில் புத்தகங்களை மேயத்தெரிந்த நமக்கு, மேதையாய் திரிந்த நமக்கு இந்த ஒரேயொரு புத்தகம் மட்டும் புரியாமல் போனது யாரின் சூழ்ச்சி?

وَلَقَدْ يَسَّرْنَا الْقُرْاٰنَ لِلذِّكْرِ فَهَلْ مِنْ مُّدَّكِرٍ

புரிந்து கொள்வதற்காக இந்தக்குர்ஆனை எளிதாக்கியிருக்கிறோம் என ஒன்றுக்கு நான்கு முறை அதுவும் ஒரே அத்தியாயத்தில் சொல்கிறான். (அல் கமர்) ம்ஹூம் புரியலன்னா புரியலதான் என தெளிவாக இருக்கிறோம்..

ஆங்கிலம் இந்தி மலையாளம் ... ஏன் அந்த மாதச் சம்பளம் பார்க்க அரபியைக் கூட ஹாதா மால் ஹாதா என்று கற்றுக் கொண்டோம். ஆனால் அல்லாஹ்வின் வசனம் மட்டும்.. ம்ஹூம்..

மறுமையில் நமக்கு சிபாரிசு செய்யும் இரண்டு: ஒன்று குர்ஆன், மற்றொன்று கண்மணி நாயகம் (ஸல்) அவர்கள்.

அந்த மறுமையின் மஹ்ஷர் மைதானத்தில் நபிமார்கள் அத்தனை பேரும் யாநஃப்ஸ்! யாநஃப்ஸ்! என்று அரற்றிக் கொண்டிருக்கும் வேளையில்... யா உம்மத்தி யா உம்மத்தி என நம்மைப் பற்றியே கவலைப்படும் நமது நாயகம் (ஸல்) அவர்கள். திருக்குர்ஆனை புறக்கணித்து வாழ்ந்தால், அல்லாஹ்வின் மன்றத்தில் முறையிடுவார்கள் என்றால் நமது கதி என்ன என்று எண்ணிப் பார்ப்போமா?

وَقَالَ الرَّسُولُ يٰرَبِّ اِنَّ قَوْمِى اتَّخَذُوْا هٰذَا الْقُرْاٰنَ مَهْجُوْرًا

*25:30* ''என்னுடைய இறைவா நிச்சயமாக என் சமூகத்தார் இந்த குர்ஆனை முற்றிலும் புறக்கணித்து ஒதுக்கிவிட்டார்கள்'' என்று (நம்) தூதர் கூறுவார்.

விஞ்ஞானம் முன்னேறிய இந்தக்காலத்தில் திருக்குர்ஆன் கற்றுக் கொள்ள ஏகப்பட்ட எளிய வழிகள் வகைகள் வந்து விட்டது. ஏர்வாடி சகோதரர்கள் சிலர் அதைப் போன்ற எளிய வகைப்பாடங்களைப் படித்து ஆசிரியத் தகுதியையும் அடைந்து விட்டார்கள். மாஷா அல்லாஹ்!

اَلرَّحْمٰنُ عَلَّمَ الْقُرْاٰنَ

அர்ரஹ்மான், அவன் தான் குர்ஆனைக் கற்றுத் தந்தான் என அல்லாஹ் அர்ரஹ்மான் அத்தியாயத்தில் கூறுகிறான். அல்லாஹ் கற்றுக் கொடுத்தது நிச்சயமாக எளிதாகத்தான் இருக்கும், மனதார நம்புவோம். திருக்குர்ஆன் படிக்க உறுதி கொள்வோம். அதன் அர்த்தத்தை அறிந்து நம்மை செம்மைப் படுத்திக் கொள்வோம். அவன் பொருத்தம் பெறுவோம். மறுமையில் திருக்குர்ஆனும் சிபாரிசு செய்யும். திருக்குர்ஆனிய மனிதர்களானதால் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சிபாரிசும் கிடைக்க சுவனத்தின் சொந்தக்காரர்களாய் வலம் வருவோம்.வல்ல அல்லாஹ் அருள் புரிவானாக! ஆமீன்!

ஈமான் அறக்கட்டளை 2017ம் ஆண்டு நடத்திய நம்பியாறு நினைவலைகள் கவிதைப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்ற கவிதை

# நம்பியாறு நினைவலைகள்

- சகோதரர் பஷீர் (மின் பாஷி) இப்னு ஸாஹிப், முஹைதீன்புரம்

மோண்ட பாய்ச்சுருட்டி..
தலையில் சுமந்தபடி..
விடிந்தும் விடியாத..
வைகறை விளும்பில்..
அரைத் தூக்கத்துடன்..
குளித்தெழுந்த நாள்முதலே
ஒட்டிக்கொண்டது..
என் ஆறு....

★★★★★★★★★★★★★★★

ஆற்றோர... அலைமொழியில்..
காற்றில் தன்
வாழ்வெழுதிய நாணலில்.
மை நனைத்து
வண்ணத்தில் ஒளிர்ந்த
அலிப்... பே.. தேக்கள்..
உயிர் மெய்கள்.

★★★★★★★★★★★★★★★

நிர்மா நெகிழிக்குள் நீந்தி...
பள்ளிவாசல் அகலுக்குள்..
புலம்பெயர்ந்த மீன்களின்,
அசைவுகளால்.. எழுதப்பட்டன
பள்ளிக்கும் எனக்குமான..
தொடர்புகள்.

★★★★★★★★★★★★★★★

அத்தனை கள்ளக்குளியலுக்கு
பின்னும், பிரியாமல்...
கால்சட்டை பைக்குள்
தங்கி போன
மணல் துகள்தான்..
மவுன சாட்சிகளாய்..
அன்றும் இன்றும்..

★★★★★★★★★★★★★★★

ஊருக்கு நடுவே
வகுடெடுத்து ஓடுகையில்..
கரைகளாய்...
அழகு பார்த்துக்கொண்ட
ஊர்தான்
சிக்குப் பிடித்து
சிக்கி தவிக்கிறது.

★★★★★★★★★★★★★★★

ஆற்றின் படுகைகளோடு
அடையாளம் தொலைத்தது
ஆறு நோன்பு.... பெருநாட்கள்.

★★★★★★★★★★★★★★★

அன்று..
கட்டிய மணல்வீடுகளை...
ஆறு கரைத்தது.
இன்று...
கட்டிய வீடுகள்..
ஆற்றை கரைத்தது.

★★★★★★★★★★★★★★★

உனக்கா..
ஊற்றால் ஊட்டினேன்...?
புதர்களுக்கிடையில்..
வெட்கிப் பதுங்கி..
புழுவாய் நெளியும்.. ஆறு.

★★★★★★★★★★★★★★★

அழியும்... ஆற்றின்
மிக சமீபமாகவே..
நம் மண்ணறைகள்...
குறியீடு.

★★★★★★★★★★★★★★★

பவானி, பொத்தி, கெண்டை
நீல நிற ஊசித்தட்டான்
அத்தனை ஓலங்களும்
மண்ணோடு குலைந்த சாந்தாக..
வீட்டுச் சுவர்களுக்குள்..
ஒலித்துக் கொண்டிருக்கும்..
மறந்தும் செவிமடுத்து
விடாதீர்கள்..
குற்ற உணர்வுகளில்
உங்கள் தூக்கம்
கலைந்து விடக்கூடும்

## ஈமான் - நீர் மேலாண்மை குழு

நீர்வளத்தில் மிகைத்திருந்த ஏர்வாடி சமீப காலமாக நீர் நெருக்கடியைச் சந்தித்து வருகின்றது. நம்பியாறு கழிவு நீர் வடிகாலாக மாறிக் கொண்டிருக்கின்றது. நிலத்தடி நீர் மிக வேகமாக கீழே சென்றுக் கொண்டிருக்கின்றது. இதனை சீர்செய்து ஏர்வாடியை மீண்டும் நீர் வளமிக்க ஒரு ஊராக மாற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது ஈமானின் நீர் மேலாண்மைக் குழு.

- அனைத்துத் தெருக்களிலும் மழை நீர் சேகரிப்பு தொட்டி அமைப்பது
- ஊரிலுள்ள குளங்களை தூர் வாரி தூய்மைப் படுத்துவது
- அனைத்துத் தெருக்களிலும் மரக்கன்றுகள் நட்டு பராமரிப்பது.
- ஆற்றில் கலக்கும் கழிவு நீரைத் தூய்மைப் படுத்துவது.
- ஆற்றின் குறுக்கே நன்னீர் தேங்க சிறு சிறு தேக்கிகள் அமைப்பது.



தூர்வாரப்பட்ட ஏர்வாடி பீலிக் குளம்



தொடர்புக்கு: Emancharitabletrust@gmail.com

## ஈமான் - ஜகாத் கமிட்டி

### ஏர்வாடியில் வறுமை ஒழிப்பு

ஜகாத்தின் முக்கிய நோக்கம் வறுமையை ஒழிப்பதே. இது முறையாக எங்கெல்லாம் செயல் படுத்தப் படுகிறதோ அங்கெல்லாம் வறுமை ஒழிந்து விடும் என்பதற்கு வரலாறு நெடுக சான்றுகள் உள்ளன. ஜகாத்தை ஓரிடத்தில் சேகரித்து வழங்கும் முறையை இஸ்லாம் வலியுறுத்துகிறது. தனிப்பட்ட முறையில் ஜகாத் கொடுப்பதற்கு எந்த தடையும் இல்லை. ஆனால் கூட்டு முறையில் மூலமே தகுதியுடையோர்களுக்கு முறையாக வழங்க முடியும்.




- 2001 ஆண்டு முதல் இறையருளால் இந்த அறப் பணியில்
- 80க்கும் மேற்பட்ட எளிய குடும்பங்களுக்கு மாதாந்திர உதவிகள்.
- ஜகாத் வாங்குபவர்களை கொடுப்பவர்களாக மாற்றுதல்
- ஜகாத் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்
- தகுதியுடைய ஏழை கடனாளிகளை மீட்டெடுத்தல்.

இந்த அறப்பணியில் பங்கெடுக்க தொடர்பு கொள்ள..
Emancharitabletrust@gmail.com

**ஜகாத் - இஸ்லாத்தின் கட்டாயக் கடமை. ஏழைகளின் உரிமை.**

# ஈமானிய மொட்டுக்கள்

**குர்ஆனைக் கற்று அதனைப் பிறருக்கும் கற்று கொடுப்பவரே உங்களில் மிகச் சிறந்தவர்.**

*( நபிமொழி - அறிவிப்பாளர்: உஸ்மான்(ரலி) - நூல்: புஹாரி)*



# ஈமானிய மொட்டுக்கள் - மீண்டும் ஓர் மதீனாவுக்கான வித்துக்கள்

1978 ம் ஆண்டு துவங்கப்பட்ட நமது ஈமான் அறக்கட்டளை கடந்த 40 வருடங்களாக அல்லாஹ்வுடைய கிருபையால் , நமதூர் ஏர்வாடி மக்களின் கல்வி, பொருளாதார, சமூக மேம்பாட்டுக்காக பல்வேறு பொருளாதார உதவிகளையும் அறப்பணிகளையும் சிறப்பாக செய்து வருகிறது . இந்தப் பணிகளின் ஒரு பகுதியாக நமதூரை ஒரு முன்மாதிரி முஸ்லிம் ஊராக மாற்றுவதற்கும் , அனைத்து சிந்தனைப் பிரிவினரையும் சமூகத்தையும் ஒருங்கிணைத்து ஒரு Inclusive society உருவாக்கவும், நமது வருங்கால வளரும் தலைமுறையை சீரிய முறையில் வார்த்தெடுக்கவும் - ''மீண்டும் ஓர் மதீனா'' என்ற தலைப்பில் ஒரு நீண்ட கால இலக்கை நிர்ணயித்து செயல்படுவது என்று கடந்த 2012 ம் ஆண்டு நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது .

ஏர்வாடியில் சில சமூக சீர்கேடுகள் நடைபெற்று வருவதை அறிந்து , கவலையுற்று, அவற்றை மாற்றுவதற்கான வழிவகைகளை ஆராயும்போது, ஊரில் மார்க்க கல்வியின் அடிப்படை பீடங்களான மக்தப் மதரஸாக்கள் நலிவடைந்து வருகின்றன என்பது தெரிய வந்தது. எனவே நமதூரின் வளரும் தலைமுறையை நல்லொழுக்கத்துடன் மார்க்க சிந்தனையுடையவர்களாக வளர்க்க வேண்டும் என்பதற்காக, மக்தப் இல்லாத மஹல்லாக்களில் ஜமாஅத்துடன் இணைந்து முறைப்படுத்தப் பட்ட பாடத்திட்டத்துடன் கூடிய மக்தப் மதரஸாக்கள் ஆரம்பிப்பது என்றும் ஏற்கனவே செயல்பட்டுக் கொண்டிருக்கும் மக்தப் மதரஸா ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாக புதிய கருத்தோட்டங்களுடன் கூடிய மார்க்க திறன் போட்டிகள் நடத்தி சிறப்பான பரிசுகள் வழங்குவது என்றும் முடிவாக்கப்பட்டது .

இதன்படி முதலாவதாக ஒரு முன்மாதிரி மக்தப் மதரஸா, UNWO அன்வாருஸ் ஸுஃப்பாவின் பாடத்திட்டத்தில் பைத்துஸ் ஸலாம் முஹல்லாவில் 2014 ஆம் ஆண்டு பிப்ரவரியில் ஆரம்பிக்கப்பட்டது. முதலில் 80 மாணவ மாணவியரைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த மக்தபில் அடுத்தடுத்த ஆண்டுகளில் 140 க்கும் அதிகமான குழந்தைகள் சேர்ந்து பலன் பெற்றனர். அல்ஹம்துலில்லாஹ். இதனைத் தொடர்ந்து மேலும் நான்கு மக்தப்கள் மற்ற ஜமாஅத்தார்களால் ஆரம்பிக்கப்பட்டது

இன்னொரு பக்கம், ஏற்கனவே செயல்பட்டுக் கொண்டிருக்கும் மக்தப் மதரஸாக்களை ஊக்குவிப்பதற்காக , ''ஈமானிய மொட்டுக்கள்'' என்ற நிகழ்ச்சி கடந்த 2013 ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது. இதில் பல்வேறு விதமான போட்டிகள் வைத்து சிறப்பான பரிசுகள் வழங்கப்படுகின்றது.

இந்த போட்டிகள் குர் ஆன் , சுன்னா, ஸீரா , அஹ்லாக் , இலக்கியம் , பேச்சுக்கலை, கலை மற்றும் பாரம்பரியம் ஆகிய தளங்கள் சார்ந்த திறமைகளை வெளிக்கொணரும் வண்ணம் அமைக்கப்பட்டிருக்கும் .இந்த போட்டிகளில் ஊர் முழுவதிலுமுள்ள சுமார் 18 விருந்து 20 மதரஸாக்களை சேர்ந்த சுமார் 300 க்கும் அதிகமான மாணவ மாணவியர்கள் ஆர்வத்துடன் கலந்து கொள்கிறார்கள். 2018ம் ஆண்டு முதல் நமதூரை சுற்றியுள்ள மற்ற ஊர்களில் உள்ள மக்தப் மதரஸாக்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது

ஈமானிய மொட்டுக்கள் நிகழ்ச்சியில் இதுவரை நடத்தப்பட்ட மார்க்க அறிவுத்திறன் போட்டிகள், நமது வளரும் தலைமுறைக்கு மார்க்க விழுமியங்கள் மீது பற்றும் ஆர்வமும் ஏற்படுத்தும் வண்ணம் அமைந்துள்ளன, குழந்தைகள் ஒவ்வொருவரும் தனித்தன்மை மற்றும் தனித் திறமை மிக்கவர்கள் என்பதை கருத்தில் கொண்டு எல்லா விதமான வெவ்வேறு திறமை கொண்ட மாணவ மாணவியரும் கலந்து கொள்ளும் வகையில் வித்தியாசமான போட்டிகள் பல்சுவையாக பகுக்கப்பட்டுள்ளன.

## குர்ஆன் மனனம் / கிராஅத் போட்டிகள்:

ஈமானிய மொட்டுக்கள் நிகழ்ச்சியின் அடிப்படை அம்சமான அல்லாஹ்வின் வேதத்தை அறிந்து மனனம் செய்யும் இந்த போட்டி, அருள்மறை குர்ஆனை அழகிய முறையில், சரியான உச்சரிப்புகளுடன் முறையான தஜ்வீத் அடிப்படையில் ஓதுவதற்கான பயிற்சி. சிறப்பான நடுவர்களைக் கொண்டு, தரமான தேர்ந்தெடுப்பு செய்து தங்க நாணயங்கள் பரிசாக வழங்கும் போட்டி. நமதூரிலிருந்து ஹாஃபிழ்கள் உருவாகி பல வருடங்கள் ஆகிவிட்டன என்ற மனக்குறை எல்லோரிடமும் உள்ளது. இன்ஷா அல்லாஹ் இது போன்ற தொடர் மனனப் போட்டிகள், ஹாஃபிழ்களை உருவாக்க ஈமான் எடுத்து வரும் முயற்சிகளுக்கு முதற்படியாக இருக்கும் என்ற ஊக்கத்தை அனைவருக்கும் ஏற்படுத்துகிறது.

## ஹதீத்கள் / துஆ மனனப் போட்டிகள்:

நம் பெருமானார் (ஸல்) அவர்கள் கற்றுத் தந்த வாழ்க்கை வழிமுறைகளை மனதில் பதிந்து அதன்படி வாழ வழிகோலும் முயற்சியாகும், 40 ஹதீஸ்களை மனனம் செய்பவர்கள் மறுமையில் மார்க்க அறிஞர்களாக எழுப்பப்படுவார்கள் என்ற நபிமொழியும் நினைவுக்கு வருகிறது.

## ஸீரா - வினாடி வினா (QUIZ) போட்டி :

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் வாழ்விலிருந்து வினாடி வினா (QUIZ) போட்டி - நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் வாழ்க்கையை ஸீராவை முழுமையாக மாணவர்கள் மற்றும் பொது மக்கள் அறிந்து கொள்ளும் முயற்சியாகும்.ஒவ்வொரு சுற்றும் சுவராஸ்யமாக , அறிவுப் பசிக்கு விருந்தாக அமையும்

## சுட்டிக் குழந்தைகளின் குட்டிக் கதைகள் :

இது அனைவரையும் வெகுவாக கவரும் ஒரு நிகழ்ச்சியாகும், பால்மணம் மாறா இரண்டு, மூன்று வயது பிஞ்சு குழந்தைகள் , தங்கள் மழலை மொழியில் நபிமார்கள் வரலாறு மற்றும் இஸ்லாமிய வரலாறுகளை கதை வடிவில் காண்போர் ரசிக்க சொல்லும் அழகே தனி தான் . இதனைக் கண்டு ரசித்த ஒரு வெளியூர் சகோதரர், நானெல்லாம் 10ம் வகுப்பு படிக்கும் போது தான் மேடையேறும் வாய்ப்பு கிடைத்தது, அதுவும் ஒரு பாரதியையோ , நேருவையோ பற்றி பேசத் தான் வாய்ப்பு கிடைத்தது. ஆனால் இந்த மழலைகள் இளம் வயதிலேயே அவர்களுக்கு மேடையில் உரையாற்றும் பயிற்சியும் அதுவும் அல்லாஹ்வையும் அவனது நபிமார்களையும் பற்றி பேசும் வாய்ப்பு கிடைத்துள்ளதை நினைத்தால் மிக்க சந்தோஷமாக இருப்பதாக நெகிழ்ந்து கூறினார்.

## இஸ்லாமிய நாடகங்கள் போட்டி:

காட்சி ஊடகங்களின் தாக்கம் உச்ச கட்டத்தில் இருக்கும் இந்த கால கட்டத்தில், அந்த காட்சி மற்றும் நேரடி செயல்முறை மூலமாக சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான ஒரு மாறுபட்ட முயற்சி. இது நமது மாணவர்களின் ஆளுமைத் திறமையை வளர்ப்பதற்காகவும் பயன்படுகிறது. ஈமானிய மொட்டுக்களில் நடந்த இந்த நாடகங்களில் மக்களுக்கு தேவையான பல்வேறு கருத்துக்களை அழகாகவும் அற்புதமாகவும் வெளிக்கொண்டு வந்தனர் குழந்தைகள். குறிப்பாக உறவுகளுக்கிடையேயான பிரச்சனைகள், இளைஞர்கள் சந்திக்கும் சமூக சீர்கேடுகள், வட்டி , வரதட்சணை போன்ற சமூகக் கொடுமைகள், நீர் சேமிப்பு மற்றும் சுற்றுப்புற சுகாதாரம் போன்ற சூழலியல் பிரச்சனைகள் போன்ற அனைத்து தளங்களிலும் நடைபெறும் யதார்த்த விஷயங்களையும் அதற்கான தீர்வுகளை சொல்லும் விதமாகவும் வரலாற்று நிகழ்வுகளை நம் கண் முன் கொண்டு வரும் விதமாகவும் இந்த நாடகங்கள் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன.

## பட்டிமன்றம் மற்றும் கலந்துரையாடல் போட்டிகள்:

இந்தப் போட்டிகள், அறிவுப் பரிமாற்றம் மற்றும் மதரஸா மாணவர்களுக்கு பேச்சாற்றலை வளர்ப்பதற்கான வாய்ப்பைக் கொடுக்கும் ஒரு நிகழ்ச்சி. நடுவரையே திணற வைக்கும் அளவுக்கு மாணவர்களின் பங்களிப்பு ஆச்சரியப் பட வைத்தது.

## கனவுகள் மெய்ப்பட வேண்டும் (பேச்சுப் போட்டி) :

இது மாணவ மாணவிகளின் பேச்சுத்திறனையும் சமூக ஆர்வத்தையும் வெளிக்கொணரும் ஒரு முயற்சியாகும். வருங்காலத்தில் தான் என்னவாக ஆக விரும்புகிறேன் என்பதையும், அப்படி ஆனால், அதன் மூலம் இந்த சமூகத்திற்கு என்ன செய்ய விரும்புகிறேன் என்பதையும் கோர்வையாக அழகியதொனியில் மேடையில் உரையாற்றி நம் மூக்கின் மேல் விரல் வைக்க வைத்தனர் நம் வருங்கால தலைவர்கள். பத்திரிக்கை ஊடகவியலாளர், மாவட்ட ஆட்சியர், காவல் துறை என பல்வேறு கனவுகளை வெளிப்படுத்தினார்கள். இதில் சிறந்த சிந்தனைகளை வெளிப்படுத்திய போட்டியாளர்களை தொடர்ந்து ஊக்குவித்து அவர்களின் கனவுகள் நனவாக ஈமான் அறக்கட்டளை ஒத்துழைக்க வேண்டும் என போட்டியின் நடுவர்கள் கேட்டுக் கொள்ளும் அளவுக்கு சிறப்பாக இருந்தது,

## கலைப் பொருள் மற்றும் ஓவியப் போட்டிகள் :

குழந்தைகளின் கலை ஆர்வத்தையும், படைப்பாற்றல் திறமையையும் வளர்ப்பதற்காகவும், அறிவுசார் போட்டிகளுக்கிடையில் மாணவ மாணவியரின் இன்னொரு பகுதியினரையும் ஊக்கப்படுத்தும் பொருட்டு இந்த போட்டிகள் வருடந்தோறும் வெவ்வேறு தலைப்புகளில் வெவ்வேறு முறைகளில் நடைபெறுகின்றன. முதல் இரண்டு வருடங்களில் இஸ்லாமிய கலை கண்காட்சி போட்டியாக நடத்தப்பட்டது இஸ்லாம் சார்ந்த மாதிரி வடிவங்கள், ஓவியங்கள் அல்லது கலைப் பொருட்களை கண்காட்சிக்கு வைத்து அதைப் பற்றி மாணவர் குழுவினர் ஒரு சிறு விளக்கம் சொன்னார்கள். அதனை அடுத்த ஆண்டில் என் எண்ணத்திலும் வண்ணத்திலும்

ஏர்வாடி என்ற தலைப்பில், நமதூர் ஏர்வாடி பற்றிய தன்னுடைய எண்ணங்களை காட்சி வடிவமாகஓவியமாக, வரைந்து வைத்திருந்தனர். அதனைத் தொடர்ந்து கடந்த இரண்டு வருடங்களாக, காகிதத்தில் கலைபொருள் போட்டி என்ற போட்டியில், வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் என்ற முதுமொழிக்கு ஏற்ப, காகிதம் அல்லது சார்ட் பேப்பரை அடிப்படையாகக் கொண்டு தங்கள் சொந்த முயற்சியில் கண்கவரும் கலை பொருள் மாதிரி செய்து காட்டினர் நம் இளம் கலை வல்லுநர்கள்.

**பாரம்பரிய போட்டிகள் / கண்காட்சி :**

இந்த தளத்தில் முதல் வருடத்தில் (2013), நமது முந்தைய தலைமுறை மக்தப் ஆசிரியர்களின் புகைப்படங்களையும், பாரம்பரிய பொருட்களான ஓதும் பலகை, மாலா, அதன் எழுதுகோல் மற்றும் பழைய குர்ஆன் பிரதிகள் போன்றவற்றை கண்காட்சியாக வைக்கப்பட்டிருந்தது. அதனை அடுத்த வருடத்தில் திருக்குர்ஆனின் அறிவியல் உண்மைகள் பற்றிய கண்காட்சியும், அடுத்து 2016ம் ஆண்டில் ஒரு மிக வித்தியாசமான முயற்சியாக, வேர்களைத் தேடும் விழுதுகள் என்ற தலைப்பில் வம்சாவழி வரைபடப் போட்டி நடைபெற்றது. இது மாணவ மாணவிகள் தங்கள் குடும்ப பாரம்பரியத்தையும், உறவுகளையும் தெரிந்து பேணுவதற்கான ஒரு புதிய முயற்சி அல்லாஹ்வுடைய கிருபையால் ஆச்சரியப்படத்தக்க அளவில், குழந்தைகளும் பெற்றோர்களும் சிரத்தை எடுத்து மறந்த பரம்பரை சொந்தங்களை நினைவில் கொண்டு வந்து, அதிக பட்சம் 10 தலைமுறை வரை படமாக வரைந்து வைத்திருந்தது அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தது. இந்த வரிசையில் கடந்த 2017ம் வருடம் , பாரம்பரிய மருத்துவ கண்காட்சி போட்டி நடத்தப்பட்டது. இன்று வணிகமயமாகிவிட்ட மருத்துவ உலகில் மறைந்து கொண்டிருக்கும் நமது அற்புதமான பாரம்பரிய மருத்துவ முறைகளைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் நமது பாரம்பரிய மருத்துவ மகிமைகளை வளரும் தலைமுறைகளுக்குத் தெரியப் படுத்தும் முகமாக இந்த போட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதனைக் கண்டு மகிழ்ச்சியடைந்த சில மூத்த கண்மாமார்கள், இன்றைய தலைமுறை மறந்த இந்த கை மருந்துகளையெல்லாம் கண்டு, எங்களது இளவயது நினைவுகளுக்கு சென்றுவிட்டோம் என பூரிப்புடன் பாராட்டினார்கள்.

**இளைஞர்களுக்கான ஆளுமைத் திறன் போட்டிகள் :**

குழந்தைகளுக்கான இந்த நிகழ்ச்சியில், இளைஞர்களுக்கான பிரத்தியேக போட்டிகளும் நடத்தப்பட்டு வருகின்றது. நமதூர் இளைஞர்களின் ஆளுமைத் திறனையும், சமூக பொறுப்புணர்வையும், தொழில்நுட்ப அறிவையும் வெளிக்கொணரும் ஒரு புதிய முயற்சியாக இந்த போட்டிகள் திகழ்கின்றன. இதில் 2015ம் ஆண்டு நான் எதிர்பார்க்கும் ஏர்வாடி என்ற தலைப்பில் இளைஞர்களுக்கான திரைக்காட்சித்திறன் போட்டி (Power point Presentation Competition) நடத்தப்பட்டது. அதில் நேர்மறையாக, சமூக பொறுப்புணர்வுடன் நமதூர் எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என நான் விரும்புகிறேன் என்பதையும் நமதூர் மார்க்க, சமூக, கல்வி, பொருளாதார, சுற்றுபுற, சுகாதார மற்றும் கலாச்சார அடிப்படைகளில் மேம்படுவதற்கான ஆக்கப்பூர்வமான வழிமுறைகளையும் Power Point Presentationல் தொகுத்து திரையிட்டு விளக்கமளித்தார்கள்

நமதூரின் திறமை மிகு இளைஞர்கள். அதன் வரிசையில் கடந்த வருடம் 2017ம் ஆண்டு, எதிர்கால ஏர்வாடி என்ற தலைப்பில் திட்ட முன் வரைவு போட்டி (Project Presentation Competition) நடைபெற்றது. இப்போட்டி ஏர்வாடி இளைஞர்களிடம் ஆளுமையை வளர்ப்பதற்காகவும் ஒரு தொலை நோக்கு சிந்தனையை உருவாக்குவதற்காகவும் ஏற்படுத்தப்பட்டது. திட்டத்தை சமர்ப்பித்த சகோதரர்கள், சமூக, கல்வி , பொருளாதார மற்றும் சுற்றுபுற , சுகாதார தளங்களில் நமதூரை மேம்படுத்த நாம் முன்னெடுக்க வேண்டிய திட்டங்கள் பற்றி விரிவாக விளக்கமளித்தார்கள்.

**பெரியவர்களுக்கான இலக்கியப் போட்டிகள் :**

ஈமானிய மொட்டுக்கள் நிகழ்ச்சியை ஒட்டி, பெரியவர்கள் மற்றும் பெண்களுக்காக, மக்களின் சிறந்த எண்ணங்களையும், வளமான சிந்தனைகளையும் வெளிப்படுத்தும் விதமாக இலக்கியப் போட்டிகள், கட்டுரை, கதை மற்றும் கவிதை வடிவங்களில் நடத்தப்பட்டு வருகின்றது, இதுவரை ''மீண்டும் ஓர் மதீனா'', ''உறவுகளைப் பேணுவோம்'', ''நீரின்றி அமையாது நிறைவான ஏர்வாடி'' போன்ற தலைப்புகளில் கட்டுரைப் போட்டிகளும், சிந்தனையைத் தூண்டும் சிறுகதைகள் என்ற தலைப்பில் சிறுகதைப் போட்டியும், ''நம்பியாறு நினைவலைகள்'' என்ற தலைப்பில் கவிதைப் போட்டியும் நடத்தப்பட்டுள்ளன. இதில் மக்கள் திரளாக கலந்து கொண்டு தங்கள் ஆக்கங்களை சமர்ப்பித்து சிறந்த பரிசுகள் பெற்றுள்ளனர்.

**ஈமான் விருதுகள்:**

இந்நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக ஊருக்கும் சமூகத்துக்கும் சிறப்பாக சேவை செய்துவரும் பெருமக்களை தேர்ந்தெடுத்து அவர்களின் பணிகளைப் பாராட்டி நன்றி தெரிவிக்கும் வகையில் ''ஈமான் விருது'' வழங்கி கவுரவிக்கப்படுகிறார்கள். இவ்வகையில் மாற்று மதங்களை சேர்ந்த சமூக சேவகர்களும் கண்ணியப்படுத்தப் படுகிறார்கள். மெர்ஸி மருத்துவமனை மருத்துவர் டாக்டர் ஜெயச்சந்திரன் மற்றும் ஆசிரியர் தங்கவேலு ஆகியோர் கடந்த வருடங்களில் ஈமான் விருது பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**சிறப்பு சொற்பொழிவுகள்:**

நிகழ்ச்சியின் இறுதியில் வந்திருக்கும் பெற்றோர்கள் மற்றும் பொதுமக்களின் சிந்தனைக்கு விருந்தளிக்கும் வகையில் தலைசிறந்த மார்க்க அறிஞர்களைக் கொண்டு, இன்றைய காலகட்டத்துக்கு தேவையான தலைப்புகளில் சிறப்பு சொற்பொழிவும் நடத்தப்பட்டு இறுதியாக பரிசுகள் வழங்கப்படும் .இந்நிகழ்ச்சியில் பொதுமக்கள் சுமார் 700 to 800 பேர் திரளாக கலந்து பலன்பெறுவார்கள். இதில் குறிப்பாக பெண்கள் அதிக அளவில் கலந்து கொள்வார்கள்.

**இது வரை நடந்த சிறப்பு சொற்பொழிவுகளில்**

2013 ஆம் ஆண்டு திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி பேராசிரியர் ''மௌலவி இஸ்மாயில் ஹஸனி'' அவர்கள் ''கலாச்சார சீர்கேடுகளும் தீர்வுகளும்'' என்ற தலைப்பிலும் ,

2014 ஆம் ஆண்டு இஸ்லாமிய அழைப்பாளரும் உளவியல் வல்லுனருமான ''மௌலவி முஜிபுர் ரஹ்மான் உமரி'' அவர்கள் ''நிம்மதி தேடும் நெஞ்சங்களே'' என்ற தலைப்பிலும் ,

2015 ஆம் ஆண்டு மூத்த அறிஞரும் நபிமொழிகள் மொழி பெயர்ப்பாளருமான ''மவ்லவி முஹம்மது கான் பாகவி அவர்கள் ''மீண்டும் ஓர் மதீனா - நம் உள்ளத்திலிருந்து ஊர் வரை'' என்ற தலைப்பிலும் ,

2016 ஆம் ஆண்டு சிறந்த எழுத்தாளரும் பேச்சாளருமான மவ்லவி. நூஹ் மஹ்லரி அவர்கள் ''சுவனம் நமது வீடுகளில்'' என்ற தலைப்பிலும்

2017 ஆம் ஆண்டு சென்னை மக்கா மஸ்ஜித் இமாமும் ஜம்மியத்துல் உலமா ஹிந்தின் மாநில தலைவருமான மவ்லவி . மன்ஸூர் காஷிஃபி அவர்கள் ''அய்ன தத்கபூன் - நீங்கள் எங்கே செல்கிறீர்கள் ?'' என்ற தலைப்பிலும்

கலந்துக் கொண்டு சிறப்பு உரையாற்றினார்கள்.

இவ்வரிசையில் இவ்வருடம் 2018ம் ஆண்டு ஈமானின் 40ம் ஆண்டு விழாவை முன்னிட்டு நடக்கவிருக்கும் ஈமானிய மொட்டுக்கள் நிகழ்ச்சியில் பிரபல இஸ்லாமிய அறிஞரும், திருக்குர்ஆன் மொழிபெயர்ப்பாளரும், பன்னூலாசிரியருமான மவ்லவி, காஞ்சி அப்துல் ரவூப் பாக்கவி அவர்கள், ''சமூக சீரமைப்பும், சந்திக்கும் சவால்களும்'' என்ற தலைப்பில் உரையாற்ற இருக்கிறார்கள் இன்ஷா அல்லாஹ்.

மீண்டும் ஒரு மதினா என்ற நமது இலட்சியப் பயணத்தில் ஒரு மைல் கல்லாகவே ஒவ்வொரு ஈமானிய மொட்டுக்கள் நிகழ்ச்சியும் அமைந்துள்ளது என்றால் அது மிகையல்ல. அல்ஹம்துலில்லாஹ் . அல்லாஹ்வின் மாபெரும் கிருபையால், இம் மாதிரி ஊக்கமூட்டும் முயற்சிகள் காரணமாக, தற்போது நமதூரில் குறிப்பிடத்தக்க அளவில் மக்தப் பற்றி விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது என்பதும் ஊர் முழுவதும் அனைத்து மக்தபுகளிலும் பயிலும் மாணவ மாணவியரின் எண்ணிக்கை கடந்த 5 வருடங்களில் இரண்டு மடங்கு அதிகரித்துள்ளது என்பதும் மகிழ்ச்சிக்குரிய விடயம் . அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்

அல்லாஹ் நம் எண்ணங்களை பொருந்திக் கொண்டு, முயற்சிகளை அங்கீகரித்து, நமது இலக்கான மீண்டும் ஓர் மதினாவை இவ்வுலகில் அடையவும், ஈமானிய மொட்டுக்கள் மலர்ந்து மணம் வீசவும் மறுமையில் மேலான பாக்கியங்களை பெறவும் அல்லாஹ் கிருபை செய்வானாக.









**ஈமானிய மொட்டுக்கள் போட்டிகளின் கண்ணொளித் தொகுப்பை காண கீழுள்ள QR கோடுகளை ஸ்கேன் செய்யவும்**

ஈமானிய மொட்டுக்கள் 2013

ஈமானிய மொட்டுக்கள் 2014

ஈமானிய மொட்டுக்கள் 2015

ஈமானிய மொட்டுக்கள் 2016

ஈமானிய மொட்டுக்கள் 2017


With Best Wishes
CityGold®
FASHION JEWELLERY
Mustafa Sheikh Mohamed
82/90, A.I.P. Marg, Opp. Kathri Masjid, (Banian Street), Mumbai - 400 003.
Tel. : 022 - 23402013 / 23434228 / 23415708 Mob. : 09833223455
Email : bmcproduct@gmail.com
www.citygoldjewellers.com

# ஈமானிய மொட்டுக்கள் போட்டிகள் வகைப்பாடு

ஈமானிய மொட்டுக்கள் நிகழ்ச்சியில் நடத்தப்படும் அனைத்து போட்டிகளும் இஸ்லாமிய விழுமியங்கள், கலை மற்றும் பாரம்பரிய Theme அடிப்படையிலேயே அமைக்கப்பட்டிருக்கின்றன, அவற்றை கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்

| **Theme** | **Competitions** |
|---|---|
| குர் ஆன் | 3 ஜுஸ்வு மனனம், அம்ம ஜுஸ்வு மனனம்,<br>சூரா கஹ்ஃப் மனனம், பகரா பாக்கியசாலிகள்...etc |
| சுன்னா / ஹதீத் | அன்றாட வாழ்வின் அற்புத துஆக்கள்,<br>நபிமொழியே நம் வழி ( 40 ஹதீஸ்கள்) |
| ஸீரா | வினாடி வினாபோட்டி (Quiz) |
| அஹ்லாக் ( நற்பண்புகள்) | இஸ்லாமியக் குறு நாடகங்கள் |
| வரலாறு | சுட்டிக் குழந்தைகளின் குட்டிக் கதைகள் |
| பேச்சுக்கலை, தஃவா | பட்டிமன்றம், கருத்தரங்கம் (Group Discussion) |
| கலை | இஸ்லாமிய கலை கண்காட்சி,<br>என் எண்ணத்திலும் வண்ணத்திலும் ஏர்வாடி,<br><br>காகிதத்தில் கலைபொருள்,<br>இயற்கை மூலப்பொருளில் கலைபொருள் |
| பாரம்பரியம் | வேர்களைத் தேடும் விழுதுகள்,<br>பாரம்பரிய மருத்துவம் கண்காட்சி,<br>பாரம்பரிய உணவு கண்காட்சி |
| ஆளுமை, சமூகப் பொறுப்புணர்வு | என் கனவுகள் மெய்ப்பட வேண்டும்<br>நான் எதிர்பார்க்கும் ஏர்வாடி (PPT Competition)<br>எதிர்கால ஏர்வாடி ( Project Proposals)<br>என் இலட்சியத்திற்கான நேர்காணல் (Interview) |
| இலக்கியம் | கட்டுரை, சிறுகதை மற்றும் கவிதை போட்டிகள் |

# மாற்றத்தை நோக்கி

அபு அம்மாராஹ் (முஹம்மது சாதிக்)

ஒவ்வொரு ஊருக்குமான - செயல்முறை திட்டங்கள்

சிறு வயதில் கேட்ட ஒரு வரி...நாடு நமக்கென்ன செய்ததென்ற கேள்வி நல்லவர் நாவில் எழுவதில்லை. நாட்டுக்கு நாம் என்ன செய்தோம் என்று நெஞ்சை தொட்டு சொன்னால் அதுவே பெருமை.

இன்று, நடைமுறையில் நாம் அதிகமாக கேட்கும் வரிகள்.. ''இந்த சமுதாயத்தை திருத்தவே முடியாது'', ''அடுத்த தலைமுறையை நினைத்தாலே பயமாக இருக்கிறது'', நாங்களெல்லாம் அந்த காலத்தில் எப்படி தெரியுமா'' என்று இன்னும் பல வரிகள். இது உண்மையாக தெரிந்தாலும் முழுமையாக ஏற்க முடியாது. இதை விட மோசமான சமுதாயத்தை மாற்றிக் காட்டி நமக்கு நல்ல முன்னுதாரணத்தை நம் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் காட்டி சென்றுள்ளார்கள்.

இன்னொரு புறம். நம்மில் பல ''புலம்பல் மன்னர்கள்''. எப்போதும், காண்பவர்களிடமெல்லாம், ''அது சரியில்லை, இது சரியில்லை'' என்று, நம் ஊரிலுள்ள குறைகளை கூறிபுலம்பிக் கொண்டே இருப்பார்கள். இவர்களால் பயன்கள் எதுவும் இருக்காது. அது மட்டுமா, பல மீடியா மன்னர்கள்'' இவர்கள் மற்றவர்கள் எது செய்தாலும், ''அப்படி செய்திருக்கலாம், இப்படி செய்திருக்கலாம்'' என பல ஐடியாக்களை அள்ளி வீசுவார்கள். நிச்சயமாக நல்ல கருத்துக்களை வரவேற்க வேண்டும். ஆனால், எந்த ஒரு பங்களிப்புக்கும் வராமல், தூர இருந்து பேசுவதால் மட்டும் பயனில்லை. சில நேரம் பொதுவாக பேசாமல் ஆக்கப்பூர்வமான திட்டங்களுக்கு உதவினாலும் போதுமானதே.

இன்று ஒவ்வொரு ஊருக்குமான அத்தியாவசிய தேவை, ஆக்கபூர்வமான, சிறந்த முறையில் திட்டமிடப்பட்ட, காலம் நிர்ணயிக்கப்பட்ட திட்டங்கள். இதன் மூலம் பல விஷயங்களை, கொள்கை வேறுபாடுகளை மறந்து ஒற்றுமையாக அணுக முடியும். இதனால் சமூகத்தில் இறை பொருத்தம் கிடைப்பதோடு, ஒரு ஒற்றுமையான சமுதாயம் உருவாகி, ஒவ்வொரு ஊரும் இஸ்லாமியப்பட ஒழுக்க மாண்போடு உருவாகலாம்.

பின்வரும் உதாரணம் இந்த கருத்தை மேலும் வலுப்படுத்தும்.

நம் ஊரில் ''சிகரட், மது ஒழிப்பு திட்டம்'' என ஒரு 3 மாதத்தை பிரகடனப்படுத்தலாம். உதாரணமாக அக்டோபர் 2018 முதல் டிசம்பர் 2018 வரை. நமது இலக்கு ZERO SMOKERS & DRINKERS (பூஜ்ஜியம் புகை பிடிப்போர், மது அருந்துவோர்''). முழுமையாக அடைகிறோமோ இல்லையோ.. மிகப்பெரிய வெற்றியை அல்லாஹ் தருவான், இன்ஷா அல்லாஹ்... இதற்கான செயல் முறை திட்டங்கள் இதோ...

1. அனைத்து ஜமாத்களும், இதற்காக ஒன்று கூடி திட்டங்கள் தீட்டி செயற்படுத்த வேண்டும். (மற்ற விஷயங்களில் சிறிய கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், இப்படிப்பட்ட நல்ல திட்டங்களில் ஒன்றுபடுவார்கள்) இது போன்ற பொது விஷயத்தில் அவர்கள் ஒன்றுபடும்போது, நாளை அவர்களது சகோதரத்துவம் அதிகரித்து, பிற்காலங்களில் இன்னும் பல ஆக்கப்பூர்வ விஷயங்களை செய்யலாம், இன்ஷா அல்லாஹ்.

2. வணிகர் சங்க அமைப்புகள் இணைந்து இனிமே நாங்கள் சிகரெட், மது விற்க மாட்டோம் என முடிவு செய்து, சிகரெட் வியாபாரிகளுக்கு, ஒரு ''குட் பை'' சொல்ல வேண்டும். ''இங்கில்லாவிட்டால் பக்கத்து ஊரில் வாங்கலாம் என பிறர் கூறலாம்''. எப்படியோ முதலில் குடிக்கும் அளவு வேகமாக குறையும்.

3. பாடசாலைகள், கல்லூரிகள், தனியார் கல்வி அமைப்புகள் தம் வளாகத்தில் ஆசிரியர், பொறுப்புதாரிகள் சிகரெட் குடிக்க தடை விதிக்க வேண்டும். மேலும், புதியவர்களை நியமிக்கும்போதும் இதை கருத்தில் கொள்ள வேண்டும்.

4. பள்ளி ஜும்மாக்களில், குறைந்தது இந்த 3 மாதத்தில், மாதம் ஒரு ஜும்மாவிலாவது இது பற்றி பயான் பேச வேண்டும்.

5. துண்டுப் பிரசுரங்கள், தெரு முனை பிரச்சாரம், வீதி நாடகங்கள் என இதன் வேகம் அதிகரிக்கப்பட வேண்டும். உண்மையை சொன்னால், ஒருவன் விரும்பினாலும், தெருவில் சிகரெட், மது குடிப்பதை வெட்கமாக கருதும் நிலையை உண்டாக்க வேண்டும்.

6. பெண்களுக்கான வகுப்புகளில், அவர்கள் இதற்கும் முன்னுரிமை கொடுக்க வேண்டும். தன் கணவன், தன் தந்தை, தன் சகோதரன், தன் மகன் என்போரை இந்த பழக்கத்திலிருந்து மீட்டெடுத்த பெண்கள் தனது அனுபவங்களை பிறருக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும்.

7. பள்ளி நிர்வாக பொறுப்புகள், ஆலிம்கள் போன்ற பொறுப்புக்கள், அமைப்புகளின் பொறுப்புகள், போன்றவற்றில் இப்பழக்கம் இல்லாதவர்களுக்கு முன்னுரிமை அளிப்பதோடு, இருக்கும் நிர்வாகிகளுக்கும் அதன் விழிப்புணர்வை வழங்க வேண்டும்.

8. ஆஸ்பத்திரிகள், மருத்துவ அமைப்புகள் இது சம்பந்தமான விழிப்புணர்வுகளை நடத்த வேண்டும். மதுவுக்கு அடிமையானோரை மீட்பதற்கான பல திட்டங்கள் நாடளவில் உண்டு. அதன் மூலம் நம் மக்களையும் பயன் பெற செய்ய வேண்டும்.

9. சிறார்களான அடுத்த தலைமுறைக்கு இதன் பாரதூரத்தை அவர்கள் பாட சாலைகள் ஊடாக வழங்கி, இதன் மீது பயத்தையும் வெறுப்பையும் உண்டாக்க வேண்டும்.

இப்படி இன்னும் பல திட்டங்களை, காலம் நிர்ணயித்து செயல்படுத்த வேண்டும். அதனை மாதாந்திர ஒன்று கூடலில் மீட்டிப் பார்க்க வேண்டும். இவ்வாறு திருந்தியவர்களை கவுரவப் படுத்த வேண்டும். இந்த மூன்று மாதம் கழிந்த பின்னும், பழைய திட்டங்களை அவ்வப்போது கண் காணிக்க வேண்டும்.இதன் மூலம் மிகப் பெரிய மாற்றத்தை, நம் தலை முறை தாண்டி அடுத்த தலை முறைகளுக்கும் கொண்டு செல்லலாம். இப்படி வருடத்திற்கு 3 திட்டங்களையாவது நாம் செயல்படுத்தலாம். இன்ஷா அல்லாஹ்.

வரதட்சனை ஒழிப்பு, பாதுகாப்பான பயணம், மரம் வளர்ப்போம், இயற்கை பாதுகாப்பு, வட்டி ஒழிப்பு, குர்ஆன் மனனம், அனைவருக்கும் கல்வி, சினிமா ஒழிப்பு, என்று இன்னும் பல திட்டங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

இது சாத்தியமா? சாத்தியமே.

ஏன் தாமதம்? பூனைக்கு யார் மணி கட்டுவது (அதாவது யார் ஆரம்பிப்பது) என்ற பிரச்சினை.

பயன்கள்? - ஏராளம்.

முதலீடுகள்? - பெரிய அளவில் தேவையில்லை. நல்ல விஷயங்களில் ஒன்று கூடினால், இறைவனின் அருள் நிச்சயமாக கிடைக்கும்.

எப்போது ஆரம்பிப்பது? - நாளையே. இன்ஷா அல்லாஹ்.

தனி நபரா செய்ய வேண்டும்? - ஊர் ஜமாத்தோடு கூட்டாக செய்தால் மிக நல்லது

சமூக ஒற்றுமை? - நிச்சயமாக கூடும். குறையாது.

யார் ஆரம்பிப்பது? - எனது எழுத்தில் தொடக்கப் புள்ளியை வைத்து விட்டேன். அல்ஹம்துலில்லாஹ். அடுத்த புள்ளி ஊருக்கு ஊர் மாறலாம். ஆனால் ''முந்துபவருக்கு ஒரு சதகதுல் ஜாரியாஹ் - நிரந்தர நன்மை'' அல்லாஹ்வே மிகப் பெரியவன்.

எல்லோரும் தயாரா? இதோ, புறப்படுவோம் ஒன்றிணைந்து..

இன்ஷா அல்லாஹ். இன்னொரு மதீனா ஒவ்வொரு ஊரிலும் உருவாகட்டும்.

வரும் தலைமுறையினர், சீரிய ஒழுக்கத்தோடு உருவாகட்டும். இன்ஷா அல்லாஹ்.

வஸ்ஸலாம்

**அபு அம்மாராஹ்** (முஹம்மது சாதிக்)
www.abuammaarah.com / Feedback: abuammaarah@gmail.com

---

# ஈமானிய மக்தப் முயற்சிகள் ஏற்படுத்தியுள்ள இனிய மாற்றங்கள்

அல்ஹம்துலில்லாஹ். அல்லாஹ்வின் மாபெரும் கிருபையால், ஈமானிய மொட்டுக்கள், ஈமான் மக்தப் மற்றும் சகோதர ஜமாஅத்துகள் மற்றும் அமைப்புகள் போன்றவற்றின் ஊக்கமூட்டும் முயற்சிகள் காரணமாக, தற்போது நமதூரில் குறிப்பிடத்தக்க அளவில் மக்தப் பற்றி விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது என்பதும் ஊர் முழுவதும் அனைத்து மக்தபுகளிலும் பயிலும் மாணவர் மாணவியரின் எண்ணிக்கை கடந்த 5 வருடங்களில்கிட்டத்தட்ட இரண்டு மடங்கு (100%) அதிகரித்துள்ளது என்பதும் மகிழ்ச்சிக்குரிய விடயம் . அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.



# ஈமான் விருதுகள்

கடந்த இரண்டு வருடங்களாக, ஒவ்வொரு வருடமும் ஈமானிய மொட்டுக்கள் நிகழ்ச்சியில், ஊருக்கும் சமூகத்துக்கும் சிறப்பாக சேவை செய்து வரும் பெருமக்களை தேர்ந்தெடுத்து அவர்களின் பணிகளைப் பாராட்டி நன்றி தெரிவிக்கும் வகையில் ''ஈமான் விருது'' வழங்கி கவுரவிக்கப் படுகிறார்கள். கடந்த 2017ம் வருடத்தில், இவ்விருது மறைந்த ஈமான் நிறுவனர்களில் ஒருவரான மர்ஹூம். ஜமால் முகைதீன் அவர்கள் நினைவாக ''ஜமால் சார் நினைவு விருது'' என வழங்கப்பட்டது.

## இதுவரை விருது பெற்றவர்கள் விபரம்:

### 2016ம் வருட ஈமான் விருதுகள்:

**ஜனாப். ஆஸாத்** அவர்கள்
முன்னாள் பேரூராட்சி மன்ற தலைவர்

**திரு. தங்கவேல்**
மூத்த ஆசிரியர் மற்றும் சாரணர் இயக்க வழிகாட்டி

**ஜனாப். முஹம்மது ஆதில்**
யர்பாத் ஆவணப்பட இயக்குனர்

### 2017ம் வருட ஈமான் ஜமால் சார் நினைவு விருதுகள்:

**அல்ஹாஜ். S. முஸ்தஃபா** அவர்கள்
சமூக ஆர்வலர், நிர்வாக இயக்குனர், சிட்டி கோல்டு நிறுவனங்கள் குழுமம்

**அல்ஹாஜ். முஸ்தஃபா கமால்** அவர்கள்
சமூக ஆர்வலர், நிர்வாக இயக்குனர், சிங்கார் நிறுவனங்கள் குழுமம்,
அல்ஹுதா அறக்கட்டளை

**Dr. ஜெயச்சந்திரபாண்டியன்** அவர்கள்
மெர்ஸி நர்ஸிங் ஹோம்


THE MATRIX
Group of Companies
MANAGEMENT CONSULTANCY
African Business starts and African Trade transit consultants
Market research and strategy management
New Business Registration / License
Concept and Design Consultancy
Logistics and Maritime Consultant
HR Management & Consultancy
Investment Consultants
IMPORT & EXPORT
Specialization in commodity transit
( VAT Flexution )
Apple , Dates , Saffron imports
Free zone based warehouses
Garments Exports
Head Office
Level 41,Emirates Tower
Sheikh Zayed Road
PO Box:31303,Dubai-UAE
+971 50 780 2724
+971 4 313 2796
+971 4 319 7474
jamal@thematrixuae.com

**Branch Office**

404,Building B AL Saaha Offices
Souk Al Bahar,Old Town Island
Burj Khalifa District
PO Box 487177,Dubai-UAE



## TRAVEL & TOURISM

Business Visas to Europe and CIS countries
Affordable Airfare / Orgin Ticketing
International Tour packages
Short term and long term visas
International hotels booking
Island resorts / worldwide
Medical Tourism



## EVENT MANAGEMENT

Corporate events and Private events
Theatrical Shows and promotion
Film Production , Location Supports
Confrence organizing
Events productions
Exepitions Organizing
Festival Organizing
Branding Management
Hospitality Management
Concert Organization
Events choreographys

# மீரான் டிம்பர் டிப்போ

2, தெற்கு மெயின் ரோடு, ஏர்வாடி - 627103.

போன்:04637 - 240252

MTD BRICKS

மரம், இரும்பு, பெயிண்ட், சிமெண்ட், செங்கல், ஆஸ்பெட்டாஸ், கூலிங் சீட்கள் மற்றும் கட்டிடத்திற்கு தேவையான அனைத்து பொருட்களும் ஒரே கூரையின் கீழ்

அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்.

FinOlex PIPES | asianpaints | RAMCO SUPER FAST | Dalmia Bharat Cement | TATA SHAKTEE | VISAKA

# ஈமானிய மொட்டுக்கள் - 2015

## "அல் குர்ஆனும் அறிவியலும்" சிறப்பு கண்காட்சி







இதனைப் பற்றிய மேலதிக தகவல்களுக்கு QR கோடை ஸ்கேன் செய்யவும்

# Raise and Reach – the Sky is the Limit

## *A Message to the Youngsters from NAF*

**- Mohamed Ibrahim**

With ever-growing technological advancements, we live in a digital era where digital disruption is affecting all walks of our life whether it is personal, professional, social, or spiritual. According to the famous quote by Benjamin Disraeli "The Youth of a Nation are the trustees of posterity", it is essential for every individual especially the youngsters to learn and understand the positive/negative and direct/indirect impacts of the emerging digital technologies in our lives and take it as their moral responsibility to ensure that the technology is being used for the good cause.

**Tips to become a Successful Youth**

**You are only young once, and if you work it right, once is enough** - Joe E. Lewis

- **Build your career in the domain of your interest**

  With the rapid growth in technologies such as Artificial Intelligence, Robotics, Analytics and Machine Learning and their application in every industry, it is essential to embrace these technologies irrespective of your domain of interest whether it is IT/Non-IT in order to survive and advance in your career path.

- **Set long-term goals**

  Set SMART (Specific, Measurable, Achievable, Relevant, and Time-bound) goals that give you long-term vision and short-term motivation to realize your vision.

- **Constantly update and upgrade your knowledge in order to adapt to changes**

  "It is not the strongest or the most intelligent who will survive but those who can best manage change." - Leon C. Megginson

- **Develop technical/non-technical skills**

  Better communication skills and soft skills lead to better personal and professional relationships. Verbal & non-verbal cues and listening skills play an important role in the

communication process. Attend special soft skills training programs that build confidence and the overall sense of professionalism. Confidence allows you to feel more connected to the audience, be more natural and present yourself well in all circumstances.

### Read Books

**Reading is to the mind what exercise is to the body** - Joseph Addison

An inspirational book can be incredibly powerful and can act as an executive coach to motivate you, teach you how to move forward, and help you get much closer to what you consider success. Ask you the question, what book did I read in the last one month that could help and guide me in achieving my career objectives?

### Be Creative

Everyone is born with a core of creativity. Activating your creativity helps you to tap into emotions, be sensitive to the world around you, to be innovative in the workplace and to contribute positively to the challenges around you by thinking out of the box. Three steps that could help you to be creative are increasing self-respect, recognizing the hidden talents through silence & self-critic and actively engaging in creative expressions, be it vocal or non-vocal.

### Inculcate Leadership Qualities

**"Be the change that you wish to see in the world."** - Mahatma Gandhi

WITHOUT POWER AND AUTHORITY, YOU MAY NOT BE ABLE TO IMPLEMENT ANY CHANGES ANYWHERE. SO ASPIRE TO BECOME A LEADER BY INCULCATING LEADERSHIP QUALITIES SUCH AS COURAGEOUSNESS, HONESTY, INTEGRITY, ACCOUNTABILITY, DECISION-MAKING CAPABILITY, POSITIVITY, ETC.

The meaning of success varies from person to person based on their perception towards life. The real success lies in achieving inner peace by contributing to ensuring peace in the entire world. Let's all work together with the motivation of ensuring peace for the whole of humanity and become successful in both the worlds.

## About the Author

Br. Mohamed Ibrahim B.E, CCIE, VCIX, NSE3 has over 20 years of experience in IT Industry, in areas such as Networking, Security, Data Centre, Virtualization and HCI. He has handled major ICT projects across the Middle East region, covering UAE, Saudi, Qatar, and Kuwait. He has trained hundreds of students from basic to expert level courses, across the globe. He is the Founder of **Net Achievers Forum (NAF),** a Non-Profitable IT Forum, based in the Middle-East that focuses on career guidance, training and employment assistance for youth. He also holds a bachelor degree in Islamic Studies (BAIS) from Islamic Online University and is one among the trainers in Understand Quran Academy.

## About Net Achievers Forum (NAF)

NAF is a non-profitable forum started with a vision of serving the fellow brothers and sisters in the field of Information Technology, with a focus on career guidance, training, certifications, personality development and employment assistance. Emphasizing the prophetic saying, "Whoever follows a path to seek knowledge, Allah will make easy for him the path to paradise", NAF encourages its members to seek knowledge that benefits the individual and the entire humanity.

Managed by a group of core members of multi-faceted personalities, NAF has already groomed over hundreds of members who are presently serving government organizations, MNCs, and leading amalgamations across the globe in various capacities. NAF members have spread across the Middle East, Singapore, Sri Lanka, Australia and India who are resourceful, well-positioned professionals who constantly contribute for strengthening "NAF". The spirit of NAF is reflected in all its activities which is the spirit to care and rise much higher than just academic and professional skills. NAF imbibes the spirit of caring: from caring for oneself to caring for families, caring for neighbors, caring for society, caring for the nation we all live in, caring for individuals around the globe and most importantly caring for the environment that we all live in.

2017 ஆம் ஆண்டு ஈமான் நடத்திய

# நம்பியாறு நினைவலைகள்

கவிதைப் போட்டியில் **மூன்றாம் பரிசு** பெற்ற கவிதை

**- ஹக்கீம் பாத்திமா பின்த் ச.சம்சுதீன், 4வது தெரு**

வெண்மை நிறைந்த பால்
பொங்கி வழிவதனைப் போன்று
மலையிலிருந்து துள்ளிக் குதித்து
முதலில் பிறந்தாய் அருவியாய்
உனக்காக, உந்தன் வரவுக்காக
கண்கள் இரண்டையும் சுழலவிட்டு
காத்திருக்கும் உனது சொந்தங்களாகிய
எங்களை மகிழ்விக்க வந்தாய் ஆறாய்
நீ செல்லும் வழிதோறும்
மரங்களையும் செடிக் கொடிகளையும்
செழிப்பாக வளரசெய்து
கற்றுத்தந்தாய் சேவை மனப்பான்மையை
உயிர்களுக்கு இடையே பாகுபாடு
எதுவும் கருதாமல் வறண்டு
தாகித்து போனவரின் தாகம் தீர்த்து
நிலைநாட்டினாய் சமத்துவத்தை
மஞ்சள் கதிரவனின் ஒளிக்கதிர்கள்
உன்னை தழுவும்போது உன்
கண்ணாடி மேனி காட்சியளித்தது
ஜொலிக்கும் பொன் மேனியாய்
பால்நிலவின் குளிர் ஒளி
உன்மேல் பரந்து
உன் அழகுக்கு அலங்காரமிட்டு
காட்டியது வெள்ளிக் கொடியாய்
உன்னைப் போல் தொடர்ச்சியாய்
ஓய்வின்றி சிறப்பு பணியாற்றும்
நன்மக்கள் எவரும் உளரோ?
அழகிய ஏர்வாடி நகரை
மேலும் அழகாக்கிய உந்தன்
பெருமையை உணராதவரும் உளரோ?
ஆப்பிரிக்காவின் நைல்நதியை மிஞ்சும் உமது
எண்ணத்திற்கு தடைக்கல் அமைத்தவர் யாரோ?
அள்ளி அள்ளி வழங்கும்
தயாள குணத்தைக் கொண்டவர்
உன்னைத் தவிர யாரோ?
செழிப்புமிகுந்த உன் வாழ்வு
சோதனைக் கூடமாய் மாற காரணம் யாரோ?
பௌர்ணமி நிலவு கருநிற
அமாவாசை ஆவதுபோல
உந்தன் மேனியும் கழிவு நீரால்
இருளத் தொடங்கியது
அந்தோ பரிதாபம்! அன்று
தேங்கும் கழிவுகளை நீக்க
பயன்பட்ட நீ, இன்று
கழிவுகள் தேங்கும் இடமாகிவிட்டாய் !
அன்று கொஞ்சும் மரங்களோடும்
மணம் வீசும் மலர்களோடும்
விளையாடிய நீ, இன்று
களைச் செடிகளுக்கு நடுவே தவிக்கிறாய்!
அன்று உன்னை இரசித்தவர்கள்
இன்று உன்னை பரிகசிக்கிறார்கள்!
அன்று உன்னைத் தழுவி
மகிழ விரும்பியவர்கள்
இன்று உன் அருகில்
வருவதைக் கூட வெறுக்கிறார்கள்
அமாவாசைக் கூட மீண்டும்
ஒருநாள் பௌர்ணமியாகும்!
கரு இருளும் கூட மீண்டும்
ஒருநாள் ஒளியாகும்!
எங்களை வாழவைத்த உன்னை
வாழவைக்க ஒன்று திரள்வோம்
வீடுதோறும் மரம் வளர்த்து உனது
நீரோட்டத்தை உயிரோட்டமாக்குவோம்
மரங்களின் மூலம் தூதனுப்பி
மழையால் உன்னை தூய்மையாக்குவோம்
தூர்வாரி உன் பாதைக்கு
மறு அலங்காரம் இடுவோம்
கரை ஓரம் பரந்திருக்கும்
உன் சொத்துக்களை (மணல்) பாதுகாப்போம்
இன்று உன்னை வெறுப்பவர்களை
நாளை உனக்கு
புகழாரம் சூட்டச் செய்வோம்!

# ஈமானிய கதம்பம்

ஏர்வாடி முஸ்லிம் சங்கம் (ஈமான்) அறக்கட்டளை
நடத்திய கட்டுரை போட்டிகளில்
பரிசு பெற்ற

## கட்டுரைகள்

# ஈமான் அறக்கட்டளை நடத்திய கட்டுரை, கதை, கவிதை போட்டிகளில் பரிசு பெற்றவர்கள்

2011 ம் ஆண்டு நடைபெற்ற **"மீண்டும் ஓர் மதீனா"**
கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்றவர்கள்

| | | |
|---|---|---|
| முதல் பரிசு | : | சகோதரி. அனிஸா அலி, 7வது தெரு |
| இரண்டாம் பரிசு | : | சகோதரி. அஹமது பாத்திமா பீர் முஹம்மது, 6வது தெரு |
| மூன்றாம் பரிசு | : | சகோதரர். ஃபரீத் அஹமது, 5வது தெரு |
| | | சகோதரர். ஜமால்தீன், 8வது தெரு |

2013 ம் ஆண்டு நடைபெற்ற **"உறவுகள் மேம்பட, சமுதாயம் சீரடைய"**
கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்றவர்கள்

| | | |
|---|---|---|
| முதல் பரிசு | : | சகோதரி. அனிஸா அலி, 7வது தெரு |
| இரண்டாம் பரிசு | : | சகோதரர். ஹஸன், 6வது தெரு |
| மூன்றாம் பரிசு | : | சகோதரி. இர்ஃபானா செய்யத், லெப்பை வளவு |
| | | சகோதரி. ஃபரீனா அல்தாஃப், 2வது தெரு |

2015 ம் ஆண்டு நடைபெற்ற சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்றவர்கள்

| | | | |
|---|---|---|---|
| முதல் பரிசு | : | சகோதரி. யாஸ்மின் சலாகுதீன், 4வது தெரு | - **"உதவி"** |
| இரண்டாம் பரிசு | : | சகோதரர். உதுமான் தவ்பீக், லெப்பை வளவு | - **"அய்..."** |
| மூன்றாம் பரிசு | : | சகோதரி. நஸீரா முகைதீன், 4வது தெரு | **"ஏடுகளை சுமக்கும் கழுதைகள்"** |

2016 ம் ஆண்டு நடைபெற்ற **"நீரின்றி அமையாது நிறைவான ஏர்வாடி"**
கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்றவர்கள்

| | | |
|---|---|---|
| முதல் பரிசு | : | சகோதரி . பரிதா ஷஜிஆ, 5வது தெரு |
| இரண்டாம் பரிசு | : | சகோதரி . அஹமது பாத்திமா பீர் முஹம்மது, 6வது தெரு |
| மூன்றாம் பரிசு | : | சகோதரி. மாளவிகா, புளியூர்குறிச்சி |
| | | சகோதரர். ஏஜாஸ்அகமது, லெப்பை வளவு |

2017ம் ஆண்டு நடைபெற்ற **"நம்பியாறு நினைவலைகள்"**
கவிதைப் போட்டியில் பரிசு பெற்றவர்கள்

| | | |
|---|---|---|
| முதல் பரிசு | : | சகோதரர். அப்துல் ரஸாக், 6வது தெரு |
| இரண்டாம் பரிசு | : | சகோதரர். பஷீர் (மின்பாஷி), முகைதீன்புரம் |
| மூன்றாம் பரிசு | : | சகோதரி. ஹக்கீம் பாத்திமா, 4வது தெரு |

ஈமான் தம்மாம் நடத்திய **"இளைஞர்களின் முன்னேற்றத்திற்கான திட்டங்கள்"**
கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்றவர்கள்

| | | |
|---|---|---|
| முதல் பரிசு | : | சகோதரர். முஹம்மத் உமர் பாரூக், புதுக்குடி |
| இரண்டாம் பரிசு | : | சகோதரி. ஹஸ்னா, லெப்பை வளவு |

# மீண்டும் ஓர் மதீனாவை நோக்கி...

திருமதி: அனிசா அலி, 7வது தெரு

2011 ஆம் ஆண்டு முதல் பரிசு பெற்ற கட்டுரை

## முன்னுரை:

நெற்பயிர் நாற்றங்கால்களில் விதைக்கப்பட்டு பின்பு அந்நாற்றுக்கள் பிடுங்கி வயல்களில் நடப்படுவது போல இஸ்லாம் மக்கா என்னும் தாய்நகரத்தில் விதைக்கப் பட்டு அங்கிருந்து மதீனாவிற்கு புலம்பெயர்ந்து விருட்சமாகி உலகமெல்லாம் நிழல் பரப்பிக் கொண்டிருக்கிறது. யத்ரிப் என்னும் அந்நகரம் மதீனத்துன்நபி எனும் நபியின் நகரமாகி உலக வரலாற்றில் நீங்காத இடம் பெற்றது. அத்தகைய பெரும் பேறை மதீனா அடைய என்ன காரணம் என்பதை ஆராய்வோம்.

## மதீனாவின் சிறப்பு:

சமீபத்தில் இறந்து விட்டதாக கருதப்படும் இமாம் அன்வர் அவ்லக்கி அவர்கள் தனது மறுமை நாள் என்னும் உரையில் கீழ்கண்டவாறு குறிப்பிடுகிறார். 1970 களில் அமெரிக்க அரசாங்கம் மதுவிலக்கு சட்டத்தை அமல் செய்தது. பெரும் பொருட்செலவில் ராணுவம் மற்றும் காவல் துறையின் உதவிகளோடு மது தயாரிப்பை தடை செய்தது. எனினும் மதுவை ஒழிக்க அவர்களால் முடியவில்லை. கள்ளச்சாராய தயாரிப்பு, அதனால் பலரின் உயிரிழப்பு காரணமாக அந்தச் சட்டத்தையே கைவிட வேண்டி வந்தது.

இதற்கு நேர் மாறாக நபி (ஸல்) அவர்கள் மதீனாவில் மது அருந்துவதை அல்லாஹ் தடை செய்து இருக்கிறான் என்று அறிவித்த போது, உடனடியாக மதுப்பானைகள் உடைக்கப்பட்டன. அன்று மதீனாவின் தெருக்களில் மது ஆறாக ஓடியது. மது அருந்திக் கொண்டிருந்த சிலர் வாயில் உள்ளதை உடனே துப்பினர். வேறு சிலர் வாந்தி எடுத்து வெளியேற்றினர். அந்த அளவுக்கு எந்த பொருட்செலவுமின்றி எந்த ராணுவத்தின் துணையுமின்றி மதுவிலக்கு உடனடியாக அமலுக்கு வந்தது.

இத்தகைய மகத்தான வித்தியாசத்துக்கு என்ன காரணம் ரஸூல் (ஸல்) அவர்கள் இஸ்லாத்தின் சட்ட திட்டங்களை அமல் படுத்தும் முன்பு மதீனா மக்களின் மனதில் மரணம், மண்ணறை வாழ்வு, சுவனம், நரகம், இறைவனின் தண்டனை ஆகியவை குறித்து ஆழப் பதியச் செய்திருந்தார்கள். இதன் காரணமாகவே அல்லாஹ்வின் கட்டளை இறங்கியபோது அதை உடனடியாக நிறைவேற்றுவதில் அம்மக்கள் அபார வெற்றி கண்டனர். மதீனா முனவ்வராவாக ஒளிர்ந்தது. அதன் பிரகாசம் உலகம் முழுமைக்கும் உதாரணமாக ஆனது. இன்றும் ஆகிறது.

## ஏர்வாடியின் நிலை:

நமதூர் மக்களை பொறுத்தமட்டில் மறுமை வாழ்வு என்பதை பற்றிய விழிப்புணர்வு மிகவும் குறைவு. வளைகுடா வாழ் சகோதரர்கள் மத்தியில் இதன் விழிப்புணர்வு காணப் பட்டாலும் ஊரைப் பொறுத்த வரையில் மிக மிகக் குறைவு. இறையுணர்வின்றி தொழுகை, நோன்பு பேணாதவர்கள் ஒருபுறம். அது மட்டுமன்றி நல்ல தொழுகையாளிகளாக இருப்பவர்கள் கூட தொழுகை, நோன்பு, ஹஜ்

போன்ற கடமைகள் மட்டும்தான் இஸ்லாம் என்ற எண்ணமே கொண்டுள்ளனர். கருணையாளனும், பெருங்கிருபையுடையவனாகிய அல்லாஹ் அவனுக்கு நன்றி செலுத்துவதற்காக நாம் செய்ய வேண்டிய பர்ளு கடமைகளில் ஏதேனும் குறைபாடுகள் இருந்தால் கூட நாம் தவ்பா செய்யும்போது கட்டாயம் மன்னிக்கிறான். ஆனால் பிற மனிதர்களிடம் பட்ட கடன், பிறரின் பொருட்களை மோசடி செய்வது, நமது சொல் , செயல்கள் மூலமாக பிறரை புண் படுத்துவது என்பது போன்ற அநீதங்களுக்கு அதனால் பாதிக்கப்பட்டவர் மன்னிக்கும் வரை அல்லாஹ் மன்னிப்பதில்லை. மேலும் கியாமத் நாளில் படைப்பினங்கள் யாவும் வல்ல ரஹ்மானின் முன்பு விசாரிக்கப்படும்போது அநீதம் இழைத்தவரிடமிருந்துநன்மைகள் பறிக்கப்பட்டுபாதிக்கப்பட்டவரின் கணக்கில் சேர்க்கப்படும். ஸுப்ஹானல்லாஹ். அல்லாஹ் நீதியாளன். இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த மறுமை வாழ்வு குறித்த விழிப்புணர்வு, ஈகை, இரக்கம், புறம் பேசாமை, வாய்மை, பெற்றோரிடம் அன்பு, மூத்தோரிடம் மதிப்பு, அண்டை அயலாரிடம் நட்புறவு, இரத்த சொந்தங்களை பேணுதல் போன்ற இஸ்லாமிய ஒழுக்க மாண்புகளின் முக்கியத்துவம் பற்றி நமதூர் மக்கள் மிகவும் அறியாமையில் இருக்கிறார்கள். அதனைப் பற்றிய விழிப்புணர்வை நமது ஏர்வாடி வாழ் சகோதர, சகோதரிகள் மத்தியில் ஏற்படுத்துவதே மீண்டும் மதீனாவை நோக்கிய நமது பயணத்தின் முதல் அடி என நான் கருதுகிறேன்.

**மாற்றத்துக்கான வழிகள் :**

நமது ஊர் மஸ்ஜிதுகளின் இமாம்கள் ஒவ்வொரு மாதத்திலும் உள்ள நான்கு ஜும்மாக்களில் குறைந்தது ஒரு ஜும்மாவிலாவது மரணம், மறுமை வாழ்வு குறித்து கடுமையான வார்த்தைகளில் எச்சரிக்க வேண்டும்..

ஜும்மா சொற்பொழிவின்போது ஊரில் நடக்கும் இணைவைப்பு, தவறான உறவுகள், வட்டி, ஹலால்- ஹராம் பேணாமை, ஊரின் ஒற்றுமையை குலைத்தல் போன்ற தவறுகளை யார் செய்திருந்தாலும் பாரபட்சமின்றி வன்மையாக கண்டிக்க வேண்டும்.

வாரம் ஒருமுறை மார்க்க அறிஞர்களின் சொற்பொழிவுகளை இணையத்திலிருந்து தரவிறக்கம் (download) செய்து, பொது ஒலி பெருக்கிகள் அமைத்து அந்தந்த முஹல்லாக்களில் பெரும்பாலானவர்களின் ஓய்வு நேரத்தை தேர்வு செய்து, அந்நேரத்தில் ஒலி பரப்ப வேண்டும்.

குறிப்பிட்ட நாள், குறிப்பிட்ட நேரத்தில் தடையின்றி ஒலி பரப்புவதன் மூலம் தவறாமல் வாரம் ஒரு முறையேனும் மார்க்க விசயங்களை அறிய வேண்டும் என்ற பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

அனைத்து முஹல்லாக்களும் சேர்ந்து மாதம் ஒரு முறை முப்திகளை அழைத்து மார்க்கம் சம்பந்தப்பட்ட நடைமுறை சந்தேகங்களுக்கு விடை பெற வேண்டும்.

இளம் வாலிபர்கள், யுவதிகளை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு மார்க்க விசயங்களை மற்றவர்களுக்கு எத்தி வைப்பதற்கான பயிற்சி அளிக்க வேண்டும்.

இஸ்லாமிய வாடகை நூலகம் ஒன்று நிறுவி ஒவ்வொரு முஹல்லாவுக்கும் வாரம் ஒரு முறை என வீடுகளுக்கு சைக்கிள் மூலம் புத்தகங்களை விநியோகித்து

போன்ற கடமைகள் மட்டும்தான் இஸ்லாம் என்ற எண்ணமே கொண்டுள்ளனர். கருணையாளனும், பெருங்கிருபையுடையவனாகிய அல்லாஹ் அவனுக்கு நன்றி செலுத்துவதற்காக நாம் செய்ய வேண்டிய பர்ளு கடமைகளில் ஏதேனும் குறைபாடுகள் இருந்தால் கூட நாம் தவ்பா செய்யும்போது கட்டாயம் மன்னிக்கிறான். ஆனால் பிற மனிதர்களிடம் பட்ட கடன், பிறரின் பொருட்களை மோசடி செய்வது, நமது சொல் , செயல்கள் மூலமாக பிறரை புண் படுத்துவது என்பது போன்ற அநீதங்களுக்கு அதனால் பாதிக்கப்பட்டவர் மன்னிக்கும் வரை அல்லாஹ் மன்னிப்பதில்லை. மேலும் கியாமத் நாளில் படைப்பினங்கள் யாவும் வல்ல ரஹ்மானின் முன்பு விசாரிக்கப்படும்போது அநீதம் இழைத்தவரிடமிருந்துநன்மைகள் பறிக்கப்பட்டுபாதிக்கப்பட்டவரின் கணக்கில் சேர்க்கப்படும். ஸுப்ஹானல்லாஹ். அல்லாஹ் நீதியாளன். இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த மறுமை வாழ்வு குறித்த விழிப்புணர்வு, ஈகை, இரக்கம், புறம் பேசாமை, வாய்மை, பெற்றோரிடம் அன்பு, மூத்தோரிடம் மதிப்பு, அண்டை அயலாரிடம் நட்புறவு, இரத்த சொந்தங்களை பேணுதல் போன்ற இஸ்லாமிய ஒழுக்க மாண்புகளின் முக்கியத்துவம் பற்றி நமதூர் மக்கள் மிகவும் அறியாமையில் இருக்கிறார்கள். அதனைப் பற்றிய விழிப்புணர்வை நமது ஏர்வாடி வாழ் சகோதர, சகோதரிகள் மத்தியில் ஏற்படுத்துவதே மீண்டும் மதீனாவை நோக்கிய நமது பயணத்தின் முதல் அடி என நான் கருதுகிறேன்.

**மாற்றத்துக்கான வழிகள் :**

நமது ஊர் மஸ்ஜிதுகளின் இமாம்கள் ஒவ்வொரு மாதத்திலும் உள்ள நான்கு ஜும்மாக்களில் குறைந்தது ஒரு ஜும்மாவிலாவது மரணம், மறுமை வாழ்வு குறித்து கடுமையான வார்த்தைகளில் எச்சரிக்க வேண்டும்..

ஜும்மா சொற்பொழிவின்போது ஊரில் நடக்கும் இணைவைப்பு, தவறான உறவுகள், வட்டி, ஹலால்- ஹராம் பேணாமை, ஊரின் ஒற்றுமையை குலைத்தல் போன்ற தவறுகளை யார் செய்திருந்தாலும் பாரபட்சமின்றி வன்மையாக கண்டிக்க வேண்டும்.

வாரம் ஒருமுறை மார்க்க அறிஞர்களின் சொற்பொழிவுகளை இணையத்திலிருந்து தரவிறக்கம் (download) செய்து, பொது ஒலி பெருக்கிகள் அமைத்து அந்தந்த முஹல்லாக்களில் பெரும்பாலானவர்களின் ஓய்வு நேரத்தை தேர்வு செய்து, அந்நேரத்தில் ஒலி பரப்ப வேண்டும்.

குறிப்பிட்ட நாள், குறிப்பிட்ட நேரத்தில் தடையின்றி ஒலி பரப்புவதன் மூலம் தவறாமல் வாரம் ஒரு முறையேனும் மார்க்க விசயங்களை அறிய வேண்டும் என்ற பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

அனைத்து முஹல்லாக்களும் சேர்ந்து மாதம் ஒரு முறை முப்திகளை அழைத்து மார்க்கம் சம்பந்தப்பட்ட நடைமுறை சந்தேகங்களுக்கு விடை பெற வேண்டும்.

இளம் வாலிபர்கள், யுவதிகளை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு மார்க்க விசயங்களை மற்றவர்களுக்கு எத்தி வைப்பதற்கான பயிற்சி அளிக்க வேண்டும்.

இஸ்லாமிய வாடகை நூலகம் ஒன்று நிறுவி ஒவ்வொரு முஹல்லாவுக்கும் வாரம் ஒரு முறை என வீடுகளுக்கு சைக்கிள் மூலம் புத்தகங்களை விநியோகித்து

திரும்ப பெறலாம். இதனால் நல்ல இஸ்லாமிய புத்தகங்களை வாசிக்கும் பழக்கத்தை மக்களிடையே ஏற்படுத்த முடியும்..

ஆண்டு தோறும் நூலக உறுப்பினர்களுக்கிடையே வினாடி வினா போட்டி, கட்டுரை போட்டி போன்றவை நடத்தி பரிசளிக்கலாம். அதிக புத்தகங்கள் வாசிப்பவர்களுக்கும் பரிசுகள் வழங்கலாம்.

### மதீனத்து பெண்களின் நிலை:

நபி (ஸல்) அவர்கள் காலத்தில் பெண்கள் கல்வியில் தேர்ச்சி பெற்றவர்களாக, தீனை மற்றவர்களுக்கு எடுத்துரைப்பவர்களாக, குர்ஆனை மனனம் செய்தவர்களாக, அதிகமான ஹதீஸ்களை அறிவிப்பவர்களாக திகழ்ந்தனர். உதாரணம் அன்னை ஆயிஷா (ரலி), அன்னை ஹப்ஸா (ரலி) . போர்க்களங்களுக்கு சென்று வாளேந்தி போரிட்டதோடு மட்டுமல்லாமல், காயம் பட்டவர்களுக்கு சிகிச்சை அளித்து, தாகத்துக்கு நீர் புகட்டி தாதிகளாகவும் பணியாற்றியுள்ளனர். உதாரணம் நுஸைபா (ரலி), உம்முசுலைம் (ரலி). இங்ஙனம் குடும்பத்துக்கும், சமூகத்துக்கும் அனைத்துக் காரியங்களிலும் கை கொடுத்து உதவும் உதாரண மங்கைகளாக திகழ்ந்தனர்.

### ஏர்வாடி பெண்களின் நிலை:

நமதூர் பெண்களில் பெரும்பாலானோர் தொழுகையில் பொடு போக்காக உள்ளனர். கல்வி அறிவு மிகவும் குறைவு. மறுமை பற்றிய அறிவு, ஃபர்தாவின் அவசியம், அன்னிய ஆண்கள் முன் பேண வேண்டிய ஒழுக்கங்கள், கணவனுக்கு அடி பணிவதின் அவசியம், மஹ்ரம் பற்றிய அறிவு ஆகியவை மிகக் குறைவு. படித்த இபாதத்தான பெண்களிடம் கூட இஸ்லாத்துக்கு ஏற்படும் இடையூறுகள், உலகம் மயமாக்கலின் (Globalization) தாக்கம், ஊடகங்கள் (MEDIA), ஃபேஸ் புக், ஆர்குட் போன்ற சமூக இணைய தளங்கள் மூலம் குழந்தைகளிடம் ஏற்படும் பாதிப்புகள், மதீனத்து பெண்களை போல் நமது பெண்களும் நம்மைச் சூழ்ந்துள்ள ஆபத்துகள் குறித்து விழிப்புணர்வு பெற வேண்டும். அதுவே எதிர்கால தலைமுறையை காக்கும் வழி.

### மாற்றத்துக்கான வழிகள்:

முஹல்லா தோறும் மகளிர் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். அவர்கள் வாரம் ஒரு முறை ஒருவரின் இல்லத்தில் கூடி மார்க்க சொற்பொழிவுகள் கேட்பது, தங்களுக்குத் தெரிந்த ஒரு நபி மொழியோ, படித்த ஒரு ஆக்கத்தையோ பகிர்ந்து கொள்ளவேண்டும். கற்பு நெறி பேணுதல், பர்தாவின் முக்கியத்துவம் குறித்து இவர்களுக்கு போதிக்கப்பட வேண்டும்.

எல்லா மகளிர் குழுக்களையும் மாதம் ஒரு முறை ஒன்றுகூட்டி ஏதாவது ஒரு துறை வல்லுனர்/ஒரு மார்க்க அறிஞரை வரவழைத்து அவர்களின் ஆலோசனை பெறலாம்.

தற்போது தமிழகத்தில் உள்ள பல சுயதொழில் மகளிர் குழுக்களுக்கு தனியார் நிறுவனங்கள் சலுகை விலையிலும், சில அரசு நிறுவனங்கள் இலவசமாகக் கூட வேலை வாய்ப்பு பயிற்சிகள் வழங்குகின்றன. அத்தகைய பயிற்சிகளுக்கு ஆர்வமுள்ளவர்களை தேர்ந்தெடுத்து அனுப்பலாம். அல்லது

அத்தகைய பயிற்சிகளை நமதூரில் நடத்த ஆவன செய்யலாம்.. உதாரணமாக கணினி பயிற்சி, தையல் பயிற்சி, எம்ப்ராய்டரி பயிற்சி, உணவுப் பொருட்கள் பதப்படுத்துதல்,

கைவினை பொருட்கள் தயாரிப்பு, ஊறுகாய், மசாலா பொருட்கள் தயாரிப்பு போன்றவை. இதன் மூலம் பெண்களிடையே தொலைக்காட்சியின் பாதிப்புகள் குறையும். குடும்ப வருமானமும் பெருகும்.

திருமணம் நிச்சயமான உடன் மணமகள்களுக்கு தகுதி பெற்ற முஸ்லிம் பெண் வல்லுநர் மூலம் உடல் ரீதியான, மனரீதியான, ஆன்ம ரீதியான கவுன்சலிங் (physical, psychological and spiritual) வழங்கப்பட வேண்டும். இதன் மூலம் திருமணத்தின் புனிதம், கணவனின் திருப்தியை அடைவது சுவனத்துக்கு செல்வதற்கான முக்கியமான அம்சம், குழந்தை வளர்ப்பு போன்ற விசயங்கள் போதிக்கப் பட வேண்டும். இதனால் விவாக ரத்துக்கள் குறையும் வாய்ப்புகள் உண்டு. இன்ஷா அல்லாஹ்

ஒவ்வொரு முஹல்லாவிலும் ஓய்வு பெற்று, பெரும்பாலான நேரங்களில் வீட்டில் இருக்கும் முதியவர்கள் ஆண்களை தெரிந்தெடுத்து, அந்த முஹல்லாக்களில் உள்ள வீடுகளில் பெண்கள் தனியே இருக்கும் போது அன்னிய ஆடவர்கள் வர நேரிட்டால் (மின் வாரிய ஊழியர், தொலைபேசி ஊழியர், தச்சர், கொத்தனார், போன்றவர்கள்) அவர்கள் பணி முடியும் வரை யாராவது ஒரு முதியவர் உடனிருக்கச் செய்ய வேண்டும்.

இந்த முதியவர்களின் அனுமதியின்றி எந்த அன்னிய ஆடவரும் முஹல்லா பெண்களிடம் பேசக் கூடாது என்பதை கணவர்களும் கண்டிப்பாக வலியுறுத்த வேண்டும். மீறி நடப்பவர்களுக்கு அபராதங்கள் விதிக்கப்பட வேண்டும்.

**மதீனாவில் கல்வியின் நிலை:**

நபி (ஸல்) அவர்களின் காலத்தில் மக்கா வெற்றிக்கு பின்பு பல்வேறு கோத்திரத்தவர்களும் குழுக்குழுவாக வந்து இஸ்லாத்தின் நெறிமுறைகளைகற்றறிந்தனர். அவர்கள் திரும்பிச் சென்று வரமுடியாதவர்களுக்கு கற்பித்தனர். மதீனா கல்வியின் தலைநகராக திகழ்ந்தது. வல்லவனே தனது தூதர் மூலம் உன்னத ஸஹாபாக்களை பயிற்றுவித்த பொற்காலமல்லவா அது.

**நமதூரில் கல்வியின் நிலை:**

முன்பு போல் இல்லாமல் கல்வியில் மக்களின் ஆர்வம் அதிகரித்து உள்ளது. அல்ஹம்துலில்லாஹ். எனினும் குழந்தைகளுக்கு முறையான வழிகாட்டல் இல்லை. பெரும்பாலானதகப்பனார்களும் வெளியூர் / வெளிநாடுகளில் இருப்பதால் கண்டிக்கவும் வழிகாட்டவும் வாய்ப்புகள் குறைவு.

**மாற்றத்துக்கான வழி:**

குழந்தைகளுக்கு ஞாயிறுதோறும் மதரஸா அல்லாத சிறப்பு தீனியாத் வகுப்புகள் நடத்தி இஸ்லாமிய வாழ்க்கை நெறியை பயிற்றுவிக்க வேண்டும்.

மே /டிசம்பர் மாதங்களில் சிறப்பு விடுமுறை முகாம்கள் நடத்தி வெளியூர் களிலிருந்து வரும் குழந்தைகளுக்கும் தீனியாத் வகுப்புகள் எடுக்க வேண்டும்.

இதற்கு அந்தந்த முஹல்லாக்களில் முன்பு கூறியபடி பயிற்சி அளிக்கப்பட்ட வாலிபர்கள் / யுவதிகளை பயன் படுத்திக் கொள்ளலாம். அவர்களுக்கு ஒரு சிறிய தொகை

கொடுத்தால் உழைப்பின் முக்கியத்துவமும், தீனின் மகத்துவமும் அறிந்து கொள்வதோடு அனைத்து தரப்பினரின் விடுமுறை தினங்களும் பயனுள்ளதாக கழியும்.

10 ஆம் வகுப்பு / +2 மாணவர்களுக்கு சிறப்பு கல்வி ஆலோசனைகள் வழங்கப்பட வேண்டும். இதனால் மேற்கொண்டு என்ன படிக்கலாம் எங்கு படிக்கலாம் என்ற வழிகாட்டல்கள் கிடைக்க ஏதுவாகும்.

ஓரளவு பாதுகாப்பான பள்ளிச்சூழல் மாறி பரந்த வெளி உலகத்தில் அடியெடுத்து வைக்கும் அவர்களுக்கு நண்பர்கள், இணையதளங்கள், பாசிச சக்திகள் போன்றவை மூலம் ஏற்படக்கூடிய ஆபத்துகளை குறித்தும் சிறப்பு ஆலோசனைகள் வழங்கப்பட வேண்டும்.

**இதற்கான நிதி பெறுவது எப்படி? :**

அல்ஹம்துலில்லாஹ் நமதூர் சகோதரர்கள் எல்லா துறைகளிலும் படித்து பட்டம் பெற்று வெளியூர் / வெளிநாடுகள் என பரவியுள்ளனர். இவர்களை ஒருங்கிணைத்து ஒரு பரந்த கூட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும்.

அதன் உறுப்பினர்கள் அவரவரால் எப்படி முடியுமோ பணம் / நேரம் / திறமை இவற்றின் மூலம் ஏர்வாடியை வளப்படுத்த முடியும்.

மேற்கண்ட கூட்டமைப்பின் உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழுவை நியமித்து அவர்களின் நிர்வாகத்தில் ஒரு பைத்துல்மால் அமைப்பை ஏற்படுத்த வேண்டும். இதன் மூலம் எல்லா நற்காரியங்களுக்கும் நிதி திரட்ட முடியும். இன்ஷா அல்லாஹ்

அந்த பைத்துல் மால் அமைப்பு ஆண்டு தோறும் independent ஆடிட்டர்களால் தணிக்கை செய்யப் பட்டு கணக்குகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இதனால் அந்த அமைப்பு அனைத்து சாராரின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்கும்.

இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்த கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்கான சிறப்பு மாநாடு ஒன்றை ஏர்வாடியில் நடத்த வேண்டும்.

இதனால் அனைவரிடத்தும் பரஸ்பர அன்பும் நட்பும் புரிந்துணர்வுகளும் ஏற்படும். ஊர் தொடர்புகள் விட்டுப் போகாது. மேலும் பல ஆக்கபூர்வமான பணிகளுக்கு இது தூண்டுகோலாக அமையும்.

**முடிவுரை:**

இங்கு எடுத்துரைக்கப்பட்ட கருத்துக்கள் மற்றும் இந்த கட்டுரை போட்டியில் பங்களிக்கும் ஒவ்வொருவரின் கருத்துக்களையும் பரிசீலனை செய்து அனைவருக்கும் ஏற்புடைய கருத்துக்களை ஒருங்கிணைத்து செயல் திட்டம் வகுத்து நாம் அனைவரும் முயற்சி செய்வோம். இன்ஷா அல்லாஹ் நம் தலைமுறையில் இல்லாவிட்டாலும், எதிர்கால சந்ததிகள் காலத்தில் நமது ஏர்வாடி மதீனாவாக மாறும். கருணையாளனாகிய அல்லாஹ் நம் அனைத்து நல்ல முயற்சிகளுக்கும் வெற்றி அளிப்பானாக. நம் அனைவருக்கும் மறுமையில் சுவன பாக்கியத்தையும், நம் பெருமானார் (ஸல்) அவர்களின் தோழமையையும் அளிப்பானாக. ஆமீன்.

# உறவுகள் மேம்பட , சமுதாயம் சீர்பட...

திருமதி அனிசா அலி, 7வது தெரு

2013 ஆம் ஆண்டு முதல் பரிசு பெற்ற கட்டுரை

## முன்னுரை

எவர்கள் அல்லாஹ்விடம் அளித்த வாக்குறுதியை உறுதிப்படுத்திய பின்னர் முறித்து விடுகிறார்களோ இன்னும், அல்லாஹ் சேர்த்து வைக்க வேண்டுமென (இரத்த பந்தத்தை) ஏவியதைப் பிரித்து விடுகிறார்களோ பூமியில் குழப்பம் செய்கிறார்களோ - அத்தகையோருக்குச் சாபந்தான். மேலும் அவர்களுக்கு மிகக் கெட்ட வீடும் இருக்கிறது. (சூரா அர் ரஅத் - வசனம் 25)

உறவுகளைப் பேணி வாழ்வதற்கு இஸ்லாம் அபரிதமான முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றது. குர்ஆனில் இரண்டு இடங்களில் அல்லாஹ் உறவுகளை முறித்துக் கொள்பவர்களை சபிக்கிறான். அல்லாஹ்வின் சாபம் என்பதை அவனது அளவிலாக் கருணையை விட்டும் தூரமாக்கி விடுவது என அறிஞர்கள் விளக்கம் தருகிறார்கள். அல்லாஹ் அந்நிலையை விட்டும் நம் அனைவரையும் பாதுகாப்பானாக. இதிலிருந்து உறவுகளை முறிப்பது என்பது இம்மையிலும், மறுமையிலும் தண்டனைக்குரிய செயல் என அறிய முடிகிறது. பல பெரும்பாவங்களுக்கு நிகரான தண்டனை என்று அல்லாஹ் ஏன் இதற்கு ஏற்படுத்தியிருக்கிறான்? திருமணம், குடும்பம், உறவுகள் இவற்றுக்கு இஸ்லாம் இத்தனை முக்கியத்துவம் கொடுக்க என்ன காரணம்? நாம் அனைவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டிய ஒரு விஷயம்இது.

## முக்கியத்துவம் ஏன்?

குடும்பம் என்பது ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் ஒரு இன்றியமையாத அம்சம். ஒரு மனிதனின் குணம், பழக்க வழக்கங்கள், செயல்பாடுகள், தன்னம்பிக்கை, வெற்றி தோல்விகள் இவை அனைத்தையும் செதுக்கி நிர்ணயப்படுத்துவதில் அவனது குடும்பமும், உறவுகளும் பெரும் பங்கு வகிக்கிறது என்று சொன்னால் அது மிகையல்ல.

ஒரு நல்ல குடும்பம் நல்ல மனிதனை சமுதாயத்திற்கு அளிக்கிறது. ஒவ்வொரு குடும்பமும் நல்ல மனிதர்களை உருவாக்கினால், அந்தச் சமுதாயமே உன்னதமான சமுதாயமாக விளங்கும் அல்லவா? அதனால்தான் நம் இறைவன் குடும்ப உறவுகளைப் பேணுவதை நம் மீது கட்டாயக் கடமையாக ஆக்கி வைத்திருக்கிறான். அதனால்தான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அறிவிக்கிறார்கள் -

''எவர் ஒருவர் அல்லாஹ்வையும், இறுதி நாளையும் நம்புகிறாரோ அவர் உறவுகளைப் பேணிக் கொள்ளட்டும்'' - புஹாரி

## உறவுகளைப் பேணுதல் என்றால் என்ன?

உறவுகளைப் பேணுதல் என்பது மூத்த உறவினர்களிடம் பணிவுடனும், இளையவர்களிடம் கனிவுடனும் நடந்துக் கொள்ளல், அனைவருக்கும் இன்முகத்துடன்எப்போதும் ஸலாம் சொல்லுதல், உறவினர்கள் தேவை உடையோராயின் உதவி செய்தல், நோயுற்று இருப்பின் நலம் விசாரித்தல், அனாதைகள் எனில் அவர்களை ஆதரித்தல், ஒருவருக்கொருவர் எந்த எதிர்பார்ப்புகளுமின்றி அன்பளிப்புகள் அளித்தல்,

அடிக்கடி அவர்களின் வீடுகளுக்குச் சென்று வருதல், அவர்களுக்காக துஆசெய்தல் என்று பலப்பல விஷயங்களை கூறிக் கொண்டே போகலாம்.

ஆனால் இஸ்லாம் இதை இத்துடன் நிறுத்தி விடவில்லை. உறவினர்களுடன் மேற்கொண்ட முறையில் கட்டாயம் நடந்தாக வேண்டும். அவர்கள் உங்களுடன்நல்ல உறவில் இருக்கும்போது மட்டுமல்ல. அவர்கள் உங்களுடன் கடுமையாக நடந்தாலும் அவமதித்தாலும் அவர்களை மன்னித்து, மறந்து உறவினைத் தொடரவேண்டும். ஆம் அதுதான் வல்ல ரஹ்மானின் கட்டளை.

அது மட்டுமல்ல, உறவுகள் என்றால் இரத்த சொந்தங்கள் மட்டுமல்ல, தூரத்து உறவுகள், முஸ்லிம் சகோதரத்துவம் அனைத்துமே அதில் உட்படும். இவ்வளவுஏன்? உங்கள் உறவினர் முஸ்லிம் அல்லாதவராக இருந்தாலும் கூட அவருடன் அழகிய முறையில் நடந்துக் கொள்ளும்படி நமக்கு மார்க்கம் கட்டளையிடுகின்றது. அண்டை அயல் வீட்டுக்காரர்களுக்கு நம் மீது அதிகமான உரிமைகள் இருக்கின்றது.

''இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண

நன்னயம் செய்து விடல்''

என்ற திருக்குறளை படித்திருக்கிறோம். நம் இஸ்லாமும் அதனைத்தான் சொல்கிறது. தமக்கு தீமை செய்தவருக்கும் நன்மையேசெய்தல், தன்னை வெறுத்து ஒதுக்கியவரையும் நேசித்தல், தன்னை அவமதித்தவரையும் கௌரவிப்பது இவை யாவுமே எம் பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முத்திரைக் குணங்களாக திகழ்ந்தது நாம் அனைவரும் அறிந்ததுதானே. குர்ஆனையே தனது வாழ்வாக வாழ்ந்துக் காட்டிய முஹம்மத் முஸ்தபா (ஸல்) அவர்கள் நமக்கு காட்டிய நடைமுறையை விட வேறு என்ன முன்மாதிரி வேண்டும்? அவர்கள் அகில உலகங்களுக்கும் அல்லாஹ் அனுப்பிய ''அழகியமுன்மாதிரி''அல்லவா?

## இன்றைய சூழலில் குடும்ப உறவுகளின் நிலை

இத்தகைய உயர்வான கோட்பாடுகளின் வழிவந்த முஸ்லிம்களின் நிலை இன்று மிகவும் வருந்தத்தக்க நிலையில் உள்ளது. குடும்பங்களுக்கிடையில், சகோதர, சகோதரி களுக்கிடையில், அண்டை வீட்டார்களுக்கிடையில், இயக்கங்களுக்கு இடையில் என எங்குப் பார்த்தாலும் குழப்பங்கள், சண்டை சச்சரவுகள். என்ன காரணம்?

***1. மக்களின் அறியாமை*** - இதன் முழு முதற்காரணம் அல்லாஹ்வும் அவனது தூதரும் உறவுகள் பேணுவதை இவ்வளவு தூரம் முக்கியம் என அறிவுறுத்தி இருக்கிறார்கள் என்ற செய்தியே நம்மில் பலருக்குத் தெரியாது. தொழுகைகளையும் மற்ற இபாதத்துகளையும் பற்றி ஜும்ஆக்களில் சொற்பொழிவாற்றும்இமாம்கள் கூட இபாதத்துகள் மட்டும் இஸ்லாம் அல்ல, உறவுகளைப் பேணுதல், நீதியுடன் நடத்தல், நமது கை, நாவு,உடல் மூலமாக எந்த உயிருக்கும் துன்பம்விளைவிக்காமல் வாழ்வதும் இஸ்லாத்தின் மிக முக்கியமான அம்சம் என்பதை வலியுறுத்துவதில்லை.

**2. உலகே பிரதானம்** - ஒரு முஸ்லிமின் வாழ்க்கையுடைய பிரதான நோக்கம் மறுமையில் சுவன வீட்டை அடைவதும் இறைவனின் திருப்தியைப் பெற்றுக்கொள்வதுமாகவே இருக்க வேண்டும். ஆனால் நம் மக்கள், இவ்வுலக

வாழ்வின் கவர்ச்சிக்கும் பணத்துக்கும் மயங்கி மறுமை வாழ்வு பற்றிய பயத்தை இழந்துவருகிறார்கள். இந்த நிலை உறவுகள் விஷயத்தில் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. ஏனெனில் உறவுகளைப் பேணுவது என்பது நேரம், பணம்,உழைப்பு எனஅனைத்தையும் செலவு செய்ய வேண்டிய செயல். நோக்கங்கள் பணம் மட்டுமே எனும்போது ஆதாயம் இல்லாமல் இழப்பை ஏற்படுத்தும் ஒரு காரியமாகவேமக்களுக்குத் தெரிகிறது.

***3. சுருங்கி வரும் உலகம்*** - அதிகரித்து வரும் தகவல் தொடர்புச்சாதனங்கள்காரணமாக உலகம் ஒரு global village எனும் வகையில் சுருங்கி உள்ளது. மேற்குலக நாடுகளின் சமூக, கலாச்சார பாரம்பரியங்களின் தாக்கங்கள் இஸ்லாமிய சமூகத்தினைக் கடுமையாக பாதித்துள்ளது. கவிஞர் அல்லாமா இக்பால் தனது கவிதையில் குறிப்பிடுவது போல்

''இயந்திரங்களின் ஆட்சியில் இதயங்கள் இறந்து விட்டன''

தொலைக்காட்சிப் பெட்டிகளும், இணையத்தளங்களும், செல்லுலர் தொலைபேசிகளும் ஒவ்வொரு மனிதனையும் ஒரு தனித்தீவு ஆக்கி விட்டன. ஒரே வீட்டில்எதிரெதிரே அமர்ந்திருக்கும் உறவினர்கள் தங்களுக்குள் பேசாமல் அவரவர் தொலைபேசியில் பேசுவது சர்வ சாதாரணமாக ஆகி விட்டது. தகவல் தொடர்புவசதிகள் அதிகரித்து விட்டாலும், உறவுகளுக்கு இடையே தொடர்புகள் குறைந்து விட்டது. குடும்ப உறவுகளில் சுமுகம் இல்லை. இந்நிலை தெருவைப் பாதித்து,ஊரைப் பாதித்து, நாட்டைப் பாதித்து, உலகையே பாதித்து விட்டது. எங்கு பார்த்தாலும் அமைதியின்மை. உறவுகள் தொடர்பு எல்லைக்கு வெளியே போய் விட்டன.

## இந்நிலைக்கான தீர்வு என்ன?

### நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம்

இறைவனுக்கு அஞ்சி நடக்கும் ஒரு நல்ல குடும்பம் ஆரோக்கியமான சமுதாயம் அமைவதற்கான முதல்படி எனலாம். இதற்கு அக்குடும்பத்தின் கணவன், மனைவி இருவரும் அவரவருக்கு அல்லாஹ் வழங்கிய உரிமைகள், கடமைகள் பற்றி முழுமையாக அறிந்து அதன்படி நடத்தல் அவசியம்.

ஆண்களை குடும்பத்தலைவனாக அல்லாஹ்வே நியமித்திருக்கிறான் என்பதைப் பெண்களும், தனது குழந்தைகளின் சுவனம் அவர்களின் தாயின் காலடியில் உள்ளது என்பதை ஆண்களும் உணர வேண்டும். ஒருவருக்கொருவர் அன்பும், மதிப்பும் கொடுத்து இருவரின் குடும்பத்தினரையும் அனுசரித்து நடப்பது அமைதியான குடும்ப வாழ்வுக்கு வழி வகுக்கும்.

அமைதியான அன்பான குடும்பங்களில் வளரும் குழந்தைகள்தான் அறிவோடும், ஆரோக்கியத்தோடும் வளர முடியும். நல்ல மூமின்களாக, முஹ்ஸின்களாக உருவாக முடியும்.

விவாகரத்து அல்லாஹ் அனுமதித்த ஒன்று என்ற போதிலும், அவன் விரும்பாத ஒன்று என்பதை தம்பதிகள் மனதில் கொள்ளல் வேண்டும். தற்போதைய சூழலில் சிறு வயதுக் குற்றவாளிகள் உருவாவதற்கு அடிப்படைக் காரணம் உடைந்துப் போன குடும்ப சூழ்நிலைகள் என்பதை நாம் மறுக்க இயலாது.

### பெற்றோரின் கடமைகள்

நம் குழந்தைகள் இறைவனால் நமக்கு அளிக்கப்பட்ட அமானிதங்கள். எதிர்கால சந்ததிகளை நல்ல முறையில் வளர்க்க வேண்டிய பாரியப் பொறுப்பு ஒவ்வொரு முஸ்லிம் தாய், தந்தைக்கும் உள்ளது. உணவு, உடை, கல்வி எல்லாம் எவ்வளவு முக்கியமோ, அதை விட முக்கியம் குழந்தையின் ஆன்மாவுக்கான கல்வி என்பதை மறக்கக் கூடாது. சத்தான உணவைப் பார்த்து, பார்த்துக் கொடுத்து வரும் தாய்மார்கள் நம் ஆன்மாவுக்கு உணவு குர்ஆன் என்பதை மறந்து விடலாகாது. உலகக் கல்விக்கு வழங்கும் அதே முக்கியத்துவத்தை மார்க்கக் கல்விக்கும் வழங்க வேண்டும். கல்வி, வேலை, திருமணம் போன்ற வாழ்க்கையின் முக்கிய முடிவுகளின் போது மறுமை வாழ்வுக்கு உவப்பான முடிவுகளை எடுப்பது பெற்றோர் கடமை ஆகும்.

ஒரு நாளின் ஒரு வேளை உணவையேனும் அனைவரும் சேர்ந்து சாப்பிடுதல், பெண் குழந்தைகள் தாயுடனும், ஆண் குழந்தைகள் தந்தையுடன் பள்ளியிலும் சேர்ந்து தொழுதல், ஸக்காத், ஸதக்காக்களை நமது குழந்தைகள் மூலம் கொடுக்கச் செய்தல், ஒருவர் ஓத மற்றவர்கள் செவி மடுத்தல் போன்ற செயல்கள் குழந்தைகளுக்கு நடைமுறை பயிற்சி அளிக்கும் நற்செயல்கள் ஆகும்.

தற்போதைய சூழலில் வளரும் குழந்தைகளுக்கு குடும்பம் என்றால் தனது உம்மா, வாப்பா, சகோதர சகோதரிகள் மட்டும் என்ற எண்ணம் இருக்கிறது. ஆனால் இஸ்லாம் கூறும் குடும்பம் இதுவல்ல. தாய், தந்தை இருவரின் குடும்பங்களிலும் உள்ள மூன்று தலைமுறைகள் நம் குடும்பம்தான் எனச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

உறவினர்களின் வீடுகளுக்கு குழந்தைகளுடன் போய் வருவது, உறவுமுறைகளை பற்றிச் சொல்லிக் கொடுப்பது, மேலும் முதியவர்களின் அனுபவங்களைப் பற்றி இளையவர்களிடம் பரிமாற்றம் செய்ய வேண்டும். மூத்தவர்களை நாம் மதிப்பதை பார்க்கும் குழந்தைகள் தாங்களும் அதைக் கற்றுக் கொள்ள ஏதுவாகும். மேலும் பெரியவர்களுடன் நெருக்கமாக இருக்கும் குழந்தைகள் தவறான பாதைகளுக்கு போகும் வாய்ப்புகள் குறைவு என்கிறது ஒரு சமூக ஆய்வு.

''வீட்டுக்கு வீடு வாசற்படி'' என்பதற்கேற்ப சிறு சிறு பிரச்னைகள் குடும்பங்களில் ஏற்படுவது இயற்கையே. ஆனால் பிடிவாதங்கள், எதிர்வாதங்களை ''அல்லாஹ்வுக்காக விட்டுக் கொடுக்கிறேன்'' என்ற நிய்யத்துடன் விட்டுக் கொடுத்து விட்டால் நம் வீடுகளில் ஆனந்தம் விளையாடும். என்ன பிரச்னைகள் வந்தாலும், குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் அமர்ந்து கலந்து ஆலோசித்து முடிவுகள் எடுக்க வேண்டும். இந்த மசூராக்களின் போது நமது குழந்தைகளையும் அதில் பங்கெடுக்கச் செய்ய வேண்டும். இது அவர்களின் எதிர்கால வாழ்வுக்குப் பயனளிக்கும் பயிற்சியாகும்.

குடும்ப உறுப்பினர்கள் அனைவருமே யார் தவறு செய்தாலும் உடனே ஒப்புக் கொண்டு மன்னிப்பு கேட்பது பல பிரச்னைகளை தவிர்க்கும். இந்த விஷயத்தில் மூத்தவர்கள் இளையவர்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும். இறைவன் நாடினால் இவ்வுலக வாழ்கை 60 அல்லது 70 வருடங்கள்தான். மறுமை வாழ்க்கையோ முடிவில்லாதது. எனவே மறுமையில் சுவனமே நம் அனைவரின் நோக்கமாக இருக்க வேண்டும்.

**சமுதாயம் மேம்பட...**

மேற்கண்டவாறு சமுதாயத்தின் சிறு வடிவமான குடும்பங்கள் சீர்படும்போது நம் சமுதாயம் நிச்சயமாக சீரடையும். எனவே சமூகம் சீரடைய இது பற்றி மக்களுக்கு எடுத்துரைத்து தெளிவு பெறச் செய்ய வேண்டும். மத துவேஷிகளின் சதி நம்மை பின்னி பிணைந்து வருகிறது. இனி அவர்கள் ஆட்சிக் கட்டிலிலும் ஏறி விட்டால் நம் சமூகம் என்னென்ன விளைவுகளைச் சந்திக்குமோ தெரியவில்லை. ஆனால் நம் மக்களுக்கு குறிப்பாக பெண்களுக்கு இது பற்றிய எந்த விழிப்புணர்வும் இல்லை. ''இனி ஒன்றுபட்டால் மட்டுமே நமக்கு வாழ்வு, நம்மில் ஒற்றுமை நீங்கினால் அனைவருக்கும் தாழ்வு'' என்ற எச்சரிக்கை உணர்வை நம் சமுதாய மக்களுக்கு ஊட்ட வேண்டும்.

''ஒற்றுமை'' அது இன்றைய சூழலில் எட்டாக் கனியாகவே உள்ளது. ஒவ்வொருவருக்கும் மற்றவரைச் சுட்டிக் காட்டுவதை விட, குறை கூற நீட்டும் கரங்களை ஒன்று சேர்த்து செயலில் இறங்குவதுதானே புத்திசாலித்தனம். ஊர் கூடித்தான் தேர் இழுப்போம். நான் மட்டும்தான் இழுப்பேன் என்றால் நகராது. ஒரு தெருவில், ஒரு ஊரில், ஒரு மாவட்டத்தில் ( இணையத் தளங்களின் துணைக் கொண்டு தூர இடங்களில் உள்ளவர்கள் கூட) ஒத்தக் கருத்துடையவர்கள் ஒன்றுக் கூடி சமுதாய நிலையை மாற்றுவதற்கான ஆக்கப் பூர்வ நடவடிக்கைகளில் இறங்கலாம்.

எனது கணவர் இன்றைய technology பற்றி குறை கூறுவதை விட அதை நமக்கு சாதகமாக பயன்படுத்துவது பற்றி சில யோசனைகள் கூறினார்கள். அதனையும் இங்கு சமர்ப்பிக்க விரும்புகிறேன். இவை சில உதாரணங்கள் மட்டுமே. திறமையும், ஆர்வமும் இருந்தால் இதனை விட நல்ல திட்டங்களை நம்மால் செய்ய முடியும்.

1. நமது ஊரில் ஸக்காத் வழங்கும் மக்களுக்கும், ஸக்காத் வாங்கும் மக்களுக்கும் இடையில் ஒரு பெரிய இடைவெளி உள்ளது. இதனால் தேவையற்றவர்கள் கையில் அதிகப் பணம் செல்வதையும், உண்மையில் தேவை உடையவர்கள் கேட்க அஞ்சி வறுமையில் வாடுவதையும் காண்கிறோம். பைத்துல்மால்கள் இருந்தாலும் ஒரு இயக்கம் ஆரம்பிக்கும் பைத்துல் மாலில் மற்றவர்களுக்கு நம்பிக்கை இல்லாததால் அதிலும் பயன் இருப்பதாக தெரியவில்லை.

இதனால் ஒத்தக் கருத்தும், கம்ப்யூட்டர் அறிவும் கொண்ட இளைஞர்கள் ஒன்று சேர்ந்து ஒரு இணையத்தளம் தொடங்கினால் உதவி தேவைப்படுபவர்களின் உண்மை நிலையை ஆராய்ந்து அதில் வெளியிடலாம். உதவி அனுப்புபவர்கள், யார் யார் எவ்வளவு அனுப்பினார்கள் என்ற விபரமும் இமெயில் செய்தால், குறிப்பிட்ட நபருக்கு தேவையான பணம் சேர்ந்தவுடன் நிறுத்தி விட்டு, தேவையுள்ள அடுத்தவர்களுக்கு உதவிகள் கிடைக்கச் செய்யலாம். இவ்வாறு பணத்தைக் கையாளாமலேயே உதவிகளை ஒருங்கிணைத்து ஒரே நபர் பலரிடமும் பணம் வாங்காமல் நியாயமான தேவை உடைய நபர்களுக்கு ஜகாத் போய் சேர உதவி செய்யலாம்.

2. இன்றைய சூழலில் படிப்பறிவு இல்லாத குடும்பங்களில் உள்ள இளைஞர்கள் பலருக்கு கல்வி, வேலை வாய்ப்புகள் குறித்த தகவல்கள் தெரிவதில்லை. அவர்களை

வழிநடத்த சரியான ஆட்கள் இல்லை. சமுதாயத்தில் நன்கு படித்து நல்ல நிலையில் உள்ள இளைஞர்கள் தங்கள் துறை சார்ந்த படிப்பினைப் படிக்க விரும்பும் பிள்ளைகளுடன் இணையம் மூலம் தொடர்புக் கொண்டு அவர்களை வழி நடத்தலாம். மேலை நாட்டு பல்கலைக்கழகங்களில், இதற்காக Mentor System என்றே ஒரு முறை உண்டு. அதை முன்மாதிரியாகக் கொண்டு இணையத்தின் மூலம் பல்வேறு துறைகளில் உள்ள நம்மவர்களை மேற்கண்ட இளைஞர்களுடன் ஒன்றிணைப்பது இரு தரப்பினருக்கும் சமுதாயத்திற்கும் பெரும் பயனுடையதாக இருக்கும்.

சிறு குழுவினராக இருந்தாலும் ஒருமித்தக் கருத்துக்கள் உடையவர்கள் ஒன்று கூடி முயற்சித்தால் சிறிதளவேனும் மாற்றங்கள் ஏற்படலாம். எத்தனை சிறு விஷயமாக இருந்தாலும் நமது நிய்யத் ''அல்லாஹ்வின் திருப்தியை நாடி'' என்பதாக இருந்தால், அதன் மூலம் அல்லாஹ் பெரிய பரக்கத்துகளை அருளுவான் இன்ஷா அல்லாஹ்.

நண்பர்கள் ஒன்று கூடிய ஒரு மஜ்லிஸின் போது ஸஹீஹ் ஹதீஸ்கள் மட்டும் ஒன்றாகத் தொகுத்து ஒரே புத்தகமாக இருந்தால் சமுதாயத்துக்கு அதிக பயன் தருவதாக இருக்குமே என்று அனைவரும் கருத்துத் தெரிவித்தார்கள். ஏன் யாரோ செய்வார்கள் என்று காத்திருக்க வேண்டும், நாமே செய்யலாம் என்று எடுத்த இமாம் புஹாரி (ரஹ்) அவர்கள் தொகுத்த நூல்தான் இன்று நம் அனைவரின் கைகளிலும் தவழும் ஸஹீஹ் புஹாரி. அதை அவர்கள் எழுதும் போதும், அதன் பின்னரும் அவர்களை எள்ளி நகையாடியவர்கள் பலர்.

ஆனால் இன்றும் காலங்களைக் கடந்து அவர்களின் உழைப்பு சமுதாயத்திற்கு பயன் அளிக்கிறது. இதுபோல் எத்தனையோ உதாரணங்களை இஸ்லாமிய வரலாற்றில் காணலாம். எனவே முயற்சி சிறிதாக இருந்தாலும் நமது நோக்கம் தூய்மையானதாக இருந்தால் சிறிய விதையில் இருந்து பெரிய விருட்சத்தை ஏற்படுத்தி விடுவான் நமது ரப்புல் ஆலமீன் இன்ஷா அல்லாஹ்.

### முடிவுரை

இரண்டாம் உலகப் போரில் மிகப்பெரும் அழிவுகளை சந்தித்த ஜப்பானியர்களும், யூதர்களும் தங்கள் கல்வி, கடின உழைப்பின் காரணமாக உலகில் உன்னத நிலையை அடையவில்லையா? இறை மறுப்பாளர்களான அவர்களாலேயே அது முடிந்தது எனில் இறைவன் நம் பக்கம் இருக்க நாம் ஏன் கலங்க வேண்டும்? எனவே ஒத்தக் கருத்துள்ளவர்கள் சிறு குழுவினராக இருந்தாலும் நாம் செல்லும் பாதைகளையும் அடையும் இலக்கையும் நிர்ணயித்து செயல்படுவோம். குறை கூறுபவர்கள் பின்னால் வந்துச் சேர்ந்து கொள்வார்கள். இல்லை என்றால் பின்வரும் தலைமுறை நம்முடன் வந்துச் சேர்ந்து கொள்ளும்.

இறைமறையையும், நபிவழியையும் நம் வழிகாட்டிகளாகக் கொண்டு தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளை ஒதுக்கி ஒற்றுமை நோக்கி நம் பயணத்தினைத் தொடங்குவோம். நமது சிறுசிறு முயற்சிகள் யாவற்றையும் கோர்த்து நம் சமுதாயத்தை ஒன்றுபடுத்தும் மாபெரும் சக்தியாக வல்ல நாயன் ஆக்கி வைப்பானாக.ஆமீன்.

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்

2016 ஆம் ஆண்டு முதல் பரிசு பெற்ற கட்டுரை

# நீரின்றி அமையாது நிறைவான ஏர்வாடி

- பரிதா ஷஜிஆ, 5வது தெரு

**முகவுரை:**

ஏர்வாடி வாழ் மக்களே, ஒரு நிமிடம் நமது ஊரின் முன்னால் இயற்கை வளத்தை நினைத்துப் பாருங்கள். நம்பியாற்றிலே நலமான தண்ணீர் ஓடியது, உப்பு ஓடையில் ஓரளவு தண்ணீர் ஓடியது, கால்வாய்களிலும் கலங்கமில்லாமல் தண்ணீர் ஓடியது, மேலும் குளங்களிலும், கிணறுகளிலும் மனம் போல் தண்ணீர் காணப்பட்டது. மேற்சொன்ன அனைத்தும் 25 ஆண்டுகளுக்கு முன்பு உள்ள காலம்.

ஆனால்,இன்று ஏர்வாடி அவ்வாறு இல்லையே என்ன காரணம்? பராமரிக்க மறந்தார்கள் மற்றும் மறக்கடிக்கப்பட்டார்கள். பணம் பேசியது ''விளை'' நிலம் ''விலை''யானது, இதனால் ஏர்வாடியின் நீர் வளம் கேள்விக் குறியானது.

**பொதுவுரை:**

''நீர் இன்றி அமையாது உலகு எனின் யார் யார்க்கும்
வான் இன்று அமையாது ஒழுக்கு''

எத்தகைய மேம்பட்டவருக்கும் நீர் இல்லாமல் இவ்வுலகில் வாழ முடியாது. அதுபோல மழை இல்லையென்றால் இல்லையாகும் தண்ணீர் நீரின் முக்கியத்துவத்தை உணர்த்தும் திருக்குறள் இது. மேலும் தண்ணீரை ''திரவத் தங்கம்'' என்றும் அழைக்கிறது. நீர் இல்லாமல் நம் வாழ்க்கையை தொடர முடியாது. உலகில் உள்ள நீரில் 3 சதவிகிதம் மட்டுமே நல்ல தண்ணீர், அதில் 2சதவிகிதம் தண்ணீர் பனிக்கட்டியாக உள்ளது. வெறும் 1 சதவிகிதம் தண்ணீர் மட்டுமே பூமி முழுவதும் நாம் வாழும் பகுதியில் கிடைக்கிறது.

**நமது ஊர் ஏர்வாடி:**

திருநெல்வேலி மாவட்டத்தில் இந்த அழகிய கிராமம் அமைந்துள்ளது. இந்த கிராமம் 800 ஆண்டுகளுக்கு முன்னால் உருவானதாக வரலாறு கூறுகிறது. இந்த கிராமத்தில் வயலும் வயல் சார்ந்த தொழில்களும் இருந்தன. மேலும் ஆரம்ப நிலையில் இந்த கிராமத்தை ''குறுங்கைக்கு ஏறும்படி'' என்றும் ''ஏற்றம் பாடும்படி'' என்றும் அழைத்தார்கள். நாளடைவில் அது மருவி ''ஏர்பாடி'' என்றும் பின்பு அதும் நாளடைவில் மருவி இந்த கிராமம் ''ஏர்வாடி'' என்று அழைக்கப்படுகிறது. ''ஏர்வை'' என்றும் அழைக்கப்படுகிறது

## நீர் வளத்தில் அன்றைய ஏர்வாடி (1990ஆம் ஆண்டு வரை)

இந்த அழகிய கிராமத்தின் நடுவே நம்பி ஆறு, வலது ஓரம் இரட்டை கால்வாய், இடது ஓரம் உப்பு ஓடை இவை அனைத்தும் நல்ல தண்ணீரோடு ஓடிக்கொண்டிருந்தன. இந்த கிராமத்தை சுற்றி பல குளங்களும், கிணறுகளும், குட்டைகளும் நிறைவான தண்ணீரோடு காணப்பட்டன. நமது ஊரின் பெரும்பாலான தெருக்களின் முடிவுகள் தண்ணீர் ஓடிக்கொண்டிருந்த நம்பியாற்றின் கரையோரம் முடிந்தன. இந்த இயற்கையான வளம் மூலம் நீரை தேக்கி வைத்து நிலத்தடி நீரை பாதுகாத்தார்கள். 20 அடியில் நிலத்தடி நீர் காணப்பட்டது அன்றைய ஏர்வாடியில்.

## நீர் வளத்தில் இன்றைய ஏர்வாடி (1991 - 2016ஆம் ஆண்டு வரை)

இன்றைய ஏர்வாடியில் நடுவே நம்பியாற்றில் தண்ணீர் ஓடியதாக ''நம்பி'' ஆக வேண்டியுள்ளது. ஏனென்றால் நம்பியாற்றின் படுகையில் பல லட்சம் டன் மணல்கள் அள்ளப்பட்டும், திருடப்பட்டும், கடும் அழுக்கோடும், உயிரின கழிவுகளோடும், கழிவுநீரோடு துர்நாற்றத்தோடு தண்ணீர் நகராமல் உறங்கிக்கொண்டு இருக்கின்றன இன்று, நம்பியாற்றின் தண்ணீரை பயன்படுத்தி சுத்தம் செய்து கொண்டோம் அன்று, அந்த தண்ணீரையே நாம் சுத்தம் செய்ய வேண்டிய துர்பாக்கிய நிலைக்கு ஆளாகிவிட்டோம் இன்று, நிலத்தடி நீரும் 70 அடிக்கு மேல் தான் காணப்படுகிறது இன்று.

மேலும் இரட்டை கால்வாயில் ''கால்வாய்'' மட்டுமே உள்ளது இன்று. உப்பு ஓடை ஒப்புக்கும் காணோம் இன்று. பல குளங்களும் மனித ''குலம்'' குடியிருக்க தூர்ந்துவிடப்பட்டன இன்று.

## நீர் வளத்தில் நாளைய ஏர்வாடி (2017ஆம் ஆண்டிற்கு பிறகு)

சனத்தொகை அதிகரித்து வரும் ஏர்வாடியில், இந்த கிராமத்து ஆறறிவு மனிதர்களாகிய நாம் அவதானமாக நடந்து கொள்ளாவிட்டால் நீர் வளத்திற்கு தீங்கிழைப்பதற்கு பங்குதாரர் ஆகி வருகிறோம். ஆம் 100 அடிக்கு மேலாவது ஏர்வாடி கிராமத்தில் நிலத்தடி நீர் காணப்படுமா? என்பது ஒரு (கனவு) கானல் நீர்.

## நீர் வறட்சிக்கான காரணம்:

ஏர்வாடி நகரில் நீர்வளம் குருகி வருகிறது. இன்று இயற்கையானது அழிவின் விழிம்புக்கு அழைத்து செல்லப்படுகிறது மனிதனால். காரணம் நீரோடைகள், குளங்கள், குட்டைகள் எல்லாம் பணவலிமை உள்ளவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு ''விலை நிலங்கள்'' ஆகிக்கொண்டு இருக்கின்றன. நீர் நிலைகளை அடைத்து அதனை சுற்றி கட்டிடங்கள் கட்டி ஆக்கிரமித்துக் கொள்வதும் அதிகரித்துவிட்டது. இதனால் மழை நீர் பூமியில் தேங்காமல் ஓடி கடலில் கலக்கின்றன. இதுவும் நீர் வறட்சி ஏற்பட காரணம்.

**ஏர்வாடி மக்களும், குடிநீர் தேவையும்:**

2011ஆம் ஆண்டு பேரூராட்சியின் மக்கள் தொகை கணக்குப்படி ஏர்வாடி நகரில் 18,000 பேர் வசிக்கிறார்கள். நீர்வள நிபுனர்கள், ஆய்வாளர்கள் கூற்றுப்படி மேற்சொன்ன நபர்களுக்கு ஒரு நாள் மட்டும் குடிநீருக்காக ஆகும் தண்ணீர் பயன்பாடு 90,000 லிட்டர். ஒரு மாதத்திற்கான குடிநீருக்காக ஆகும் தண்ணீர் பயன்பாடு 27,00,000 லிட்டர். ஒரு வருட குடிநீருக்காக ஆகும் தண்ணீர் பயன்பாடு 3,24,00,000 லிட்டர் ஆகும். இனிவரும் காலத்தின் குடிநீரின் தேவை இதைவிட அதிக மடங்கு தேவைப்படலாம். ஆனால் ஏர்வாடியின் நிலத்தடி நீர்வளம் ஒரு கேள்வி குறியாக உள்ளது.

இத்தகைய நீர்வள அவலங்களுக்கு தீர்வு தான் என்ன? இதற்கு அரசும் பேரூராட்சியும் பங்கு என்ன? ஏர்வாடி பொதுமக்களின் பங்களிப்பு என்ன? இந்நிலை தொடர்ந்தால் வருங்கால சந்ததியினர் வாழ்வின் நிலை எப்படி? என்பது போன்ற கேள்விகள் நம் முன் எழுகின்றன.

**நீரின் மகத்துவம் (முக்கியத்துவம்):**

பொதுவாக நீரின் முக்கியத்துவமானது இன்று, நேற்றல்ல, உலகம் படைக்கப்பட்ட காலம் முதல் உணரப்பட்டே வந்துள்ளது. உயிருள்ள அனைத்து ஜீவன்களின் இயக்கத்திற்கு ஆதாரம் நீர். உயிரற்ற ஜடங்களின் தூய்மை பேணவும் உத்வுவது நீர். நீரின்றி உலகமே இல்லை,எல்லா வளங்களுக்கும் மூலவளம் நீரே உணவு இல்லையென்றால் அதனை உற்பத்தி செய்யலாம், ஆனால் நீர் இல்லாது போய்விட்டால் அதனை எந்த ஒரு சக்தியாலும் (அல்லாஹ்வை தவிர) உற்பத்தி செய்ய முடியாது. மனித சமுதாயத்திற்கு நீர் பிறப்பிலும், இறப்பிலும் இன்றியமையாத சாதனமாக விளங்குகிறது தண்ணீர்.

தேவைக்கு மேல் எஞ்சியுள்ள தண்ணீரை பிறர் உபயோகிப்பதை தடுக்க கூடாது என நபி முஹம்மது (ஸல்) அவர்கள் கூறினார்கள், (1090 புகாரி)

**நீர் வளங்கள் பற்றிய விழிப்புணர்வு:**

ஏர்வாடி நகரில் மக்கள் தொகை அதிகரிப்பதின் காரணமாக நீரின் தேவையும் அதிகரிக்கிறது. நீரின் பற்றாக்குறையை நோக்கி நகர்ந்து கொண்டு இருக்கும் நாம், ''நீரின்றி அமையாது நிறைவான ஏர்வாடி'' என்ற மகத்தான கொள்கையை மக்கள் அனைவருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். குறுஞ் செய்தி, நாடகம், மேடை பேச்சு, பொம்மலாட்டம், விளக்க சுற்றறிக்கை, பட்டய பயிற்சி, கல்விக்கூடம், சேவை நிறுவனம், பேரூராட்சி, இறையான்மை பேணும் இடம் மூலமாக நீரை சிக்கனமாக பயன்படுத்தும் முறையையும் நீரின் மதிப்பையும் சொல்லி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

**வளமிக்க ஏர்வாடியாக மாற்றுவது:**

உலக இயக்கத்தின் ஜீவநாடி தண்ணீர் என்பதால், நீர் வளத்தை பாதுகாக்கும் வழிமுறைகளோடு, ஒரு நீர் வளமிக்க ஏர்வாடியாக மாற்ற வேண்டும் என்பது எனது ஆசை. எனக்கு தெரிந்த கருத்துகளை இங்கு பரிமாரிக்கொள்கிறேன்.

## நீர் வளத்தை வளமாக்க சில (நல்) வழிகள்:

### மழை நீரை சேமித்தல்:

ஏர்வாடி வாழ் ஒவ்வொரு குடியிருப்புகளிலும் ஏதோ ஒரு பகுதியில் மழை நீரை பூமியில் சேர்க்க, அடுப்புகரி, கூழாங்கல் அல்லது சிறுகற்கள், மணல் இவைகளை கொண்டு 1சதுர மீட்டர் அகலமும், 1 மீட்டர் ஆழமும் கொண்ட மழைநீர் சேகரிப்பு தொட்டி கட்டாயம் அமைத்தல் வேண்டும். இதன் பயன்கள் - மழைநீர் தொட்டி அமைப்பதின் மூலம் சராசரியாக பெய்யும் மழையில் 14% பூமியில் உறிஞ்சப்படுகிறது. இதனால் மண்ணின் ஈரப்பதத்திற்கும், நிலத்தடி நீர்மட்டம் உயரவும் உதவுகிறது. தண்ணீரின் உப்பு தன்மை ஏற்படுவதை தடுக்கிறது.

### மணல் பாதுகாப்பு:

நம்பியாற்றிலும், உப்பு ஓடையிலும், நீர்நிலைகளிலும் ஒப்புடன் மணல் அள்ளப்படுவதையும், திருடப்படுவதையும் முறையாக சட்டப்படி தடுக்கப்பட வேண்டும்.

மணல்கள் அள்ளுவதினால் நகரின் நீர்வளம் குறைந்து கொண்டே போகும். நல்ல நீர் உப்பாக மாறும். நீர்மட்டம் குறையும்போதும் கட்டிடங்களில் விரிசல் ஏற்பட வாய்ப்புள்ளது.

### காங்கிரீட் சாலை கூடாது:

ஏர்வாடி பேரூராட்சிக்கு உட்பட்ட எல்கையில் (மட்டுமல்ல எங்குமே) காங்கிரீட் சாலை அமைத்தல் கூடாது. மழை காலங்களில் மணல் வாசனை வீசிய ஏர்வாடி நகரத் தெருக்களில் இன்று மழைநீர் பூமியில் இறங்க முடியாமல் காங்கிரீட் சாலைகளால் மூச்ச டைத்து இருக்கிறது. காங்கிரீட் சாலை அமைப்பதினால் மழை நீரை 0% கூட பூமியால் உறிஞ்சப்பட முடியவில்லை. இதனால் பூமியின் ஈரப்பதத்திற்கும் நீர்வளம் உயரவும் தடையாக உள்ளது. மேலும் பூமி வெப்பமயம் ஆகும்.

### குளம் தூர்வாருதல் வேண்டும்:

ஏர்வாடி நகரை சுற்றியுள்ள மற்றும் அருகாமையில் உள்ள குளங்களை மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை முறையாக தூர்வார வேண்டும். இப்பணியை அரசோ, பேரூராட்சியோ, தொண்டு நிறுவனமோ, நீர்வள பாதுகாப்பு அமைப்போ முன்னின்று செய்ய வேண்டும்.

பயன்கள் - குளங்கள் முறையாக தூர்வாரப்பட்டால் மழைநீர் மூலம் அதிக தண்ணீரை சேமிக்க முடியும். இவ்வாறு சேமிக்கும் தண்ணீரில் 35% பூமியால் உறிஞ்சப்பட்டு நீர்மட்டம் உயருகிறது. மேலும் தண்ணீர் உப்பு தன்மையாக மாறுவதை தடுக்கிறது.

## குறுகிய நீர் தேக்கம் அமைத்தல்:

நீர் நிலைகளின் (நம்பியாற்றின்)இடை இடையே குறுகிய நீர் தேக்கம் (தடுப்பு அணை) அமைக்க வேண்டும். இந்த நீர் தேக்கம் ஒவ்வொரு 2 கி.மீ தூரத்திற்கு பிறகு ஒரு நீர் தேக்கம் அமைக்கலாம்.

பயன்கள் - குறுகிய நீர் தேக்கம் அமைத்தால் அதில் உள்ள தேக்கமான நீர் பூமியால் உறிஞ்சப்படுகிறது. மண்ணின் ஈரப்பதத்திற்கு உதவுவதாகவும் கணக்கிடப்படுகிறது. நிலத்தடி நீர்மட்டம் உயர வழிவகை செய்கிறது.

## மரம் நடுதல்:

ஏர்வாடியில் தெருக்களிலும், முக்கிய சாலை ஓரங்களிலும், கல்விக்கூடங்கள் அருகிலும், அரசு சம்பந்தப்பட்ட கட்டிடங்கள் அருகிலும், மற்றும் தேவையான இடங்களிலும் மரங்கள் கண்டிப்பாக நட வேண்டும். ஒவ்வொரு மரமும், ஒவ்வொரு 15 அடிக்கு ஒரு மரம் நட வேண்டும். மேலும் அதை முறையாக ஒரு குறிப்பிட்ட காலம்வரை பராமரிக்க வேண்டும்.

பயன்கள் - மரம் நடுவதின் மூலம் மழைநீர் பெற முடியும். மழைநீர் பெறுவதின் மூலம் நீர்வளம் பெற முடியும். மரம் நடுவதால் பூமி வெப்பமயமாகுதல் தடுக்கப்பட்டு நீர் ஆவியாவதை தடுக்கிறது. இதனால் நீர்வளம் பாதுகாக்கப்படுகிறது.

## கூடாத மரங்கள்:

பொதுவாக ஏர்வாடி நகரை சுற்றியுள்ள கருவேல (சீமை கருவை) மரங்களை முழுமையாக அழிக்க வேண்டும். இந்த மரம் ஒரு நச்சுத்தன்மை கொண்ட மரமாகும் என ஆராய்ச்சியாளர்கள் கூறிவருகின்றனர்.

தீமைகள் - கருவேல மரங்கள் பூமியில் உள்ள தண்ணீரை வேகமாக உறிஞ்சும் தன்மை கொண்டது. இதனால் நீர் நிலைகள் வறட்சி ஏற்பட காரணமாகிறது. மேலும் நீர் உப்பு தண்ணீராக மாற வாய்ப்புள்ளது.

## பிளாஸ்டிக் தடை வேண்டும்:

நமது கிராமத்தில் (மட்டுமல்ல எங்கும்) குறைந்த மைக்ரான் பிளாஸ்டிக் உபகரணங்கள் முழுமையாக தடைசெய்ய வேண்டும்.

தீமைகள் - குறைந்த மைக்ரான் பிளாஸ்டிக் பூமிக்கடியில் சென்றால் பல ஆண்டுகள் ஆனாலும் அழியாமல் மழைநீர் பூமிக்கடியில் செல்வதை தடுக்கிறது. இதனால் நீர்வளம் குறைய வாய்ப்புள்ளது.

**தரிசு நிலங்கள்:**

நமது பேரூராட்சிக்கு உட்பட்ட தரிசு நிலங்களில் தேவைக்கேற்ப குறு, சிறு, பெரும் குட்டைகளை அமைக்க வேண்டும்.

பயன்கள் - குறு, சிறு, பெரும் குட்டைகளை அமைத்து அதில் மழைநீர் சேமிக்க வேண்டும். இதனால் நிலத்தடி நீர்வளம் 14% பெருக வாய்ப்புள்ளது.

**''விளை'' நிலம் ''விலை'' நிலம்:**

ஏர்வாடி நகரில் தற்போது அன்றைய ''விளை'' நிலம் இன்று ''விலை'' நிலம் ஆவதை முறைப்படி தடுக்க வேண்டும்.

விளக்கம் - ஏர்வாடி நகரில் தற்போது நீர்வளம் உள்ள ''விளை'' நிலங்கள் எல்லாம் பண ஆதிக்கர்களால் ''விலை'' நிலம் ஆகிக்கொண்டிருக்கிறது. இதனால் நீர்வளம் உள்ள அந்த இடம் தகர்ந்துபோய் வறட்சிக்கு வழிவகை செய்கிறது. இவ்வாறு தொடர்ந்தால் நாம் குடிநீருக்காக பல மைல்கள் நடக்கும் காலம் வந்துவிடும்.

**நீர் வளம் மேம்படுத்தும் அமைப்பு:**

இந்தியாவிலேயே மழைநீர் சேகரிப்பை கட்டாயமாக்கிய முதல் மாநிலம் தமிழ்நாடு. இத்திட்டம் 2001-ம் ஆண்டு அன்றைய தமிழக முதல்வரால் கொண்டுவரப்பட்டது. இதுபோல நமது ஊர் பேரூராட்சியிலும் நீர்வளம் மேம்படுத்த நல்ல திட்டம் கொண்டுவர வேண்டும். ஏர்வாடியில் நீர்வளம் பாதுகாக்க ஓய்வு பெற்ற நீர்வள ஆராய்ச்சியாளர்கள், பொறியாளர்கள், ஆலோசனை குழு உறுப்பினர்கள், ஏர்வாடி வளர்ச்சி ஆர்வலர்கள் இவர்களை கொண்டு மக்கள் மனதில் விழிப்புணர்வு ஏற்படுத்தி மழைநீர் வீணாவதை கணக்கிட்டு வாய்ப்புள்ள இடங்களில் மழைநீரை சேமித்து ''மழைநீர் மண்ணிற்கே, கடலுக்கு அல்ல'' என்ற உணர்வோடு ஏர்வாடி மக்களை செயல்படுத்த வேண்டும்.

**முடிவுரை:**

மேற்சொன்ன கருத்துகளை வைத்து நீர் ஆதாரங்களை உரிய முறையில் பாதுகாத்து மேற்கொள்கின்ற ஒரு சமுதாயமாக நாம் மாற வேண்டும். அவ்வாறு நாம் மாற்றம் பெறுகின்ற போது இயற்கையின் (இறைவனின்) அருளாகப் படைக்கப்பட்ட தண்ணீரை பாதுகாப்பதற்கான முன்னோடிகளாக நம்மை மாற்றிக் கொள்ள முயற்சிப்பதின் மூலமாக ஏர்வாடி நகரின் நீர் வளத்தை பாதுகாக்கலாம்.

அருமையான நீர்வளத்தை ஏர்வாடி மக்கள் தற்போது எவ்வாறு பாவிக்கின்றார்கள் என்பதை பொருத்தே எதிர்கால ஏர்வாடி மக்களுக்கு நீர்வளம் அமையும்.

ஏர்வாடியில் வளமான நீர்வளம் அமைய வேண்டும் என நான் பிரார்த்தனை செய்தவனாக இந்த கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

# ஏர்வாடி இளைஞர்களின் முன்னேற்றத்திற்கான திட்டமும் வழிமுறையும்

ஈமான் தமாம் கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற கட்டுரை

**எழுதியவர்: முஹம்மத் உமர் பாரூக், புதுக்குடி**

*நாம் உமக்கு அவர்களுடைய வரலாற்றை உண்மையை கொண்டு அறிவிக்கின்றோம். நிச்சயமாக அவர்கள் இளைஞர்கள் தங்கள் இறைவனை நம்பிக்கை கொண்டார்கள். இன்னும் நாம் அவர்களை நேர்வழியில் அதிகப்படுத்தினோம் (அல்குர்ஆன் - 18:13)*

இளமை பருவம் என்பது குழந்தை பருவத்திற்கும் (CHILD HOOD) முழு வளர்ச்சி பருவத்திற்கும் (FULL MANHOOD) இடைப்பட்ட ஒரு பருவம் என்று அடையாள படுத்தப்படுகிறது. இது உடல் வலிமையையும் வீரியமும் கொண்ட பருவமாகும். ஓர் சமூகம் பெற்றுள்ள வளங்கள், செல்வங்கள், அனைத்தையும் காட்டிலும் அதன் மனித வளமே! அந்த சமூகத்தின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தின் அடிப்படையாகும். எல்லா வித பவுதீக வளங்களும் அழிக்கப்பட்டு, நிர்மூலமாக்கப்பட்ட நிலையிலும் கூட தனது மனித வளத்தை உரிய முறையில் பயன்படுத்தி அந்த இழப்புகளை ஈடு செய்து முன்னேற்ற பாதையில் செல்ல முடியும் என்பதற்கு ஜப்பான் ஒரு சிறந்த உதாரணமாகும். தனது வாலிபத்தை சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளாதவன் பின்னாட்களில் வளமான வாழ்வை கண்டு கொள்ள முடியாது. இதனாலேயே முதுமை வருமுன் இளமையை சரியாக பயன்படுத்துமாறு ஓர் ஆழமான பார்வையுடன் வலியுறுத்துகிறது இஸ்லாம்.

அல்குர்ஆன் பல சந்தர்ப்பங்களில் இளைஞர்களை பற்றியும் அவர்களது செயல்பாடுகள் பற்றியும் பேசுகிறது. பல நபிமார்களை இவ்வாறு வர்ணிக்கிறது. ''அவர் வாலிபத்தை அடைந்த போது அவருக்கு கல்வியையும், ஞானத்தையும் கொடுத்தோம், அறிவு ஞானத்தையும் யுத்த கல்வியையும் வழங்கினோம்'' என்று இப்ராஹிம் (அலை) அவர்களின் ஏகத்துவ எழுச்சியை சுட்டி காட்டி அவர் ஓர் இளைஞர் என்றும் குறிப்பிடுகிறது. இன்னும் இப்பேரண்டத்தின் அதிபதியான அல்லாஹ் சூரா கஃஹ்பின் 13 வது வசனத்தில் ''அவர்கள் சில இளைஞர்கள்'' என்று தனது அழகிய சொல்லினால் ஆழமாக கூறியுள்ளமை எம்மை ஆழ்ந்த சிந்தனைக்கு இட்டுச்செல்கிறது. எம் பெருமானாரின் 23 ஆண்டுகால பயணத்தின் ஆரம்பம் ஒரு சிறு ஊரிலிருந்துதான் துவக்கம் பெற்றது. இன்று பல இசங்கள், கொள்கைகள், கோட்பாடுகள் தனது முகவரிகளை தொலைத்து நிற்கிறது. ஆனால் நபிகளாரின் கூற்றுப்படி ''இரவும் பகலும் எங்கெல்லாம் செல்லுமோ அங்கெல்லாம் எனது மார்க்கம் போய் சேரும்'' என்று கூறியதும் அது இன்று நிஜமாகி இருப்பதும் அவர்களால் பயிற்றுவிக்கப்பட்ட சில இளைஞர்களின் ஆளுமைகளால் தான். அவர்களுக்கூடாகவே பல சமூக

மாற்ற நிகழ்வுகள் இந்த உலகில் நிலை நாட்டப்பட்டது.

முஸ்அப் (ரழி) அவர்களின் தனித்துவமிக்க கொள்கை அழைப்பும், உமர் (ரழி) அவர்களின் ஆட்சியும், மேற்குலகம் இன்றளவும் தங்கள் பாடபுத்தகங்களில் KHALID TACTICS IN WARFARE காலித் பின் வலீதின் போர்தந்திரம் என்று பேசும் அளவிற்கு வீரமும், போர்தந்திரமும், தனது செ ாத்தில் சரிபாதியை தனது சகோதரனுக்கு (கொள்கை தோழனுக்கு) எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி வழங்கிய மிகப்பெரிய மனிதநேய செயலும் என்று வரலாறு நீண்டு செல்கிறது

இந்த அல்குர்ஆனின் பின்னணியில் தான் எமது ஏர்வாடி இளைஞனின் அஸ்திவாரம் எழுப்பப்படவேண்டும். அல்குர்ஆனை சுமக்காத, அதன் கருத்துக்களை சுவாசிக்காத அதனோடு உறவாடாத எந்த ஒரு மனிதனாலும் எவற்றையும் சாதிக்க இயலாது. உண்மையில் நாம் ஒரு மிகப்பெரிய வரலாற்றுக்கு சொந்தக்காரர்கள் உலகத்தின் மூன்றில் இரண்டு பகுதியை ஆட்சி செய்த அழகிய நாகரிகத்தின் சிற்பிகள். நமக்கென்று ஒரு அறிவு பாரம்பரியமும் ஒரு பன்னாட்டு மரபுரிமையும் உள்ளது. கடந்த 1430 ஆண்டு கால வரலாற்றில் நாம் நிறையவே அறிவாளிகளையும், இஸ்லாமிய கதாநாயகர்களையும் கடந்து வந்திருக்கிறோம். அந்த வகையில் முன்னேற்றத்தின் முதல் எட்டாக இன்றைய சூழலில் எமதூர் இளைஞர்கள், யுவதிகள் முகம் கொடுக்கும் சில முக்கிய பிரச்சனைகளை அடுத்து காணுவோம்.

**முன்னேற்றத்தை சீர்குலைக்கும் பிரச்சனைகளும் காரணிகளும்:-**

ஓர் சமூகம் முன்னேற வேண்டுமானால், அதன் தடைக்கற்கள் எவை என்பதை நுணுக்கமாக கண்டறிதல் வேண்டும். அதனை சீர்படுத்தல் என்பதே முன்னேற்றத்திற்கான முதற்படி.

இன்றைய இளைஞர்கள் சமூக வலைத்தளங்கள், உரையாடல்கள் என பல்வேறு வழிகளில் தகவல்களையும், அறிவையும் திரட்டி வைத்திருக்கின்றனர். ஆனால் அவற்றை எவ்வாறு நடைமுறைப் படுத்துவது போன்றவற்றுக்கான விடை அவர்களிடத்தில் இல்லை. இதில் மிகப்பெரிய துரதிர்ஷ்டம் என்னவெனில் சிலர் விடைகாணும் நேரமும் வெளிநாட்டு வேலைக்கான விமான டிக்கெட்டும் சே ர்ந்தே வந்தடைகிறது. இதில் குடும்ப சூழ்நிலை மிகப்பெரிய காரணியாக உள்ளது. ஊரில் காணப்படும் (GROUPISM) பலவகை இளைஞர் கூட்டத்தின் மோசமான நடவடிக்கைகளின் பின்னணியில் முதலில் இருப்பது இவ்வாறான (BROKEN HOMES) குடும்பம் சார்ந்த பிரச்சனையே ஆகும். 70% - 80% ச தவீதமான பெண்களுக்கு ஏற்பட்டுள்ள மாதவிடாய் பிரச்சனைகள், மது, போதை, கூடாநட்பு இவையெல்லாம் கடந்து அலட்சிய போக்கு என்னும் மோசமான பிரச்னை போன்றவைகள் ஏற்பட காரணம் சமூகத்தில் ஏற்பட்டுள்ள சமசீரற்ற உணவுமுறை பாலிய பருவங்களில் ஏற்படும் உள, உடல், கலாச்சார ரீதியான ஒரு வகை போராட்டம். சினிமாக்கள் மூலம் ஏற்படும் மாதிரி செய்தல் (IMITATION) போன்ற குணமாற்றம் ஆகியவற்றின் விளைவு 2014 ம் ஆண்டின் ஆரம்பங்களில் ஏற்பட்ட சில அசம்பாவிதங்கள் (கொலை)

''கூடா நட்பும் காமமும் கொண்டு வருவது

கொலையும் வறுமையும்'' என்பது நிஜமாகிறது

இந்த இடத்தில் நாம் பல

விஷயங்களை கவனிக்க தவறுகிறோம். எத்தனையோ நல்லுரைகள், நிகழ்ச்சி களின் பின்னாலும் இவை போன்றவை நிகழ்கிறதே என்று முகம் சுழிக்கிறோம். அவ்வாறல்ல! சமூகத்தின் பிரச்சனைகள் சிக்கல்களின் தீர்வாக அவை மிகச்சரியாக முன்வைக்கப்பட்டதா? என்பதையும் எமது பிரச்சார முறையையும் மீள் பரிசீலனை செய்யவேண்டும் காரணம் வழிகாட்டுதல் என்பது ஒரே கோணத்தில் செல்வது அல்ல

சில மாதங்களுக்கு முன் மும்பையில் நடத்தப்பட்ட ஆய்வு, ஆய்வின் நோக்கம் இளைஞர்கள் எதை இலக்காக கொண்டு பயணிக்கிறார்கள் என்பதாகும் அதில் கிடைத்த தகவல்கள் இதோ:-

*200 பேரில் 100 இலக்கின்றி பயணிக்கின்றனர் 50 பேர் அதை அடைவோமா? என்ற நம்பிக்கை இல்லாமலும் 25 பேர்தான் இலக்கை தீர்மானிக்கின்றனர் ஆனால் பயணிப்பதில்லை என்றும், 25 பேர் மட்டுமே கொண்ட இலக்கில் சரியாக பயணிக்கின்றனர்* என்றும் கூறுகிறது. ஆக இஸ்லாமிய எதிரிகளின் திட்டம் கச்சிதமாக நிறைவேறி இருப்பதை காணமுடிகிறது. அதுதான் இளைஞர்களிடம் SERIOUSNESS என்பதை அறவே இல்லாமல் ஆக்குவதாகும்.

**தீர்விற்கான அடிப்படைகளும் சில திட்டங்களும்:-**

படைப்புகளையும் படைத்தவனையும் அறிந்திருப்பதே அடிப்படையான கல்வி. இன்றைக்கு எம்மீது திணிக்கப்பட்டுள்ள ஏட்டுக்கல்வி மற்றும் எமது நாட்டின் கல்வி கொள்கைகள் (EDUCATIONAL SYSTEM) பற்றி நன்கு அறிந்து அவற்றிற்கான மாற்றங்களை தயார் செய்தல் வேண்டும்

அதன் ஆரம்பமாக இயற்கையாக வானம் மழை பொழிகிறது என்ற எண்ணத்தை ஊட்டம்பெற்றுள்ள எமது குழந்தைகளிடம் அல்லாஹ்தான் மழையை பொழியச் செய்கிறான் என்ற ஆழ்ந்த இறை சிந்தனைகளை விதைக்க வேண்டும்.

குர்ஆனை வாசிப்பதற்காக அரபுமொழி கற்கும் நிலைமாறி, அதனை புரிந்து, சிந்தித்து, ஆய்வு செய்யும் நிலையில் குர்ஆன் கற்பிக்கப்பட வேண்டும். பெற்றோர்களுக்கு வகுப்புகள் நடத்தப்பட்டு குழந்தை வளர்ப்பு குடும்பம் பற்றிய தெளிவை வழங்கவேண்டும். இவ்வாறான அடிப்படையின் மீது எழுப்பப்படும் கல்வியினால் எமது பிள்ளைகளின் சிந்தனை நோய்வாய் படாது. பல நாடுகளுக்கு சென்று படித்தாலும் ஆய்வு செய்தாலும் சிந்தனைகள் மாற்றம் பெறாது. அதற்கு அல்லாமா இக்பாலின் வரிகள் நல்ல உதாரணம்:

''மேற்குலகின் நாகரிகம்

என் கண்களை மறைக்கவில்லை!

காரணம்

என் விழிகளுக்கு

நான் மதீனாவின் பார்வையை இட்டிருந்தேன்''....

வாசிப்பின் தேர்ச்சி பெற்ற சமூகமாக மாறவேண்டும். பல நூலகங்கள் ஆராய்ச்சி நிலையங்கள் என்று வாசிப்பிற்கான தளம் எமதூரில் அமைக்கப் பட வேண்டும்.

மருத்துவமனைகளில் தீவிரம் காட்டும் நாம் நல்ல மருத்துவர்களை உருவாக்க முனைய வேண்டும். மருத்துவம், சட்டம், பத்திரிக்கைத்துறை, ஊடகம் என்று காலத்தின் தேவையான

துறைகளில் எமது இளைஞர்களை ஆர்வமூட்ட வேண்டும்.

பெண்கள், யுவதிகளுக்கென்றே பிரத்தியேக வகுப்புகள் நடத்தப்பட்டு அதனூடாக மிகப்பெரிய கலந்துரையாடல்களுக்கு வழிவகுக்க வேண்டும். ''இளமையில் ஏற்படும் பிரச்சனைகள்'', ''சிறந்த துணை பெறுவது எப்படி?'' ''அந்நியர்கள் தொடர்பு'' என பல தலைப்புகளில் கருத்துக்களை ஆழமாக பதியப்படவேண்டும். அதற்காக எமதூரில் (RESEARCH AND GUIDANCE CENTER) ஆய்வு நிலையம் நிறுவப்பட்டு சிறந்த வழிகாட்டலையும் எதிர்காலத்திட்டங்களையும் வகுக்க வேண்டும் அவற்றில் (உணவு, குடும்பம், பாலியல், பொருளாதாரம், சுயதொழில், விளையாட்டு ஆராய்ச்சி) சர்வதேச தரத்தில் கற்றல் அமையப்படவேண்டும். ஏனெனில் எமதூரின் 60% - 70% பட்டதாரி பெண்களின் நிலை, திருமணத்திற்கு பின் எத்துறையிலும் பயன்படுத்த படுவதில்லை

மாத சம்பளம் என்ற சிந்தனை உடைக்கப்பட்டு உற்பத்திரீதியான தொழில்களை கண்டறிந்து எமது இளைஞர்களுக்கு அவற்றை பயிற்றுவிக்க வேண்டும். இதில் மற்றொரு பிரச்சனையான தாமதம் அறவே கூடாது.

ஏனெனில்.

இது கவலைப்படுகின்ற சில சமூக அக்கறையாளர்களையும் எதற்குமே கவலைப்படாத அரசியல்வாதிகளையும் வேடிக்கை பார்ப்பதை மட்டுமே முழுநேர வேலையாக வைத்திருக்கும் பொதுமக்களையும் கொண்ட தேசம் (ஊர்)

ERUVADI TODAY, ERUVADI TIMES என்று பத்திரிக்கை தயார் செய்யப்பட்டு ஊரின் பிரச்சனைகள் தேவைகள் துறைரீதியான விழிப்புணர்வு ஆகியவை ஏற்படுத்தப்பட வேண்டும் எழுத்தாற்றல் உள்ள இளைஞர்களை இவற்றில் ஈடுபடுத்த வேண்டும்.

அந்நியர்களுடன் பேசாதே! தொலைக்காட்சி பார்க்காதே! என்று முரட்டு குரலில் அதட்டலாய் பாடம் நடத்தாமல் மாற்றீடாக மகனையோ மகளையோ சிறு தூர பயணம் அழைத்து சென்று மனிதர்களையும் உலகையும் அடையாளம் காட்டவேண்டும்.

சமூக மாற்றத்தையும் முன்னேற்றத்தையும் சிந்திக்கக்கூடிய அனைவரும் இதில் ஒற்றுமையுடன் களமிறங்க வேண்டும்.

**எனது இளைஞனே!!!**

கைபேசியின் அழகை தாண்டி மிகப்பெரிய உலகம் உனக்காக காத்துக்கொண்டிருக்கிறது. அதில் மிக பெரிய சவால்களும் உயர்வு தாழ்வும் மேடுபள்ளமும் நிறையவே உள்ளது.

இறுதியாக நமக்கோர் அண்டைவீட்டானின் உதாரணம் ஓட்டுநராக ஆரம்பித்த அவரது பயணம் ஜெனிவாவில் நடந்த சர்வதேச மாநாட்டில் உரைநிகழ்த்தும் வரை பரிணமித்திருக்கின்றது. அவரும் எமதூர் இளைஞரன்றோ !

உறுதி கொள் உனது முன்னேற்றம் இன்று எமது ஊரில் ஆரம்பிக்கப்பட்டு அது எமது நாட்டில் பரவி சர்வதேசத்தில் உயர்ந்து நிற்கட்டும். ஹைர் உம்மத்தாக அனைத்து ஜாஹிலியத்தையும் உடைத்து அது ஸ்தாபிக்கட்டும்

புறப்படு! தூய தேசமும் மன்னிக்கும் இரட்சகனும் எமக்காக காத்து கொண்டிருக்கின்றனர்.

# ஏர்வாடி இளைய சமுதாயத்தின் மேம்பாட்டிற்கான திட்டங்களும் வழிமுறைகளும்

**- பஷீர் (மின் பாஷி, முகைதீன்புரம்)**

ஆக்க தலைப்பு: **காத்திருக்கும் கடிதம்...!**

*நன்மையை ஏவி, தீமையைத் தடுத்து நல்வழியை நோக்கி அழைக்கும் சமுதாயம் உங்களிடம் இருக்க வேண்டும். அவர்களே வெற்றி பெற்றோர். (அல்குர்ஆன்3:104)*

**பேராசிரியர். ஆயிஷா சித்திக்**
வானவியல் ஆராய்ச்சியாளர்
27-12-2009

அன்புள்ள இஸ்லாமிய சமூகத்திற்கு.....

ஏக இறைவனின் சாந்தியும் சமாதானமும் உலக மக்கள் அனைவருக்கும் நிலைத்திருக்கட்டுமாக (ஆமீன்)

சந்திரனின் ஒளிவீச்சையும் அதன் சுழற்சியையும்ஆராய்ந்து உலகிற்கு நான் சமர்ப்பித்த **''கமர் 10:5 கோட்பாட்டை''** அறிவியல் உலகம் அங்கீகரித்து இருப்பதை கேள்விப்பட்டு மனமகிழ்ச்சி அடைகிறேன். திருகுர்ஆனின் அத்தாட்சிகளை அறிவியல் ரீதியாக மெய்ப்பிக்கும் எனது இலட்சியத்தின் முதல் இலக்கை அடைந்துள்ளேன். அல்ஹம்துலில்லாஹ்!

இந்தியாவின் ஒரு மாநிலத்திற்குள் ஒளிந்து இருக்கும் சிறிய ஊரான ஏர்வாடியில் பிறந்த ஒரு பெண்ணால் எப்படி இத்தகைய சாதனையை செய்யமுடிந்தது? என்ற கேள்வி பலருக்கும் வரலாம். நான் மட்டுமல்ல, எனது ஊரில் என்னை போன்றே, பல ஆராய்ச்சியாளர்கள், அறிஞர்கள், மருத்துவதுறை நிபுணர்கள், அரசு பணியாளர்கள், விளையாட்டு வீரர்கள், சமூகசேவகர்கள் எனப்பரவலாக இருக்கிறார்கள்.

இதற்கு முக்கிய காரணம் ஊர் நலனில் அக்கறை கொண்ட தொலைநோக்கு சிந்தனையாளர்கள் ஒன்றிணைந்து எங்கள் ஊரின் இளைஞர்களின் மேம்பாட்டிற்காக சில திட்டங்களை வகுத்து செயல்படுத்திய விதமே!

பருவவயதில் கடமையாக்கப்பட்ட தொழுகையை ஏழு வயதிலிருந்தே பழக கற்றுத் தந்த மார்க்கத்தின் வழியில், ''சிறார்களுக்கான மக்தப் மதரஸாவை'' ஆரம்ப புள்ளியாய் கொண்டு ஆளுமை பொருந்திய இளைஞர்களை உருவாக்கும் திட்டத்தை வகுத்தார்கள். ஊரில் செயல்படும் அனைத்து மக்தப் மதரஸாவிலும் மாணவர்களின் திறமையைகண்டுகொள்ளும்சிந்தனையாளர்களை, பொறுப்புதாரிகளாகநியமித்தார்கள். பிரதி ஞாயிறு பகல்நேர வகுப்புகள், அரசு விடுமுறை நாட்கள் மற்றும் கோடைகால பயிற்சி வகுப்புகள் என களம் அமைத்தனர். அவை எங்கள் திறமையை எங்களுக்கு அறிமுகம் செய்த பயிற்சி களங்கள்.

## பத்து வயதுவரை மாணவர்களுக்கான பயிற்சி

மக்தப் மதரஸாவில் அரபியில் குர்ஆனை ஓதகற்றுக் கொடுத்ததோடு, நபிமார்கள் வரலாற்றையும், ஸஹாபாக்கள் வாழ்வியல் சம்பவங்களையும் சின்னஞ்சிறு கதைகளாய் சொல்லி மனதில் பதிய வைத்தார்கள். மேலும் தும்மலின் போது சொல்ல வேண்டிய அல்ஹம்துலில்லாஹ்வோடு அந்த தருணத்தில் மைக்ரோநொடி நேரம் இதயம்நின்று இயங்கும் தகவலையும், இதை போன்ற பல அறிவியல் உண்மைகளை ஆன்மிகத்தோடு கலந்து கற்று தந்தார்கள்.

பயிற்சி வகுப்புபொறுப்புதாரிகளின் அணுகுமுறையோ, வித்தியாசமானது! ஒருநாள் ''டோரால படம் வரைந்த என்னை ''அவனே இரவையும், பகலையும், சூரியனையும், சந்திரனையும் படைத்தான். ஒவ்வொன்றும் வான்வெளியில் நீந்துகின்றன'' என்ற குர்ஆனின் வசனத்தை வரைந்து தர சொன்னார். தப்பும் தவறுமாய் வரைந்தேன். அந்த வசனத்தை கற்பனையிடுகையில் சந்திரனுக்கு முன் சூரியனை சொல்வது ஏன்? மிதக்காமல் நீந்துவதாய் ஏன் சொல்லப்பட்டுள்ளது? என என்னுள் எழுந்த கேள்விகள், என்கற்பனையைஎதிர்காலத்தோடுஇணைக்கசெய்தது. சந்திரனின் சுழற்சிபற்றி என்னை சிந்திக்க தூண்டியது.

மேலும் பயிற்சி வகுப்புகளில் குழுக்களாய் அமர்ந்து ஒரே தலைப்பு பற்றி நேர்மறையாகவும், எதிர்மறையாகவும் பேசவும் எழுதவும் சொல்லி தந்தார்கள். நளினமாக பேசவும், எழுதவும் கற்றுகொண்ட நாட்கள் அது.

## பத்து வயதிலிருந்து பதிமூன்று வயதுவரை

அடுத்த கட்டமாக பத்திலிருந்து பதிமூன்று வயது வரைக்கான வகுப்புகளுக்கு நாங்கள் தயாரானோம். எங்கள் கற்பனைகளை வளர்த்த வகுப்புகள் அவை. இஸ்லாமிய சாதனையாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் இவர்களைப்பற்றிய வரலாறுகள் எங்களுக்கு போதிக்கப்பட்டது.

பத்துவயது வரை ''டாக்டர் ஆவேன்'' ''இஞ்சினியர் ஆவேன்'' என்று அர்த்தம் தெரியாமல் சொன்ன நாங்கள். வளர்ந்ததும் ''அல்குவாரிஸ்மி'' ''அல்ஹைதம்'' ''அல்பிரூணி'' ''அல்ராஜீ'' ''இப்னுசீனா'' ''அல்தபரி'' ''இப்னுஜுஹ்ர்'' ''இப்னுருஸ்து'' ''அல்இத்ரிஸி'' ''ஜாபிர் இப்னு'' இவர்களை போல் ஆய்வாளர்களாகி சாதிக்க வேண்டும் என்ற இலட்சியம் எங்கள் மனதில் வேரூன்றியது. அல்குவாரிஸ்மி, அல்ஹைதம் ஆகியோரின் வரலாறுகள் ''வானவியல் ஆராய்ச்சியாளராகும்'' லட்சியத்தை நோக்கி என்னை பயணிக்க செய்தது

வழக்கமான பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டிகள் போல் எங்களுக்கு நடத்தப்படவில்லை. ஐம்பது பக்கங்கள் கொண்ட சிறு நூல்கள் எங்களுக்கு அன்பளிப்பாய் தரப்பட்டது. அந்த புத்தகத்தின் கருத்தினை உள்வாங்கி கொண்டு நமது கற்பனையையும் தனித்துவத்தையும் நிரூபிக்கும் வகையில் பேசவோ எழுதவோ வேண்டும். கட்டுரை போட்டியாளர்கள் அந்த புத்தகத்தை பார்த்து கூட எழுதலாம்.

எங்களில் ஒவ்வொருவரும் தன் ஆளுமையையும் தனித்துவத்தையும் நிரூபிக்க தனித்தனி யுக்திகளை பயன்படுத்தி போட்டியில் கலந்துகொண்டோம். அப்பொழுதுதான் நாங்கள் உணர தொடங்கினோம் போட்டி ஏற்பாட்டாளர்களின் நோக்கம் எங்கள் திறமையை வளர்ப்பதோடு எங்களை கொண்டே திறமையான அடுத்த தலைமுறையை உருவாக்குவது.

அதேபோல் சினிமா, டிவி விரும்பி பார்க்கும் மாணவர்களை அழைத்து குர்ஆன் ஹதீஸின் மாண்பை மீறாமல் நாடகம் நடத்த பணித்தார்கள். இன்று அந்த குழுவினர் அனைவரும் ஊடகதுறையில் சாதிக்கிறார்கள்.

கேளிக்கை விளையாட்டில் மூழ்கிய மாணவர்களை ஆக்கபூர்வமான விளையாட்டில் பயிற்சியெடுக்க ஊக்கப்படுத்தினார்கள்.

## பதிமூன்றிலிருந்து பதினேழு வயது வரை

பதிமூன்று வயதோடு மக்தப் மதரஸா முடிந்தது. நாங்கள் அடுத்த இலக்கை நோக்கி பயணமானோம். அனைத்து முகல்லா மாணவர்களை ஒருங்கிணைத்து அவர்களின் தனித்திறமை, ஆர்வம், எதிர்கால இலட்சியம் இவைகளை மையப்படுத்தி தனித்தனி குழுவாக்கி அதற்கேற்றார்போல் பயிற்சி வகுப்புகள் நடந்தது.

இளைஞர்களின் எதிர்காலத்திற்காக பாடுபடும் தன்னார்வளர்களின் முயற்சிக்கு எங்கள் பெற்றோர்களும் தன் பிள்ளையின் எதிர்காலம் கருதி ஒத்துழைத்தார்கள். பெற்றோர்களுக்கும் தனி வகுப்புகள் நடந்தது.

பதிமூன்றில் இருந்து பதினேழு வயது வரையிலான பருவத்தில் எதிர்கால வாழ்வை இஸ்லாமிய விளிம்போடு எதிர்கொள்ள கற்று தந்தனர்! அவைகளில் சில.

- இஸ்லாமிய மார்க்கத்தில் ஆணுக்கு உள்ள பொறுப்புகளை பற்றி பெண்களுக்கும், அறிவார்ந்த சமூகத்தை உருவாக்கும் பெண்ணின் கடமை பற்றி ஆணுக்கும் வகுப்பெடுக்கப்பட்டது. இருசாராருக்கும் பொதுவாக ''ஹிஜாப்'' மற்றும் ''விபச்சாரம்'' இவைகளை பற்றிய மார்க்கப்பாடங்கள் நடத்தப்பட்டது. இயல்பிலேயே அந்த வயதில் ஹார்மோன் கோளாறினால் ஏற்படும் சிந்தனை மாற்றத்தை கட்டுக்குள் கொண்டுவர இந்த வகுப்புக்கள் உதவியது.

- சமகால அரசியல் நிகழ்வுகள் எங்களுக்கு கற்பிக்கப்பட்டது. இஸ்லாமிய நெறியோடு கல்வியில் சாதிப்பதே சமுதாய முன்னேற்றத்திற்கான நிரந்தர தீர்வு என எங்கள் மனதில் பதியவைத்தார்கள். அந்த தீர்வை நோக்கி பயணிப்பதை எங்கள் இலட்சியமாக்கினார்கள்.

- எங்களின் தனி திறமைகளை அடையாளம்கண்டுஅதற்கேற்ற மேற்படிப்பு பற்றிய விவரங்களைஅளித்தார்கள். மேலும் மேற்படிப்பிற்கு ஆகும் செலவுகளை உத்தேச மதிப்பீடு செய்யவும் நல்லமதிப் பெண்களின் அவசியத்தை உணர்த்தினார்கள். கல்வி உதவித் தொகை பெறும் முறைகள் சொல்லி தரப்பட்டது.

- அரசுப் பணிகள், அதற்கான கல்வித்தகுதி மற்றும் தேர்வுகள் அந்த பணியின்

மூலம் சமூகத்திற்கு செய்யும் நன்மைகள் இவைகளைப் பற்றிய விழிப்புணர்வு பாடம் ஒவ்வொரு மாணவனின் இலட்சியத்தையும் கூர்தீட்டியது

- வாழ்வில் ஏற்படும் பிரச்சனைகளை உணர்ச்சி பூர்வமாக எதிர்கொள்ளாமல் எப்படி அறிவு பூர்வமாக சாதுர்யமாக எதிர்கொள்ள வேண்டும் என்பதை அறிவுறுத்தினார்கள். மேலும் அவர்களாகவே சில பிரச்னைக்குரிய சூழ்நிலைகளை விவரித்து அதை சமாளிக்கும் முறையை நம்மிடம் கேட்டு சில யுக்திகளை கற்று தந்தார்கள்.

- இருபாலருக்கும் தனித் தனியாக உடற்பயிற்சி மையங்களை ஊரில் ஏற்படுத்தினார்கள். நாங்கள் மனரீதியாகவும் உடல் ரீதியாகவும் பலமானோம்.

## கல்லூரி காலம்

எங்களை மேம்படுத்த செயல்படுத்திய திட்டத்தின் பலனாய் நாங்கள் பண்பட்ட மாணவர்களாகி, எங்கள் கனவுகளை நனவாக்கும் துறைகளை தேர்ந்தெடுத்தோம். அந்த தருணத்தில் ஊரிலும் சிலமாற்றங்கள் ஏற்பட்டது.

வெளிநாடுகளில் பணிபுரியும் எங்கள் ஊர்வாசிகள் இணைந்து நடத்திய தொண்டு நிறுவனம்தான் எங்கள் மேம்பட்ட எதிர்காலத்திற்கான திட்டங்களை செயல்படுத்தியது. வெளிநாட்டில் பணிபுரிந்து கொண்டே ஊர்நலனில் பங்கேற்ற பலர் ஓய்வு பெற்று திரும்பினார்கள். பலதுறைகளில் உயர் பதவி வகித்த அவர்களின் அனுபவம் எங்களை வழிநடத்தியது. எங்களுக்கான திட்டங்கள் தொடர்ந்தன.

- அரசுவேலைக்கான தேர்வுகளை எழுத எங்களை தயார் செய்தார்கள். மேலும் நேர்முக தேர்வில் வெற்றி பெற தேவையான பயிற்சியை அளித்தார்கள்.

- எங்களுடைய துறைசார்ந்த பாடங்களை சிறந்த முறையில் கற்க அந்த துறைசார்ந்த நிபுணர்களை எங்களுக்கு அறிமுகப்படுத்தினார்கள்.

- மாணவர்கள் உள்ளூரிலோ அல்லது வெளியூரிலோ படித்தாலும் அவர்கள் இஸ்லாமிய மரபை விட்டு விலகாமல் இருக்கிறார்களா?என்பதையும் கண்காணித்துகொண்டார்கள் எங்கள் அருகாமையில் நடக்கும் தர்பியத் வகுப்புகளில் கலந்து கொள்ள எங்கள் ஆர்வத்தை தூண்டினார்கள்.

- ஏற்கனவே எங்கள் ஊரில் இஸ்லாமிய பொருளாதார மண்டலம் சிறப்பாக நடப்பதால் ஏழை மாணவர்கள் தங்கள் கல்வியை தொடர பொருளாதார ரீதியாக எந்த தடையும் ஏற்படவில்லை இருப்பினும் அரசு தரும் கல்வி உதவி தொகைகளை பெற உதவினார்கள்.

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்ற பழமொழியை உணர்ந்துகொண்டு மேம்பட்ட இளைஞர்களை உருவாக்க சிறுவயதில் இருந்து எங்களுக்கு பயிற்றுவிக்கப்பட்ட தொலைநோக்கு திட்டத்தால் எங்கள் ஊர் இளைஞர்கள் அனைவராலும் சாதிக்க முடிந்தது.

கல்வி பயின்று பணியில் அமர்ந்ததோடு ஊர் நலன் விரும்பிகளுக்கும் எங்களுக்குமான தொடர்பு முடிந்துவிடவில்லை. அவர்களின் பொறுப்பை எங்களோடு பகிர்ந்து எங்களை பொதுவாழ்க்கைக்கு தயார் செய்தார்கள். அடுத்த தலைமுறைகளுக்குஎங்களை பொறுப்புதாரி ஆக்கினார்கள்.

ஊரின் பொருளாதார மண்டலத்தில் (பைத்துல்மால்) எங்கள் ஜக்காத்தையும் ஸதகாவையும் முறையாக செலுத்த வலியுறுத்தினார்கள். எங்களில் சிலர் பைத்துல்மாலில் ''அழகிய கடன்'' பெற்று தொழிலதிபர் ஆகி தனது ஜக்காத்தை செலுத்தினார்கள்.

எங்கள் ஊரில், இஸ்லாமிய நெறியை அடிப்படையாக கொண்டு செயல்படும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளை உருவாக்கி இருந்தார்கள். அதை போன்று தமிழகம் முழுவதும் உருவாக நாங்கள் பணியாற்ற தொடங்கினோம். மேலும் நமது கல்லூரிகளை ஒருங்கிணைத்து தனி பல்கலைகழகமாக உருவாக்க அரசு தரப்போடு முயன்று வருகிறோம்.

மணவிழா காணும் மணமக்களுக்கு தனித்தனியாக ''இஸ்லாம் கூறும் இல்லறவியல்'' பற்றி இரண்டு நாள் வகுப்பெடுத்து சான்றிதழ் அளித்தார்கள். திருமணத்திற்கு முன் மணமக்கள் இந்த வகுப்பில் கலந்து கொள்வதை கட்டாயம் ஆக்கினார்கள். இதனால் இளைஞர்கள் இல்லறவாழ்விலும் இஸ்லாமிய நெறியோடு வாழ்ந்ததால் எங்கள் ஊரில் தலாக் விகிதாச்சாரம் மிக மிக குறைவு.

ஏர்வாடி இளைய சமுதாயத்தின் மேம்பாட்டிற்கு மேலே குறிப்பிட்ட அழகிய வழிமுறை உள்ள திட்டங்களை அவர்கள் செயல்படுத்தியதால் தான் இன்று நாங்கள் முன்மாதிரி சமுதாயமானோம். அவர்களின் பொறுப்பை ஏற்றுகொண்ட நாங்கள் எங்கள் பயணத்தின் அடுத்த இலக்காக தமிழகம் முழுவதும் இதை செயல்படுத்தி கொண்டு வருகிறோம். உங்கள் ஊரிலும் இதை நடைமுறை படுத்தவே இந்த கடித்தை உங்களுக்கு எழுதுகிறேன்.

இன்ஷா அல்லாஹ் உங்கள் ஊரிலும் இதை போன்று செயல் படுத்த நாங்கள் ஆர்வத்துடனும் மிகுந்த அக்கறையுடனும் முழு மனதோடு பணி செய்ய முன்மாதிரி வரைவுகளோடு காத்திருக்கிறோம்.

இப்படிக்கு

(ஆயிஷா சித்திக்)

எது தூக்கத்தில் ஆழ்த்துகிறதோ அது கனவல்ல..எது நம்மை தூங்கவிடாமல் செய்கிறதோ அது தான் நாம் காண வேண்டிய கனவாக இருக்கிறது..

ஏர்வாடி அருகில் உள்ள கோதைசேரி கிராமத்தில் பிறந்த சுப்பையா அருணன் செவ்வாய் கிரக ஆராய்ச்சியான ''மங்கள்யான்'' திட்ட இயக்குநர் ஆகி சாதிக்கும் இந்த காலகட்டத்தில் ஏர்வாடி மக்கள் ஒன்றிணைந்தால் **இறைவன் நாடினால்.. ''ஆயிஷாசித்திக்''** நிச்சயம் உருவாகுவாள். அதற்கான திட்டங்களை வரைவு செய்யத் துவங்குவோம். நமது எண்ணங்களை போன்றே அமல்களும் அமையும்.

# ஈமானிய இலக்குகள்

# ஈமானிய இலக்குகள்

## அறிமுகம்

ஒவ்வொரு அமைப்புக்கும் இலக்குகள் என்பது அதன் ஆணி வேராகும். இலக்குகள் இல்லாமல் பயணித்த எந்த ஒரு அமைப்பும் நெடுந்தூரம் பயணிப்பதில்லை மற்றும் சாதிப்பதில்லை என்பதே வரலாறு நமக்கு உணர்த்தும் உண்மை. இலக்குகள் மற்றும் திட்டங்கள் முன்னிருத்தப்பட்டு அதனை நோக்கி நாம் பயணித்தாலொழிய நம்மால் எந்த சாதனைகளையும் செய்ய முடியாது என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மை.

மீண்டும் ஒரு மதினா - இதுவே ஈமானின் இறுதி இலக்கு என்பதை நாம் அனைவரும் அறிவோம். இந்த இலக்கை மையமாக கொண்டே நமது ஈமானிய பயணம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. எப்படி ரசூலுல்லாஹ் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இந்த உலகிற்கே முன் மாதிரியாக மதினாவை உருவாக்கி காட்டினார்களோ அதே போல் நமது ஊரையும் இந்த உலகுக்கே ஒரு முன் மாதிரி கிராமமாக உருவாக்கி காட்ட வேண்டும் என்பதற்காகவே மீண்டும் ஒரு மதினா எனும் இறுதி இலக்கை தனது முழக்கமாக ஈமான் கையில் எடுத்துள்ளது. இதனை அடைவதற்கு, பல தளங்களில் பணியாற்றி வெற்றி பெற வேண்டும். அதனால், ஈமான் சங்கம் தனது 40 ஆவது ஆண்டில் அதன் காலடித்தடத்தை பதிக்கும் இந்த தருணத்தில், அதன் அடுத்த 10 ஆண்டுகளில் அது சாதிக்க வேண்டிய பல மைல் கற்களை நாம் நிர்ணயிக்கவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். இன்ஷா அல்லாஹ் இனி வரும் அடுத்த பத்தாண்டு காலத்தில் ஈமான் கீழ்கண்ட மைல்கற்களை அடைய தன்னுடைய பயணத்தை தொடரும் என்பதை நாம் இந்த பகுதியில் அறிய தருகிறோம்.

## கல்வி மேம்பாட்டு திட்டங்கள்

- ஊரில் ஒரு ஹிஃப்ழ் மதரஸா உருவாக்குவது.
- ஊரில் உள்ள அனைத்து மதரஸாக்களிலும் முறையான தஜ்வீத் முறைப்படி ஓதி கொடுப்பதற்காக உஸ்தாத்களுக்கும் பயிற்சி அளிப்பது.
- அனைத்து பள்ளிவாயில்களிலும் ஜமாத்துடன் இணைந்து ஒரு இஸ்லாமிய நூலகம் அமைப்பது.
- ஏர்வாடி குழந்தைகள் பயிலும் பள்ளிக்கூடங்களில் பள்ளி நிர்வாகத்துடன் இணைந்து தீனியாத் வகுப்புகள் நடத்த வகை செய்வது.
- ஈமான் இஸ்லாமிய சென்டர் அமைத்து கீழ்கண்ட வகுப்புகள் செயல் படுத்துவது.

குழந்தைகளுக்கான இஸ்லாமிய பாடத்திட்டம். வாரம் ஒரு நாள் (Sunday class) காலை முதல் மதியம் வரை. முறைப்படுத்தப்பட்ட இஸ்லாமிய பாடத்திட்டத்தின் படி நடத்துதல்.

மாணவர்களுக்கான கோடை கால வகுப்புக்களை வடிவமைப்பது மற்றும் நடத்துவது.

ஆண்கள்/பெண்களுக்கான தஜ்வீத் வகுப்புகள்.

ஆண்கள்/பெண்களுக்கான understanding Quran வகுப்புகள்.

ஆண்கள்/பெண்களுக்கான அரபி மொழி பயிற்சி.

குழந்தைகளுக்கான ஸீரா வகுப்புகள்

பெரியவர்களுக்கான இஸ்லாமிய வரலாறு வகுப்புகள்

மேலும் பல...

- பெண்களுக்கான உளவியல் கவுன்சலிங் சென்டர் அமைப்பது.
- இளைஞர்களுக்கான ஆளுமைத் திறன் வகுப்புகள் நடத்துவது.
- உள்ளத்தை பண்படுத்தும் தஸ்கியா மற்றும் வரலாற்று பயிலரங்குகள் நடத்துவது.
- அரசு வேலை வாய்ப்புக்கான பயிற்சி வகுப்புகள் நடத்துவது.
- மேற்படிப்புகளுக்கான ஆலோசனை வகுப்புகள் நடத்துவது.
- தகுதியான ஏழை மாணவர்களுக்கு மேற்படிப்புக்கான உதவிகள் வழங்குவது.

## பொருளாதார மேம்பாட்டு திட்டங்கள்

- ஏர்வாடி நலத்திட்டங்கள் மற்றும் உதவிகளை ஒருங்கிணைக்க, அனைத்து அமைப்புகளும் உபயோகிக்கும் வகையில் ஒரு மொபைல் அப்ளிகேஷன் உருவாக்குவது.
- அனைத்து ஊர்களில் உள்ள ஏர்வை மக்களை ஒருங்கினைத்து அவர்களுடைய பொருளாதார உதவிகளை ஒருமுகப்படுத்துவது அல்லது கல்வி, திருமணம் என தனித்தனி பிரிவுகளை ஒவ்வொரு நாட்டின் ஈமான் கிளைகள் பொறுப்பேற்று செய்ய முயற்சி மேற்கொள்வது.
- UNWO மற்றும் முஹல்லாக்களுடன் இணைந்து அரசு உதவி தொகைகள் மற்றும் அரசின் நலத்திட்டங்களை முழுமையாக மக்களுக்கு கிடைக்க முயற்சி செய்வது.
- ஒருங்கிணைந்த ஏர்வாடி பைத்துல்மால் நிறுவுவது.
- ஜன்சேவா போன்ற வட்டியில்லா வங்கிகள் ஏர்வாடியில் தொடங்க உதவுவது.

## சுற்றுப்புற / சுகாதார மேம்பாட்டு திட்டங்கள்

- அனைத்து வீடுகளிலும் மழை நீர் சேகரிப்பு தொட்டிகள் அமைக்க ஊக்குவிப்பது.
- அனைத்து தெருக்களிலும் மழை நீர் சேகரிப்பு தொட்டி அமைப்பது.
- அனைத்து வீடுகளிலும் கழிவு நீரை இயற்கை முறையில் சுத்திகரித்து நிலத்தடி நீராக மாற்றும் தொட்டிகள் அமைத்து கழிவு நீர் வெளியேறுவதை குறைப்பது அல்லது முழுமையாக தடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்வது.
- அனைத்து தெருக்களிலிருந்தும் ஆற்றில் கலக்கும் கழிவு நீரை தூய்மைப்படுத்தி ஆற்றில் கலக்க விடுவது.
- ஆற்றின் குறுக்கே நன்னீர் தேங்க சிறு சிறு நீர் தேக்கிகள் அமைப்பது.

- ஊரை சுற்றியுள்ள அனைத்து குளங்களையும் தூர் வாரி தூய்மைப்படுத்துவது.
- அனைத்து தெருக்களிலும் மரக்கன்றுகள் நட்டு பராமரிப்பது.
- அரசாங்க பள்ளிக்கூடங்களில் தேவையான கழிவறைகளை அமைத்து அதனை பராமரிப்பது.
- ஆற்றை தூய்மைப்படுத்தி விளையாட்டு திடல்கள், ஓய்வு எடுக்கும் இடங்கள் அமைப்பது.
- நமது ஊரின் பொது சொத்துகள் , வளங்கள் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவது.
- இயற்கை விவசாயம் மற்றும் இயற்கை உணவுகளை ஊக்குவிக்க விழிப்புணர்வு முகாம்கள் நடத்துவது.
- வீட்டுத்தோட்டம், மாடித்தோட்டம் அமைப்பதற்கு பயிற்சி அளிக்கும் சந்திப்புகளை ஏற்பாடு செய்வது.

## வேலை வாய்ப்பு மற்றும் இளைஞர் நலத்திட்டங்கள்

- ஈமான் பயிற்சி மையம் ஏற்படுத்தி, NAF (NET ACHIEVERS FORUM) போன்ற அமைப்புகளுடன் தொடர்பு ஏற்படுத்தி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுப்பது.
- இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு வழிகாட்டி மையம் ஒன்று நிறுவுவது.
- விளையாட்டு மன்றம் ஒன்று ஏற்படுத்தி விளையாட்டுகளை ஊக்கப்படுத்தி அதற்கான திடல்கள் மற்றும் உபகரணங்களை அமைத்து கொடுத்தல்.
- தமிழர்களின் பாரம்பரிய வீர விளையாட்டுகளான சிலம்பம், சுருள்வாள் கற்று கொடுக்கும் தலங்களை அமைப்பது. மற்ற தற்காப்பு கலைகலையும் கற்றுகொள்ள இடம் அமைத்து கொடுப்பது.
- போதை ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் அதற்கான உளவியல் ஆலோசனைகள்

## சமூக அபிவிருத்தி திட்டங்கள்

- பிற சமூகங்களுடனான சமூக நல்லிணக்க சந்திப்புகள் மற்றும் உறவுகளை வலுப்படுத்துவது.
- இஸ்லாமிய அழைப்பு பணிக்கான ஏற்பாடுகளை செய்து கொடுப்பது.
- ஹலாலான பொழுதுபோக்குகளுடன் கூடிய Eruvadi Shopping Festival (ESF) ஒன்றை வருடந்தோரும் நடத்த முயற்சி செய்வது.

இன்ஷா அல்லாஹ், இந்த இலக்குகளை செயல்படுத்திட உங்கள் அனைவரின் ஒத்துழைப்புடன் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். நமது எண்ணங்கள் விரைவில் நிறைவேறி நமது இலக்கான மீண்டும் ஓர் மதினாவை அடைந்திட எல்லாம் வல்ல இறைவனிடம் பிரார்த்தனை செய்யும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

# சமூகத்தின் உயிர்நாடியான இளைஞர்களே! நீங்கள் இன்றி சமூகமில்லை!!

- S. பீர் முஹம்மது (ஈமான் துணைத் தலைவர், புதுக்குடி)

ஒரு சமூகத்தின் அடிப்படை அச்சமூகத்தில் வாழும் குடும்பங்கள். ஒரு குடும்பத்தின் அடிப்படை அதில் உள்ள தனிப்பட்ட நபர்கள். தனி மரம் காடாகாது. ஆனால் மரங்கள் இல்லாமல் காடுகள் இல்லை. ஒரு தனிப்பட்ட நபரோ, குடும்பமோ ஒரு சமூகமாக முடியாது. ஆனால் நபர்கள் இல்லாமல் குடும்பங்கள் இல்லை. குடும்பங்கள் இல்லாமல் சமூகம் இல்லை.

மனிதர்கள் ஒருவருக்கொருவர் தேவைகள் உடையவர்கள். சமூகங்கள் இல்லாமல் ஒரு மனிதன் தன்னந்தனியாக வாழ முடியாது. ஏனெனில் அவனது வாழ்க்கைப் பருவத்தில் பல கட்டங்கள் இருக்கின்றன. எல்லாக் கட்டங்களிலும் அவன் பலசாலியாக இருப்பதில்லை. சில கட்டங்களில் அவன் மிகப் பலகீனமானவாக இருக்கின்றான். அப்போது அவனுக்கு மற்றவர்களின் துணை தேவைப் படுகின்றது. முக்கியமாக அவன் பிறந்து வளரும் போதும், அவன் இறந்தபிறகு அவனது இறுதிக் காரியங்களைச் செய்யவும் மற்றவர்களின் துணை அவசியம் தேவைப் படுகிறது.

மனித வாழ்வை மூன்று கட்டமாக பிரிக்கலாம். குழந்தைப் பருவம், இளமைப் பருவம் மற்றும் முதிய பருவம். ஒரு மனிதனின் வாழ்வில் மிக முக்கியமான கட்டம் இளமைப் பருவம். ஒரு சமூகத்தின் வாழ்வும் தாழ்வும் முதியோர்களின் வழிகாட்டு தலிலும் அதை செயல் படுத்தும் இளைஞர்களின் கையிலும் தான் இருக்கின்றது. முதுமைப் பருவத்தை அடைந்துவிட்டால் இளமைப் பருவம் மீண்டும் திரும்ப வராது. இளமைப் பருவத்தை முறையாக கழித்த முதியோர்களால் தான் ஒரு சமூகத்தை வெற்றிகரமாக வழிநடத்தவும் முடியும். சமூகம் அவர்களிடம் தான் பிரச்சினைகளுக்குத் தீர்வை எதிர்நோக்கும். இளமைப் பருவத்தை வீணடித்தவர்களால் அவர்களது முதுமைப் பருவத்தில் சமூகத்திற்கு எந்தவித பலனையும் கொடுக்கமுடியாது.

ஒரு வளமான இஸ்லாமிய சமூகத்திற்கு ஐந்து அடிப்படை விசயங்கள் இருக்கவேண்டும் என மார்க்க அறிஞர்கள் வரையறுத்துள்ளனர். ஒரு சமூகத்தின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் இவைகள் மிக மிக அவசியம். இவற்றில் எதில் ஒன்றில் குறை இருந்தாலும் அது அச்சமூகத்தைப் பாதிக்கும். அதனால் முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்க முடியாது. பிற சமூகங்களுக்கிடையே எந்தவித தாக்கத்தையும் ஏற்படுத்தவும் முடியாது. காலச்சுவட்டில் அச்சமூகம் காணாமல் போய்விடும். சமூகத்தின் ஒவ்வொரு இளைஞர்களும் இதனைப் பற்றி அறிந்து அதனடிப்படையில் தங்களது செயல்பாடுகளை அமைத்துக் கொள்ளவேண்டும்.

### 1. உயிர் பாதுகாப்பு:

எதைச் செய்யவேண்டுமானாலும் முதலில் உயிரோடு இருக்கவேண்டும். நாம் வாழும் சமூகம் நமது உயிருக்கு உத்தரவாதமளிக்க வேண்டும். உயிருக்காக போராடிக் கொண்டிருக்கும் சமூகத்தினால் எதையும் சாதிக்க முடியாது.

### 2. சிந்தனை பாதுகாப்பு:

இந்த உலகத்தையே புரட்டிப் போட்ட ஒவ்வொரு மாறுதல்களுக்கும் பின்னால் இருப்பது சிந்தனையே. ஆக்கப்பூர்வமான சிந்தனைகளும் அதனடிப்படையில் அமைந்த செயல்களின் மூலம் இந்த உலகம் நன்மைகளைப் பெற்றுள்ளது. அதேப் போன்று தீயச்

சிந்தனைகள் மூலமும் அதனடிப்படையில் அமைந்த செயல்களின் மூலம் இந்த உலகம் பல தீமைகளைச் சந்தித்துள்ளது.

சிந்தித்து நல்லுணர்ச்சி பெறுவதைப் பற்றி குர்ஆன் பல இடங்களில் பேசுகிறது. சிந்தித்தால் மட்டுமே அல்லாஹ்வின் அத்தாட்சிகளை புரிந்துக் கொள்ள முடியும் நமது ஈமானை வலுப்படுத்த முடியும், தீனை நிலை நிறுத்த முடியும்.

நிச்சயமாக உங்கள் இறைவன் அல்லாஹ்வே; அவன் வானங்களையும் பூமியையும் ஆறு நாட்களில் படைத்தான் - பின்னர் தன் ஆட்சியை அர்ஷின் மீது அமைத்தான்; (இவை சம்பந்தப்பட்ட) அனைத்துக் காரியங்களையும் அவனே ஒழுங்குபடுத்துகின்றான். அவனுடைய அனுமதிக்குப் பின்னரேயன்றி (அவனிடம்) பரிந்து பேசுபவர் எவருமில்லை. இத்தகைய (மாட்சிமை மிக்க) அல்லாஹ்வே உங்களைப் படைத்துப் பரிபக்குவப் படுத்துபவன், ஆகவே அவனையே வணங்குங்கள்; (நல்லுணர்ச்சி பெற இவை பற்றி) நீங்கள் சிந்திக்க வேண்டாமா? *(அல்-குர்ஆன்: 10:3)*

செயல்கள் சிந்தனையிலிருந்தே பிறக்கின்றன. சிந்தனைகள் நல்லவைகளாக இருந்தால் மட்டுமே செயல்களும் நன்றாக அமையும். நல்ல சிந்தனைகளுக்கு உள்ளம் நல்ல நிலையில், விழிப்பான நிலையில் இருக்கவேண்டும். இதற்கு நேர் மாற்றம் போதை. சமூகம் ஆரோக்கியமான பாதையில் அடியெடுத்து வைக்கவேண்டுமானால் போதையிலிருந்து முற்றிலுமாக விடுபட்டிருக்கவேண்டும். இன்று முஸ்லீம் சமூகம் பெரும்பான்மையாக வாழும் பல ஊர்களில் மதுவும் போதை வஸ்துக்களும் ஊடுறுவிக் கொண்டிருக்கின்றன. பல இளைஞர்கள் மதுவிற்கும் மற்ற போதை வஸ்துகளுக்கும் அடிமைப் பட்டுக் கிடக்கின்றனர். போதை என்பது மனித சிந்தனைகளை மழுங்கடித்துவிடும். இஸ்லாம் போதையை மிக வன்மையாக கண்டித்து கடுமையான தண்டனையை அதற்காக நிர்ணயித்துள்ளது. இஸ்லாமிய குற்றவியல் சட்டம் நடைமுறையில் இல்லையாதலால், இஸ்லாத்தில் போதை தண்டனைக்குரிய குற்றம் என்பதையும் மறந்து இதற்கு சமூகத்தினர் அடிமையாகிக் கொண்டிருக்கின்றனர். இந்த அடிமைத் தளத்தில் இளைஞர்கள் சிக்கிக்கொள்ளாமல் தங்களை பாதுகாத்துக் கொள்ளவேண்டும். அது மட்டுமல்லாமல் இந்த தீமையை சமூகத்திலிருந்து முற்றிலுமாக துடைத்தெறிய முன்னணியில் நின்று போராடவேண்டும்.

பாலஸ்தீனப் பிரச்சினைகளை அறிந்தவர்களுக்குத் தெரியும் எப்படி இஸ்ரேல் பாலஸ்தீனர்களின் நிலத்தை ஆக்கிரமித்து அவர்களை வெளியேற்றி அங்கே யூதர்களை குடியமர்த்திக் கொண்டிருக்கின்றது என்று. ஆனால் இதைவிட பயங்கரமானது நமது சிந்தனைகள் மழுங்கடிக்கப்படுவது. ஒரு மார்க்க அறிஞரின் கருத்துப்படி. ''நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுவதை விட மூளைகளும், உணர்ச்சிகளும் ஆக்கிரமிக்கப்படுவது மிகவும் பயங்கரமானது''. ஆம் சிந்தனையை இழந்த சமூகம் வீழ்ச்சியை நோக்கி வேகமாக பயணிக்கும்.

## 3. பொருளாதார பாதுகாப்பு:

நமது பொருளுக்கும் நம்மைச் சுற்றியிருப்பவர்களின் பொருளுக்கும் பாதுகாப்பான சூழல் இருக்கவேண்டும். பொருளைப் பற்றிய பாதுகாப்பான சூழ்நிலை இல்லையெனில் நமது சிந்தனை முழுவதும் அதை எப்படிப் பாதுகாப்பது என்ற வட்டத்தை விட்டு வெளியே வராது. சமூகமும் முன்னேறமுடியாது. ஆரம்பகால மதினாவில் அன்ஸாரி விவசாயிகள் தங்களது விளைச்சலில் பெரும்பங்கை யூதர்களுக்கு வட்டியாக கொடுக்கவேண்டியிருந்தது. மதினாவில் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் செய்த முக்கியமான பணிகளில் ஒன்றாக இந்த நிலையை மாற்றி முஸ்லீம்களின் பொருளாதார நிலையை உயர்த்தினார்கள். பொருளாதார

பாதுகாப்பிற்கு இஸ்லாம் மிகுந்த முக்கியத்துவத்தை அளிக்கின்றது.

''யார் தனது பொருளைப் பாதுகாப்பதற்காக போரிட்டு கொல்லப் படுகிறாரோ அவர் ஷஹீதாவார்'' (திர்மிதி 4772)

ஷஹீதுடைய மகத்தான அந்தஸ்தைப் பற்றி சொல்லித் தெரியவேண்டியதில்லை. தனது பொருளாதாரத்தைப் பாதுகாக்கும் முயற்சியில் உயிரைவிடுபவருக்கு ஷஹீதுடைய அந்தஸ்தை இஸ்லாம் வழங்குகின்றது. அதே நேரத்தில் திருடுபவர்களுக்கு இஸ்லாம் கடுமையான தண்டனையும் வழங்குகின்றது. இஸ்லாமிய குற்றவியல் சட்டப்படி திருடுபவர்களின் கை வெட்டப் படவேண்டும்.

''திருடனோ திருடியோ அவர்கள் சம்பாதித்த பாவத்திற்கு, அல்லாஹ்விடமிருந்துள்ள தண்டனையாக அவர்களின் கரங்களைத் தரித்து விடுங்கள். அல்லாஹ் மிகைத்தவனும், ஞானம் மிக்கோனுமாக இருக்கின்றான்''.

(அல்-குர்ஆன் 5 : 38)

மார்க்கத்தை நாம் இலகுவானதாக ஆக்கியிருக்கின்றோம் என்று கூறும் இஸ்லாம் சமூகங்கள் சீராக இயங்குவதற்காகவே கடுமையான சில குற்றவியல் சட்டங்களையும் கூறுகின்றது. எந்த சமூகத்தில் இந்த குற்றவியல் சட்டங்கள் நடைமுறைப் படுத்தப் படுமோ அந்தச் சமூகத்தில் குற்றங்கள் குறைந்துவிடும் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை.

உலகிற்கே ரஹ்மத்தாக அனுப்பப் பட்ட அண்ணலெம் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் இந்தச் சட்டங்களை அமல்படுத்துவதில் மிகவும் கண்டிப்பாக இருந்தார்கள்.

ஒரு முறை உயர்குலத்தைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் திருடிவிட்டார். குற்றம் நிரூபிக்கப் பட்டுவிட்டது. இஸ்லாமிய சட்டப்படி அப்பெண்ணின் கை வெட்டப் படவேண்டும். ஆனால் அது அந்தக் குலத்திற்கே அவமானம் என்பதால் அவரை மன்னித்து விடும்படி நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களிடம் கோரிக்கை வைக்க விரும்பினர் சிலர். ஆனால் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களிடம் இதைக் கேட்கும் துணிவு அங்கே யாருக்கும் இல்லை. ஆதலால் அவர்கள் நபிகள் நாயகத்திற்கு மிகவும் விருப்பமான நபராகிய உஸாமா (ரலி) அவர்களை அணுகினார்கள். அவரும் அதை ஏற்றுக் கொண்டு நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை அணுகி இதனைக் கூறினார். இதனைக் கேட்டதும் சாந்தத்தின் மொத்த உருவமான நபிகள் நாயகத்தின் முகம் கோபத்தினால் சிவந்துவிட்டது. அவர்கள் உஸாமாவே! அல்லாஹ்வுடைய தண்டனையில் நீ பரிந்துரை செய்ய வந்துவிட்டாயா? என்று கேட்டுவிட்டு, மக்களுக்கு இது பற்றி ஓர் உபதேசம் செய்தார்கள்.

இதற்கு முன் வாழ்ந்த சமுதாயம் அழிக்கப்பட்டதன் காரணம்.. அவர்களில் வசதி படைத்தவர்கள் திருடினால் விட்டு விடுவார்கள், பலவீனர்கள் திருடினால் தண்டனை கொடுப்பார்கள். ''அல்லாஹ்வின் மீது ஆணையாக ! முஹம்மதுடைய மகள் பாத்திமா திருடியிருந்தாலும் அவளின் கையையும் நான் வெட்டியிருப்பேன்'' என்றார்கள்.

நூற்கள்: புகாரீ, முஸ்லிம்

இன்று ஏழைக்கொரு நீதி பணக்காரனுக்கொரு நீதி நாட்டில் நிலவுகின்றது. கோடிக்கணக்கான பணத்தை கொள்ளையடிப்பவர்கள் வெளிநாட்டில் சுகமாக வாழ்கின்றனர். ஒரு ஏழை திருடிவிட்டால் அவனுக்கு உடனே தண்டனை வழங்கப் படுகின்றது. அதாவது நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின்

வாக்குப்படி அழிவுப் பாதையில் சமூகம் சென்றுக் கொண்டிருக்கின்றது. இது போன்று ஏழைக்கொரு நீதி பணக்காரனுக்கொரு நீதி நாட்டில் மட்டுமல்ல நமது சமூகத்திலும் இருக்கின்றது. இவைகள் களையப் படவேண்டும். இளைஞர்களே உங்களது கவனமும் செயல்பாடுகளும் இங்கே தேவைப் படுகின்றது.

**4. மானம் பாதுகாப்பு:**

சமூகம் மானமுள்ள சமுதாயமாக இருக்கவேண்டும். சமூகத்து மக்களுக்கு மானத்துடன் வாழக்கூடிய சூழ்நிலையை உருவாக்கிக் கொடுக்கக் கூடியதாக இருக்கவேண்டும். இஸ்லாம் மனிதனின் மானத்திற்கு உயர்ந்த அந்தஸ்தைக் கொடுக்கின்றது. ஒரு சமூகம் சீராக சிறப்பாக இயங்குவதற்கு இஸ்லாம் சில குற்றவியல் தண்டனைகளைத் தருகிறது. கொலைக்குக் கொலை. திருட்டுக்கு கையை வெட்டுதல். ஆனால் அதிகபட்ச கடுமையான தண்டனை விபச்சாரத்திற்குத் தான்.

கொலைக் குற்றத்திற்குக் கூட கொலை செய்யப்பட்டவனின் குடும்பத்தினர் மன்னித்துவிட்டால் அதற்கான நஷ்டஈடை கொடுத்துவிட்டு உயிர் பிழைப்பதற்கு வழி உண்டு. ஆனால் விபச்சார குற்றத்திற்கு எந்தவொரு மாற்றுவழியுமில்லை. விபச்சாரத்தில் ஈடுபட்டவர்கள் கொலைச் செய்யப் படவேண்டும் அதுவும் பொது இடத்தில் வைத்துக் கல்லால் அடித்து. ஏனெனில் விபச்சாரம் என்பது மற்றவர்களின் மானத்தில் கைவைக்கும் செயல் மட்டுமல்ல அதன் பாதிப்பு தலைமுறைகளையே பாதிக்கும். சமூகத்தின் அடிப்படையான குடும்ப அமைப்புகளையே சீர்குலைத்துவிடும்.

மேலும் அல்லாஹ் மனிதர்களை அவனது பிரதிநிதியாக இவ்வுலகிற்கு அனுப்பியுள்ளான். அவர்கள் ஹலாலான முறையில் சந்ததியைப் பெருகச் செய்ய வேண்டும். அதற்கு மாற்றமாக இயங்கினால் சமூக அமைப்பே அடிபட்டுபோய்விடும். முன்னேற்றப் பாதையில் முதலில் சென்று கொண்டிருக்கின்றோம் என்ற மமதையுடன் சென்று கொண்டிருந்த முன்னேறிய நாடுகளின் கலாச்சாரம் இன்று நின்று யோசித்துக் கொண்டிருக்கின்றது. தந்தைகளற்ற குடும்பங்கள் பெருகிக் கொண்டிருக்கும் பிரச்சி னைகளுக்கு எவ்வாறு தீர்வு காண்பதென்று. சமூக விவாதங்கள், கருத்தரங்கங்கள் முன்னிறுத்தப் படுகின்றன. புத்தகங்கள் எழுதப் படுகின்றன. அப்படிப்பட்ட புத்தகங்களில் ஒன்று தான் Fatherless America. தலைப்பே போதும் இன்றைய ''முன்னேறிய'' சமூகம் எங்கே சென்றுக் கொண்டிருக்கின்றது என்பதை தெளிவுப் படுத்துவதற்கு.

இளைஞர்கள் தங்களது மானத்தைப் பாதுகாத்துக் கொள்வதுடன் சமூகத்தின் மானம் மரியாதையையும் பாதுகாக்கவேண்டும். அல்லாஹ்வின் தூதர் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறினார்கள் :

எவர் தம் இரு தாடைகளுக்கு இடையே உள்ளதற்கும், தம் இரு கால்களுக்கு இடையே உள்ளதற்கும் என்னிடம் உத்தரவாதம் அளிக்கிறாரோ அவருக்காகச் சொர்க்கத்திற்கு நான் உத்தரவாதம் அளிக்கிறேன். இதை சஹ்ல் பின் சஅத் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். நூல் : புகாரி (6474)

அத்துடன் பிறரைப் பற்றி கேலி கிண்டல் செய்தல் போன்றவைகளையும் தவிர்க்கவேண்டும். பிறரின் கண்ணியத்தைக் குலைக்கும் எந்தவித செயல்களிலும் ஈடுபடக் கூடாது. அண்ணலெம் பெருமானார் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் ஒரு முஸ்லீமின் கண்ணியத்தை கஅபாவின் கண்ணியத்திற்கு ஒப்பிட்டுக் கூறியுள்ளார்கள். அவர்கள் தன்னுடைய இறுதி ஹஜ்ஜின் போது ஆற்றிய உரையில் பின் வருமாறு குறிப்பிட்டார்கள்:

''இந்த மாதமும் இந்த புனிதமிக்க மக்கமா நகரமும் இந்த நாளும் எப்படி

புனிதமானதோஅவ்வாறே ஒரு முஸ்லிமின் கண்ணியம் உயிர்உடைமைகள் புனிதமானவை. ஒரு முஸ்லிமுடைய கண்ணியம் அவனுடய இரத்தம் அவனுடைய சொத்து-செல்வங்கள் மற்ற முஸ்லிம்களுக்கு ஹராமாகும்.''

அறிவிப்பாளர் : இப்னு அப்பாஸ் (ரழி)
ஆதாரம் : புகாரி 1652

## 5. மார்க்கம்:

நமக்குத் தோன்றும். நமது மார்க்கம் அல்லவா முதல் அடிப்படையான விசயமாக இருக்கவேண்டும்,இது எப்படி கடைசியாக இருக்க முடியும் என்று. ஆனால் மார்க்க அறிஞர்கள் சரியாகத் தான் வகுத்துள்ளார்கள். வரலாறு நமக்கு கற்றுத் தரும் பாடமும் அதுவே. முற்காலத்தில் வாழ்ந்த மக்களின் வரலாறுகளில் பகுத்தறிவுடையோருக்கு அரிய படிப்பினை உள்ளது என்று குர்ஆன் கூறுகிறது.

(நிச்சயமாக) அவர்களின் வரலாறுகளில் அறிவுடையோருக்கு (நல்ல) படிப்பினை இருக்கிறது; இது இட்டுக்கட்டப்பட்ட செய்தியாக இருக்கவில்லை, மாறாக இதற்கு முன் உள்ள (வேதத்)தையும் இது உண்மையாக்கி வைக்கிறது. ஒவ்வொரு விஷயத்தையும் இது விவரித்துக் காட்டுவதாகவும், நம்பிக்கை கொண்ட சமூகத்தவருக்கு நேர்வழியாகவும், ரஹ்மத்தாகவும் இருக்கிறது. (அல்குர்ஆன் 12:111)

நமது சமூகம் தனது மார்க்கத்தை சீராக சிறப்பாக பாதுகாத்து பின்பற்றி அதன் ஒளியை மற்றவர்களுக்கும் கிடைக்கப்பெறச் செய்ய வேண்டுமானால் மேற்கண்ட அடிப்படை விசயங்கள் சமூகத்தில் குறைவின்றி இருக்கவேண்டும். வரலாற்றை ஆராய்ந்தால் தெரியும், எங்கெல்லாம் இஸ்லாமிய சமூகங்கள் மேற்கண்ட விசயங்களில் சிறப்பாக இருந்ததோ அங்கெல்லாம் மற்ற சமூகம் இஸ்லாத்தை தானகவே முன்வந்து ஏற்றுக் கொண்டது. எங்கெல்லாம் சமூகத்தில் மேற்கண்ட விசயங்களில் குறைபாடுகள் இருந்ததோ அங்கெல்லாம் முஸ்லீம்கள் இஸ்லாத்தை விட்டு விட்டு வேறு மதங்களுக்கு செல்லும் நிலை ஏற்பட்டது. சில உதாரணங்களை காண்போம்.

ஸ்பெயின் சுமார் 700 ஆண்டுகாலம் முஸ்லீம்களின் ஆட்சியில் சீரும் சிறப்புமடைந்தது. ஆனால் அதன் முடிவோ மிகப் பயங்கரமானது. மிக நுணுக்கமாக திட்டமிடப்பட்டு செயல்படுத்தப் பட்ட எதிரிகளின் சதித் திட்டத்தால் இஸ்லாம் அம்மண்ணிலிருந்து அகற்றப் பட்டது. இலட்சக்கணக்கான முஸ்லீம்கள் கொல்லப்பட்டனர்.

இந்தியாவில் சுமார் 800 ஆண்டுகாலம் முஸ்லீம்களின் ஆட்சி நடைபெற்றது. இந்தியாவை ஒருங்கிணைத்தவர்கள் முஸ்லீம்கள். இந்தியா (ஹிந்த்) என்று பெயர் வைத்தவர்கள் முஸ்லீம்கள். முஸ்லீம் சமூகம் ஆங்கிலேயர்களின் ஆக்கிரமிப்பினால் தனது ஆட்சியை அதிகாரத்தை இழந்தது. சுதந்திரப் போராட்டத்தில் முன்னின்று போராடிய முஸ்லீம்களை, உலமாக்களை குறிவைத்து வேட்டையாடினர் ஆங்கிலேயர்கள். இவர்களின் இத்தகைய கொடூர நடவடிக்கையினால் உயிர், பொருள் மானப் பாதுகாப்புகளை இழந்து வறுமையடைந்த பல முஸ்லீம்கள் மதம் மாற்றப் பட்டனர். இன்றைக்கும் கூட இந்தியாவில் பல இடங்களில் முஸ்லீம்களின் பாதுகாப் பற்ற சமூக சூழலை பயன்படுத்திக் கொண்டு முஸ்லீம்களை மற்ற மதங்களுக்கு மாற்றிக் கொண்டிருக்கின்றனர்.

மேற்கண்ட விசயங்களில் எப்போது நமது சமுதாயம் சிறந்து விளங்குகின்றதோ அப்போது பிற சமூகங்கள் நம்மை ஏறெடுத்து பார்ப்பதோடு மட்டுமல்லாமல் தாமாகவே நம்மைப் பின்பற்றும். வரலாறு போதிப்பதும் அதுவே. ஸஹாபாக்கள் பாரசீக, ரோமப் பேரரசுகளை வென்றெடுத்தப் பின்னர் முஸ்லீம்களின் நீதமான

நேர்மையான நடவடிக்கைகளைப் பார்த்து மக்கள் கூட்டங்கூட்டமாக தாமாகவே முன்வந்து இஸ்லாத்தை ஏற்றனர். இன்றளவும் உலகில் உண்மையான முஸ்லீம்களின் நடவடிக்கைகளைப் பார்த்து இஸ்லாத்தை ஏற்பவர்கள் ஏராளம்.

**சமூகத்தின் உயிர் நாடி:**

ஒரு சமூகத்தின் ஜீவ நாடியாகவும் நிகரற்ற, மகத்தான வளமாகவும் அதன் உயிரோட்டமுள்ள ஓர் ஆக்க சக்தியாகவும் அதன் ஏற்ற தாழ்வுகளுக்கு பொறுப்பானவர்களாகவும் திகழ்பவர்கள் தான் இளைஞர்கள். இளமைப் பருவத்தின் முக்கியத்துவத்தை அல்லாஹ்வும் அவனது தூதரும் பல வழிகளில் வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

''அல்லாஹ்வின் நிழலைத் தவிர வேறு எந்த நிழலும் இல்லாத (கியாமத்) நாளில் அல்லாஹ் தனது நிழலில் ஏழு பேருக்கு நிழல் வழங்குவான்'' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அவர்கள்:

*01.* நீதமிகு தலைவர்

*02.* அல்லாஹுத் தஆலாவின் வணக்கத்தில் வளர்ந்த ஒரு இளைஞர்

*03.* மஸ்ஜித்களுடன் இதயபூர்வத் தொடர்பு கொண்ட மனிதர்

*04.* அல்லாஹ்வுக்காக நேசித்து, அவனுக்காகப் பிரியும் இரு மனிதர்கள்.

*05.* அழகும், கவர்ச்சியுமிக்க பெண் (விபச்சாரத்திற்காக) அழைக்கும் போது, நான் அல்லாஹ்வை அஞ்சுகின்றேன் என்றுரைக்கும் மனிதன்.

*06.* தனது வலக்கரம் தர்மம் செய்வதை, இடக்கரம் அறியாதளவு இரகசியமாக செலவு செய்யும் மனிதன்.

*07.* தனிமையில் இறையச்சத்தில் ஈடுபடும் போது, (அல்லாஹ்வின்) அச்சத்தால் அழும் மனிதன்.'' அறிவிப்பவர் அபுஹுரைறா (ரலி) நூல்: புகாரி 6806

இந்த ஹதீஸில் அண்ணலெம் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தனது வாலிபத்தை நல்ல முறையில் கழித்தவர்களுக்கு அர்ஷின் நிழலில் இடமளிப்பான் எனக் கூறுகிறார்கள். இந்த உலகில் கோடையில் சுமார் 15 கோடி கிலோமீட்டர் தொலைவில் உள்ள சூரியனின் வெப்பத்தை நம்மால் தாங்கமுடியாமல் நிழலைத் தேடி அலைகிறோம். கியாமத் நாளில் சூரியன் தலைக்கு அருகாமையில் கொண்டுவரப்படும். அர்ஷின் நிழலைத் தவிர வேறெந்த நிழலும் அங்கே இருக்காது. நமது எந்த செல்வாக்கும், செல்வமும் அங்கே எடுபடாது. அந்நாளின் கடுமையைப் பற்றி குர்ஆனிலும் ஹதீஸ்களிலும் தெளிவான எச்சரிக்கைகள் இருக்கின்றன.

மற்றொரு ஹதீஸில் வருகிறது ஐந்து விசயங்கள் வரும் முன் ஐந்து விசயங்களை செயல் படுத்துங்கள் என்று

*1.* மரணம் வரும் முன் வாழ்க்கையையும்.

*2.* நோய் வரும் முன் உடலாரோக்கியத்தையும்.

*3.* அதிக வேலைப்பளுக்கள் வரும் முன் ஓய்வு நேரத்தையும்.

*4.* முதுமை வரும் முன் இளமைப் பருவத்தையும்.

*5.* வறுமை வரும் முன் செல்வநிலையையும்'' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரழி) நூல் : நஸாயீ.

இதில் மற்ற நிலைகள் கூட மாறி மாறி வரலாம். ஆனால் முதுமை வந்துவிட்டால் மறுபடியும் இளமை ஒரு போதும் வராது.

ஆயுள் முழுவதும் சஜ்தாவில் கிடந்தாலும் நம்மை முஸ்லீமாக அண்ணலெம் பெருமானார் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் உம்மத்தினராக பிறக்க வைத்த அந்த மாபெரும் கிருபையாளன் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்தி விட முடியாது. அவனது அருட்கொடை மட்டும் இல்லையெனில் வேறெங்கோ பிறந்து நாளை நரகிற்கு விறகாக ஆகியிருப்போம்.

இஸ்லாத்துக்கு அன்றைய முஸ்லிம் இளைஞர்கள் ஆற்றிய பணியும் மகத்தான சேவைகளின் துளிகளுமே இன்று பரந்த விரிந்து கிளைவிட்டு காணப்படும் முஸ்லிம் சமூகம். அன்றைய இளைஞர்களிடம் காணப்பட்ட, தியாகம், வீரம், நல்லொழுக்கம் இன்மையே இந்த பலமான முஸ்லிம் சமூகம் இன்று பலவீனமடைவதற்கான மிக முக்கிய காரணியாகும். சிந்து சமவெளியை முஹம்மத் பின் காஸிம் கைப்பற்றிய போது அவர்களின் வயது 17. கான்ஸ்டாண்டிநோபிலை (இன்றைய இஸ்தான்புல், துருக்கி) முஹம்மத் பின் பாதிஹ் கைப்பற்றிய பொழுது அவர்களின் வயது 21. ஸ்பெயினை தாரிக் பின் ஸியாத் கைப்பற்றிய பொழுது அவர்களின் வயது 21. இது போன்ற வீரதீர செயல்களை செய்து இஸ்லாத்தின் வளர்சிக்கு தூண்களாக இருந்த இளைஞர்கள் இன்று எமது சமூகத்தில் எங்கே? நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மதீனாவுக்கு இஸ்லாத்தை போதிப்பதற்காக அனுப்பப்பட்ட ஸஹாபி முஸ்அப் பின் உமைர் (ரழி) ஒரு இளைஞர். அபிசீனியாவுக்கு முதன் முதலில் ஹிஜ்ரத் செய்த ஆண்களும், பெண்களும் இளைஞர்களும், யுவதிகளுமே ஆவார்கள். யெமனுக்கு நீதிபதியாகவும், விரிவுரையாளராகவும் அனுப்பப்பட்ட முஆத் பின் ஜபல் (ரழி) ஒரு இளைஞர். மூத்த ஸஹாபாக்கள் பங்கு பற்றிய ஒரு படையணிக்கு தளபதியாக நியமிக்கப்பட்ட உஸாமா பின் ஸைத் (ரழி) ஒரு இளைஞர். அபூபக்கர் (ரழி) அவர்களது காலத்தில் அல் - குர்ஆனை ஒன்றுதிரட்டும் பணியில் பங்கு கொண்டர்வகளுள் பலர் இளைஞர்களே ஆவார்கள்.

எனது அன்பின் வாலிபச் சகோதரர்களே! இவர்கள் யாவரும் உங்களுக்குரிய முன்மாதிரிகள். முன்சென்ற சமூகத்தின் முன்னேற்றகரமான இளைஞர்கள், அவர்கள் வீண் விளையாட்டுக்களிலும், கேளிக்கைகளிலும் மூழ்கியிருந்த இளைஞர் பரம்பரையன்று.

மறுமை நாளில் ஓர் அடியான் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கும் வரை அவனது கால்கள் இரண்டும் நகர முடியாது. அவை:

1. தனது (உலக) வாழ்வை எவ்வாறு கழித்தாய்?

2. தனது வாலிபப் பருவத்தை எவ்வழிகளில் ஈடுபடுத்தினாய்?

3. செல்வத்தை எவ்வாறு சம்பாதித்தாய்? அதை எவ்வாறு செலவழித்தாய்?

4. பெற்ற அறிவின் மூலம் என்ன செய்தாய்? என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : முஆத் இப்னு ஜபல் (ரழி) நூல் : தபரானி.

தனது இளமைப் பருவத்தை இறைத் திருப்தியில் கழித்தவர்களுக்கும் மகத்தான கூலிகள் இருக்கின்றன என்பது மட்டுமல்ல. அதனைப் பற்றி கணக்கு வேறு கொடுக்கவேண்டும். இவ்விசாரணை நடக்குமிடத்தில் உலக மக்கள் அனைவரும் அங்கே திரண்டிருப்பார்கள் என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

மேலே தனிநபர்கள் சமூகமாக முடியாது என்று கூறினேன், ஆனால் அல்லாஹ் குர்ஆனில் நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை ஒரு சமூகம் என்றே

குறிப்பிடுகின்றான். ஏனெனில் ஒரு சமூகம் செய்யவேண்டிய பணிகளை அவர்கள் தன்னந்தனியாகவே செய்தார்கள்.

உண்மையில் இப்ராஹீம் ஒரு முழுச் சமுதாயமாய்த் திகழ்ந்தார். அல்லாஹ்வுக்கு அடிபணிபவராகவும் ஒருமனப்பட்டவராகவும் விளங்கினார். அவர் ஒருபோதும் இறைவனுக்கு இணைவைப்பவராய் இருந்ததில்லை. *(அல்குர்ஆன்: 16:120)*.

மற்றோரிடத்தில் மக்கள் பேசிக்கொண்டதாக வரும் வசனத்தில் அம்மக்கள் அவர்களை ஒரு இளைஞர் என்றே கூறியதாக குர்ஆன் கூறுகின்றது.

அதற்கு (அவர்களில் சிலர்) ''இளைஞர் ஒருவர் இவற்றைப் பற்றி (அவதூறாகக்) குறிப்பிட்டு வந்ததை நாங்கள் கேள்விப்பட்டிருக்கிறோம், அவருக்கு இப்ராஹீம் என்று பெயர் சொல்லப்படுகிறது'' என்று கூறினார்கள். *(அல்குர்ஆன்: 21:60)*

சமுதாயத்தின் உயிர்நாடிகளான இளைஞர்களே இந்த உன்னதமான சமுதாயத்தின் மேன்மைக்கும் வளர்ச்சிக்கும் உங்களது பங்களிப்பு மிக மிக அவசியம். நமதூர் சமுதாயத்தில் முதல் விசயமான உயிர் பாதுகாப்பு அல்லாஹ்வின் பேரருளால் எந்தவித குறைகளுமின்றி இருக்கின்றது. ஆனால் மற்ற விசயங்களில் உங்களது கவனமும் சிந்தனையும் செயல்பாடுகளும் உடனடியாகத் தேவைப் படுகின்றது. நமது சமூகம் போதையிலிருந்து முற்றிலுமாக விடுபடவேண்டும். திருட்டும், மதுவும், போதை வஸ்துக்களும் ஒழிக்கப்பட்ட சமூகமாக நமது சமூகம் திகழவேண்டும். உயரியச் சிந்தனைகளுடன் பொருளாதார வசதிகளுடன் மானத்துடன் மற்ற சமூகத்திற்கு ஒரு முன்மாதிரியாக திகழவேண்டும். நம்மைப் பார்த்து பிறசமூகத்தினர் இஸ்லாத்தின்பால் ஈர்க்கப்படவேண்டும்.

வரலாறு திரும்பவேண்டும். ஏர்வாடி மீண்டும் ஒரு மதினாவாக உருவாக வேண்டும். மேலே கூறப்பட்ட களங்களை அமைத்துக் கொடுக்க ஈமான் தயாராக இருக்கின்றது. 40 ஆண்டுகளுக்கு முன்னால் இந்த ஈமான் சங்கத்தை ஆரம்பித்து வைத்தவர்களும் இளைஞர்களே. சமூதாயத்தின் உயிர் நாடிகளே உங்களது தோள்களுக்காக காத்துக் கொண்டிருக்கின்றது. வாருங்கள் ஏர்வாடியை மீண்டும் ஒரு மதினாவாக, 1400 ஆண்டுகளுக்குப் பின்னும் உலகில் தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் அந்த மதினாவாக, நமதூர் சமுதாயத்தை உருவாக்குவோம். இன்ஷா அல்லாஹ் அர்ஷின் நிழல் நமக்காக காத்திருக்கும்.

இறுதியாக அல்லாஹ் விரும்புகின்ற அவன் பொருந்திக் கொண்ட விஷயங்களை அவன் நம் அனைவருக்கும் அருள்புரிவானாக. அகில உலக இரட்சகனாகிய அல்லாஹ்வுக்கே புகழனைத்தும். அல்ஹம்துலில்லாஹ்

உங்களில் எவர் ஈமான் கொண்டு (ஸாலிஹான) - நற்செயல்கள் புரிகிறார்களோ அவர்களை, அவர்களுக்கு முன்னிருந்தோரை(ப்பூமிக்கு) ஆட்சியாளர்களாக்கியது போல், பூமிக்கு நிச்சயமாக ஆட்சியாளர்களாக்கி வைப்பதாகவும், இன்னும் அவன் அவர்களுக்காக பொருந்திக் கொண்ட மார்க்கத்தில் அவர்களை நிச்சயமாக நிலைப்படுத்துவதாகவும், அவர்களுடைய அச்சத்தைத் திட்டமாக அமைதியைக் கொண்டு மாற்றி விடுவதாகவும், அல்லாஹ் வாக்களித்திருக்கிறான்; ''அவர்கள் என்னோடு (எதையும், எவரையும்) இணைவைக்காது, அவர்கள் என்னையே வணங்குவார்கள்'' இதன் பின்னர் (உங்களில்) எவர் மாறு செய்(து நிராகரிக்)கிறாரோ அவர்கள் பாவிகள்தாம். *(அல்குர்ஆன்: 24:55)*

**S. பீர் முஹம்மது,** ஈமான் துணைத்தலைவர்
www.nellaiEruvadi.com

Reference: சூரா அந்நூர் விளக்கவுரை
பேராசிரியர், ஆலூர் முஹம்மது இஸ்மாயில் ஹஸனி M.A, M.Phil.

# ஈமான் 40ஆவது ஆண்டு விழா – மீண்டும் ஒரு மதினா

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர்ரஹீம்.

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி பரக்காத்துஹு

அல்ஹம்துலில்லாஹ்! அல்ஹம்துலில்லாஹ்!! அல்ஹம்துலில்லாஹ்!!!

அல்லாஹ்விற்கே புகழ் அனைத்தும்! ஈமானிய மொட்டுக்கள் 2018, ஈமான் 40 ஆண்டு விழா நல்ல படியாக நடந்து முடிந்திருக்கின்றது.

இது ஈமானின் 40 ஆவது ஆண்டு. 40 ஆவது ஆண்டு என்பது இஸ்லாத்தைப் பொறுத்தவரை வாழ்க்கையில் மோகங்கள் முடிந்து ஞானங்கள் தோன்றக் கூடிய பக்குவத்தை அடைந்ததன் அடையாளம். அல்குர்ஆனில் ஒரு குறிப்பிட்ட வயதில் செய்ய வேண்டிய அமல் என்று ஒன்றை அல்லாஹ் குறிப்பிடுகின்றான். அந்தக் குறிப்பிட்ட வயது 40ஆவது வயது. இதில் அல்லாஹ் கூறுவது,

மனிதன் தன் பெற்றோருக்கு நன்மை செய்யும்படி உபதேசம் செய்தோம்; அவனுடைய தாய், வெகு சிரமத்துடனேயே அவனைச் சுமந்து வெகு சிரமத்துடனேயே அவனைப் பெற்றெடுக்கிறாள்; (கர்ப்பத்தில்) அவனைச் சுமப்பதும்; அவனுக்குப் பால் குடி மறக்கச் செய்வதும் (மொத்தம்) முப்பது மாதங்களாகும். அவன் வாலிபமாகி, நாற்பது வயதை அடைந்ததும்: ''இறைவனே! நீ என் மீதும், என் பெற்றோர் மீதும் புரிந்த நிஃமத்துக்காக, (அருள் கொடைகளுக்காக) நன்றி செலுத்தவும், உன்னுடைய திருப்தியை அடையக் கூடிய ஸாலிஹான நல்ல அமல்களைச் செய்யவும் எனக்கு அருள்பாலிப்பாயாக! (இதில் எனக்கு உதவுவதற்காக) என்னுடைய சந்ததியையும் ஸாலிஹானவர்களாக (நல்லது செய்பவர்களாக) சீர்படுத்தியருள்வாயாக! நிச்சயமாக நான் உன்பக்கமே திரும்புகிறேன்; அன்றியும், நான் முஸ்லிம்களில் நின்றுமுள்ளவனாக (உனக்கு முற்றிலும் வழிப்பட்டவனாக) இருக்கின்றேன்'' என்று கூறுவான்.

(சூரா அல்-அஹ்காஃப், வசனம் 15)

இறைமறை குர்ஆன், ஒருவன் 40ஆவது வயதை அடைந்துவிட்டால், தனது வாழ்க்கைப் பயணத்தில் சற்றே நின்று தான் கடந்துவந்த பாதையத் திரும்பிப் பார்க்கக் கூறுகின்றது. தான் இந்த உலகிற்கு வருவதற்குக் காரணமாக இருந்த இறைவனுக்கும், தனது பெற்றோர்களுக்கும் நன்றி செலுத்தக் கூறுகின்றது. அவனது தாய் எவ்வளவு கஷ்டப்பட்டு அவனை ஈன்றெடுத்தாள் என்பதை நினைவுகூர கூறுகின்றது.

அது மட்டுமல்லாமல் தனது மீதி வாழ்க்கை எப்படியிருக்க வேண்டும் என்றும் இறைவனிடம் துஆச் செய்யவும் கூறுகின்றது.

இதே அரஃபா நாளில் (இந்த ஆக்கத்தின் நாள்) தான் இறைவன் 'இன்றைய தினம் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தை பரிபூரணமாக்கி விட்டேன்; மேலும் நான் உங்கள் மீது என் அருட்கொடையைப் பூர்த்தியாக்கி விட்டேன்; இன்னும் உங்களுக்காக நான் இஸ்லாம் மார்க்கத்தையே (இசைவானதாகத்) தேர்ந்தெடுத்துள்ளேன்'' (சூரா அல் மாயிதா, வசனம் 3); என்ற வசனத்தை இறக்கினான்.

அல்ஹம்துலில்லாஹ் அல்லாஹ்வின் மார்க்கம் பரிபூரணமான மார்க்கம். வாழ்வின் எந்த நிலையிலும் குர்ஆனின் பக்கமும், ஹதீஸ்களின் பக்கமும் தனது பார்வையை செலுத்தும் ஒவ்வொருவரும் கட்டாயம் உணர்வது, அல்லாஹ்வின் தூதர் நம்மை நிர்கதியாக விட்டுச் செல்லவில்லை, வழிகாட்டுதல்கள் வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் நமக்கு இருக்கின்றன. ஒரு முஸ்லிம் எந்த ஒரு கால கட்டத்திலும் எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை என்று கூறுவதற்கே வழியில்லை. என்ன செய்ய வேண்டும், எப்போது செய்யவேண்டும், எப்படிச் செய்ய வேண்டும், சுப்ஹானல்லாஹ். எல்லாத்துக்கும் வழிகாட்டுதல்கள். அல்லாஹு அக்பர். இந்த உன்னதமான மார்க்கத்தில் பிறக்கச் செய்த அல்லாஹ்விற்கே எல்லாப் புகழும்.

எண்ணிப் பார்க்கும்போது இறை நன்றியால் கண்கள் குளமாகின்றன. தனது 40ஆவது ஆண்டில் ஈமானும் இதைத்தான் செய்திருக்கின்றது. நாம் அறிந்தோ அறியாமலோ அல்லாஹ் நம்மை இதனைச் செய்ய வைத்திருக்கின்றான்.

ஈமான் தனது 40 ஆண்டு கால வாழ்க்கையைத் திரும்பிப் பார்த்திருக்கின்றது. தான் உருவாகுவதற்கு காரணமாக இருந்த எல்லாம் வல்ல இறைவனுக்கும், மனிதர்களுக்கும் தனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்திருக்கின்றது. வேர்களை அடையாளப்படுத்தி ஆவணப்படுத்தியிருக்கின்றது. ஆரம்பத்தில் இதன் வேர்கள் எவ்வளவு கஷ்டப் பட்டிருக்கின்றார்கள் என்று உணர்ந்திருக்கின்றது. தனது எதிர்காலப் பயணம் எப்படி இருக்கவேண்டும் என வல்லோன் அல்லாஹ்விடம் துஆச் செய்கின்றது. அதற்கான திட்டமிடுதலுடன் செயல்பாடுகளை ஆரம்பித்திருக்கின்றது.

'மீண்டும் ஒரு மதினா'' என்பது ஒரு கோஷமாக மட்டும் இருந்துவிடக் கூடாது. அதற்காக ஊர் மக்களும் ஈமானின் பொறுப்புதாரிகளும், உறுப்பினர்களும் தங்களை தயார்படுத்த வேண்டும். இந்த நிகழ்ச்சிக்கான சிறப்புரையின் தலைப்பை தேர்வு செய்யும்போதே மனதில் தோன்றிய எண்ணம் என்னவெனில் இந்த உரை மக்களை விட ஈமானின் உறுப்பினர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் தான் தேவை என்று. அல்லாஹ்வின் நாட்டம் நாம் ஏற்பாடு செய்திருந்த மௌலானா யூசுஃப் முஃப்தி அவர்கள் வர இயலவில்லை. அல்லாஹ், மௌலானா காஞ்சி அப்துர் ரவூஃப் பாகவி அவர்களை ஏற்பாடு செய்துக் கொடுத்தான். அவர்களின் உரை எண்ணியது போலவே மக்களை விட அதிகமான செய்திகள் ஈமானுக்குத் தான் இருந்தது.

அவர்கள் கூறினார்கள் ''மீண்டும் ஓர் மதினா'' என்பது ஒரு ஆச்சரியமான அற்புதமான இலக்கு. ஆனால் அதை அடைவதற்கு, மதினாவின் அடிப்படையான அகபா உடன்படிக்கையிலிருந்து ஆரம்பிக்கவேண்டும். அகபா உடன்படிக்கையின் போது மதினத்து முஸ்லிம்கள் நபியவர்களை மதினாவுக்கு அழைத்தனர். அப்போது அந்த ஒப்பந்தத்தின் நிபந்தனைகளாக ஒப்பற்ற நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறியவை:

''- இன்பத்திலும் துன்பத்திலும் (கட்டளைக்கு) செவி சாய்க்க வேண்டும், கட்டுப்பட வேண்டும்.

- வசதியிலும் வசதியின்மையிலும் செலவு செய்ய வேண்டும்.

- நன்மையை ஏவ வேண்டும். தீமையைத் தடுக்க வேண்டும்.

- அல்லாஹ்வுக்காக நீங்கள் தியாகம் செய்யத் தயாராக வேண்டும்.

- அல்லாஹ்வின் விஷயத்தில்,
பழிப்பவர்களின் பழிப்பு உங்களைப் பாதித்துவிடக் கூடாது.
ஆட்சி, அதிகாரத்தைப் பெறுவதற்காக சண்டையிடக் கூடாது.

நான் உங்களிடம் வந்துவிட்டால் நீங்கள் எனக்கு உதவி செய்ய வேண்டும். உங்களையும் உங்களது மனைவியரையும் பிள்ளைகளையும் பாதுகாப்பதைப் போல் நீங்கள் என்னைப் பாதுகாக்க வேண்டும். இதனை நீங்கள் பைஆ (இஸ்லாமிய ஒப்பந்தம்) செய்துக் கொடுங்கள். அல்லாஹ் உங்களுக்குச் சொர்க்கத்தைத் தருவான்.''

இதனை ஏற்றுக் கொண்ட அந்த மதீனத்து மாமணிகள் பைஆ செய்து எழுந்த போது அஸ்அது இப்னு ஜுராரா (ரலி) அவர்கள் மதினத்து மக்கள் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை மதினாவுக்கு அழைப்பதினால் சுமக்கப் போகும் சுமைகளை, அதன் பின்விளைவுகளை மேலும் தெளிவாக விளக்குவதற்காக பின்வருமாறு கூறினார்கள்:

''ஓ மதினா வாசிகளே! சற்றுப் பொறுங்கள். இவர் அல்லாஹ்வின் தூதர். இவரை இவரது ஊரிலிருந்து வெளியேற்றி அழைத்துச் செல்வதால் முழு அரபு இனத்திற்கும் நாம் எதிரிகளாகி விடுவோம். நம்மிலுள்ள மேன்மக்கள் கொலைச் செய்யப்படலாம். நாம் எதிரிகளின் வாட்களினால் வெட்டி வீழ்த்தப்படலாம். இவை அனைத்தையும் நாம் அறிந்திருக்கின்றோம். ஆனால் நான் கூற வருவது என்னவென்றால், இந்தச் சோதனைகளை உங்களால் சகித்துக் கொள்ள முடியுமென்றால் இவரை உங்களுடன் அழைத்துச் செல்லுங்கள். அதற்குரிய கூலியை நிச்சயம் அல்லாஹ் உங்களுக்குக் கொடுப்பான். ஒருவேளை உங்களது உயிரைப் பற்றிய பயம் உங்களுக்கு இருந்தால் இப்போது இவரை இங்கேயே விட்டுவிடுங்கள். அல்லாஹ் உங்களை மன்னித்து விடலாம்'' அஸ்அத் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறியதும் அம்மக்கள் கூறினார்கள்:

''அல்லாஹ்வின் மீது சத்தியமாக! நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களிடம் ஒப்பந்தம் செய்வதிலிருந்து நாங்கள் பின்வாங்கவும் மாட்டோம், ஒருக்காலும் அதை முறிக்கவும் மாட்டோம்'' என்று கூறினார்கள்.

கூறியது மட்டுமல்ல. அதனை அப்படியே செயல்படுத்தியும் காட்டினார்கள். அவர்கள் செயல்படுத்திக் காட்டியது தான் மதினா. அந்த அன்ஸாரி பெருமக்களின் தியாகத்திற்கு ஈடு இணை வரலாற்றில் கிடையாது. அதனால் தான் அல்லாஹ்வின் தூதர் ஒரு கட்டத்தில் அன்ஸாரிகளைப் பார்த்துக் கூறினார்கள், உங்களது உயிர் எனது உயிராகும். உங்களது அழிவு எனது அழிவாகும். நான் உங்களைச் சேர்ந்தவன், நீங்கள் என்னைச் சேர்ந்தவர்கள்.

இன்று 'மீண்டும் ஒரு மதினா'' என்ற குறிக்கோளுடன் முன்னேறும் நாம் இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றினாலன்றி நமது குறிக்கோளை அடைய முடியாது. மீண்டும் ஒருமுறை அந்த ஒப்பந்தத்தைப் படிப்போம். சுமையை உணர்வோம் அதனால் கிடைக்கப் போகும் சுவர்க்கத்தின் நறுமணத்தையும் நுகர்வோம்.

சுமைகள் சுமக்க முடியாதவைகள் தான். செய்ய வேண்டிய தியாகங்கள் எண்ணிலடங்காதவைகள் தான். ஆனால் வல்லோன் அல்லாஹ் நம்மோடு என்றென்றும் இருக்கின்றான் என்ற எண்ணம் வலுப்பெற்றுவிட்டால் உள்ளம் உறுதியடைந்துவிடும். எத்தகைய பிரச்சினைகளையும் எதிர்கொள்ள தயாராகிவிடும்.

ஈமான் கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கு உதவி செய்தால், அவன் உங்களுக்கு உதவி செய்து உங்கள் பாதங்களையும் உறுதியாக்கி வைப்பான்.

(சூரா முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம், வசனம் 7)

மீண்டும் ஒருமுறை அகபா ஒப்பந்தத்தைப் படிப்போம். தியாகத்திற்கு தயாராவோம்.

யா-அல்லாஹ்! எங்களது எண்ணங்களை தூய்மைப்படுத்துவாயாக!

எங்களது பாதங்களை உறுதியாக்கி வைப்பாயாக!

எங்களது நன்மையான காரியங்களில் எங்களுக்கு நீ உதவி செய்வாயாக!

எங்களது ஏர்வாடியையும் ஒரு மதீனாவாக மலரச் செய்வாயாக!

அதற்குத் தகுதியானவர்களாக எங்களை நீ ஆக்குவாயாக!.

ஆமீன்! ஆமீன்!! ஆமீன்!!!

**ஈமான் அறக்கட்டளை**

20-ஆகஸ்ட்-2018

# Important Contact Numbers in and around Eruvadi

| Name | Contact Nos |
|---|---|
| **HOSPITALS in ERUVADI** | |
| Government Hospital | +91 4637 240 134 |
| Mercy Nursing Home | +91 4637 240 100, +91 93606 40 117 |
| Dr. Thangaraj polyclinic | +91 4637 240 170 |
| Dr. Sree Kumar Clinic | +91 9443614802 |
| Alhudha Hospital | +918124300360 |
| Dr Peer Mohideen Clinic | +917639992786 |
| **HOSPITALS in VALLIOOR** | |
| Arul Mission Hospital | +91 4637 222 324 |
| Eswari Hospital | +91 4637 220 222 |
| Suham Hospital | +91 4637 220979 |
| Mathumitha Hospital | +91 4637 223 460 |
| Anna Laxmi Hospital | +91 4637 222 436 |
| Annai Amaravathi Hospital | +91 4637 220 347 |
| Dr. Abraham Hospital | +91 4637 220 254 |
| Dr. Balaji Hospital | +91 4637 221 599 |
| Thiraviyam Hospital | +91 4637 220 648 |
| Kanthan Hospital | +91 4637 220 447 |
| **HOSPITALS in KALAKAD** | |
| Suham Hospital | +91 4635 260 580 |
| Veema Hospital | +91 4635 260 621 |
| Parvathi Nursing home | +91 4635 260 616 |
| **HOSPITALS in TIRUNELVELI** | |
| Shifa Hospital | +91 462 232 3041 |
| Galaxy Hospital | +91 462 250 1951 |
| Aravind eye hospital | +91 462 435 6100 |
| Royal Hospital | +91 462 255 4237 |
| Annai Velankanni hospital | +91 462 250 1661 |
| Lakshmi Hospital | +91 462 233 3830 |

**HOSPITALS in NAGERCOIL**

| | |
|---|---|
| Mathias | +91 4652 279 501 |
| Merlin | +91 4652 232123 |
| Gopala Pillai | +91 4652 225 010 |
| Abdul Khader hospital | +91 90800 11010 |
| Dr Jeyasekaran Hospital | +91 4652 230 019 |
| Sushrushah Hospitals | +91 4652 232 346 |

**AMBULANCE Services**

| | |
|---|---|
| Ambulance Driver | +91 9443416497 |
| TMMK Medical wing | +9194427 66188 |

**Charitable Trust Organizations**

| | |
|---|---|
| Nellai Eruvadi Makkal Nala Mandram | +919444764625 |
| Eman Charitable Trust (EMAN) | +917538800121 |
| Ibn Sina Medical Aid Association (ISMA) | +918098744047 |
| An Nusrath Charitable Trust | +9199445 55949 |
| Eruvadi Welfare Committee | +919486660970 |

**SCHOOLS**

| | |
|---|---|
| Government Higher Secondary School ( Boys ) | +914637 241097 |
| Government Higher Secondary School ( Girls ) | +914637 241098 |
| Alhudha Matriculation School | +914637 241955 |
| Rani Matriculation School | +914637 240363/241497 |
| Annai Matriculation school Eruvadi / Vallioor | +914637 222760 |
| Nellai Eruvadi Model School ( NEMS) | +914637 240740 |

**POLICE STATIONS**

| | |
|---|---|
| Police Station Eruvadi | +914637 240134 |
| Police Station Vallioor | +914637 220256 |
| Police Station Nanguneri | +914635 250761 |
| Police Station Thirukurungudi | +914635 265036 |

**BANKS**

| | |
|---|---|
| Canara Bank | +91 95517 57368 |
| IOB | +914637 240233 |

| | |
|---|---|
| Pandian Grama Bank | +914637 240632 |
| Tamil Nadu Mercantile Bank | +914637 241888 |
| Axis Bank Thirukurungudi | 914635 265739/40/41 |
| **Railway Stations** | |
| Nanguneri | +914635 265036 |
| Vallioor | +914637 220209 |
| Tirunelveli | +91462 2501777 |
| Nagercoil | +914652 244142 |
| **Airports** | |
| Tuticorin | +91 461 227 1863 |
| Madurai | +91 452 269 0717 |
| Trivandrum | +91 471 270 2600 |
| **GOVERNMENT OFFICES** | |
| Panchayat Board | +914637 240966 |
| EB office | +914637 241449 |
| Post Office | +914637 242022 |
| **Colleges** | |
| Sarah Tucker | +91 462 253 0597 |
| Annai Hajira | +91 462 235 3067 |
| Sadakathullah Appa College | +91 462 254 0763 |
| Arignar Anna College Aralvaimozhi | +91 4652 263 122 |
| Pet Engineering College | +91 4637 220 999 |
| Noorul Islam College of Engineering | +91 4651 250 566 |
| National College of Engineering | +91 4635 256353 |
| **JANAZA (Funeral) Service** | |
| Sheriff (Thambi Bhai ) | +91 9443416497 |
| Amin Pudukudi | +91 9994138092 |
| Anwar | +91 9585515557 |
| Silicon Adam | +91 9952671620 |

அட்டைப்பட வடிவமைப்பு : **முகைதீன்,** ஸலாலா, ஓமான்.

அச்சிட்டோர் : **திரீயெம் பிரிண்டர்ஸ்,** சென்னை-1.
போன் : *044 42166729, 98842 83949, 98403 61227*
web: www.threeyemprinters.com

# குறிப்புகள்

## குறிப்புகள்

## குறிப்புகள்



# SAFETY PLUS SERVICES




We provide all type of building services which you need every day.

- Electrical Services
- Plumbing Services
- HVAC Services
- Fire safety & security services
- Annual Maintenance package for above

**24/7 SERVICE**

## SafetyPlus

+974 5044 5899, +974 6692 3311

www.safetyplus.qa

Safety Plus W.L.L
Salwa Road, Al Aziziya, Doha, Qatar, P.Box-30844

جامعة احسان العميان

# ஜாமியா இஹ்ஸானுல் உம்யான்

## (பார்வையற்றோர் மதரஸா)

# JAMIA EHSAANUL UMYAN

Reg. No. 131 / 2017

بسم الله الرحمن الرحيم

**அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)**

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள், யார் ஒருவர் பார்வையற்றவருக்காக 40 அடிவரை வழிகாட்டுவாரோ அவருக்கு சுவர்க்கம் வாஜிபாகிவிடும் மற்றொரு ரிவாயத்தில் அவர் முன் செய்த பாவங்கள் மன்னிக்கப்படுகிறது.

**அறிவிப்பாளர்: இப்னு உமர் (ரலி) நூல்: தப்ரானி பாகம் 3, பக்கம்: 138**

---

*கண்ணியத்திற்குரியவர்களே!*

*தமிழகம் முழுவதும் பார்வையற்ற முஸ்லலீம்களுக்காக கல்வி நிறுவனங்களோ, ஆதரவு இல்லங்களோ, நமது சமுகத்தில் இல்லை. இதன் காரணமாக பார்வையற்ற முஸ்லீம்கள் பிற மதத்தினர் நடத்தும் கல்வி நிறுவனங்களிலும், ஆதரவு இல்லங்களிலும் தங்கி கல்வி பயிலும் காலங்களில் அவர்கள் மூலமாக பெற்ற உதவிகளினால் ஈர்க்கப்பட்டு இஸ்லாத்தை விட்டும் வெளியேறிக் கொண்டிருகின்றனர். (இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்) பார்வையற்ற முஸ்லீம்களின் இந்தக் கவலையான நிலை மாறவும், அவர்களின் இம்மை, மறுமை வாழ்க்கை வெற்றிக்காகவும் அல்லாஹ்வின் உதவியால் தமிழ்நாட்டில் பார்வையில்லாத முஸ்லிம் மாற்றுத் திறனாளிக்காக என தனி மதரஸா 2009ம் ஆண்டு மதுரையில் துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. (அல்ஹம்துலில்லாஹ்)*

*இந்த மதரஸாவில் குர்ஆன் மனனம் செய்தல், மார்க்க சட்ட திட்டங்கள் மற்றும் சுன்னத்தான வழிமுறைகள் கற்றுத் தரப்படுகின்றது. மேலும் பார்வை யற்றோருக்கான புள்ளி எழுத்துகள் மூலம் (பிரைலியின் மூலம்) தமிழ், ஆங்கிலம், அரபி மொழிகள் கற்றுத் தரப்படுகின்றது மற்றும் TNPSC மற்றும் அரசாங்கத்தின் இதர பணிகளுக்கான பயிற்சியும் அளிக்கப்படுகிறது. மேலும் அரசின் சலுகைகள் மற்றும் சுயதொழில் சம்பந்தமாக ஆலோசனைகள் வழங்ககூடிய ஆலோசனை மையமும் இயங்கி வருகிறது. சிறந்த ஆசிரியர்களை கொண்டு பயிற்சியளிக்கப்படுகிறது.*

*இங்கு பார்வையற்ற மாணவர்களுக்கு உணவு, தங்குமிடம் இலவசமாக வழங்கப்படுகிறது. இந்த மதரஸாவிற்கென்று நிரந்தர வருமானமோ சொந்த இடமோ கிடையாது. இத்தகவலை காணும் நல் உள்ளங்கள் அல்லாஹ்வின் திருப்தியை நாடி தங்களால் இயன்ற உதவிகளை வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம் பார்வையற்ற மாணவர்களின் ஈருலக வெற்றிக்கான ஒளி காட்டும் விழியாக தங்களது உதவிகள் அமையும் .*

*உதவி செய்யும் நல்லுள்ளங்களுக்காக பார்வையற்ற மாணவர்கள் அனுதினமும் துஆச் செய்கிறார்கள்.*

**குறிப்பு : தங்கள் பகுதியில் முஸ்லிம் கண் தெரியாதவர்கள் வசித்தால் அத்தகவலை தெரிவிக்கவும். மேலும் உங்கள் தொடர்புகளிலுள்ள முஸ்லிம் அனைவருக்கும் இத்தகவலை பகிரவும்.**

## ஜாமியா இஹ்ஸானுல் உம்யான் பார்வையற்றோர் மதரஸா

**64/28, கண்ணதாசன் மெயின் தெரு, SSகாலனி,மதுரை- 10**

**செல்: +91 89738 54134, +91 99421 13079**

**Website Address: http://www.nellaiEruvadi.com/jeu/**